கடவுள் துணை.

மா க[illegible]ை ப[illegible] SHIYALI.

இந்திய சக்கரவர்த்தினியாகிய

விக்டோரியா

மஹாராணி அம்மாவின்

இஃது

பால்வனம், வித்வான்

பெரிய சுப்பாரெட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு

விருதுப்பட்டி, க்ஷத்திரிய வித்தியாசாலை ஹெட்மாஸ்டரும்,

டிஸ்டிரிக்ட்டுப்போர்ட்டு மெம்பருமான

N. S. மாணிக்கவாசக, நாடார் B. A.

அவர்கள் இயற்றிய முகவுரையுடன்

விருதுப்பட்டி

ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகளால்,

சென்னை:

S. P. V. பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்ட்டர் காப்பிரைட்.

1901.

TITLE PAGE PRINTED BY HOE & CO., MADRAS.

விக்டோரியா சக்கிரவர்த்தினி அம்மாள்.

INTRODUCTION.

THE Twenty-second day of the first month of the first year of the new century will be ever remembered in the annals of the British Empire with deep regret and sorrow, as the day in which Her Late Most Gracious Majesty Queen Victoria, Empress of India passed away after a most glorious and brilliant reign of 63 years, the longest in the annals of England. Profound was the grief with which the sad news was received throughout the Empire. In common with the rest of the Empire, India was plunged into deep mourning from the Himalayas to Cape Comorin. Public meetings were held throughout the length and breadth of the country, where speeches were made extolling the greatness and virtues of the deceased Sovereign and telegrams of sympathy and condolence were despatched. The loss was felt as almost a personal one. The country was enveloped in gloom.

To the millions of India, with whom loyalty to the Sovereign is almost an instinct, the Maharani (the great Queen) was the embodiment of all that is good, noble and virtuous. Their devotion to her person and throne was strikingly exhibited in the universal sorrow that prevailed on the receipt of the sad news throughout all ranks and classes of society. The admiration in which the great and good Queen was held by Her Indian subjects, led some of them to believe that she was no ordinary human being but one of their own goddesses who, out of Her love to them, had condescended to appear in the flesh to rule them in person. Vague fears were entertained by ignorant people as to the future of their country, after the demise of their deified Queen. No wonder, therefore, that the news of the death of the Sovereign filled them with the greatest consternation and dismay.

Matters did not end with the mere expression of sorrow at the death of the Queen Empress. A laudable desire was evinced by all classes of people both European and Native to perpetuate the memory of the deceased Sovereign and schemes were set on foot to raise suitable memorials—from the magnificent Memorial Hall and National Gallery, planned by His Excellency the Viceroy on a grand and gigantic scale, to the humble Victoria Tower in the mofussil town.

An introduction of this kind, however humble it may be, will not be deemed complete without some referênce to the material progress, made during the reign of Her Late Majesty, who guided the destinies of the mightiest Empire of the Nineteenth century, over which, as is well said, the sun never sets. However, it is not possible, nor is it necessary to give here an exhaustive account of all that has been done and achieved during this reign. A bare mention of some of the most important lines of progress must suffice here. The Victorian era has been most prolific in new inventions and discoveries. The railways and the electric telegraph have almost changed the face of the globe. Electricity has been applied for purposes of illuminating streets and for propelling carriages. The telephone has come into practical use. The steam has been pressed into the service of man and does for him almost every kind of work, from carrying him over 60 miles in an hour, down to ploughing his field and reaping his harvest. Trade and commerce have developed with astonishing rapidity. Foreign travel has been greatly extended, and races and peoples of distant lands have come to know and understand one another better. Regions and countries hitherto not known at all, or but little known, have been explored, and peoples sunk in ignorance and superstition have been brought face to face with modern civilization. Slavery has long ceased to be an established institution in all civilized countries, and free labour has taken its place. Arts and sciences have progressed by leaps and bounds, and the sum of human knowledge has been greatly augmented.

Our own India has had her due share in the general progress made during the reign. There has been development and advancement everywhere. However, we meet with people here and there, who speak and write as if the country has been declining in material prosperity, ever since the introduction of British rule in India. Such people would do well to go back a century or two in the history of India, and have a peep into the condition of the country then. If they do so with an unbiased mind, I am sure, they would be in a position to adequately appreciate the blessings of British rule in India. For the sake of this class of people, I may be here permitted to mention a few of the benefits conferred on India by the British, only by way of reminding them, as nothing new can possibly be said. Periodical outbursts of wild and warlike tribes across the North Western

frontier have been firmly arrested and the consequent horrors have been averted. In place of internal wars, faction-fights and rebellions, unbroken peace reigns supreme. All classes of people, the prince and peasant, the high and the low, the rich and the poor, the Brahmin and Pariah rest undisturbed under the mighty shadow of the British flag. The Pindari, the free-booter, and the Thug has long forgotten his nefarious trade. He has beaten his sword into ploughshares and his spear into pruning hook. The ryot trembles no more at the name of the Mahratta and is no longer left to the mercy of the extortioner. The harvest of his fields is not reaped by another and the fruit of his labour is not snatched away from his hands. The necessity to shut up his women in the Zenana and to bury his gold under the ground has long ceased. There is no need to go about armed. Security of person and property, the greatest blessing that a government can bestow on the subject, is enjoyed by all. The heart-rending cries of agony of the wretched widow condemned to die on the funeral pyre of her husband ascend no more to the sky; and infanticide has become a thing of the past. The trade and commerce of the country have been greatly developed. The country is covered with a net work of roads; and the rivers have been bridged. Railways have been laid throughout the length and breadth of the land; and journeys, which before took months of toil and hardship, are now accomplished in as many days, with the greatest ease and comfort. Telegraphic communication has been established between all towns of any importance. The postal arrangements are simply marvellous. Communications can be conducted with the remotest corner of the country at a cost of three pies. Immense areas of waste land have been brought under cultivation; and the irrigational works of the land are among the greatest in the world. Western learning and Western culture have found their way into the country and thrive most luxuriantly. Universities have been established for the encouragement of higher education; and primary education has been placed within the reach of the poorest. Female education has at last been recognised as a real want and among the daughters of India are to be found some, who have obtained the highest academical honours. Sanitation has been better understood and practised. The health of the people has been promoted; and patients are treated free of cost, in hospitals and dispensaries maintained by the state. Are not all these and hundreds of other improvements, the direct result of the British rule in India?

Let me not be understood to mean that the Government of India is perfect in every respect. There remains yet much to be done. The condition of the ryot has still left much to be desired. Taxation has been steadily increasing and seems to press him a little too much. The periodical famines are a source of great danger to the prosperity of the country and demand the most vigorous efforts of the Government to arrest their recurrence, although it must be gratefully acknowledged that it has always done and is still doing all that it can to mitigate the horrors of famines. The rigour of the Forest laws is being greatly felt by poor villagers and requires a little relaxing. The police administration requires a thorough reform. The arts and industries of the country stand in great need of the fostering care and aid of the State. Various other matters there are, which need the careful attention of the Government.

Let me now introduce to the reader, the following Tamil Poem, a humble tribute to the memory of Her Late Most Gracious Majesty Queen Victoria, Empress of India. At the instance of the writer, Vidhvan Subba Reddiar, one of the ablest of the Tamil Poets in these parts, has given a short account of the life and reign of Her Late Majesty, in the *Ammanei* metre, most popular among the Tamils. This small work, it is humbly hoped, will contribute in a measure, to keep alive the memory of Her Late Majesty among the Tamil speaking population of Southern India, as well as, to place before them the noble example set by the Queen Empress as a maiden, wife, mother and sovereign. As to the merits of the work, the reader is left to judge for himself; but, one thing is beyond doubt—the author has done his very best to make the Poem both interesting and instructive. Some portions of the Poem, such as the description of Her Late Majesty's Coronation, marriage, the Proclamation to the Princes and people of India, the demise of the Prince Consort and the benefits of the British rule in India are really beautiful and most entertaining. At the same time, it must be admitted that the book is not free from defects and mistakes but the writer hopes that the loyalty of the people of India to the British throne and their devotion and love to Her Late Majesty, the Mother of her people, will lend interest to the following pages.

KSHATRIYA VIDYASALA,
VIRUDUPATI,
1st July 1901.

N. S. M.

உ

கடவுள் துணை.

முகவுரை.

இப்புது நூற்றாண்டின் முதலாம் வருஷம் முதலாவதுமாசம்
இருபத்திரண்டாந் தெய்தியானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்
குட்பட்ட தேசங்கள் தீவுகளில் எங்கும் அதிதுக்கமும் சஞ்சலமு
மானநாளாக விருந்தது, அத்தினத்தில் இப்பூபாரத்தை யரியதிற
மையோடும் நீதி தயாளத்தோடும் அறுபத்துமூன்று வருஷகாலம்
தாங்கிவந்த அரசர்க்கரசியாகிய நம் அருமை மஹாராணியார் இவ்
வுலக ஆசைநீத்து பரலோகப் பிராப்தியானார். இந்த துக்கசெய்தி
கேட்டலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட குடிகளடைந்
த வருத்தமும் வியாகூலமும் சொல்வதற்கரிது நமது இந்தியா
தேசமும் இமயகிரிமுதல் கன்னியாகுமரிவரை துக்கசாகரத்தில் அ
மிழ்ந்தது தேசமுழுவதிலும் நகரங்கள் பட்டணங்கள் தோறும்
பொது ஜனக்கூட்டங்கள்கூடி காலஞ்சென்ற மஹாராணியாரின்
பெருமையையும் நற்குண நற்செயல்களையும்பற்றி பலராலும் உபந்
யாசங்கள்செய்யப்பட்டன. அன்றியும் தங்கள் துக்கத்தையும் அநு
தாபத்தையும் தெரிவித்து மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டாருக்
கும் ராஜவம்ஸத்தாருக்கும் தந்திச்சமாசாரங்கள் அனுப்பப்பட்ட
ன குடிகள் தங்கள் அரசியாரின் மரணத்தை சொந்ததுக்கம்போல்
எண்ணி வருந்தினர்.

இயற்கையாகவே இராஜபக்தியுள்ள இந்தியாவின் குடிகள் தங்
கள் மஹாராணியாரை சகலநற்குணங்களும் திரண்டு ஓர் உருவாய
மைந்த உருவமாக மதித்துவந்தார்கள். அப்படி மதித்துவந்தார்க
ளென்பதற்கு மஹாராணியார் மரணமடைந்த துக்கசமாசாரம் இ
ந்தியாவுக்கெட்டியவுடனே குடிகள்கொண்ட துக்கமேபோதுமான
சாக்ஷி. இம்மாதுசிரோன்மணி நம்மைப்போல் சாமாநியமனுஷியன்
று நமதுதேசத்துத்தேவதைகளிலொன்றே நம்மேற்கருணைபூண்டு
நம்மைநேரில்ஆளும்பொருட்டு மனுடஉருவாய் அவதாரம்செய்திரு
க்கிறதென்று நினைத்தவர்களும் சிலருளர் இவ்வெண்ணங்கொண்ட
பலர் இவ்வம்மையாரின் ஜீவியகாலத்தின்பின் னென்ன கெடுதிகள்
நேரிடுமோவென்று எண்ணியிருந்தனர் ஆதலின் இத்தருமதேவ
தை உயிர்துறந்தசெய்தி அவர்கள்மனதிற் கலக்கத்தையுந் திகிலை
யும் உண்டாக்கிற்று.

மஹாராணிச் சக்கரவர்த்தியாரின் மரணத்திற்காக குடிகளடைந்த துக்கம் அத்தோடே நின்றுவிடவில்லே. அரசியாரின் ஞாபகத்தை என்றும் நிலைநிறுத்துவதற்கான சாதனங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று ஐரோப்பியர் சுதேசிகள் என்னும் இருவகுப்பிலுமுள்ள சர்வஜனங்களுக்குள்ளும் ஓர் பேரவா உண்டாயிற்று. ஆகவே மார்ட்சிமைதங்கிய ராஜபிரதிநிதி யவர்கள் கோடிரூபாய் மதிப்பிட்டு மகாஅலங்காரமாகவும் பிரமாண்டமாகவும் கல்கத்தாவில் நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் விக்டோரியா ஞாபகமண்டபம்முதற்கொண்டு சிறுபட்டணங்களில் ஏற்படுத்தத் தீமானித்திருக்கும் மணிக்கூண்டு ஈருகவுள்ள பற்பலஞாபகச் சின்னங்கள் பற்பலவிடங்களிலும் ஸ்தாபிக்கப் பெருமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பூமியின்கணுள்ள பற்பல ராஜ்யங்களுள்ளும் அதிசிரேஷ்டமும் பராக்கிரமமும் பொருந்திய பிரிட்டிஷ் ராஜ்யத்தின்மேல் அறுபத்துமூன்று வருஷகாலம் ஏகசக்கிராதிபத்தியம் நடத்திவந்த நமது விக்டோரியா சக்ரவர்த்தினியாரைப் பற்றிய ஓர் நூலின் முகவுரையில் இவ்வரசர்க்கரசியாரின் ஆளுகைக்குள் உலகம் அடைந்திருக்கும் தேர்ச்சி அபிவிர்த்தி இவற்றைப்பற்றி கொஞ்சமாவது சொல்லாதுவிடுவது சரியன்று ஆயினும் அவற்றைப்பற்றி இவ்விடத்தில் சவிஸ்தாரமாக எடுத்துரைக்கப் புகுவது அசாத்தியமாயிருப்பது மன்றி அனுவசியமாயு மிருக்கின்றது. அவற்றில் வெகுமுக்கியமானவற்றில் சிலதைமட்டும் இங்கு எடுத்துரைப்போம். விக்டோரியா மஹாராணியாரின் காலத்தில் பற்பல அரியபெரியகாரியங்கள் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டும் ஊர்ச்சிதஞ்செய்துகொண்டுவரப்பட்டுமிருக்கின்றன இருப்புப்பாதைகளும் மின்தபால் தந்திகளும் இவ்வுலகத்தின் தோற்றத்தையே மாற்றிவிட்டன வென்று சொல்லலாம். மின்சாரமானது தெருக்களில் விளக்கேற்றுவதற்கும் வண்டியிழுப்பதற்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. பேசுந்தந்தி சாதாரணஉபயோகத்தில் வந்திருக்கிறது. நீராவி மனுஷனுக்கு ஊழியஞ்செய்யும் வேலையிலமர்ந்து மணியொன்றிற்கு அறுபது மைல்வீதம் அவன் வண்டியையிழுக்கும் வேலைமுதற்கொண்டு அவன்வயலை உழுவது கதிரையறுப்பது அடிப்பது ஈருகவுள்ள சகலவித வேலைகளையும் மகாசுறுசுறுப்போடும் செய்துவருகின்றது. அதிசயிக்கத்தக்கவிதமாய் வர்த்தகமும் வியாபாரமும் விர்த்தியடைந்திருக்கின்றது. பரதேசபிரயாணம் மேன்மேலும் விர்த்தியாகி

பற்பல தேசத்துஜனங்களும் ஒருவரோடொருவர் கலந்துஉறவாடி ஐக்கியமாயிருக்கின்றார்கள் நாகரீகமடைந்த ஜாதியாருக்கு இதுவரை கொஞ்சமும் தெரியாதிருந்த தேசங்களும் மிகவும் சொற்பமாய்மாத்திரம் அறியப்பட்டிருந்த தேசங்களும் இப்போது பூரணமாயறியப்பட்டிருப்பதுமன்றி அவைகளில் வசிக்கும் நிர்மூடரும் மூரடருமான ஜனங்கள் தற்காலத்திய நாகரீகத்தையடைந்து சுகஜீவிகளாய்வாழவும் நேர்ந்திருக்கின்றது. அடிமையேற்பாடு நாகரீகமான தேசங்களிலெல்லாம் கட்டோடே நின்றுவிட்டது. கல்வியும் சாஸ்திரங்களும் முன்னிலும் பதின்மடங்கு விர்த்தியடைந்திருக்கின்றது.

நமது இந்தியா தேசத்திலும் சகல விஷயங்களிலும் அபிவிர்த்தியும் தேர்ச்சியும் உண்டாயிருக்கின்றது. ஆனாலும் நம்முடைய தேசத்தின்வாழ்வும் அபிவிர்த்தியும் பிரிட்டிஷ் அரசாட்சி யிங்குவரத் தலைப்பட்டபின் க்ஷீணதசையடைந்திருக்கின்றதேயன்றி மேம்பாடொன்றுமில்லை யென்று இங்குமங்கும் சிற்சிலர் சமயாசமயங்களில் சொல்வதை யறிந்தும் கேட்டுமிருக்கிறோம். இவ்விதத்தப்பெண்ணங்கொண்டிருப்பவர்கள் நூறு இருநூறு வருடங்களுக்கு முன் இத்தேசத்தின் ஸ்திதி எப்படியிருந்ததென்று சற்றுவுற்று ஆராய்வார்களாயின் மிகவும் நன்மையாயிருக்கும் சரியான எண்ணத்தோடு அவர்கள் அப்படிச் செய்வார்களாயின் ஆங்கிலேய அரசாக்ஷியால் இந்தியாவுக்குண்டாயிருக்கும் நன்மைகளை அவர்கள் பூராவாய் ஒப்புக்கொண்டு நன்குமதிக்க நேரிடுமென்பதற்கு இஞ்சித்தும் ஐயமில்லை. ஆங்கிலேய அரசாட்சியால் நமது தேசத்திற்குக் கிடைத்திருக்கும் நன்மைகளை யறியாதார் யாருமில்லையாயினும் மேற்சொல்லிய வகுப்பினருக்கு நினைப்பூட்டும் நோக்கமாய் அந்நன்மைகளிற் சிலவற்றை இவ்விடம் எடுத்துக் கூறுவாம். காலத்திற்குக்காலம் இந்தியாவின் வடமேற்கு எல்லைவழியாய்ப் படையெடுத்துவந்து நாவினாலும் வசனிப்பதற்கரிய துராகிருதங்களைச் செய்து அபரிமிதமான திரவியங்களை வாரிக்கொண்டு தங்கள் தேசத்துக்குத் திரும்பும் மூர்க்கராலடையுந் துன்பம் அடியோடே நின்றுவிட்டது. தேசத்திற்குள்ளேயே சிற்றரசர்களுக்குள் ஓயாத சண்டையும் சச்சரவும் குடிகளுக்குள் கலகமுமாயிருந்த இடத்தில் இப்போது சமாதானம் நிலைபெற்றிருக்கிறது. சிற்றரசரும் குடிகளும் பெரியோரும் சிறியோரும் தனவான்களும் ஏழைகளும் பிராமணனும் பறையனும் சகலத்திராளும் பராக்கிரமமுள்ள பிரிட்டிஷ்

கொடி நிழலின் கீழ் நிர்ப்பயமாய் வாழ்கின்றார்கள். பிந்தாரியும் தீவட்டிக்கொள்ளைக்காரனும் பிரயாணிகள் கழுத்திற்சுருக்கிட்டு வதைத்து வழிப்பறிபறிக்கும் தக்கனும் தன் தீத்தொழிலை யடியோடு மறந்து தன் அறிவாளை ஏர்க்கொழுவாகவும் ஈட்டியைக் களை வெட்டியாகவும் அடித்து விட்டான். நாடெங்குஞ் சுற்றிக்கொள்ளையடித்து ஜீவனஞ் செய்வதே தொழிலாக வுடைய மராட்டியன் என்னும் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் குடியானவன் கைகால் பதறித்தேகமெங்கும் நடுங்கும் நடுக்கம் அடியோடு நின்றுவிட்டது. அவன் விதைத்த தானியத்தின் கதிரை இன்னொருவன் அறுப்பதும், அவன் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை அவன் கையினின்று தட்டிப்பறிப்பதும் நின்று விட்டது. தன் வீட்டு ஸ்திரிகளை அந்தப்புரத்தில் அடைத்துவைக்கவும் பணத்தைத் தரையில் புதைத்து வைக்கவும் முன்னிருந்த அவசியத்தை யிப்போது காணோம். அரசன் குடிகட்களிக்கும் சலாக்கியங்களெல்லாவற்றிலும் சிறந்த சலாக்கியமாகிய தேக, பொருள் பந்தோபஸ்து சகலராலும் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. தேசத்தில் வர்த்தகம் வியாபாரம் மிகவும் விர்த்தியடைந்திருக்கின்றது. தேசமுழுவதிலும் நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டு ஆறுகளில் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தேசத்தின் ஓர் அந்தமுதற்கொண்டு மறு அந்தப் வரையில் இருப்புப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றினுதவியால் முற்காலங்களில் மகாகஷ்டத்தோடும் சங்கடத்தோடும் மாசக்கணக்கில் செய்து முடித்த பிரயாணங்கள் இப்போது வெகுசௌக்கியமாயும் சுளுவாயும் மணிக்கணக்கில்செய்யப்படுகின்றன. முக்யமான பட்டணங்களும் கிராமங்களும் மின் தபால் தந்தியினுலிணைக்கப்பட்டிருக்கின்றன. தபால் ஏற்பாடுகள் மிகவும் அதிசயிக்கத்தக்க விதமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. காலணாச் செலவில் தேசத்தின் எந்த மூலை முடுக்கிலுள்ளவர்களோடும் கடிதப் போக்குவரவு நடக்கின்றது. ஒன்றுக்கும் உதவாமல் தருசாயக் கிடந்த கோடிக்கணக்கான ஏக்ரா நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன். தண்ணீர்ப்பாய்ச்சலுக்காகச் செய்யப்பட்டிருக்கும் வேலைகள் உலகத்தில் வேறெங்கு மிருப்பதைவிட மிகச்சிறந்தவைகளாயிருக்கின்றன. ஐரோப்பா தேசத்தின் கல்வியும் சாஸ்திரங்களும் நாகரீகமும் இத்தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டு மிகவும் செழித்தோங்குவதைப்பார்க்கிறோம். உயர்தரக் கல்வி விர்த்திக்காக சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மகா ஏழைகளும் எழுதப்படிக்கவாவது கற்றுக்கொள்வதற்குவேண்டிய சாத

ணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பெண்கள் கற்பது அவசியமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதுமன்றி இந்தியாவின் குமாரத்திகளில் சிலர் மிகவும் உயர்ந்த வித்தியாபட்டங்கள் பெற்றிருப்பதையும் பார்க்கிறோம். ஜனங்களுடைய சுகாதார விஷயம் அதிகமாய்க் கவனிக்கப்பட்டு வருகிறது. சுகவிர்த்திக்கேற்ற பற்பல காரியங்கள் செய்யப்பட்டு வருவதுடன் ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலைகளில் சிலவின்றி வியாதியஸ்தருக்கு வைத்தியஞ் செய்யப்பட்டு வருகின்றது. இவைகளும் இன்னும் இங்கு சொல்லாமல் விட்டிருக்கிற நூற்றுக்கணக்கான வேறு பல நன்மைகளும் நாம் அனுபவிக்கப்பெற்றது எதனால்? ஆங்கிலேய அரசாக்ஷியினாலல்லவா. இந்திய அரசாட்சியில் எல்லாம் நிறைவாயிருக்கின்றது. குறைவொன்றுமில்லை. யென்று நானிங்கு சொல்வதாக உத்தேசிக்க வேண்டாம். இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் பலவுள. பயிரிடுங்குடிகளினுடைய சௌகரியத்துக்காகவும் நன்மைக்காகவும் செய்யப்படக்கூடியகாரியங்கள் அநேகமிருக்கின்றன. நிலத்தீர்வை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவந்திருக்கின்றது. இவ்விஷயத்தில் அவர்களுக்குக் கொஞ்சஞ்சகாயஞ் செய்யவகை தேடலாம். காலத்திற்குக் காலம் தேசத்திற்குள் பிரவேசித்து மகா கஷ்டத்தையும் துன்பத்தையும் விளைவிக்கிற பஞ்சங்களை வராமல் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் அரசாட்சியாருடையமுழுப்பலத்தோடும் செய்யப்படவேண்டுவது அத்தியாவசியம். இதுவரை பஞ்சங்களின் கொரேத்தைத் தணித்துக் குடிகளைக்காப்பாற்றி அவர்கள் எடுத்திருக்கும் அரியபிரயாசங்களைகுடிகள் நன்றியறிதலோடே ஞாபகத்தில்வைக்கவுங் கடமைப்பட்டிருக்கிறார்கள். காட்டிலாகாச்சட்டங்கள் மிகக்கடுமையாயிருக்கின்றன. அவற்றால் கிராமாந்திரங்களிலுள்ள ஏழைக்குடிகளுக்குக் கஷ்டங்களுண்டு. இவ்விஷயமும் கவர்ண்மெண்டார் கவனிக்கத்தக்கதே போலீஸ் விஷயங்களிலும் பூராவாய்ச் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டியது. மகா அவசியம். தேசத்தில் கைத்தொழில் முயற்சிகள் விர்த்தியானால் மாத்திரம் தேசம் செழித்தோங்குமென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் குடிகள் தாங்களே இவ்விஷயத்திற் பூண்டுழைக்க அசக்தர்களாயிருக்கின்றமையால் கவர்ண்மெண்டார் தங்களால் இயன்றவரை கைத்தொழில் விர்த்தியை முன்னுக்குக் கொண்டு வருவார்களானால் பெரும் நன்மை விளையும். இன்னும் கவர்ண்மெண்டாராலும் அவர்களுதவியாலும் செய்யப்படவேண்டி

ய காரியங்கள் பலவுள. ஆனல் அவைகள் காலா காலத்தில் கவனிக்கப்பட்டு நடந்தேறுமென்பதற்கையமில்லை.

இனிமேல் காலஞ்சென்ற நமது காருண்ணிய விக்டோரியா மகாராணிச் சக்கரவர்த்தினியாரின் ஓர் அற்பஞாபகச்சின்னமாக இத்துடன் அச்சிட்டிருக்கிற "மஹாராணி அம்மானை" யைப்பற்றி சற்றுசொல்வதவசியம் மஹாராணியாரின் ஞாபகத்தை இத்தென் இந்தியாவிலுள்ள தமிழ் ஜனங்கள் மத்தியில் நாட்டவும் மாதர்க்கரசியாகிய நமது பெருமாட்டியார் தன் தாயாருக்கு சொற்கடவாத அருமைப்புதல்வியாகவும், தன் நாயகருக்கு கற்பிற்சிறந்த அன்புள்ள மனைவியாகவும் தமது மக்கட்கு நன்னெறிபயிற்றும் நற்றாயாகவும்நடந்து இவ்வுலகத்தின் கணுள்ள சகலஸ்திரிகட்கும் காட்டியிருக்கின்ற சிறந்த முன்மாதிரியை நமது தமிழ்நாட்டு மாதரும் கேட்டறிந்து அவ்வாறு நன்னெறியில் ஒழுகவும் ஓர் சாதனமாயிருக்குமென்று அம்மாது சிரோன்மணியின் சரிதையை அம்மானையாகப் பாடித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அப்படியே நல்லதென்று சம்மதித்து பாவ்வனம் மகாவித்துவானும் ராஜபக்தி நிறைந்துள்ளோருமான சுப்பாரெட்டியாரவர்கள் பாடியிருக்கின்றார்கள் இந்நூலின் குணகுணங்களைப்பற்றி யிவ்விடத்தில் விசேஷமாய்ச் சொல்வது அவசியமன்று இதைவாசிப்போர் அவரவரே நிதானித்தறிந்துகொள்ளலாம். ஆனலும் ஒருகாரியஞ்சொல்லவேண்டியது அவசியம் நூலாசிரியர் இந்நூல் இனிமையானதாயும் அறிவூட்டுவதாயுமிருக்கும்பொருட்டு தம்மால்எவ்வளவுசிரமமும் பிரயாசையும் எடுக்கமுடியலுமோ அவ்வளவு சிரமமும் பிரயாசையும் எடுத்திருக்கிறாரென்பதற்குக்கொஞ்சமும்ஐயமில்லை மஹாராணியாரின் பட்டாபிஷேகம், விவாகம் இந்தியாவின் சிற்றரசருக்கும், குடிகளுக்கும் பிரசித்தப்படுத்திய விளம்பரம். ஆல்பர்ட் பிரபுவின் மரணம். பிரிட்டிஷ் அரசாக்ஷியால் இந்தியருக்குக் கிடைத்திருக்கும் நன்மைகள் இவற்றைப்பற்றி வர்ணித்திருப்பவை மிகவும் அழகாயும் கர்ணாமிர்தமாயுமிருக்கின்றன. ஆயினும் இந்நூலில் குற்றங்குறை யாதொன்றுமில்லை யென்று இவ்விடத்திற் சொல்லவரவில்லை. குற்றங்குறைகள் இருந்தாலும் அவற்றைப் பாராட்டாது பிரஜைகளின் தாயாய் விளங்கின கருணைவள்ளலாகிய விக்டோரியா மஹாராணிச் சக்கரவர்த்தினியாரின்பால் இத்தேசத்தின்குடிகள் காட்டிய அன்பும் விசுவாசமும் பிரிட்டிஷ்துரைத்தனத்தின்பால் அவர்கட்கிருக்கும் பக்தியும், யாவரும் இந்நூலை சந்தோஷமாய் வாங்கி வாசித்தானந்திக்க ஏவிவிடுமென்று பூரணமாய் நம்புகின்றேன்.

க்ஷத்திரிய வித்தியாசாலை.
விருதுபட்டி.
1901ஹு ஜூலைமீ 1உ

ந. சு. மா.

விஷயசூசிகை.

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	1
2.	அவையடக்கம்	2
3.	இந்நூலியற்றச் செய்தவர்	2
4.	ஆக்கியோன்	3
5.	நூற்பயன், நாட்டுச்சிறப்பு	4
6.	இலண்டன்மா நகரச்சிறப்பு	5
7.	அரசபரம்பரை	9
8.	சக்கரவர்த்தினியார் ஜெனனம்	11
9.	சக்கரவர்த்தினியார்க்கு ஆறுமாஸ்தை குழந்தையில்வந்த விபத்து	12
10.	எட்வர்ட் கென்ற்பிரபு தேகவியோகம்	13
11.	சக்கரவர்த்தினியாருக்கு மூன்றும்வயசில்வந்த விபத்து	14
12.	சக்கரவர்த்தினியாரைத் தாயார் அருமையாகவளர்த்தது	15
13.	சக்கரவர்த்தினியார் கல்விப்பயிற்சி	16
14.	சக்கரவர்த்தினியார் கல்வியினுண்மை யறிதல்	18
15.	சக்கரவர்த்தினியார்க்குத் தாயார்போதித்த நீதி	19
16.	சக்கரவர்த்தினியாரைத் தாயார் தம்மைப்பிரியாதிருக்கவென்று வினவியது	20
17.	சக்கரவர்த்தினியார் இங்கிலாந்துக்கரசிநாமென்றறிந்தது	22
18.	சக்கரவர்த்தினியார்குப் பதினாலுவயசில் வந்தவிபத்து	23
19.	சக்கரவர்த்தினியார்க்குத் தாயார்சொல்லிய ஆலோசனை	24
20.	சக்கரவர்த்தினியார்க்குப் பதினெட்டு வயசில் பிறந்தநாள் உற்சவங்கொண்டாடியது	26
21.	சக்கரவர்த்தினியாரின் பெரியதந்தை தேகவியோகம்	27
22.	சக்கரவர்த்தினியாரெழுதிய திருமுகவியல்பு	30
23.	சக்கரவர்த்தினியார் பட்டாபிஷேக விளம்பரம்	31
24.	சக்கரவர்த்தினியார் பட்டாபிஷேகம்	32
25.	சக்கரவர்த்தினியார் திருவாக்கருளியது	35
26.	சக்கரவர்த்தினியார் மனுமுறை நடத்தியது	36
27.	சக்கரவர்த்தினியார்க்கு ஆல்பர்ட்பிரபு கடிதமனுப்பியது	36

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
28.	ஆல்பர்ட்பிரபு லண்டனுக்கு வந்தது	37
29.	சக்காவர்த்தினியாரின் விவாஹோற்சவம்	38
30.	சக்கரவர்த்தினியார் மனைவாழ்க்கையும் அரசுநெறியும்	41
31.	சக்கரவர்த்தினியார் புத்திரபாக்கியம்	42
32.	அஸ்போர்ன் மாளிகை கட்டியது	44
33.	சக்கரவர்த்தினியார் குழந்தைகள் கல்விகற்றது	46
34.	சக்கரவர்த்தினியார் பல்மொரலுக்குச் சென்றது	48
35.	சக்கரவர்த்தினியார் பல்மொரலிலுள்ள ஏழைகளுக்கு அனுகூலஞ்செய்தது	49
36.	சக்கரவர்த்தினியாரின் இராச்சியபாரக் கடமைகள்	51
37.	சக்கரவர்த்தினியார் படைகளை அணிவகுத்துப் பார்வையிட்டது	[illegible]
38.	இராஜபெருமாட்டி யென்ற விக்டோரியாபெருமாட்டி திருக்கல்யாணமு மக்கட்பேறும்	5
39.	சக்கரவர்த்தினியார் அரசாக்ஷியைப்பற்றி அமெரிக்காகண்டத்தார் வியந்தது	[illegible]
40.	ஆல்பர்ட்புரபுவின் ஜனோபகாரக் கிரியைகள்	5
41.	ஆல்பர்ட்பிரபு பொருட்காட்சிச் சாலையியற்றியது	5
42.	இந்தியாவுக்கு முற்காலத்தில் ஈஸ்டிந்தியாக் கம்பெனியார்வந்தது	5
43.	ஆப்கானிஸ்தானத்தில் அடைந்தவெற்றி	6
44.	சீனரைவென்று ஜெயம்பெற்றது	6
45.	சீகியரைவென்று ஜெயம்பெற்றது	6[illegible]
46.	பர்மாதேசத்தரசனை வென்று ஜெயங்கொண்டது	6[illegible]
47.	காப்பிரிகளை வென்று ஜெயங்கொண்டது	[illegible]
48.	சக்கரவர்த்தினியார் இந்தியாவை நேரில்ஒப்புக்கொண்டு கலகத்தை ஒடுக்கி முறைசெலுத்தியது	63
49.	சக்கரவர்த்தினியார் சகலதேசத்தவர்களுக்குந் தெரிவித்த விளம்பரம்	65
50.	சக்கரவர்த்தினியார் தமது நாட்டிலுள்ளவர்களுக்கு இயற்றிய நன்மைகள்	71
51.	சக்கரவர்த்தினியார் தாயாரின்தேகவியோகம்	76
52.	ஆல்பர்ட்பிரபு தேகபீடையுற்றது	78
53.	ஆல்பர்ட் பிரபு கடவுளைதுதித்தது	79

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
54.	ஆல்பர்ட்பிரபுவின் தேகவியோகம்	80
55.	சக்கரவர்த்தினியார் நிலக்கரிக்கேணியில் விழுந்தவர்களின் குடும்பத்தாரைக் காப்பாற்றியது	84
56.	ஏழாவது எட்வார்ட் வேல்ஸ் இளவரசர் திருக்கலியாணமு மக்கட்பேறும்	85
57.	வேல்ஸ் இளவரசர் இந்தியாதேசத்தில் விஜயஞ்செய்தது	88
58.	இளவரசர் குமாரர்கள் பலதேசங்களில் விஜயஞ்செய்து வந்ததும் மூத்தமகன் தேகவியோகமும்	89
59.	ஆலிஸ்பெருமாட்டியார் திருக்கல்யாணமு மக்கட்பேறும்	91
60.	எடின்பரோப் பிரபுவாகிய ஆல்பர்ட் இளவரசா திருக்கல்யாணமு மக்கட்பேறும்	92
61.	ஹெலினுப்பெருமாட்டியார் திருக்கல்யாணமுமக்கட்பேறும்	92
62.	லூவிஸ்பெருமாட்டியார் திருக்கல்யாணம்	93
63.	கானுட்பிரபுவாகிய ஆர்தர்இளவரசர் திருக்கல்யாணமு மக்கட்பேறும்	93
64.	ஆல்பானிப்பிரபுவாகிய லியொபோல்டு இளவரசர் திருக்கல்யாணமு மக்கட்பேறும்	93
65.	பியாற்றிரிஸ் பெருமாட்டியார் திருக்கல்யாணம்	93
66.	சக்கரவர்த்தினியார் குணுதிசயங்களைப் பிரெஞ்சுதேசத்தார் புகழ்ந்தது	94
67.	சக்கரவர்த்தினியார்க்கு இந்தியாவிற்பட்டங்கட்டியது	95
68.	சக்கரவர்த்தினியார் அனுப்பியதிருமுகத்தை கவர்னர் ஜெனரல் வாசித்துக்காண்பித்தது	98
69.	சக்கரவர்த்தினியார்க்குப் பலகண்டங்களிலும் அரசாக்ஷியுள்ளதை விவரித்தது	99
70.	இந்தியா தேசத்திலுள்ளவர்கள் முன்னிருந்த இயல்பும் தற்காலத்திலடைந்த நன்மைகளும்	102
71.	சக்கரவர்த்தினியார் துதி	105
72.	சக்கரவர்த்தினியார் ஆப்கானிஸ்தர்களையும் சூலுவர்களையும் வென்று ஜெயங்கொண்டது	110
73.	சக்கரவர்த்தினியார் அரசாட்சியின் ஐம்பதாம்வருஷ ஜூபிலி யுற்சவம்	112

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
74.	சித்திரால் யுத்தமும் அறுபதாம்வருஷ வயிரஜூபிலி யுற்சவமும்	113
75.	தென்னாப்பிரிகாவில் போவர்யுத்தம்	114
76.	சக்கரவர்த்தினியார் தேகவியோகம்	115
77.	ஆல்பர்ட் எட்வார்ட் பிரபு அரசாக்ஷியை ஒப்புக்கொண்டது	117
78.	சக்கரவர்த்தினியார் அடக்கம்	118
79.	தென்னாப்பிரிகாவில் போவர்களை வென்று ஜெயமடைந்தது	119
80	பிரன்சாப்வேல்ஸ் ஆல்பர்ட் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தி திருவபிடேகம்	120
81.	சக்கரவர்த்தி வாழ்த்து	122
82.	சக்கரவர்த்தினியார் இரட்டைமணிமாலை	125
83.	கும்மி	128
84.	நோட்டு	131

உ

கடவுள்துணை.

சாத்துகவிகள்.

திரிசிரபுரம் வித்வானும்

S. I. R. ஸ்டேஷன்மாஸ்டருமாகிய ம-௱-௱ஸ்ரீ

தி. இராஜகாந்தபெருமாள்பிள்ளை அவர்களியற்றியது.

---*---

மதிமுடிச்சொக்கனுடல் வளமறுபத்துநான்குஞ்
சதிருடனடத்திமூன்று சங்கமீதமர்ந்துதென்னன்
கதிபெறமதுரையாண்ட கன்னியைமணந்துசொர்க்கப்
பதியெனப்பொலிவுற்றோங்கும் பார்புகழ்பாண்டிநாட்டில். க

தஞ்சமென்றடைந்தோர் தம்மைத் தந்தைதாயெனவேபோற்றிச்
சஞ்சலந்தவிர்த்தன்னோர்க டங்குறையகற்றிநாளு
மெஞ்சலில்லாதசெல்வத் தீகையோரிருந்துவாழு
மஞ்சுலாஞ்சோலைசூழ வளரும்பால்வனமென்றோதும். உ

நற்பதியுற்றோர்நோற்ற நற்றவப்பயனாற்றக்க
பொற்புறுகுமரசாமி புகழ்பெறவந்தசேயாய்ச்
சொற்பெறும்புலவோர்மெச்சத் தூயநாற்கவிப்பாமாலை
யற்புதமாகப்பாடு மருந்தமிழ்முனியோவென்ன. ௩

உம்பரும்வியக்கமூன்னீ ருலகுளோர் துதிக்கச்சீர்சால்
(ம்பராமாயணத்தைக் கனிரசங்கண்டுதேன்போல்
வெம்பவப்பிணிகளோட விளக்கிநஞ்செவியிலூற்றுங்
கம்பனுமிவனுமென்னக் கலைவலோர்புகழ்வர்மாதோ. ௪

வேறு.

வேதங்கமழ்க்துபுறநாறுகொன்றை விடையூர்தியம்மைகணவன்
நாதந்தொனிக்கமணிமன்றுளாடு நடராஜவள்ளலணிபொற்
பாதம்பணிந்துநற்கூவன்மேய பா[illegible]ரிருந்தசுந்தர
நாதன்புரிந்தவனதானமேன்மை [illegible]மோர்ந்துரைத்தபுலவன். ௫

வேறு.

பயன்மரமுமூருணியா[illegible]வர்க்குமற்றவர்க்கும்பலனீயியு
முயர்பொறையுங்கனி[illegible]மொழி[illegible]மைவந்திகராயுலகோருய்யத்

தயவுடன்ஞானனுபவித்தசுகமனைத்தும்பிறரடையத்தந்துசீல
நயமிருந்தவெனதுமித்ரநாயகமாந்தூயவனிந்நாவலோனே. ௬

வேறு.

திங்கண்முகத்தெள்ளமுதாயிந்துதேசஞ்
செழிக்கவந்ததவமுதலாய்ச்செனித்திங்லாண்டின்
மங்களஞ்சேர்விக்டோரியாவென்றேத்து
மஹாராணிபெருஞ்சரிதமகிமைதன்னைக்
கொங்கலரும்பொழில்களொடுகடல்சூழிந்தக்
குவலயத்தோர்கேட்டுவந்துகுறைகணீங்க
மங்கையருமினிதறியம்மானையாக
வகுத்திட்டான்செந்தமிழின்வளத்தான்மாதோ. ௭

வேறு.

இத்தகையகவிநாதனியாவனெனத்தெரிந்தவைநானியம்பக்கேண்மோ
வுத்தமரிலுத்தமனுய்ப்புரமெரித்தமணிமிடற்றெம்முடையான்பாதஞ்
சித்தமதிலெந்நாளுநிலைநிறுத்தியத்துவிதந்தேர்ந்துஞானச்
சுத்தமதியுடையகுணச்சுப்பையக்கவிராஜத்தோன்றலம்மா. ௮

விருதுபட்டி.

மெஸர்ஸ் யே. அன்று யம, ஆர். வி. புரோக்கர்

ம-ா-ா-ஸ்ரீ தா-ந-கந்தசுவாமிபிள்ளை அவர்கள்

இயற்றியது.

புகழ்பெறுமிங்கிலாந்திற் பொருந்தியலண்டன்றன்னில்
மகிழ்வுடனவதரித்து மங்களமாகநாளுந்
திகழ்தரவளர்ந்துகல்விச் செல்வியாய்ப்பத்தொடொன்பான்
நிகழ்தருபருவந்தன்னில் நீண்முடிசிரசிற்கொண்ட.

வேறு.

மாதுசிரோமணியாம் விக்டோரியம்மாள்
மனுமுறைச்செங்கோல் செலுத்திவையங்காத்து
நீதிதனையிந்தியாவி ல் நிலைக்கவைத்த
நீள்சரிதமறிந்தெவரு மின்பமெய்த
வோதினனுற்செந்தமி ழம்மானையாக
வும் புகழ்பாலுவனப் பதியின்மேய
சோதிடவான்மாதிடவான் [illegible] ண்மா
சுப்பையக்கவிராஜ [illegible]

ஸ்ரீ ருதுபட்டி

ஸ்ரீமத்-இராமலிங்கசுவாமிகள் இயற்றியது.

நலஞ்சிறந்தகலியையா யிரமூன்றிற்பிலவ
நவின்மேடமதியிருபானெண் டெய்திபுகர்நாள்
தலஞ்சிறந்தவிருதூரில் க்ஷத்திரியர்வித்யா
சாலையின்மேலோர்கள் பிரபுக்களுத்யோகஸ்தர்
வலஞ்சிறந்தகவிஞர்முதற் பற்பலருமனது
மகிழ்ச்சியுடன்தெள்ளமுத மாந்தினர்போலுவப்ப
குலஞ்சிறந்தசக்ரவர்த்னி யம்மானையதனைக்
கொற்றமிகுஞ்சுப்பைய நாவலனரங்கேற்றினனே.

சென்னை அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் இயற்றியது.

இப்புவியி னம்பரத கண்டத்தைத் தன்விழியி னிற்புரந்த
வொப்புயர்வில் சக்கிரவர்த் தினியாரின் புகழனைத்து முலகமேத்த
வெப்பனைகற் பனையாதி நயங்காணச் சொற்றனன லுரையம்மானை
சுப்பைய கவிராயன் செந்தமிழா தித்தனெனத் துலங்குவோனே.

சென்னைநகர்ப் பண்டிதை

ஸ்ரீமதி-ம-மனோன்மணி அம்மாள் இயற்றிய.

பன்னிருசீர் விருத்தம்.

இம்மாநிலந்தன்னி லம்மம்மா விவர்போலு மிந்துதேயத், தெழி
...டிகளைத்தமது மைந்தரெனவேயெண்ணி யினிது காத்துத், தம்மா
...திசையனைத்துஞ் செலுத்தியதா ரெனவியந்து தக்கோ ரேத்துந்,
...ணிகரி னமதுசக்கிரவர்த்தி னித்தாயாந் தனிவிக் டோர்யா, வடி
...ளின் செயசரித நனிதேர்ந்திங் குலகனைத்து மன்பு கூர, வழகழகா
...ற்பலநன் னயமலியப் பெரும்புலவ ரதிசயிக்க, வம்மானை யெனும்
பாவல் சொற்றிட்டான் பைந்துடவை யடர்புசூழ்ந்த, வணிவளர்
முல் வனம்வருஞ் சுப்பைய கவிராயப் பேர்கொ ளறிஞ னம்மா.

மூஹம்மதியமித்திரன் பத்திராதிபர்.

கா, ப, செய்குத்தம்பிப் பாவல ரவர்கள்

இயற்றியது.

விண்ணேறும் புகழேற வியனேற நயனேற
விசம நீதத்
தெண்ணேறுங் கோலேறப் புவிபுரந்த விக்றேறி
யாளுக் கின்பத்
தண்ணேறும் பலவளஞ்சூழ் பால்வனசுப் பாரெட்டித்
தக்கோன் மிக்கப்
பண்ணேறு மம்மானை செய்தளித்தா னதன்பெருமை
பகரற் பாற்றே.

விருதுபட்டி வித்வான்

சற்கரைபெரியசாமிநாடார் அவர்கள்இயற்றியது.

கன்னற்சுவையோ கனிச்சுவையோ கண்டின்சுவையோ கடலமுதோ
என்னப்புலவ ருளங்களிப்ப விசைத்தானுலகைப் புரந்தருளு
மன்னர்க்கரசி விக்டோர்யா மஹாராணியின்மே லம்மானை
பன்னற்கரிய புகழாளன் பாலுவனச்சுப் பையவேளே.

விருதுபட்டி.

பா-மு-நாராயணசாமிநாயு டவர்கள்

இயற்றியது.

சீர்வளரிந்துதேசத்தின்சிரமாய்த் திகழ்தருமிலண்டன்மாநகர்க்கும்
பேர்வளரரசர்க்கரசியுமாகப் பெயர்கொள்விக்டோரியாவன்னைத்
தார்வளர்சரிதந்தன்னைச்செந்தமிழாற் சாற்றினன்பால்வனத்தமர்ந்த
கேர்வளர்கவிஞ்ஞர்க்கவிஞ்ஞனென் றிலகுமிணையில்சுப்பையநாவலனே.

கடவுள் துணை.

மா ஹா ட் சி மை த ங் கி ய

இந்தியசக்கிரவர்த்தினியாகிய

வி க் டோ ரி யா

மஹாராணி அம்மானை.

கடவுள்வணக்கம்.

விருத்தம்.

விரிகடல்சூ ழுலகமெல்லா மொருகுடைக்கீழ்
மெய்ம்முறையா லரசுசெய்யுந்
தருநிகர்கை விக்டோரியாச் சக்கர வர்த்தினிமீது
தமிழம்மானை
பரிவுடனே கூறுதற்குப் பவவினையின் றொடக்கறுத்துப்
பதவிநல்கும்
அரியதிருக் கருணையுடைப் பரமெதுவோ வதன்பதத்தை
யகத்துட் கொள்வாம். க

சராசரங்கள் காத்தருளும் விக்டோர்யாச்
சக்கரவர்த் தினியார்மீது
தராதலமெல் லரம்புகழும அம்மானைசெந்தமிழாற்
சாற்றவேண்டி
விராவருமெய்ப் பொருளாகி வேதமுத லெப்பொருட்கு
மேலாய் நின்ற
பராபரனை யிருதயத்திற் சந்ததமு மறவாது
பணிந்து வாழ்வாம். ௨

கதை.

சீர்கள்பலவோங்கச் செங்கோன்முறைநடத்தித்
தாரணியாள்விக்டோர்யாச் சக்கரவர்த்தினியார் க
திவ்வியசரிதமதைச் செந்தமிழம்மானைசொல்ல
எவ்வுயிருங்காக்கு மிறைவன்மலர்த்தாள்போற்றி ௨

அஞ்ஞானமென்னும் அகத்திருளைப்போக்கடித்து
மெய்ஞ்ஞானநல்கவல்ல மேலோர்பதம்பணிந்து ௩

சக்கரவர்த்தினியார் தக்கசரிதமதை
மிக்கபுகழ்படைத்த மேதினியிற்சொல்லுகிறேன் ௪

அவையடக்கம்.

குன்றுமற்பல்லுயிருங் கோடையினுங்காக்கவல்ல
குன்றுநிகரென்னக் குறுங்கல்லெண்ணுமாபோலும் ௫

இருளகலச்செல்லும் இரவிதனக்கொப்பாகத்
தெருளிலாமின்மினிதன் சிந்தைகொள்ளுமாபோலும் ௬

விலையாலுயர்ந்து விளங்குமணிக்கொப்பாக
நிலமிசைச்செங்கல்லு நினைத்திருந்தவாபோலும் ௭

வான்மீனிடையொளிரும் வான்மதிக்குநேராகுந்
தானெனவெண்சங்குந் தரையூர்வதுபோலும் ௮

நல்லவிலக்கியமு நாடுமைந்திலக்கணமும்
வல்லபமாய்க்கற்றகவி வாணருக்குமுன்பாக ௯

எட்டுணையுங்கற்றறியா என்னறிவின்புன்மைதனை
சிட்டர்களும்பார்த்துவப்பச் செப்பினேனம்மானை ௰

உள்ளரிசிக்காக உமியொடுநெல்கொள்வார்போல்
தள்ளரியசீர்த்தி தழைத்தசக்ரவர்த்தினியார் ௰௧

சரிதமிதின்மேவுந் தன்மையினன்மேலோர்கள்
பரிவாகநெஞ்சமதிற் பற்றுவர்காணம்மானை ௰௨

நூலியற்றச்செய்தவர்.

இங்கிலாந்துதேசத் திலங்குலண்டன்மாநகரில்
சிங்கஞ்சுமந்து திகழுமணியாசனத்தில் ௰௩

நாற்றிசையும்போற்ற நமதுசக்ரவர்த்தினியார்
வீற்றிருந்துசெங்கோல் விதிமுறைதப்பாதபடி. ௰௪

இந்தியாதேசமுதல் எல்லாத்தேசங்களுக்குஞ்
சொந்தத்தாய்போல சுகமுடனேகாப்பாற்றி ௰௫

மன்னரெல்லாம்போற்றி மகிழவரசாண்டதுவும்
கன்னியர்கள்காதலிக்குங் கற்பின்பெருந்தகையும் ௰௬

கற்றவரெல்லாமகிழக் கல்விபலகற்றதுவும்
நற்றவரெல்லாமகிழ நற்குணங்களுற்றதுவும் ௰௭

மற்றுமதன்னை வளஞ்சேர்சரிதமெல்லாம்
குற்றமிலாவிங்கிலீஷில் கூறியுளதானாலும் ௰௮

சங்கையறவிந்தியாவில் தக்கதமிழ்நாட்டிலுள்ள
மங்கையரும்பாலகரு மற்றுமுள்ளயாவர்களும் ௰௯

சிந்தைமகிழ்ந்தறிந்து தேரும்படியாக
பைந்தமிழம்மானை பரிவாயுரைக்கவென்று ௨௰

சீர்கள்பலவோங்குந் தென்பாண்டிநன்னாட்டில்
ஏர்கொள் அடைய லெனப்பெயர்கொள்நன்னகரில் ௨௧

வல்லபுகழ்கொண்ட வழுதியர்குலாதிபதி
நல்லதம்பியென்னும் நராதிபதிபெற்றமைந்தன் ௨௨

கூறும்பலகலையுங் குற்றமறக்கற்றறிந்தே
தேறுங்குணவலியாற் சிந்தைக்களங்கமற்று ௨௩

நல்லறங்கள்மெய்மைபொறை நற்குணங்கள்நற்செயல்கள்
இல்லறத்திற்கேற்றநெறி யெல்லாம்பொருந்தியுள்ளோன் ௨௪

மன்மதனையொத்த வடிவழகினாற்சிறந்தோன்
நன்மைதனையென்றுமிந்த நாட்டில்விர்த்திசெய்யும்வள்ளல் ௨௫

மன்னவர்களெல்லா மனமகிழுஞ்சீராளன்
கன்னியர்களெல்லாங் காதலிக்கும்பேரழகன் ௨௬

புகழுநெல்லைடிஸ்டிரிக்கட்டுப் போர்ட்டுமெம்பராயிருந்து
திகழுமனுநீதி செலுத்துந்திறமையுள்ளோன் ௨௭

விருதூரிலென்றும் விளங்குகல்விச்சாலைதனில்
அருமையுடனே யதிபதியாய்வீற்றிருப்போன் ௨௮

ஆணிக்கனகமென யாவர்களுங்கொண்டாடும்
மாணிக்கவாசகப்பேர் வள்ளல்சொல்லநல்லதென்று ௨௯

ஆக்கியோன்.

நீண்டகுளிர்சோலை நெருங்கிவளஞ்சிறந்த
பாண்டித்திருநாட்டிற் பால்வனமாநற்பதியில் ௩௰

சையோத்தியாகத் தகைமையுடனேவசிக்கும்
ஐயோத்திரெட்டியர்கள் அன்பானவம்மிசத்தில் ௩௧

சமர்புரிந்துசூரனைவென்ற சண்முகன்றாள்போற்றிசெய்யும்
குமரசாமிப்பெயர்கொள் கோமான்வரத்துதித்த ௩௨

சுப்பையநாவலவன் ஸ்ரீகைவிக்டோரியம்மாள்
செப்பரியகாதைதன்னைச் செந்தமிழம்மானைசொன்னேன் ௩௩

நூற்பயன்.

எவ்வுலகுஞ்செங்கோல் இனிமைபெறவேநடத்தி
செவ்வையுடனேயரசு செய்தசக்ரவர்த்தினியார் ௩௪
நல்லசரிதமதை நானிலத்திற்சொல்வோரும்
சொல்லுவதைக்காதிற் சுகமாகக்கேட்போரும் ௩௫
மாயாமலமொழிந்து வாய்த்தபரிசுத்தமுடன்
சேயரொடுசகல செல்வங்களும்படைத்து ௩௬
பூவுலகின்மிக்க புகழாகவாழ்ந்துபின்பு
தேவவுலகமதிற் சேர்வார்காணம்மானை ௩௭

நாட்டுச்சிறப்பு

விருத்தம்.

எக்கணும்புகழ் செல்லவெழிலுடன்
தக்கசீர்த்திகள் சந்ததமோங்கவே
சக்ரவர்த்தினியார் தனிக்கோல்செலு
மிக்கநாட்டின் வளம்வியந் தோதுவாம்.

கதை.

மாதமொருமூன்று மழைகள்சிறப்பாய்ப்பொழியும்
சீதநதியெங்குஞ் செழிப்பாகநீர்பெருகும் ௩௮
செந்நெலொடுகன்னல் சிறக்கும்பலவிளைவும்
எந்நலமுமோங்கும்இராணியர்தந்தேசமதில் ௩௯
வாழைமரங்கள் வரிசையுடனேபழுக்கும்
தாழைமலர்களெங்குஞ் சார்பாகப்பூத்திருக்கும் ௪௰
மாமரங்களெங்கும் மதுரக்கனிபழுக்கும்
பூமரங்களெங்கும் பொலிவாகப்பூத்திருக்கும் ௪௧
காவின்மரங்கள் கனிகசிந்துசாறொழுகும்
தாவிக்கிளிகள் தருக்களிற்கொஞ்சித்திரியும் ௪௨
குயில்களிசையாகக் கூவுமந்தச்சோலைகளில்
மயில்கள்முகில்கள்வர வாய்த்தநடனம்புரியும் ௪௩
வண்டிசைகள்பாட மலர்விரிந்துதேன்சொரியும்
தண்டலையிலெங்குந் தபோதனர்கள்வீற்றிருப்பர் ௪௪
பலவின்கனியைப் பறித்தினிதாய்மந்தியுண்ணும்
வலமானவானரங்கள் மாங்கனியைவாங்கியுண்ணும் ௪௫

பலபறவையின்குலமும் பாங்குடனேவாழ்ந்திருக்கும்
குலஞ்சேர்மிருகமெல்லாங் கூட்டமுடன்வாழ்ந்திருக்கும் ௪௬

அந்நாடுதன்னில் அழகாகவீற்றிருக்கும்
மின்னிற்சிறந்திலங்கும் மெல்லியலார்தம்முடைய ௪௭

கூந்தல்கண்டுநாணிக் குலவுமுகில்பொழியும்
சார்ந்தமுகங்கள்கண்டு சந்திரனுந்தேய்ந்தேகும் ௪௮

கண்கள்கண்டுநாணிக் கயலினநீர்க்குள்ளொழிக்கும்
பண்கொளிதழ்கண்டு பவளங்கடற்குள்ளொழிக்கும் ௪௯

பல்லழகுகண்டு பதுங்குமுத்துசிப்பியிலே
நல்லகழுத்தோர்ந்து நகர்ந்துசெல்லுஞ்சங்குகளே ௫௰

தோள்கண்டுவிண்ணைத் தொடவுயருமூங்கில்களும்
வாள்கொண்டமேனிகண்டு மங்குலிடைமின்னொதுங்கும் ௫௧

தனங்கண்டுதேங்குயரத் தன்பலனைக்கொண்டேகும்
கனங்கொள்வயிற்றழகைக் கண்டாலிலைமுதிரும் ௫௨

இடைகண்டிளங்கொடிகள் ஏற்றதரைமேற்படரும்
பெடைமானினங்களெல்லாம் பின்னொதுங்கும்பார்வைகணடே ௫௩

சிங்கேறுகள்போற் றிறல்படைத்தகாளையரும்
பங்கமில்லாதெந்நாளும் பத்தியுடன்வீற்றிருப்பர் ௫௪

இலண்டன்மாநகரச்சிறப்பு.

விருத்தம்.

நானிலத்தினி னன்கமர் வோரெலா
மேனலத்தின் மிகுமகிழ் வெய்தவே
பூநலத்திற் புரந்தரு ளன்னையார்
தானிருக்கு நகர்வளஞ் சாற்றுவாம்.

கதை.

இன்னும்அனேகவளம் ஏற்றதிருநாட்டினிலே
மன்னரெல்லாம்போற்ற மஹாராணியாரிருந்து ௫௫

செங்கோல்செலுத்துஞ் சிறந்தலண்டன்மாநகரம்
மங்கைதிருமாது மகிழ்ந்திருக்குமாநகரம் ௫௬

பூமாதுக்கென்றும் பொலியுந்திருமுகமாம்
நாமாதுக்கென்றும் நறுந்தாமரைப்பீடம் ௫௭

மன்னரெல்லாம்வந்து வணங்குந்திருத்தானம்
பன்னற்கரிய பலபொருளுஞ்சேருமிடம் ௫௮

பொன்னகரம்போலும் பொலிவுமிகுநன்னகரம்
மன்னுமளகேசன் மாநகர்க்குமேனகரம் ௫௯

பலநூல்புகலும் பலவரசர்தேசமெல்லாம்
வலமாகவோர்குடைக்குள் வைத்தரசுசெய்நகரம் ௬௰

முன்னமொருதேசம் முழுதாண்டவர்நகரைப்
பன்னற்கரிய பலவளங்களுளவென்றால் ௬௧

எல்லாநகரும் இனிதாள்பெருமாட்டி
வல்லநகரத்தை வகுத்துரைக்கவல்லவரார் ௬௨

கொண்டல்தழுவவுயர் கோட்டைகளுஞ்சோலைகளும்
விண்டலத்தின்மீதாய் விளங்குமந்தமாநகரம் ௬௩

தேட்டமுடன்பொன்மலைமேற் சேர்ந்துலவுமன்னமென
கோட்டைகளின்மேலே குலவுகொடியாடைகளும் ௬௪

பற்றலர்கள்வந்து பரவாமற்கோட்டைமதில்
சுற்றிலும்பீரங்கி தொகுப்பாய்நிரைத்திருக்கும் ௬௫

துப்பாக்கிவேல்வாள். சுரிகைப்பலகைப்பிடித்து
செப்பமுள்ளவாசல் திறல்வீரர்காத்திருப்பார் ௬௬

பின்னுமந்தவாசல் பெலமுள்ளசோல்ஜர்களும்
மன்னுமிரவும்பகலும் வன்மையொடுகாத்திருப்பர் ௬௭

ஏழுசமுத்திரமும் ஏற்றமுள்ளபொன்மலையை
சூழவளைந்ததெனத் தோன்றுமகழிகளும் ௬௮

கோட்டைகளின்மீது குலவுகின்றகொத்தளமும்
தாட்டிகமாயிங்கிலீஷ் தனிக்கொடியுலாவுவதும் ௬௯

விண்ணுயருமாடங்களும் மேன்மாடகூடங்களும்
கண்ணுக்கினிதான காட்சிதருமாடங்களும் ௭௰

பலபொருளும்விற்கும்வியா பாரக்கடைத்தெருவும்
நலமிகுந்தபோதகர்கள் நாளுமவாழ்வீதிகளும் ௭௧

நாலாவிதமாய் நவில்வைத்யசாலைகளும்
மேலானநூல்கள் விளங்குகல்விச்சாலைகளும் ௭௨

மதயானைகட்டுகின்ற வானுயர்ந்தகூடங்களும்
குதிரைக்கூட்டங்களென்றுங் கூடிநிற்குங்கூடங்களும் ௭௩

வேதவொலிகள் மிகவேமுழங்குவதும்
கீதவொலிகள் கிளரும்நகரமெங்கும் ௭௪

சாரட்டுவண்டி தடதடெனச்செல்லுவதும்
சீரிட்டரப்பர்வண்டி செல்லுகின்றவீதிகளும் ௭௫

வாகாய்த்தரைக்குள்ளொன்றும் மண்மேலயனிலொன்றும்
ஆகாயத்தேவழிசெய் தங்கொன்றொவ்வோரிடத்தும் எசு

இரும்புவண்டிசூஸ்திரத்தா லேகுகின்றவீதிகளும்
சுரும்பாருங்கூந்தன்மின்னார் சூழ்ந்துலவும்வீதிகளும் எஎ

பந்துநிகர்தனத்தார் பந்தடிக்குமேடைகளும்
எந்திரச்சாலைகளும் ஏற்றமுள்ளோர்வாழிடமும் எஅ

புலிபோல்வயவீரர் போர்பழகுஞ்சாலைகளும்
வலிமையுள்ளவீரர்பலர் வாட்டொழில்செய்சாலைகளும் எகூ

பட்டாளவீரர் பழகும்பலஇடமும்
இட்டகுறிதப்பாமல் ஏற்றுச்சுடுவோரும் அ௰

மல்யுத்தஞ்செய்யும் வயவீரர்சேரிடமும்
நல்வித்தைகற்கும் நலஞ்சிறந்தோர்சேரிடமும் அக

போர்வீரரென்றும் பொலிவாகவாழிடமும்
சீருடனேசெல்வஞ் சிறந்தோர்கள்வாழிடமும் அஉ

சேனைத்தலைவர் சிறப்பாகவாழிடமும்
ஏனைத்தலைவர் எழிலாகவாழிடமும் அங

காமன்ஸ்சபையோர் களிப்பாகவாழிடமும்
பூமனையோர் புகழாகவாழிடமும் அச

பார்லிமெண்டாரெப்பொழுதும் பண்பாகவாழிடமும்
சீர்புரியுமந்திரிமார் சேர்ந்தென்றும்வாழிடமும் அரு

இந்தியாமந்திரிகள் இங்கிதமாய்வாழிடமும்
தந்திரஞ்சேர்வீரர் சதிராகவாழிடமும் அசு

லார்ட்டுசபையார் நலமாகவாழிடமும்
போர்ட்டுமெம்பர்கூடிப் பொலிவாகவாழிடமும் அஎ

அரசகுலத்தவர்கள் அன்பாகவாழிடமும்
சரசமுடனுரவோர் சார்பாகவாழிடமும் அஅ

பீரங்கிவைக்கும்பெருமையுள்ளசாலைகளும்
கோரமுள்ளதுப்பாக்கி கூட்டிவைக்குஞ்சாலைகளும் அகூ

கருமருந்துவைக்குங் கனஞ்சேரரங்குகளும்
பெரியகுண்டுசெல்லி பிறங்குமரங்குகளும் கூ௰

கத்தியொடுவேல்சுரிகை கைவாள்முதற்படைகள்
பத்திபத்தியாகப் படைத்தபலஅரங்கும் கூக

பொன்னால்நிறைந்து பொலிதங்கச்சாலைகளும்
மின்னார்மணிகள் விளங்கும்ரத்னசாலைகளும் கூஉ

பற்பல்விதப்பொருள்கள் பார்த்தஇடந்தோறுமுற்றுப்
பற்பல்வளங்கள் பரவுகின்றஅந்நகரில் ௯௩

தேவருலகிற் செழிப்புடையகங்கைநதி
மேவும்விதம்போல் மிகுந்ததெளிவுடனே ௯௪

சிறப்பானதேம்ஸ்நதியச் செல்வநகர்மத்தியிலே
அறப்பால்போல்மிக்க அழகாகச்செல்லுவதும் ௯௫

அதன்கீழ்த்துளைத்துரெயி லார்வமுடன்செல்லுவதும்
கதுமெனமேற்பாலமிசை காணரெயில்செல்லுவதும் ௯௬

அந்தநதிதன்னில் அரிவையரும்வீரர்களும்
சிந்தைமகிழ்ச்சியொடு சேர்ந்துவிளையாடுவதும் ௯௭

மதிநேர்முகங்கள் மலர்போற்றிருக்கரங்கள்
சதிரானகோவை தனிக்கனியைப்போலிதழ்கள் ௯௮

முத்துநிகர்பற்கள் முறுவலுள்ளசெவ்வாய்கள்
நத்துநிகராக நலஞ்சேர்கழுத்துகளும் ௯௯

சித்திரங்கட்கொப்பாகச் சிற்றிடையுநல்லழகும்
பத்தரைமாற்றுப் பசும்பொன்னிறத்துடனே ௱

அந்நகரில்வாழும் அரிவையரைக்கண்டுவெட்கிப்
பொன்னகரில்வாழமரர் பூவையரும்போயொழிப்பர் ௱௧

பின்னுமந்தநன்னகரிற் பெட்புடனேவாழ்மடவார்
நன்னலத்தினுலும் நவில்கற்பினுஞ்சிறந்தோர் ௱௨

தெள்ளமிர்தமென்னத் தெளிந்தமொழியுடையார்
விள்ளரியகல்வி விதங்களெல்லாந்தேர்ந்துடையார் ௱௩

அறிவாற்சிறந்தவர்கள் அன்புமிகவுள்ளவர்கள்
வறியவருக்கென்றும் மகிழ்வாற்கொடுப்பவர்கள் ௱௪

குற்றமறக்கற்றுக் குணஞ்சிறந்தமேலவர்க்கு
நற்றனங்கள்கோடி நலமாய்க்கொடுத்திடுவார் ௱௫

மனதிலறம்பேணிமனைவாழ்க்கையிலுயர்ந்தோர்
கனவிலும்பொய்சொல்லார் கடவுண்மேற்பக்தியுள்ளார் ௱௬

எல்லோருஞ்செல்வமெல்லாம் ஏற்றமுடனேபடைத்து
சல்லாபமாகத் தனதனைப்போல்வாழுவதால் ௱௭

ஆடியும்பாடியும்மிக் கன்பாய்மலர்பறித்துச்
சூடிமகிழ்வதல்லாற் றுன்பமின்னதென்றறியார் ௱௮

எங்குநிறைவுற் றிலங்குகின்றவோர்பொருளைத்
தங்கள்மனதிலெண்ணிச் சந்தோஷமாய்வாழ்வர் ௱௯

பின்னும்பலவளங்கள் பேசரியமாநகரில்
அன்னைசக்ரவர்த்தினியார் அன்பாகவீற்றிருக்கும் ௱௰

சீர்கொள்ளரண்மனையின் சிங்காரஞ்சொல்லவென்றால்
பார்முழுவதும்படைத்த பங்கயற்குங்கூடாது. ௱௰௧

வானளவாயோங்கி வளர்ந்திருக்கும்மண்டபங்கள்
மேனிலைகளேழு விளங்குபலமண்டபங்கள் ௱௰௨

மாற்றுயர்ந்தபொன்னால் வகுத்ததுபோன்மண்டபங்கள்
நாற்றிசையுந்தோன்றும் நலத்தினுயர்மண்டபங்கள் ௱௰௩

மாணிக்கத்தாலே வகுத்ததுபோன்மண்டபங்கள்
கோணற்றுநேரே குலவியுயர்மண்டபங்கள் ௱௰௪

பன்மணிகளாலே பகுத்ததுபோன்மண்டபங்கள்
நன்மணிக்கால்நாட்டி நடுவுயர்ந்தமண்டபங்கள் ௱௰௫

பதினாயிரங்கால்கள் பத்தியொன்றின்மேனிறுத்தி
சதிராகியோங்கச் சமைத்தபலமண்டபங்கள் ௱௰௬

மன்னரெலலாம்வந்து வணங்கிநிற்குமண்டபங்கள்
பொன்முடிசேர்வேந்தர் பொலிந்திருக்குமண்டபங்கள் ௱௰௭

சூழவுயர்ந்திலங்குஞ் சொர்ன்னமணிமண்டபத்தில்
தாழ்வில்லாச்சிங்கமெட்டுந் தாங்கிநிற்குமாசனத்தில் ௱௰௮

காதமிருநூறு கணகணெனவேயொலிக்கும்
கீதமணியோசைவெகு கெம்பீரமாய்முழங்க ௱௰௯

ஏகசக்ராதிபதி யெங்கள்பெருமாட்டியருமை
யூக்கையுடன்மேவி யுலகையரசாள்வதுவே ௱௨௰

அரசபரம்பரை.

விருத்தம்.

முன்னவரெவரும்வந்து மலரடிவணங்கியேத்தப்
பொன்னவிர்மகுடம்பூண்டு புகழ்திசையெட்டுஞ்செல்ல
இங்கிலமுழுதுங்காக்கு மெழிற்சக்ரவர்த்தினியாரின்
கன்னலமிகுமிராஜ பரம்பரைநவிலலுற்றும்.

கதை.

மிக்கபுகழால் விளங்குகின்றவிக்டோரியாச்
சக்கரவர்த்தினியார் தம்மரபுசொல்லுகிறேன் ௱௨௧

அவனிதனிற்சிறந்த ஐரோபாகண்டமதில்
இவராதசெல்வமுள்ள இங்கிலாந்துதேசத்திலே ௱௨௨

சொல்லரியசீர்த்தி துலங்கும்லண்டன்மாநகரில்
நல்லவோராயிரமாய் நாடும்வருடங்களின்முன் ௱௨௩

அரசாட்சிசெய்துவந்த ஆல்பிரட்டர்கோத்திரத்தில்
சரசமுடனேமூன்றாம் ஜார்ஜென்பார்தோன்றினரே ௱௨௪

அவராயிரத்தெழுநூற் றறுபஃதாம்ஆண்டுமுதல்
தவறாதசீர்த்தியொடு தாரணியையோர்குடைக்கீழ் ௱௨௫

ஓரறுபதாண்டுவரை யுண்மையிற்செங்கோல்செலுத்தி
வீரம்புகழ்வெற்றிகளும் மேன்மேலும்பெற்றிருந்தார் ௱௨௬

அன்னார்க்குமக்கள்பதி னைந்துபேர்தோன்றியபின்
ஒன்னார்வணங்க வுலகாளுந்தன்மைவிட்டு ௱௨௭

பொன்னாடுகாப்பதற்குப் போனதற்பின்மூத்தமகன்
நன்னாடுபோற்றிசெய்ய நான்காம்ஜார்ஜாண்டுவந்தார் ௱௨௮

மூத்தமகன்வேந்தாய் முடிபுனைந்துபூவுலகைச்
சீர்த்தசெங்கோலின் றிறஞ்செலுத்திவாழ்நாளில் ௱௨௯

இரண்டாம்புதல்வர் எழில்யார்க்கெனும்பிரபு
தெருண்டமனத்தருயர் தேவபதஞ்சேர்ந்திடவே ௱௩௰

நீதிசெலுத்தி நெறியினுலகாண்டவரும்
வோதரியதேவ வுலகமதிற்சேருதலும் ௱௩௧

தன்முன்னோராண்ட தரணிதனையோர்குடைக்கீழ்
மன்னுமுறைப்படியே வாகாய்முடிபுனைந்து ௱௩௨

நாலாவதுவில்லியம் நாடெல்லாங்கொண்டாட
மேலாம்நெறிசெலுத்தி மேதினியையாள்நாளில் ௱௩௩

எட்வார்ட்டென்றோதும் இசைபெறுநான்காம்புதல்வர்
கட்டழகினாலுமுயர் கல்வியறிவுண்மையிலும் ௱௩௪

தமையன்மார்மூவரிலுந் தக்ககுணமும்பொறையும்
அமையும்பலநலமும் அன்புமிகவேபொருந்தி ௱௩௫

நான்காம்வில்பத்தினுக்கு நண்புடையபின்வார்ஸாய்
மேன்மைபலவுண்டாக மேதினியில்வாழ்நாளில் ௱௩௬

தாரார்லேனிங்கனெனும் ஜர்மன்யநற்பிரபு
சீராருந்தேவபதஞ் சேரஅவர்சீர்மனையை ௱௩௭

ஆயிரத்தெண்ணூற்றொருபத் தெட்டாம்வருடமதில்
தூயமனத்தோடுஞ் சொகுசாய்மணம்புரிந்து ௱௩௮

சந்தோசமாகஅவர் தாங்கலுந்துவாழ்நாளில்
இந்தவுலகத்தில் எவர்களுஞ்செய்மாதவத்தால் ௱௩௯
எட்வார்ட்டென்றோதும் இறைமனைவியாரான
கட்டழகியார்வயிற்றிற் கர்ப்பமிகவுண்டாகி ௱௪௰

சக்கரவர்த்தினியார் ஜெனனம்.

விருத்தம்.

மாநிலஞ்செழிப்புற்றோங்க மன்னவர்மகிழ்ந்துவாழ்க
மேனலஞ்செழிக்கநாளும் மெய்யுயிரனைத்தும்வாழ்க
மானமர்விழிகொள்சக்ர வர்த்தினியாரிப்பாரின்
மானவர்தவத்தினாலே வந்தவாறுரைத்தல்செய்வாம்

கதை.

பண்ணும்பயிராற் பரிவுடன்முன்னோர்கள்செய்த
புண்ணியங்கடோன்றுமெனப் பூவுலகஞ்சொன்முறையே ௱௪௧
தந்தையர்நற்றாயர் த்வத்தின்பெருமையினும்
முந்தவிந்தநாட்டோர் முயல்புண்ணியத்தாலும் ௱௪௨
இவ்வுலகில்வாழுகின்ற எல்லாவுயிர்களையும்
செவ்வையொடுதாம்பயந்த சேயர்களைப்போல்நினைந்து ௱௪௩
துனியாலெவருந் துயரடைந்துவாடாமல்
கனிவாய்க்கருணைவைத்துக் காத்தருளுஞ்சீமாட்டி ௱௪௪
ஆயிரத்தினெண்ணூற்றுப் பத்தொன்பதாம்வருடம்
தூயமேமாசந் துலங்கிருபானாலுதேய்தி ௱௪௫
மிக்கோர்களெல்லாம் மிகமகிழ்ந்துகொண்டாட
சக்கரவர்த்தினியார் தாரணியில்வந்துதித்தார் ௱௪௬
இடபமுயிராகவுதில் ஏற்றமதிசூரியனும்
திடமானகேதுமைந்திற் சீர்மறையோன்காரியில்லில் ௱௪௭
பன்னொன்றிற்சேய்சனியும் பாம்புடனேசேர்ந்திருக்க
பன்னிரண்டிற்சுக்கிரனும் பண்சேர்புதனிருக்க ௱௪௮
வந்துபிறந்திடலும் மாதாவுந்தந்தையரும்
பந்துஜனமுள்ளோர் பலரும்வந்துகொண்டாட ௱௪௯
அலேக்சான்ட்ராவிக்டோரீ யாவென்றேயாவருக்கும்
துலக்கமுறப்பேருமிட்டுச் சொல்லரிய இன்பமுற்றார் ௱௫௰

சச்கரவர்த்தினியார் தாலமிசைதோன்றுதலும்
மிக்கதருமங்களெலலாம் மேன்மேலுமுண்டாக ௱௫௧

பூமரங்களெல்லாம் பொலிவாகப்பூச்சொரிய
காமரங்களெல்லாங் கனிகள்பலவுதிர்க்க ௱௫௨

மலடாயிருந்தவரும் மைந்தர்களைப்பெற்றார்கள்
குல்மாதரெல்லாங் குறித்தகற்பில்நின்றார்கள் ௱௫௩

மழைகள்சிறந்து வளம்பெறஎங்கும்பொழிய
தழைகள்செழிந்து தருக்களெங்குமுண்டாக ௰௫௪

பாவங்களெல்லாம் பதறிப்பயந்தோடத்
தாவில்லாமேன்மை தவங்களெங்குமுண்டாக ௱௫௫

பலவிளைவுமோங்கிப் பசுகளுமுண்டாக
நலமேவிளைவாக நாடெங்குமேவாழ்க ௱௫௬

இந்தவிதமாக இலங்குபெருமாட்டியரை
சிந்தைமகிழ்ந்தன்னையருஞ் சிங்காரமாய்வளர்த்தார் ௱௫௭

சக்கரவர்த்தினியார்க்கு

ஆறுமாஸ்தைக்குழந்தையில் வந்தவிபத்து

விருத்தம்.

மாறிலாது வளர்மதிபோல்வளர்
நாறுபூங்குழ ணந்திருத்தாயருக்
காறுமாசத்தி லானவிபத்தினைக்
கூறுவாமிக் குவலயமீதரோ.

கதை.

அருமைபாருட்டிவளர்த் தாருமாசந்தனிலே
பெருமையுள்ளதாயும் பிதாவுங்குழந்தையுடன் ௱௫௮

இங்கிலாந்தின்தென் கரையில் ஏற்றமுடனேயிருக்கும்
சிங்காரமேமிகுந்த சிட்மவுத்தாமாநகரில் ௱௫௯

சென்றோர்மனைதனிலே சேர்ந்திருக்குங்காலமதில்
நன்றியுள்ளதாதிகையில் நல்லபெருமாட்டியரும் ௱௬௰

நித்திரைசெய்யும்பொழுதங் கீணகருள்ளாறெருவன்
சித்திரமாய்க்கையிலொரு செய்யதுப்பாக்கிகொண்டு ௱௬௧

ஊர்க்குருவிதன்னை யுயர்வேட்டையாடிவந்தான்
தீர்க்கமுடனேயொருபாற் சென்றுசுடும்போதினிலே ௱௬௨

சுட்டகுறிதப்பியம்மை தூங்குகின்றநன்மனையின்
திட்டமுள்ளஜன்னல்வழி சென்றுதலைப்பக்கமதில் ௱௬௩

தாதிதிடுக்கிட்டலறச் சன்னரவைபோய்விழவே
ஆதிசக்ரவர்த்தினியார் அப்பிழைக்குத்தப்பியுய்ந்தார் ௱௬௪

தந்தைதாய்செய்த தவத்தினுநாமெல்லோரும்
முந்தநெடுநாள் முயன்றதவவுண்மையினும் ௱௬௫

உய்ந்தபெருமாட்டியரை யுற்றதந்தைதாயாரும்
சிந்தைமகிழ்வாலெடுத்துச் சென்றார்நறும்பதிக்கே ௱௬௬

சென்றின்பமாக சிறப்புடனேவாழ்நாளில்
கென்றுபிரபோர்நாள் கிளைஞர்களையங்கழைத்து ௱௬௭

பார்த்தீரோஎந்தன் பசுங்கிளிபோற்புத்திரியை
சீர்த்தவடிவாற் சிறந்திலங்கும்பெண்மணியை ௱௬௮

எப்படியானுலுமிவர் இங்கிலாந்துதேசமதை
செப்பமுடனேயரசு செய்துபுவிகாக்குமென்று ௱௬௯

புத்திரியைக்காட்டிப் புகன்றன்புடன்புகழ்ந்து
சித்தமகிழ்ந்து சிறப்பாகவாழ்நாளில் ௱௭௰

எட்வார்ட்கென்றபிரபு தேகவியோகம்.

விருத்தம்.

இங்கிலமதிக்குமாற்ற விலங்கியபுதல்வியாளை
நன்னலமாகப்பெற்று நலந்திகழெட்வார்ட்டென்னும்
பன்னுதற்கரியசீர்த்தி பரவியகென்றுப்பிரபு
பொன்னுலகரசுசெய்யப் போனவாபுகலலுற்றும்.

கதை.

எவ்வுலகும்போற்றும் எழில்சிறந்தபுத்திரியை
செவ்வையுடன்பெற்றுத் திகழ்கென்றுமாப்பிரபு ௱௭௧

உல்லாசவீதி யுலாவிவரும்வேளையிலே
சல்லாவுடைநனையச் சார்ந்துமழைபெய்திடவே ௱௭௨

நனைந்தவுடுப்புடனே நன்மனையிற்சேர்ந்தவுடன்
வனைந்தவுடுப்பைக்கழற்றி வைக்காமலாசையினல் ௱௭௩

மகளையெடுத்து மகிழ்ந்துவிளையாடல்செய்து
செகமகிழும்வேந்தர் சிலநேரம்போக்கியதால் ௱௭௪

ஈரப்புடவை யிருந்தநீர்தம்முடம்பில்
சாரவுடனே ஜலதோசமுண்டாகி ௱௭௫

குளிருஞ்சுரமுங் கொடிதாய்வருத்துதலும்
தளிர்போலும்மேனிமிகத் தள்ளாடியேவருந்தி ௭௭௬

ஆயிரத்தெண்ணூற்றிருப தானவருடமதில்
தூயஜனவரியிற் சொல்லிருபான்மூன்றுதெய்தி ௭௭௭

சக்கரவர்த்தினியார் தந்தைவிண்ணில்மேவுதலும்
தக்கமுறைப்படியே சாஸ்திரமெல்லாமுடித்து ௭௭௮

கென்றுபெருமாட்டி கிலேசமுற்றாரானாலும்
நன்றியுள்ளபுத்திரிமேல் நாடிவளராசையினால் ௭௭௯

அன்னியதேசத்தில் அழகாயுதித்திருந்தும்
இன்னிசைசேரிங்கிலீஸ் இயல்பையறியாதிருந்தும் ௭௮௰

தான்பிறந்ததேசத்திற் சார்ந்திருந்த ஆசைவிட்டு
மான்போல்விழிசேர் மகவுடையநண்பாலே ௭௮௧

இங்கிலாந்துநாட்டில் இருக்கின்றநாளினிலே
அங்குவந்தார்கென்றுபெரு மாட்டிசகோதரராம் ௭௮௨

லியோபோல்டெனும்பிரபு நேசமுள்ள தங்கையர்க்கு
பயோதரங்கள்வாடும் பயிர்க்குதவுமாபோல ௭௮௩

இனியவசனங்கள் இயம்பிமனதைத்தேற்றி
கனிவாகத்தங்கள் கடிநகருக்கேகியபின் ௭௮௪

சக்கரவர்த்தினியார் தன்னையவர்தாயாரும்
மிக்கவன்பினாலே விருப்பமுடனேவளர்த்தார் ௭௮௫

சக்கரவர்த்தினியார்க்கு

மூன்றாம்வயதில் வந்த விபத்து

விருத்தம்.

தேன்றோயந்துயர்நறுவாசனை திகழுந்தொடையுடனே
வான்றாரகைநிகராயொளிர் மணிமாமுடிபுனைந்து
சான்றாய்ப்புவிபுரக்குங்குணத் தனிநாயகத்தினுக்கு
மூன்றாம்வயதினிலெய்திய விபத்தின்றிரமொழிவாம்.

கதை.

கென்ஸிங்ட்டன்என்னக் கிளருமணிமாளிகையில்
நன்மையுடன்வாழுகின்ற நாட்களினிலேயொருநாள் ௭௮௬

அம்மாளிகையின் அருகுளபூந்தோட்டமதில்
செம்மையுள்ளவண்டியின்மேற் செல்லுகின்றவேளையிலே ௭௮௭

வண்டியின்மேனின்று மகாராணியார்தவறி
தண்டுதலொன்றின்றித் தரைமீதுவீழ்ந்திடலும் ௩௮௮

வீழவுருள்வண்டியவர் மீதுசெல்லுமுன்பாக
தாழாதுபக்கமதிற் சார்சேவகனொருவன் ௩௮௯

அன்னையுடுப்பைப்பிடித்தே யன்பாகப்பாய்ந்தெடுத்து
மன்னுபெருமாட்டியனை மாதாவின்கைக்கொடுத்தான் ௩௯௰

அப்பிழையில்நீங்கிநம தன்னையுயிர்பெற்றதுவும்
இப்புவியில்யாமுன் இயற்றுந்தவப்பயனே ௩௯௧

இவ்விதமாயுற்ற இனியபுதல்விதனை
செவ்வையுடனணைத்துச் சிந்தைமகிழ்ந்தன்னையரும் ௩௯௨

தங்கள்மனையிலுற்றுச் சந்தோஷமுண்டாகி
சிங்காரமாகத் தினமுமொருவண்ணமதாய் ௩௯௩

பாராட்டிப்புத்திரியைப் பண்பாகநாள்தோறும்
சீராட்டிவந்தார் செகதலமெல்லாம்புகழ ௩௯௪

சக்கரவர்த்தினியாரைத் தாயார்அருமையாகவளர்த்தது.

விருத்தம்.

உலகெலாந்தனிக் கோன்முறையோச்சியே
யலகில்சீர்கொணம் மன்னையர்க்கன்னையார்
இலகுமன்பி லிரவும்பகலினு
வளமதாக வளர்த்தமைகூறுவாம்.

கதை.

சீலமுடன்புவியில் செல்வமுற்றமாந்தர்சிலர்
பாலர்விரும்பிப் பலகாரம்வேண்டுமென்றால் ௩௯௫

கல்வியறிவில்லாக் கசடராய்த்தங்களிடம்
சொல்லியவேலைசெய்யுந் தூர்க்குணர்பாற்புத்திரரை ௩௯௬

தந்துவடைமிட்டாய் சகலபலகாரங்களும்
புந்திமகிழ்வால்நமது புத்திரர்க்குத்தாருமென்பர் ௩௯௭

நல்லதென்றுகூட்டியவர் நாடிவரும்போதினிலே
பொல்லாதார்பாலருக்குப் புத்திகெட்டவார்த்தைகளை ௩௯௮

பழகிவைப்பதாலேயந்தப் பாலர்களும்புத்திகெட்டு
முழுதும்அறிவிலராய் மூர்க்ககுணமுண்டாகும் ௩௯௯

அப்படிக்குப்புத்தியில்லார் அண்டையிலுஞ்சேர்க்காமல்
எப்பொழுதுந்தன்பால் இனிதாயிருக்கவைத்து உ௱

பெருமாட்டியாரைப் பிரியமுடன்பெற்றெடுத்த
அருமையுள்ளதாயாரும் அன்பாய்வளர்த்துவந்தார் உ௱க

காலைதனிலெட்டாய்க் கணித்தமணிநேரமதில்
பாலுடனேகாப்பி பலகாரம்ரொட்டிகளும் உ௱உ

துய்யசிறுமேசையின்மேற் றுண்டாகவைத்துவிட்டு
பையவேதாயாரும் பக்கத்தோர்மேசையின்மேல். உ௱௩

தீனியைவைத்துண்டுபின்னர் செல்வியருமன்னையரும்
மேனலமாயொன்பதுக்கு வீதியிற்சவாரிசெய்வர் உ௱௪

சக்கரவர்த்தினியார்கல்விப்பயிற்சி

விருத்தம்.

தொல்விதம்புவி காத்திடத்தோன்றியே
நல்விதத்துட் சிறந்துளநாயகம்
பல்விதத்துள்ள பாஷைகளாகிய
கல்விகற்ற விதத்தைக்கழறுவாம்.

கதை.

பத்துமணிமுதலாய்ப் பன்னிரண்டுதீரும்வரை
பத்தியுடனென்றும் படித்துநலத்துடனே உ௱௫

பன்னிரண்டின்மேலாய்ப் பகற்போசனங்கள்செய்ய
அன்னையருந்தாமுமேசென் றன்பாகத்தீனியுண்டு உ௱௬

நாலுமணிவரையும் நன்றாய்ப்பினும்படித்து
மேலுஞ்சாய்ங்காலமெனும் வேளைபள்ளிக்கூடம்விட்டு உ௱௭

ஒவ்வியதோழியரோ டோடிவிளையாடல்செய்து
சவ்வாரிசெய்துவெகு சந்தோஷமாய்வருவார் உ௱அ

வந்தரசமண்டபத்தில் வைத்திருக்குந்தீனியுண்டு
சந்தோஷமேமிகுந்து தாதியர்கூட்டத்துடனே உ௱௯

ஒன்பான்மணிவரையு முல்லாசமாயிருந்து
பின்பிரவிலெங்கள் பெருமாட்டியார்துயில்வார் உ௱ய

தனித்துத்தமக்காகத் தாயரிட்டகட்டிலிலே
கனத்தஇரவிலங்கே கண்டுயின்றுகாலைதனில் உகக

ஆறுமணிக்குநம தன்னையருங்கண்விழித்து
தேறுதல்செய்தாயரிடஞ் சென்றுவிளையாடல்செய்து உகஉ

ஏழுவயதளவில் எங்கள்சக்ரவர்த்தினியார்
சூழுவுயர்பூச்செடிசேர் தோட்டமதிலேபுகுந்து ௨௧௩

சிறுதகரப்பாத்திரத்தைச் செம்மலர்க்கையாலெடுத்து
நறுநீர்தனைமுகந்து நல்லபூத்தொட்டிகளில் ௨௧௪

சந்தோஷமாய்வார்த்துச் சக்கரவர்த்தினியார்
விந்தையதாக விளங்குமந்தவேளையிலே ௨௧௫

மரைமலரைப்போல வழங்குந்திருமுகத்தை
துரையொருவர்கண்டு துலங்கியசந்தோஷமுடன் ௨௧௬

பார்க்குமளவிலிந்தப் பார்முழுதாள்சீமாட்டி
சேர்க்கையுடன்வெள்ளை சிறந்தவுடுப்புந்தரித்து ௨௧௭

வைக்கோலாற்செய்ததொப்பி வாகாய்த்தலையில்வைத்து
தக்ககழுத்திலொரு சாயத்துணியணிந்து ௨௧௮

வேறுபலநகைகள் மெய்தனிலேபூணாமல்
கூறரியபேரழகு கொண்டிருக்குந்தன்மைகண்டு ௨௧௯

அந்தத்துரைமனதில் ஆச்சரியமுண்டாகி
இந்தச்சீமாட்டியுல கேழுமரசாளுமென்று ௨௨௰

தன்மனதிலெண்ணியந்தத் தக்கதுரைசென்றிடவே
நன்மைமிகுந்த நமதுபெருமாட்டியரும் ௨௨௧

தங்கள்மனையிலெய்தித் தாயார்மேசைக்கருகே
சிங்காரமாகச் சிறுமேசைமீதுவைத்த ௨௨௨

தீனியருந்திச் சிறப்பாகத்தோழியரும்
தானும்விளையாடிச் சந்தோஷமாயிருப்பர் ௨௨௩

இந்துதேசத்தில் இருக்கின்றமாந்தர்சிலர்
தந்தம்புதல்வியரைச் சார்ந்தபுத்தியீனமதாய் ௨௨௪

அந்தப்புரத்தில் அடைத்தறிவுவாராமல்
சிந்தைவிளக்குஞ் சிறந்தகல்வியில்லாமல் ௨௨௫

நல்லோரிணக்கமின்றி நற்குணங்கள்வாராமல்
புல்லறிவினாலேயவர் போக்குவர்கள்வீண்காலம் ௨௨௬

இங்கிலாந்துதேசத் திருப்பவர்களிவ்வாறு
சங்கையின்றிவீண்காலந் தள்ளாமல்மக்களுக்கு ௨௨௭

நல்லறிவுண்டாக நலமாய்ப்படிக்கவைத்து
நல்லோர்களைப்பார்த்து நல்லொழுக்கமுண்டாகி ௨௨௮

சோம்பல்அசுசிமுதற் றுர்க்குணங்கள்சேராமல்
தேம்பலறவென்றுஞ் சிறந்துவாழ்வாரதனால் ௨௨௯

அறிவுயர்வினாலும் அவர்செய்தொழிலாலும்
நெறிமுறையினாலுமுயர் நீதியொழுக்கத்தாலும் உ௫௰

அந்நாட்டிலுள்ளோர் அளகேசனைப்போல
துன்னுசெல்வமெய்திச் சுகவாழ்வடைவார்கள் உ௫௧

இந்நாட்டிலுள்ளசிலர்க் கேற்றசெல்வமுண்டானால்
மன்னும்முறையாலதனை வைத்தாளமாட்டாமல் உ௫௨

செல்வச்செருக்காற் சினத்தையென்றும்விர்த்திசெய்து
பொல்லாத்தொழிலாற் பொருளையெல்லாம்போக்கடிப்பர் உ௫௩

நெறியின்னதென்றுணரா நிர்மூடராய்த்தமைப்போல்
அறிவீனர்தம்மை யடுத்தவர்கள்சொற்கேட்டு உ௫௪

சூதுக்குங்கள்ளினுக்குந் தோதகஞ்செய்வேசையர்க்கும்
போதமின்றித்தங்கள் பொருளையெல்லாம்போக்கடிப்பர் உ௫௫

கோவச்செயலாற் கொலைவருமென்றோர்ந்துமந்தப்
பாவச்செயலாற் பணத்தையெல்லாம்போக்கடிப்பர் உ௫௬

நல்லறிவுநல்லொழுக்கம் நன்மைசற்றுமில்லாமல்
புல்லறிவராய்ச்சிலர்கள் பூதலத்தில்வாழ்வார்கள் உ௫௭

அப்படிக்கல்லாதுநம தன்னைசக்ரவர்த்தினியார்
செப்பமுள்ளவீதி சிறக்கச்சவாரிசெய்து உ௫௮

வரும்பொழுதுகண்டோர் வணங்கிச்சலாஞ்செயவே
விரும்பிநமதன்னையரும் மிக்கசந்தோஷமுடன் உ௫௯

வந்தனஞ்செய்வோர்களுக்கு வந்தனந்தாமும்புரிந்து
சிந்தைமகிழ்வாகத் தெருவீதிசுற்றிவந்து உ௬௰

தோழியர்களோடுஞ் சுகமாயரண்மனையில்
தாழ்வில்லாதுற்றிருப்பர் சக்கரவர்த்தினியார் உ௬௧

சக்கரவர்த்தினியார் கல்வியின்உண்மையறிதல்.

விருத்தம்.

பல்விதத்தொழில்கள்செல்வம் பற்பலபெற்றோரேனுங்
கல்வியைநிகர்த்ததிந்தக் காசினிதனிலின்றென்று
வல்லபமிகுந்தசக்ர வர்த்தினியாருமோர்ந்த
நல்விதமதனையெல்லா மறிந்தவாநவிலலுற்றாம்.

கதை.

கற்கப்பலநூல் கசடொன்றுமில்லாமல்
கற்றபின்அந்நூலினிடை கண்டபடிநிற்கவென்றும் உ௬௨

யாதானுநாடாமல் ஊராமலென்னொருவன்
மீதானகல்வி விரும்பாதிருப்பதென்னோ உ௬௩

என்னப்பலவா றிசைதெரிமேலோர்களுனை
தன்னையுணர்ந்தேநமது சக்கரவர்த்தினியார் ௨௪௪

பலபலபாடங்களும் பண்பாகவேபடித்து
நலமாகவெந்நாளும் நல்லொழுக்கமுண்டாக ௨௪௫

எம்ஏமுதலாக ஏற்றபலபாடங்களும்
செம்மையுடனேபடித்துத் தேர்ந்தேயிருந்தாலும் ௨௪௬

நற்குணங்கள்நன்மை நடுநிலைமையையோராமல்
துற்குணம்பொய்மூர்க்கமொடு சோம்பல்பொறுமையுள்ளோர் ௨௪௭

மூடருக்கொப்பென்றே மொழிவாரெனத்தேர்ந்து
தேடரியநற்குணமுஞ் சிந்தைத்தெளிவுடனே ௨௪௮

கற்றுவந்தாரன்னையருங் கற்பிக்கும்போதகரும்
நற்குணமும்நற்செயலும் நாளும்போதித்துவந்தார் ௨௪௯

தாயரிடத்தெனினுந் தாதியர்பக்கத்தெனினும்
தூயநமதன்னை சுகமாயிருப்பதல்லால் ௨௫௰

தனித்தோரிடத்தினிலுஞ் சற்றுமிராதபடி
கனித்தமனத்துடனே கல்வதினங்கற்றுவந்தார் ௨௫௧

பீற்றர்பரோவென்னும் பெருமையுள்ளமாநகரில்
ஏற்றமுள்ளஜார்ஜ்டேவிஸ் என்றபெயராசிரியர் ௨௫௨

ஆதியில்நம்மன்னையருக் காசிரியராயிருந்து
ஓதிவைத்தார்வாசகத்தி லுற்றபலபாடங்களும் ௨௫௩

வேதபாடத்துடனே வேறுபலபாடங்களும்
காதலுடன்லத்தீனுங் கற்றுக்கொடுத்துவந்தார் ௨௫௪

மற்றும்பலஆசிரியர் மாபுகழ்ச்சிமாட்டியர்க்கு
கற்றுக்கொடுத்தார் கனஞ்சிறந்தபாஷைபல ௨௫௫

பற்பலநூலும் படித்துத்தெளிந்தபின்பு
பற்பலபாஷைகளும் பண்பாய்ப்படித்துவந்தார் ௨௫௬

சக்கரவர்த்தினியார்க்குத் தாயார்நீதிபோதித்தது.

விருத்தம்.

முன்முயற்சித்த வொன்றைமுடிக்குமுன்
பின்னுமொன்றினைப் பேணறகாதென
அன்னையார்நம தன்னையர்க்கோதிய
நன்னலத்தை நயந்துரைப்பாமரோ.

கதை.

இந்தவிதமாய்நூல்கள் எல்லாம்படித்திடும்நாள்
சிந்தைமகிழ்தாயார் சிறப்பானபுத்திரியை ௨௫௭

அருகழைத்துவேண அருமைகளும்பாராட்டி
பெருமையுள்ளகண்மணியே பேணிநான்சொல்வதுகேள் உ௫அ

செய்தவொருதொழிலைத் தீரமுடிப்பதன்முன்
பையவேமற்றொன்றைப் பழகுவதுகூடாது உ௫௯

எடுத்தமுயற்சைக் கிழிவொன்றும்வாராமல்
முடித்துமற்றொன்றை முயலுவதுநன்மைகண்டாய் உ௬௰

ஆனதினலிந்த அருமையுள்ளவாக்கியத்தை
மேனலமாயென்றும் விளக்கிவருவாயெனவே உ௬க

தாயாருரைத்தமொழி சத்தியமதாய்நினைந்து
தூயசக்ரவர்த்தினியார் சொல்லும்விளையாட்டினிலும் உ௬உ

ஒருதொழிலைச்செய்யினதை யுற்றுமுடித்தல்லாது
பிரிதியாய்மற்றுமொன்றைப் பெண்மணியுஞ்செய்வதில்லை உ௬௩

இதுவேவழக்கமதா யெங்கள்சக்ரவர்த்தினியார்
சதிராகவேநடத்தித் தாம்வளரும்நாளினிலே உ௬௪

சக்கரவர்த்தினியாரைத் தாயார்

தம்மைப்பிரியாதிருக்கவென்று வினவியது.

விருத்தம்.

மன்னுநீதியின் மாநிலங்காத்தருள்
கன்னலின்சொற் கவின்கொள்புதல்வியை
என்னைநீங்கா திருந்திடவேண்டுமென்
றன்னையார்சொன்ன வாய்மையறைகுவாம்.

கதை.

அன்பாகப்பெற்றெடுத்த அன்னையர்நம்மன்னையளை
இன்பாயழைத்தங் கிசைப்பாரொருவசனம் உ௬௫

கற்கண்டேதேனே கனியேகனிரசமே
எற்கொண்டுமேனி யிலங்குந்திருமகளே உ௬௬

உன்னைப்பிரிந்திருக்க ஒவ்வுதில்லையென்மனது
என்னைப்பிரியா திருப்பாயென்றன்னைசொல்ல உ௬எ

அன்னையருந்தந்தையரும் முன்னறியுந்தெய்வமென
சொன்னயநேர்முன்னோர்கள் சொன்னமுறையின்படியே உ௬அ

தாயாருரைத்தமொழி சந்தோஷமாய்க்கேட்டு
சேயாருமப்படியே செய்வேனெனமொழிந்து உ௬௯

சத்தியமாயவ்வசனந் தன்னைமனதிலெண்ணி
நித்தியமுந்தாயாரை நீங்காமலேயிருந்தார் உஎ௰

இளவரசியாரும் இசைசேர்படிப்பினிலும்
வளஞ்சேரும்நன்னலமும் வாகாய்ப்பழகிவந்தார் ௨௭௧

ஐந்துவயதுக்குள் அருமையுள்ளஜர்மனும்மேல்
மைந்துடையஇங்கிலீஸ் மகிழ்பிரெஞ்சியிம்மூன்றும் ௨௭௨

ஏழுவயதில் இசைந்தபலசாஸ்திரங்கள்
சூழுலகரீதி துகளில்தத்வசாஸ்திரங்கள் ௨௭௩

பலநூன்முறையுமிந்தப் பாருலகையாள்முறையும்
நலமாகத்தேர்ந்தார் நமதுபெருமாட்டியரே ௨௭௪

இத்தாலியன்பாஷை யேற்றகிரீக்பாஷையுடன்
லத்தீனுங்கற்றார் நலந்திகழெம்மன்னையரே ௨௭௫

பன்னிரண்டதான பருவம்வருவதன்முன்
பின்னும்பலபாஷை பிரியமுடனேபடித்து ௨௭௬

சீர்சேர்கணிதமொடு சித்திரமுங்கற்றறிந்து
பார்வாழரசர் பலசரிதமுந்தெரிந்து ௨௭௭

வாத்தியங்கள்மீட்டும் வகைகள்பலவுந்தெரிந்து
நேர்த்தியுள்ளசங்கீத நீர்மைகளுங்கற்றறிந்து ௨௭௮

அன்பிரக்கம்ஈகை யறிவுயர்ச்சிநல்லொழுக்கம்
இன்பம்பொறுமை யிளமையிலேகற்றறிந்து ௨௭௯

பெரியோரைக்கண்டவுடன் பேணியுபசரித்தல்
அருமையுடனேகற் றறிந்தாரதுவுமன்றி ௨௮௦

பெண்பிறந்தோர்க்கெல்லாம் பெருமையென்றுமுண்டாக
நண்பிற்சிறந்த நமதுசக்ரவர்த்தினியார் ௨௮௧

பெற்றோர்க்கடங்கும் பிரியமுள்ளபுத்திரியாய்
வெற்றிமகிழ்நர் விரும்புங்குணமனையாய் ௨௮௨

ஆனபுதல்வர்க் கருமையுள்ளநற்றாயாய்
தானமேற்போர்க்குத் தகைமிகுந்தவள்ளலுமாய் ௨௮௩

வறுமையுடையவர்க்கு மாற்றுகின்றபொன்மலையாய்
பொறுமையுடையோர் புகழுங்கட்வுளுமாய் ௨௮௪

பத்தியுடையோர் பகருஞ்சிகாமணியாய்
எத்தேசத்துள்ளோர் எவர்க்கும்அரசியராய் ௨௮௫

ஊழியக்காரர் உவக்கும்எசமானியுமாய்
வாழியுலகின் மனுக்களுக்கோரன்னையராய் ௨௮௬

வந்ததுதந்தாயார் வழக்கமாயெப்பொழுதும்
முந்தவொழுக்கம் முறைநடத்திவந்ததினால் ௨௮௭

பரிவாய்நம்மன்னை படித்துவருந்தன்மைகண்டு
பெரியதந்தையாரும் பிரியமிகவுண்டானார் உஅஅ

பின்னும்பன்னூல்கள் பிறங்குபெருமாட்டியரும்
மன்னுமந்நாட்டுள்ளோர் மகிழும்படிபடித்தார் உஅகூ

பன்னிரண்டதாகும் பருவம்வருமளவும்
இன்னஇங்கிலாந்துக் கிறைவிநாமென்றறியார் உகூ௰

சக்கரவர்த்தினியார் இங்கிலாந்துக் கரசி நாமென்றறிந்தது.

விருத்தம்.

கொங்குலாவியநறுமலர்ச்சோலைகள்குழுமிப்
பங்கமின்றியேபற்பலவளங்களுஞ்செழிக்கு
மிங்கிலாந்தினுக்கரசிநாமென்பதையியல்பா
யெங்கணுயகமுணர்ந்தவாற்றினையெடுத்திசைப்பாம்.

கதை.

பன்னிரண்டதான பருவம்நடக்கையிலே
நன்னலத்தான்மிக்க நமதுசக்ரவர்த்தினியார் உகூக

வாசிக்கும்புஸ்தகத்துள் வண்மையுள்ளவோர்தாதி
நேசித்தவர்கள்வம்ச நீர்மையுள்ள அட்டவணை உகூஉ

தன்னைவைத்துவிட்டாள் தகைமிகுசீமாட்டியரும்
பொன்னருங்கைகளினாற் புஸ்தகத்தைப்பார்த்தளவில் உகூங

அதனுள்ளேவைத்திருந்த அட்டவணைக்காகிதத்தை
இதமாயெடுத்தங் கெழுதியதெல்லாம்பார்த்து உகூச

தாதிதனையருகிற் சந்தோஷமாயழைத்தே
ஈதுவிதங்களெல்லாம் இற்றைவரையென்னிடத்தில் உகூரு

சொல்லாதிருந்ததென்ன தோகையரேசொல்லுமென
நல்லதிருத்தாதியரும் நாயகத்தைப்பார்த்துரைப்பாள் உகூசா

இங்கிலாந்துநாட்டுக் கிறைவிநீரொன்றுமக்கு
பொங்கமுடன்முன்னம் புகன்றிருப்போமாமாகில் உகூஎ

அகந்தைமுதலா யடாதவையுண்டாகுமென்றே
உகந்தவுமதன்னை யுரையாதிருந்ததென்று உகூஅ

தாதிசொன்னமாத்திரத்திற் சந்தோஷமுண்டாகி
கோதில்லாத்தாதியரே கூறுவதுநீகேளாய் உகூகூ

எவ்வளவுமேன்மைகளை யாவரடைகின்றாரோ
அவ்வளவுபாரம் அவர்க்கிருக்குங்கண்டாயே ௩௱

நல்லறிவுநல்லொழுக்கம் நன்மையொன்றுந்தேராதார்
செல்வத்தினாலே செருக்கையடைவார்கள் ௩௱௧

தவத்தினளவேயாந் தாம்பெற்றசெல்வமென
பவத்தையகற்றவல்ல பாவலர்கள்சொன்முறையே ௩௱௨

நல்லறிவுநல்லொழுக்கம் நன்மையின்னதென்றறிவோர்
செல்வமுற்றபோதுஞ் செருக்காயிருப்பர்களோ ௩௱௩

பொல்லாதாளென்னஎன்னைப் பூதலத்திலுள்ளவர்கள்
சொல்லும்படியான துற்செயல்கள்செய்யாமல் ௩௱௪

நல்லவளென்றென்னையிந்த நானிலத்திலெல்லோரும்
சொல்லவெந்நாளுஞ் சுகமாய்நடந்துகொள்வேன் ௩௱௫

என்றுரைத்துப்பின்னும் எமதுசக்ரவர்த்தினியார்
நன்றியுள்ளதோழியரோ நாளடைவிலேநீங்கள் ௩௱௬

என்மேற்கருணையினா லேற்றபலபாடங்களும்
வன்மையுள்ளலத்தீனும் வாகாய்ப்படிக்கவென்று ௩௱௭

அன்பாலுரைத்தவிதம் அன்றெனக்குத்தோற்றவில்லை
இன்றறிந்தேனீங்கள் இசைத்தவிதமின்னதற்கே ௩௱௮

என்றுமகிழ்வால் இசைத்துநமதன்னையாரும்
வென்றியுடனேயங்கு வீற்றிருக்கும்நாளினிலே ௩௱௯

சக்ரவர்த்தினியாருககுப்
பதினாலுவயதில்வந்தவிபத்து.

விருத்தம்.

தாரார்மாமுடி சூடித்தரணியிற்
சீரார்செங்கோல் செலுத்துநம் மன்னையர்க்
கீரேழாண்டினி லெய்தும் விபத்தினைப்
பாரோர்காணப் பகரலுற் றாமரோ.

கதை.

பதினாலென்றேதும் பருவம்நடக்கையிலே
மதியாலுயர்ந்து வளர்சக்ரவர்த்தினியார் ௩௱௰

ஆயிரத்தெண்ணூற்றுமுப்பான் மூன்றாகியவருடம்
தூயநமதன்னைதங்கள் சொந்தத்தாயாருடனே ௩௱௰௧

சிறுகப்பலேறிவைற்றுத் தீவினுக்குச்சென்றார்கள்
மறுவற்றோர்அவ்விடத்தோர் மாசம்வரைவீற்றிருந்து ௩௧௨

பின்னுமந்தக்கப்பலிலே பெண்ணரசியாருடனே
நன்னலஞ்சேர்தாயாரும் நன்றாகவேயிருந்து ௩௧௩

இங்கிலாந்தின்தென்பால் இருக்குநகர்களெல்லாம்
சங்கையறவேபார்த்துத் தாஞ்செல்லும்போதினிலே ௩௧௪

கடலில்வருங்காலை கடியபுயற்காற்றெழுந்து
திடுதிடென்றுமோதத் திரண்டலைகள்மேலெழவே ௩௧௫

கடல்கொந்தளிப்புடனே காற்றின்கோஷ்டத்தினையும்
உடல்பதறியன்னையரும் உற்றுநின்றுபார்ப்பளவில் ௩௧௬

கிறுகிறெனக்கப்பல் கிளர்பாய்மரமுகட்டில்
நெறுநெறென்றோர்சத்தம் நிகழ்ந்தந்தநேரத்திலே ௩௧௭

கப்பல்நடத்துங் கனஞ்சிறந்தமாலுமியும்
அப்பொழுதிலன்னைக் கபாயம்வந்துநேராமல் ௩௧௮

ஓட்டமாயோடிவந்தே யோங்குபுகழன்னையரை
வாட்டமின்றித்தன்கரத்தால் வாரியெடுத்தப்புரத்தில் ௩௧௯

மடமடெனக்கொண்டுசென்று வைத்துத்திரும்புமுன்னே
சடசடெனவேமுறிந்து தான்விழுந்ததந்தமரம் ௩௨௰

மரம்விழுந்ததன்மையந்த மாலுமியுமன்னையர்க்கு
கரமதனாற்காட்டுதலுங் கண்டுமகிழ்வுண்டாகி ௩௨௧

மாலுமிக்குமேலான வாய்த்தவுத்யோகங்கொடுத்து
சீலமிகுமன்னன் செகத்தாசைநீத்தபின்னும் ௩௨௨

அவன்மனைவிமக்களுக்கும் அன்புடையசீமாட்டி
கவனமுடனெப்பொழுதுங் காத்துதவிசெய்துவந்தார் ௩௨௩

அனையவிதமான அபாயந்தனிற்பிழைத்து
மனமகிழ்ச்சியோடுதங்கள் மாநகரில்வந்தடைந்து ௩௨௪

சந்தோசமாகவுயர் தையற்றொழில்பலவும்
சிந்தையுறப்படித்துத் தேர்ந்துவரும்நாளினிலே ௩௨௫

சக்கரவர்த்தினியாருக்குத்
தாயார்சொன்னஆலோசனை.

விருத்தம்.

இன்னலற் றுயர்களிப்புட னெவர்களு முய்ய
மன்னறத் துறையாலிந்த மாநிலம் புரக்கும்
அன்னையார்க் கவரன்னைய ரன்புட னிசைத்த
நன்னல மிகுமியோசனை தன்னையு நவில்வாம்.

கதை.

அன்பானமிகுந்தநம தன்னையருக்கன்னையரும்
இன்பாகத்தம்பால் எழில்மகளைத்தானழைத்து ௩௨௬

வாராயென்கண்ணின் மணியேமணிவிளக்கே
சீராற்சிறந்துயர்ந்த செல்வச்சிகாமணியே ௩௨௭

ஒருவார்த்தைநானுரைப்பே னுண்மையெனநீகேளாய்
திருவாரும்பூவுலகிற் சேர்ந்துவளர்மாந்தரெல்லாம் ௩௨௮

உன்னைமதித்தென்று முவந்தேதுதிக்கும்விதம்
தன்னைமதித்துளத்திற் சங்கையறப்பார்ப்பளவில் ௩௨௯

இனிநீயடையும் எழில்சிறந்தராஜபட்டம்
கனிவானமேன்மைகளைக் காதலுடனேநினைத்தும் ௩௩௰

நல்லொழுக்கமான நடக்கைதனைக்குறித்தும்
எல்லோருநன்மதிப்பா யெண்ணுகின்றதல்லாது ௩௩௧

நின்னைமதிப்பாகஇந்த நீணிலத்தோரெண்ணுவரோ
மன்னுமிந்தப்பூவுலகின் மாந்தரெல்லாமொத்திருக்க ௩௩௨

ஒருவர்க்கொருவர் உபசரிக்கக்காரியமேன்
தெருளுற்றகல்விதிரு சேருகின்றநல்லொழுக்கால் ௩௩௩

மதிக்கின்றதல்லாவிம் மாய்சடத்தையார்மதிப்பார்
கதிக்கும்வினையலது காரியம்வேறுண்டாமோ ௩௩௪

ஆனதினாலேயென் னருமையுள்ளபுத்திரியே
மேனலமாய்நின்னிடத்தின் மேவுமரசினுக்கும் ௩௩௫

உயர்ந்ததகுதிக்கும் ஒருகுறையும்வாராமல்
பயமாகநெஞ்சிலிந்தப் பார்முழுதுங்கொண்டாடி ௩௩௬

நல்லபெண்ணென்றேத நடந்துவரவேண்டுமென்று
வல்லமகளேயென் மனந்தனில்நானெண்ணுகிறேன் ௩௩௭

அப்படியேநீயும் அவனிதனிற்பேரெடுத்தால்
இப்படியிலுள்ளவர்கள் என்றுமுனைப்போற்றிசெய்ய ௩௩௮

அரசர்க்கரசியாய்நீ யாள்வாயுலகமெல்லாம்
வரிசையுடனென்றுபெற்ற மாதாவுரைத்திடவே ௩௩௯

மனதின்மகிழ்வாய் மகாராணியார்கேட்டு
கனிவானதாய்பரற் கனிவாய்திறந்துரைப்பார் ௩௪௰

தந்தைசொல்லின்மிக்கான மந்திரங்களில்லையென்றும்
சிந்தைமகிழுன்னையினுஞ் சீர்கோவிலில்லையென்றும் ௩௪௧

முன்னோருரைத்த மொழியின்வழியாக
நன்னலஞ்சேர்நின்மொழியை நான்கடந்துசெல்வேனோ ௩௪௨

நின்சொன்முறையின் நெறியேநடப்பேனென்று
தென்சொல்லாற்கூறிமிக்க சிந்தைமகிழ்வாயிருந்தார் ௩௪௩

பின்னும்மனதிற் பெருமையொன்றுங்கொள்ளாமல்
மன்னும்புவியிலுள்ள மாந்தர்களுக்கொப்பாக ௩௪௪

பற்பல்தொழிலும் பழகிவரும்நாளினிலே
கற்பித்துவந்த கனத்தவுபாத்திச்சிகளில் ௩௪௫

பாரனேஸ்லீஜென்னும் பண்சேர்குணவதியும்
சீரனைத்தும்ஞானமென்றே தேருமனதுடையாள் ௩௪௬

சக்கரவர்த்தினியார் தம்மருகிலேயிருந்து
மிக்கபுவியாளுதற்கு வேண்டுசட்டதிட்டங்களும் ௩௪௭

சதிருடாயங்களொடு தக்கவிஷயங்களெல்லாம்
மதியிலுயர்அன்னையர்க்கு வாகாய்ப்போதித்துவந்தாள் ௩௪௮

ஊக்கமுடையார் ஒடுக்கம்போரேற்றதகர்
தாக்குதற்குப்பேருந் தகைமைபோலாகுமென்றும் ௩௪௯

பகல்வெல்லுங்காக்கைதனைப் பன்னுமிருட்கூகைவெல்லும்
இகல்வெல்லும்வேந்தர்க் கிசைகாலம்வேண்டுமென்றும் ௩௫௰

நாடோறும்நாடிமுறை நன்கியற்றுமன்னியலும்
நாடோறும்நாடு நசிக்குமெனுநன்முறையும் ௩௫௧

பின்னும்பலவிதமாய்ப் பேசுகின்றநூலியலும்
மன்னுமுலகியலும் வாகாயுரைத்திடவே ௩௫௨

மூத்தோர்கள்சொல்லுகின்ற வார்த்தையமிர்தமென்று
சீர்த்தபழமொழியிற் செப்புமுறையின்படியே ௩௫௩

நமதுபெருமாட்டியரும் நன்றாய்மனதிலுன்னி
அமைவாகவுள்ளத் தமைத்துவரும்நாளினிலே ௩௫௪

சக்கரவர்த்தினியாருக்குப் பதினெட்டு வயதில் பிறந்தநாள் உற்சவங்கொண்டாடியது.

விருத்தம்.

மூவா றுண்டின் முதுநிலத்தோ ரெலாம்
ஆவலோடுநம் மன்னை யுதித்த நாள்
ஆவதென்ன வகமகிழ்ந் தாற்றிய
தாவிலுற் சவத் தன்மை யியம்புவாம்.

கதை.

நலங்கள்பலதேரும் நமதுசக்ரவர்த்தினியார்
வலஞ்செறிமூவாறு வயதுநடக்கும்பொழுது ௩௫௫

பிறந்ததினம்வந்ததென்று பேருலகத்தெல்லோரும்
சிறந்தநகர்களெங்குஞ் சிங்காரமுண்டாக ௩௫௬

வீடுகள்தோறும் மிகவேயலங்கரித்து
தேட்றகரிய திருநாட்கொண்டாடினர்கள் ௩௫௭

நமதுசீமாட்டியரால் நாடுசெழித்தோங்குமென்று
தமதுளத்திலெண்ணிச் சகலருங்கொண்டாடினர்கள் ௩௫௮

எந்நாட்டிலுள்ளவரும் இவ்வசனங்கேட்டவுடன்
பொன்னாட்டைப்போலப் புதிதாயலங்கரித்து ௩௫௯

சக்கரவர்த்தினியார் தாலமிசைவந்ததினம்
மிக்காகயாரும் விரும்பிக்கொண்டாடினரே ௩௬௰

சக்கரவர்த்தினியாரின் பெரியதந்தை தேகவியோகம்.

விருத்தம்.

இனையன வாகயாரும் இனிதுட னிருக்குநாளின்
மனுமுறைப் படியேயிந்த வையகங் காத்துவந்த
புனைமணி முடிகொள்வேந்து பொன்னுலக டைந்தவாறும்
இனைவுட னெவருநொந்தாங் கிரங்கியவாறுஞ் சொல்வாம்.

கதை.

இந்தவிதமாக இருக்கின்றநாளினிலே
சுந்தரமாமகுடஞ் சூட்டியரசாண்டமன்னன் ௩௬௧

ஆயிரத்தெண்ணூற்றுமுப்பத் தேழாம்வருடமதில்
தூயஜூன்மாசந் துலங்கிருபதாந்தேதி ௩௬௨

நடுச்சாமநேரமதில் நானிலத்தின்பற்றகன்று
வடுத்தவிரும்விண்ணுலகில் மன்னுதலும்அக்கணமே ௩௬௩

புகழாயிருந்தகந்தர் புரிசிரேஷ்டஅத்தியட்சர்
இகமொன்றுமில்லாத இராசகாரியதரிசி ௩௬௪

எங்குஞ்சிறந்திலங்கும இராசவயித்தியர்பின்
சங்கைதெரிந்தோங்குந் தகைமிகுமிம்மூவர்களும் ௩௬௫

இளவரசியாரங் கினிமையுடன்வீற்றிருக்கும்
வளமிகுந்தகென்சிங்டன் மாளிகையைத்தானோக்கி ௩௬௬

அன்பாகக்காலைதனில் ஐந்துமணிநேரத்திலே
முன்பாகச்சொன்னஇந்த மூவர்வந்துசேருதலும் ௩௬௭

இளவரசியாரும் இருந்தவர்களெல்லோரும்
உளதொன்றறியார் உறங்குகின்றவேளையிலே ௩௬௮

அப்போதுவந்தவர்கள் அங்குநின்ற தாதியரை
செப்பமுடனேயெழுப்பிச் சீராகச்சொல்லலுற்றார் ௨௬௯

முக்யமுள்ள காரியத்தை முன்னிட்டு நாங்கள் வந்தோம்
இக்கணமே நீசென் றிளவரசியாரையிங்கே ௩௭௦

காண்பதற்கு நாங்கள் வந்த காரியஞ் சொல்வாயெனவே
மாண்சிறந்த தோழியரும் வந்தவரைப் பார்த்துரைப்பாள் ௩௭௧

இளவரசியாரிங் கினிய துயில் செய்பொழுது
வளமையல்ல நான் போய் வளர் துயிலை நீக்கவென்றாள் ௩௭௨

பின்னுமந்த மூவருமப் பெண்கொடியைப் பார்த்துரைப்பார்
நன்னலத்தினு லுயர்ந்த நங்கையரே நாங்களிங்கே ௩௭௩

அரசின் விஷயத் தவசரமாய் வந்ததினல்
விரசாயெழுப்பிவர வேண்டுமென்று கூறுதலும் ௩௭௪

ஏந்திழையுமன்றென் றிளவரசியார் துயிலும்
காந்தியுள்ள மண்டபத்திற் கால்வேகமாய்ச் சேர்ந்து ௩௭௫

இனிய துயில்கொள்ளும் இளவரசியாரை மெல்ல
கனிவான வார்த்தைசொல்லிக் கண்டுயிலை நீக்கல் செய்து ௩௭௬

வந்தவர்கள் சொன்ன வகையுரைத்தமாத்திரத்தில்
எந்தவகையோவென் றிளவரசியாரெழுந்து ௩௭௭

இரவிற்றரித்திருந்த ஏற்றவுடுப்புடனே
விரவிக்கண்ணீர் ததும்ப மென்கூந்தல் சோர்ந்துவிழ ௩௭௮

வந்தவர்கள் முன்னுக வந்துநின்றமாத்திரத்தில்
சிந்தைதெளிவாகச் சிறந்த அந்த மூவர்களும் ௩௭௯

தாங்கள் வந்தகாரியத்தைச் சங்கையறச் சொல்லுதலும்
தாங்கமுடியாத மனச் சஞ்சலமுமுண்டாகி ௩௮௦

மெய்யும்பதறி வெருவிமலர்வாய் திறந்து
அய்யோகோவென்றே யழுதுமிகநொந்துரைப்பார் ௩௮௧

அருமைபலபாராட்டி யன்பாயெனை வளர்த்த
பெரியதந்தையாரையினிப் பேருலகிற் காண்பேனே ௩௮௨

தன்புதல்விபோலத் தயவாயெனை வளர்த்த
என்பெரியதந்தையரை யெப்போதினிக் காண்பேன் ௩௮௩

இந்தவுலகின் சுமையை யென்றலையின் மீதுவைத்து
சிந்தையுவந்துயர்ந்த தேவபதஞ் சேர்ந்தாரோ ௩௮௪

என்றுபுலம்பி யிருவிழிகள் நீர்சொரிய
கன்றிமனது கலங்கியவசமுற்று ௩௮௫

அன்னையருஞ் சிரேஷ்டபுரி அத்தியட்சரைப் பார்த்து
நன்னலமதாக நவிலுவாரோர் வசனம் ௩௮௬

சிறியவயதுள்ள நான் செங்கோல் செலுத்துமுறை
அறியாத அற்ப அறிவுடையேனிவ்வுலகை ௩௮௭

பொறுத்துநெறியாகப் புரந்தொருபாற்கோடாமல்
நிறுத்துவதாயெப்பொழுது நித்தனருள்செய்யவென்று ௩௱௮௰௮
எனக்காகநீங்களிப்போ தெங்குநிறையும்பொருளை
மனக்கனிவினாலே வணங்கிப்பிரார்த்திக்கவென்று ௩௱௮௰௯
எண்ணுகிறேனென்ன இளவரசியாருரைக்க
நண்ணியமூவர்களும் நல்லதெனவேயிசைந்து ௩௱௯௰
மூழங்கால்படிசேர்த்து மூவாமுதல்வனேநீ
வழங்குவாயெங்கள் மஹாராணியார்தமக்கு ௩௱௯௰௧
பூலோகமெல்லாம் பொருந்த அரசாளுவதாய்
மேலாகியபலமும் மெய்ஞ்ஞானநன்னெறியும் ௩௱௯௰௨
என்றுபிரார்த்தித்தே இனிமையுடனெழுந்து
வென்றியுடனவர்கள் வீற்றிருக்கும்வேளையிலே ௩௱௯௰௩
சக்கரவர்த்தினியார் தங்கள்மனையுட்புகுந்து
தக்ககணவர் தனையிழந்துவாட்டமுறும் ௩௱௯௰௪
பெரியதாயார்க்குப் பெருமாட்டியார்தமது
பரிதாபமெல்லாம் பதித்தோர்கடிதமதில் ௩௱௯௰௫
அந்தச்சணம்பெரிய அன்னைக்கனுப்பிவிட்டு
முந்தவுடையெல்லாம் முறையாகவேயகற்றி ௩௱௯௰௬
வேறுபலவுடுப்பும் மேன்மையுடனேதரித்து
மாறில்லாச்சீர்படைத்த மாதாவின்பக்கம்வந்து ௩௱௯௰௭
தடந்தாமரைவதனச் சக்கரவர்த்தினியார்
நடந்தவிதங்களெல்லாம் நண்பாகவேயுரைத்து ௩௱௯௰௮
என்னிடத்தில்யாரும் இனிக்கொஞ்சநேரம்வரை
வன்னமணிமண்டபத்துள் வாராதிருங்களென்று ௩௱௯௰௯
எல்லோர்களுக்கும் இனிமையுடனேயுரைத்து
தல்லியரங்கிற் றனித்திருக்கும்வேளையிலே ௪௱
ஓரொன்பதுமணிக்கு குற்றபிரதானமந்திரி
சீரானமெல்போரன் செய்யபுகழ்சேர்பிரபு ௪௱௧
இளவரசியாரை யெதிர்ந்துதெரிசிக்கவென்று
வளஞ்சேர்அரண்மனைக்கு வந்தார்அதன்பிறகு ௪௱௨
பன்னேர்ம்மணிக்குப் பரிந்துபிரிவிக்கவுஞ்சில
என்னும்பெரியோர் இருக்கின்றசங்கமதில் ௪௱௩
இளவரசியாருடனே யெல்லோருஞ்சென்றார்கள்
வள்மையுடனவர்கள் வந்தடைந்தமாத்திரத்தில் ௪௱௪
சக்கரவர்த்தினியார் தாமெழுதிவைத்திருந்த
மிக்கதிருமுகத்தை மேன்மையுடனேயெடுத்து ௪௱௫

பிரதானமந்திரிபாற் பெண்ணரசியார்கொடுத்தார்
அருமைத்திருமுகத்தை யன்பாயவர்வாங்கி ௨௱௬

சங்கந்தனிலிருந்து சாற்றும்விதமதனை
இங்கிதமாக இயம்புகிறேனம்மானை ௨௱௭

சக்கரவர்த்தினியார் எழுதியதிருமுகவியல்பு

விருத்தம்.

தருவெனுந் தகையான்மிக்க தண்ணளி யுடனேநாளும்
பருவர லெய்துருமற் பல்லுயிர்க் குலமும்வாழ்க
மருவம ருலகையெல்லாம் மனுமுறை யாற்றுநீர்மை
திருமுகத் தெழுதிலைத்த செயலினை யுரைத்தல்செய்வாம்.

கதை.

மன்னுமுயிரனைத்தும் வண்மையொடுகாத்தருளி
என்னையாட்கொள்ளும் இறைவன்கிருபையினால் ௨௱௮

இப்பெரியவூழியத்தை யென்பாலளித்தருளும்
அப்பெரியதேவன் அகிலமெல்லாந்தாங்குதற்கு ௨௱௯

நல்லபெலமெனக்கு நல்கினல்அல்லாது
வல்லமோ இப்பெரிய மாநிலத்தைத்தாங்குதற்கு ௨௱௰

இந்தப்பெருஞ்சுமையை யென்பாற்றருமிறைவன்
அந்தப்படிபெலமும் அன்பாகவேகொடுப்பார் ௨௱௰௧

கொடுத்தருள்வாரென்னுங் குறிப்பையறியேனேல்
நடுத்தெரிந்திம்மாநிலத்தை நான்காப்பதெந்தவிதம் ௨௱௰௨

நஞ்செயலினாலே நடப்பதொன்றுமின்றிறைவன்
தஞ்செயலினாலேயெல்லாந் தானேநடக்குமென்று ௨௱௰௩

எழுதுந்திருமுகத்தை யின்பமுடன்கூறுதலும்
வழுவில்லாதந்த மஹாசங்கத்துள்ளவர்கள் ௨௱௰௪

மகிழ்ச்சியுடன்வந்து மஹாராணியாருடைய
புகழ்ச்சியுள்ளகையைப் பொருந்தவேமுத்தமிட்டு ௨௱௰௫

நமதுமஹாராணியர்போல் நல்லொழுக்கமெய்மைபொறை
அமைவடக்கங்கல்விக் கவனியில்வேறுண்டாமோ ௨௱௰௬

இவருத்தரவுக் கியல்பாகவேயடங்கி
அவரவர்செய்யூழியங்கள் அன்பாகச்செய்வோமென்று ௨௱௰௭

சத்தியவாக்களித்தார் சங்கமதிலேயிருந்து
உத்தமமும்நற்குணமு முள்ளவர்களெல்லோரும் ௨௱௰௮

கேட்டுமனதுவந்து கெம்பீரமுண்டாகி
வாட்டமின்றியாரும் மகிழ்ந்திருக்கும்வேளையிலே ௪௧௯

சக்கரவர்த்தினியார் பட்டாபிஷேக விளம்பரம்.

விருத்தம்.

மன்னவர் புகழுஞ்சக்ர வர்த்தினி யார்க்குநாளை
நன்னல மகுடஞ்சூட்டு நாளென நலத்தான்மிக்க
தொன்னிலங் காக்கும்வேந்தர் தம்மொடு சுற்றமுற்றோர்
எந்நிலத் தவர்க்குமன்பா லிசைத்தமை கூறலுற்றாம்.

கதை.

மண்ணுலகத்தாசையற்ற மன்னையெடுத்தடக்கிப்
பண்ணுமுறையனைத்தும் பாங்காய்முடித்ததற்பின் ௪௨௰

மற்றைநாட்காலே மஹாராணியார்தமக்கு
வெற்றிமிகுந்திலகும் வீரபட்டங்கட்டுதற்கு ௪௨௧

இங்கிலாந்துதேசமதி லேற்றபரம்பரையாய்
சங்கையின்றிவந்த தகுந்தவழக்கப்படியே ௪௨௨

பட்டாபிஷேகம் பரிவாய்நடத்தவென்று
திட்டமாயெவ்விடத்துஞ் சேர்ந்துபுவிகாவல்செய்யும் ௪௨௩

அன்னியதேசத் தரசருக்குமற்றவர்க்கும்
மன்னுமுறைப்படியே வாகாகக்கூறுதலும் ௪௨௪

முறையாலுரைத்த மொழிகேட்டமாத்திரத்தில்
இறைவர்கள்பற்பலரும் இங்கிலாந்தில்வந்தார்கள் ௪௨௫

அருமையுள்ளமந்திரிமார் ஆனபடைத்தலைவர்
கருமாதிகாரர் கடைகாத்திடும்வீரர் ௪௨௬

நன்னகரமாந்தரொடு நன்மைமிகுசுற்றமுற்றோர்
கன்னமதம்பெய்யுங் கரிநடத்தும்வீரர்களும் ௪௨௭

ஆனதுணையெட்டும் அரசசின்னம்மூவேழும்
தானருகுசூழவெகு சந்தோஷமாகவந்தார் ௪௨௮

வந்தவர்கட்கெல்லாம் மகிழ்வாய்விடுதிகளும்
தந்துபலவரிசை தந்தார்கனிவுடனே ௪௨௯

சக்கரவர்த்தினியார் பட்டாபிஷேகம்.

விருத்தம்.

இந்நிலத் துள்ளோரெல்லா மிடரொடு துயரநீங்கி
நன்னலத்துடனே யெந்த நாளும் வாழ்ந்தோங்கு மாற்றால்
மன்னவ ரெவரும்போற்ற மாமணி மகுடஞ்சூட்டும்
பன்னலச் சிறப்புவாய்ந்த பண்பினைப் பகரலுற்றும்.

கதை.

முடிசூடற்கொத்த முகூர்த்தம்வந்துசேருதலும்
படியாளுமன்னரெல்லாம் பக்கம்வந்துசூழ்ந்திருக்க ௪௩௰
தங்கத்தினாலுந் தருமணிகளாலியன்ற
சிங்கஞ்சுமந்த சிறப்புடையஆசனத்தில் ௪௩௧
சிந்தைமகிழ்வாற் செகவரசியாரிருக்க
கந்தாபுரிசிரேஷ்ட காரணராம்அத்தியட்சர் ௪௩௨
ஆதிகடவுளை யன்பாகவேதுதித்து
தாதார்சுகந்தகந்த தைலந்தனைவாங்கி ௪௩௩
சிரசுள்ளங்கைகள் சிறந்தவுட்பாதங்கள்முதல்
பரிவாயபிடேகம் பண்பாகச்செய்ததற்பின் ௪௩௪
பொன்மணிகளாலே புனைந்தமகுடம்புனைந்து
நன்மைமிகும்வேதமதை நல்லவலக்கைதனிலும் ௪௩௫
பொன்னுருண்டையொன்றைப் பொருவிலிடக்கைதனிலும்
மன்னரெல்லாங்கண்டு மகிழும்படிகொடுத்து ௪௩௬
பொன்னுருண்டையேயுலகம் பொய்யின்மறையேகடவுள்
என்னமனதி லினிமையுடனேநினைந்து ௪௩௭
இந்நிலத்துள்ளோர்கள் எவர்களுங்கேட்டுள்மகிழ
நன்னலவென்சொற்கு நவில்விருத்தாரமென்று ௪௩௮
ஆதிகுருவும் அரசியரைத்தான்பார்த்து
நீதியுடனே நிகழ்த்தலுற்றார்அம்மானை ௪௩௯
சத்தியந்தப்பாமற் றரணிதனைநன்னெறியால்
பத்தியுடனே பலர்களையுங்காப்பீரா ௪௪௰
என்றுசிரேஷ்டகுரு இன்பமுடன்கேட்டதற்கு
நன்றியுள்ள அன்னையரும் நல்லதென்றுகூறுதலும் ௪௪௧
வலதுகையிற்செங்கோலும் வாய்த்தஇடக்கைதனிலே
இலகுகின்றகத்தியொன்றும் ஏற்றமுடனேகொடுத்து ௪௪௨
வலக்கையணிவிரலில் வண்மையுடன்மோதிரமும்
துலக்கமுறவணிந்து சூழ்ந்தவரெல்லாமெழுந்து ௪௪௩

சத்தியவாக்கெங்களுக்குத் தந்தபடியேநடக்க
நித்தன்பலமும் நிறையும் அருள்செய்யவென்று ௪௪௪

தேவைத்துதித்துச் சிரேஷ்டகுருவேமுதலோர்
ஆவலுடன் அன்னையருக் காசீர்வதித்தார்கள் ௪௪௫

வேதவொலிமுழங்க வெண்சாமரையிரட்டக்
கீதவொலிமுழங்கக் கெர்ச்சிதங்களுண்டாக ௪௪௬

சாரங்கிவீணைபிட்டில் தம்பூரொலிமுழங்க
பீரங்கியோசையினாற் பேருலகெல்லாம்நடுங்க ௪௪௭

மேன்மையுடனேபல் வெண்சங்கொலிமுழங்க
பான்வாத்தியங்கள்வெகு பண்பாகவேமுழங்க ௪௪௮

முரசினங்களெங்கும் முகில்களெனவேமுழங்க
வரிசையுடன்தவில்கள் மத்தளங்களும்முழங்க ௪௪௯

மல்லாரிகொம்புபல வாங்காவொலிமுழங்க
சல்லரிகள்தாரைசின்னந் தம்பட்டமும்முழங்க ௪௫௦

மங்கையர்களிங்கிதமாய் மங்களங்கள்பாடிவர
செங்கனிவாயம்மையருஞ் சீர்சேர்முடிபுனைந்து ௪௫௧

பட்டாடைசாத்திப் பலபணிகளும்புனைந்து
மட்டவிழுஞ்செய்ய மலர்மாலையும்புனைந்து ௪௫௨

அத்தர்புழுகுசவ்வா தன்பாகவேயணிந்து
சித்திரத்தைப்போலச் சிறப்பாயிலங்கிடவே ௪௫௩

பால்போலும்வெண்ணிறத்துப் பாய்பரிகளெட்டணிந்த
மேலானதேரின்மிசை விக்டோரியாரிருந்து ௪௫௪

வீதிவலஞ்செய்ய வெளியேறும்நேரமதில்
பாதிரிமார்மற்றும் பலபெரியோர்சூழ்ந்துவர ௪௫௫

தானாபதிகள் தகுதியொடுசூழ்ந்துவர
சேனாபதிகள் திரளாகச்சூழ்ந்துவர ௪௫௬

தேசத்துமன்னர் சிறப்பாகச்சூழ்ந்துவர
மாசற்றபோர்வீரர் வன்மையொடுசூழ்ந்துவர ௪௫௭

இரதம்பலவரிசை யாகமன்னரேறிவர
கரசயிலம்போலுங் கரிவீரர்சூழ்ந்துவர ௪௫௮

மதியிலுயர்ந்தபல மந்திரிமார்சூழ்ந்துவர
குதிரைப்பட்டாளமொரு கோடிபேர்சூழ்ந்துவர ௪௫௯

துப்பாக்கிக்காரர் தொகுப்பாகச்சூழ்ந்துவர
எப்பாலுங்கத்திகையில் ஏந்தினவர்சூழ்ந்துவர ௪௬௦

வேல்வாள்பிடித்தபல வீரர்களுஞ்சூழ்ந்துவர
சோல்ஷர்ப்பட்டாளஞ் சொகுசாகச்சூழ்ந்துவர ௪௬௧

பீரங்கிக்காரர் பெலமாகச்சூழ்ந்துவர
சீரெங்கும்பெற்ற திறல்வீரர்சூழ்ந்துவர ௪௬௨

ஆலாத்தியேந்தி யரிவையர்கள்சூழ்ந்துவர
பாலார்மொழியுடையார் பல்லாண்டுபாடிவர ௪௬௩

பூச்சக்ரவாணம் பொறிவாணம்பூவாணம்
மீச்சக்ரமாக மிளிரும்பலவாணம் ௪௬௪

ஆகாயவாணம் அவிட்டுபலவாணம்
வாகானநட்சேத்ர வாணம்பலவாணம் ௪௬௫

எங்குந்துலங்க எழிற்சக்ரவர்த்தினியார்
பொங்கமுள்ளவீதி புகழாய்வருகையிலே ௪௬௬

வீதிகளிலேயிருந்து வேடிக்கைபார்ப்பதற்கு
கோதையர்களெல்லோர்க்குங் கூட இடமில்லாமல் ௪௬௭

மேன்மாடமீதில் விளங்கும்நிலாமுற்றமெங்கும்
மானனையார்நின்று மனமகிழ்ந்துபார்த்தார்கள் ௪௬௮

சிங்காரத்தோட்டஞ் சிறந்தசபாமண்டபங்கள்
எங்கெங்குங்கூடிநின்றே யெல்லோரும்பார்த்தார்கள் ௪௬௯

ஏழுநிலைமாடமுள்ள ஏற்றமணிச்சன்னல்களில்
வாழும்மதிமுகத்து மாதர்நின்றுபார்த்தார்கள் ௪௭௰

வாசல்கடோறும் மடவார்நெருங்கிநின்று
தேசத்தரசியர்தஞ் சிங்காரம்பார்த்தார்கள் ௪௭௧

லண்டன்நகரமித்திரன் நன்னகரம்போல்விளங்க
மண்டலத்தோரெல்லா மனமகிழ்ந்துபார்த்தார்கள் ௪௭௨

கண்டோர்களெல்லாருங் கண்களானந்தமுடன்
தண்டுதலில்லாதவெகு சந்தோஷமுற்றார்கள் ௪௭௩

மாதரசியார்தம் வதனத்தழகுகண்டு
சீதமதியொக்குமென்று செப்புவாரங்குசிலர் ௪௭௪

மதியென்றுரைத்தால் வளருங்குறையுமது
சதிரானஅம்மைமுகந் தாமரைப்பூவென்பர்சிலர் ௪௭௫

கெண்டைமீன்றானோ கிளரும்விழிகளென்பர்
தொண்டைக்கனியோ துவரோ இதழ்களென்பர் ௪௭௬

பல்லழகைப்பாரும் பகர்முத்தோவென்பர்சிலர்
நல்லழகினாலேயிந்த நாடனைத்துங்காக்குமென்பர் ௪௭௭
இன்னும்பலவிதமா யெல்லோர்களும்புகழ
கன்னல்மொழிமங்கைபெருங் காதலிக்கும்பேரழகும் ௪௭௮

சாந்தம்பொறைதயைமெய் சத்தியமும்நற்குணமும்
சேர்ந்தினிமையாகத் திகழ்சக்ரவர்த்தினியார் ௪௭௯

நகரைவலம்புரிந்து நாடெல்லாங்கொண்டாட
திகழும்அரண்மனையிற் சிங்காசனத்திலுற்று ௪௮௰

பண்டிதர்கள்பாவலர்கள் பாங்கானமந்திரிமார்
மண்டலத்துமன்னவரும் மற்றவருஞ்சூழ்ந்திருக்க ௪௮௧

எல்லோருமிக்க இனிமையுடன்கேட்பதுவாய்
நல்லசக்ரவர்த்தினியார் நன்மையுடன்சொல்லலுற்றார் ௪௮௨.

சக்கரவர்த்தினியார் திருவாக் கருளியது.

விருத்தம்.

எத்திசை யவரும்போற்று மெழிற்சக்ர வர்த்தினியார்நற்
பத்தியா யெந்நாளும் பரமனைத் துதிசெய்தந்த
நித்தன தருளாலிந்த நீணிலம் புரப்பேனென்று
சுத்தவாக் குரைத்ததன்மை தொல்லுல கறியச்சொல்வாம்.

கதை.

இந்தப்புவியரசை யேற்றமொடுநான்சுமந்து
முந்துசட்டதிட்ட முறைகளையங்கீகரித்து ௪௮௩

நீதிநியாயங்களும் நேர்ந்தமதாசாரங்களும்
கோதுவராதென்றுங் குடிகளைநாங்காப்பாற்றி ௪௮௪

பேருலகிலுள்ள பிரசைகளைநன்மையுடன்
சீராகக்காத்தருளிச் செங்கோன்முறைநடத்தி ௪௮௫

நித்தனருளாலேயிந்த நீணிலத்தில்நாமுரைத்த
சத்தியத்தையென்றுந் தவறாமற்காத்திடுவோம் ௪௮௬

என்றுநமதன்னையரும் இங்கிதமாய்க்கூறுதலும்
வென்றிமிகுந்துயர்ந்த வேந்தர்முதலெல்லோரும் ௪௮௭

முழக்கால்படிசேர்த்து முன்னாள்முறைப்படியே
வழங்கினார்வந்தனம்நம் மாதாவுமுண்மகிழ்ந்து ௪௮௮

வந்தவருக்கெல்லாம் வரிசையுடன்போசனங்கள்
தந்துபலபரிசுஞ் சந்தோசமாய்க்கொடுத்து ௪௮௯

இனியவசனங்கள் இயம்பிவந்தோர்தம்மையெல்லாம்
நனிமகிழ்ச்சியாயவர்கள் நன்னகரம்போய்ச்சேர ௪௯௰

உத்தரவுசெய்துபின்னர் ஓங்குபுகழன்னையரும்
சித்திரஞ்சேர்மண்டபத்திற் சிங்காசனத்திருந்தார் ௪௯௧

சக்கரவத்தினியார் மநுமுறைநடத்தியது

விருத்தம்.

நனிபகைவெயில்சுட நைந்துளோரெலாம்
பனிமதிநிகர்குடைப் பண்செய்நீழலில்
இனிதுடன்சந்தத மிருந்துவாழ்வுற
மநுமுறைநடத்திய வகையுஞ்சொல்லுவாம்.

கதை.

முன்னும்நெடுநாள் முறைசெலுத்திவந்தவர்போல்
மன்னரொடுமந்திரிமார் வாய்த்தவுத்தியோகஸ்தர்கள் ௪௯௨

பார்லிமெண்டுநற்சபையார் பந்துசனமுள்ளவரும்
சீர்சிறந்தமேலோர் செகத்திலுள்ளோரெல்லோரும் ௪௯௩

சந்தோஷமாகவென்றுந் தம்மைப்புகழுவதாய்
முந்தவுரைத்த முறைநெறியுந்தப்பாமல் ௪௯௪

நீதிநெறிசெலுத்தி நீணிலத்தோர்வாடாமல்
மாதரசியாரும் மனதில்மகிழ்ச்சியுடன் ௪௯௫

தலையிலிழிந்த மயிரனையர்தாரணியில்
நிலையிலிழிந்தவர்கள் என்னும்நெறியுணர்ந்து ௪௯௬

திடஞ்சேர்கருணை செலுத்தித்தயையுடனே
நடுவினிலைதவிர்தல் நாளும்நெஞ்சிற்கொள்ளாமல் ௪௯௭

இனியவுளவாக இன்னுமொழிபகர்தல்
கனியிருக்கக்காயைக் கவர்ந்ததொக்குமென்றுணர்ந்து ௪௯௮

மிடியுடையோர்பிச்சை விரும்புவோர்தங்களையும்
கொடியமொழிகளொன்றுங் கூறார்நம்மன்னையரே ௪௯௯

நாடெங்குமேவிளைய நல்லறங்களுண்டாக
வீடெங்கும்பாக்கியங்கள் மேன்மேலுமுண்டாக ௫௱

ஒருகுறையும்நேராம லோங்கியசெங்கோலோச்சி
தருமநெறியுடனே தாரணியையாள்நாளில் ௫௱௧

சக்கரவர்த்தினியாருக்கு ஆல்பர்ட்பிரபு காகிதமனுப்பியது.

விருத்தம்.

ஆல்பர்ட் டென்பவர் அன்பினம் மன்னையார்
மேல்வைத் துள்ள விருப்ப முணரவின்
பாலுற்றோர்கடிதம் வெகுபண் புயர்
சால்பி னேவிய தன்மை யியம்புவாம்.

கதை.

ஜர்மன்யதேசமதிற் சாக்ஸ்கோபற்கெனவே
தர்மமிகுந்திலங்கும் தக்கபுகழ்மாநகரில் ௫௱௨
நீதியுடன்செங்கோல் நெறிசெலுத்துஞ்சீராளன்
மாதரசியார்தமக்கு மாதாவுடன்பிறந்த ௫௱௩
சேஷ்டசகோதரர்க்குச் செப்புமிரண்டாம்புதல்வர்
வாட்டமில்லாதபுகழ் மாநிலத்திற்பெற்றவள்ளல் ௫௱௪
உருவமுள்ளமன்மதனை யொத்தஅழகாற்சிறந்தோர்
அருமைமிக்வுடைய ஆல்பர்ட்டெனும்பிரபு ௫௱௫
நமதுசக்ரவர்த்தினியார் நல்லசமுகந்தனக்கு
தமதன்பாலோர்கடிதஞ் சந்தோஷமாயெழுதி ௫௱௬
அனுப்பினார் அன்னதைநம் மன்னையரும்பார்ப்பளவில்
மனக்கனிவினாலே வனைந்திருந்ததென்னவென்றால் ௫௱௭
எவ்வுலகுங்காக்கும் இறைவன்றிருவருளால்
இவ்வுலகிலேசிறந்த இங்கிலாந்துதேசமதை ௫௱௮
மநுநூன்முறைநடத்தும் மாதரசியாராகி
இனிதாயிருப்பதுகேட் டின்பமிகவுண்டானேன் ௫௱௯
சிராயநேகலக்ஷஞ் சீவர்களைக்காப்பாற்றி
பாராளுந்தன்மை பரிவாயிசைந்திருந்தீர் ௫௱௰
உம்முடையராச்சியத்தில் ஓர்குறையும்நேராமல்
செம்மையென்றுமுண்டாகத் தேவனைநான்கோருகிறேன் ௫௧௧
பாரின்விஷயம் பலபலவேயானாலும்
சிராகவும்முடைய சிந்தையிற்சந்தோஷமதாய் ௫௧௨
மறவாமலெங்களையும் வாகாய்நினைப்பீரென்று
திறமாகஎன்னுடைய சிந்தைதனிலெண்ணுகிறேன் ௫௧௩
நன்றியுள்ளஉம்மையென்றும் நாங்கள்மறப்பதில்லை
என்றுகடிதத்தி லெழுதியிருந்ததெல்லாம் ௫௧௪
பார்த்துமனதிற் பரிவுமிக்வுண்டாகி
சீர்த்தபுகழன்னையருஞ் சிந்தைமகிழ்வாயிருந்தார் ௫௧௫

ஆல்பர்ட்பிரபு லண்டனுக்குவந்தது.

விருத்தம்.

மன்புக ழரசியர் மாமனின் றருள்
அன்பினு லுயர்ந்திடும் ஆல்பர்ட் டென்பவர்
இன்பமாய் லண்டன்மா நகருக் கெய்திய
துன்பமில் விதமினிச் சொல்லுவா மரோ.

கதை.

சீதமிகுபெல்ஜியமாந் தேசமதையாண்டருளும்
ஆதிபன்லியோப்போல்டு ஆல்பர்ட்டெனும்பிரபு ௫௧௬

தந்தங்கைபுத்திரியாய்ச் சார்ந்தமகாராணியர்க்கு
சிந்தைமகிழ்வாகச் சீர்கடிதமொன்றெழுதி ௫௧௭

எர்னஸ்ர்என்னும் எழில்சிறந்ததம்பியையும்
தர்மகுணத்தினுயர் தக்கதிருமைந்தனையும் ௫௧௮

இனிவாயெழுது மெழிற்கடிதமுங்கொடுத்து
மனதுமகிழ்ந்துசில வாசகங்களும்பகர்ந்து ௫௧௯

சீர்சேரிலண்டனெனுஞ் செய்யநகருக்கனுப்ப
தாராரும்மார்பர்முன்னுஞ் சார்ந்திருந்தோரானதினல் ௫௨௰

மனமகிழ்ச்சியாகஅங்கே வந்துமகாராணியர்பால்
கனமாகக்கொண்டுவந்த காகிதத்தையுங்கொடுத்தார் ௫௨௧

பார்த்துமகாராணியரும் பாங்காய்மனமகிழ்ந்து
சீர்த்தபுகழ்மாமன் றிருமதலையானவர்மேல் ௫௨௨

அன்புடையோராகி யழகினிலுங்கல்வியிலும்
நன்மைபலநிறைந்த நற்குணமொன்றேதெரிந்து ௫௨௩

சக்கரவர்த்தினியார் சந்தோஷமுண்டாகி
தக்கமதியமைச்சர் தங்குடும்பத்துள்ளவர்க்கும் ௫௨௪

தெரிவித்தாரன்னவருஞ் சிந்தைபிறசந்தோஷமுடன்
பரிவாயவர்க்குமணம் பாலிக்கநேர்ந்தார்கள் ௫௨௫

சக்கரவர்த்தினியார் விவாகமகோற்சவம்.

விருத்தம்.

வணங்கி மாமுடி மன்னவர் போற்றிடக்
கணங்கொள் பூமியைக் காவல்புரிந்து நற்
குணங்களா லுயர்கோதில் நம் மன்னையார்
மணம்புரிந்த மகத்துவ மோதுவாம்.

கதை.

ஆங்கிலேயரந்த அரிவையர்கள்சம்மதம்போல்
பாங்கானகல்யாணம் பண்ணுவதுவேவழக்கம் ௫௨௬

ஆகிலும்நம்மன்னை யரசியராய்மேவுவதால்
வாகுடையஆல்பர்ட்டெனும் மன்னன்மனதைத்தெரிந்து ௫௨௭

சம்மதத்தைக்கேட்டுவந்து சக்கரவர்த்தினியார்
செம்மையினலோசனைகள் செய்யுஞ்சபையோர்க்கு ௫௨௮

தெரிவித்தகாலையவர் சேர்ந்தியோசனைகள்செய்து
பரிவாய்மணமியற்றும் பண்பிதுவேநல்லதென்றார் ௫௨௯
எல்லோருங்கூடி யிசைந்துரைத்தமாத்திரத்தில்
நல்லதினம்பார்த்து நன்றாய்முகுர்த்தமிட்டு ௫௩௰
எண்ணேழுதேசத் திறைவருக்கும்ஆளனுப்பி
நண்ணுபுகழ்மிக்க நகரையலங்கரித்து ௫௩௧
ஆயிரத்தெண்ணூற்று நாற்பதாம்ஆண்டுதனில்
சேயுயரும்பெப்ருவரித் திங்கள்பத்தாந்தெய்தியன்று ௫௩௨
நல்லமகாராணியர்க்கு நானிலத்தோர்கொண்டாட
வல்லவிவாக மகோற்சவமுஞ்செய்யவென்று ௫௩௩
வீதிகடோறும் வியப்பாகப்பந்தலிட்டு
தாதுலவுமாலை சரஞ்சரமாகக்கோர்த்து ௫௩௪
மேலெங்கும்பட்டால் விதானம்அலங்கரித்து
கால்களனேகம் கவினாகச்சேர்த்துவைத்து ௫௩௫
பின்னும்பலவிதங்கள் பெட்புடையவீதியெங்கும்
நன்னலங்களோங்க நகரையலங்கரித்து ௫௩௬
தாவில்பெரியோர்களொடு தக்கபெண்ணுமாப்பிளையும்
கோவிலிலேசென்று குருமுறையாற்கைப்பிடித்து ௫௩௭
தங்கண்மரபுள்ளோர் தகுந்தமுறைப்படியே
எங்கும்புகழ இயல்சடங்கெல்லாமுடித்து ௫௩௮
ஆல்பர்ட்பிரபுவைநம் மன்னைசக்ரவர்த்தினியார்
சால்பாய்விவாகம்வெகு சந்தோ[illegible]மாய்முடித்து ௫௩௯
மணமகளாமென்று தம்மை மாநிலத்தோர்கண்டிடவே
திணிகொள்முடிபுனையுஞ் சீர்சிறந்தநற்சிரசில் ௫௪௰
ஆரஞ்சிநன்மலரால் ஆனவெள்ளைமாலிகையை
சீராகச்சூடித் திகழும்பணியணிந்து ௫௪௧
ஓரிரதந்தன்னில் உயர்ந்தமகாராணியரும்
பார்புகழும்நாயகனும் பண்பாகவேயிருந்து ௫௪௨
நகரவலஞ்செய்ய நலமாய்ப்புறப்படவே
புகரிபங்கள்தேர்கள் புரவிகளுஞ்சூழ்ந்துவர ௫௪௩
காவலர்கள்யாருங் களிப்பாகச்சூழ்ந்துவர
பாவலர்கள்மிக்க பரிவாகச்சூழ்ந்துவர ௫௪௪
பதினெட்டுவாத்தியங்கள் பாங்காய்முழங்கிவர
சுதியுடனேமங்கையர்கள் சோபனங்கள்பாடிவர ௫௪௫
கெடிகொள்பீரங்கி கிடுகிடெனவேமுழங்க
வெடிகள்படாங்குகளும் மேகமெனவேமுழங்க ௫௪௬

தோரணங்களாலே துலங்குகின்றவீதியெங்கும்
பூரணகும்பங்கள் பொலிவாய்நிறைந்திருக்க ௫௪௭

வாணவேடிக்கையுடன் மாநகரவீதிதனில்
ஆணிப்பொன்போலநம தன்னைவரும்வேளையிலே ௫௪௮

மேன்மாடமீதில் விளங்குகின்றஜன்னலெங்கும்
தாமமதிகள்பல சார்ந்துதயஞ்செய்ததென ௫௪௯

தங்கள்முகமொளிரத் தையலர்கள்கூட்டமதாய்
எங்குந்திரண்டிருந்தோர் எங்கள்பெருமாட்டியை ௫௫௰

கண்டுமனதுவந்து கண்களிமைகொட்டாமல்
கண்டுமொழிமின்னார் கனிவாய்திறந்துரைப்பார் ௫௫௧

நமதுசீமாட்டியர்க்கும் நாயகர்க்கும்பேரழகில்
அமைவுடையஇந்த அவனியில்வேறுண்டாமோ ௫௫௨

ஆண்பாலெவர்களுக்கும் ஆல்பர்ட்டுபிரபுவையும்
மாண்சிறந்தபெண்களுக்கு மாதரசியார்தமையும் ௫௫௩

பழுதில்லாதெப்பொருளும் பாலித்தருளிறைவன்
அழகின்வரம்பா யமைத்தானேயென்பர்சிலர் ௫௫௪

மதியங்குறைந்து வளர்ந்துகறையுற்றதனால்
சதிரானஅம்மை தனிமுகத்துக்கொப்பாகா ௫௫௫

செந்தாமரைமலரைச் செப்பலாமென்றாலும்
இந்திற்குவியும் இயல்பால்நிகராகா ௫௫௬

நீருட்செனித்து நிகழுங்கயலினங்கள்
சீருடையவன்னை திகழ்விழிகட்கொப்பாமோ ௫௫௭

சேற்றினிடையூர்ந்து திரிகின்றசங்கினங்கள்
தேற்றமிகுமன்னை திகழ்கழுத்துக்கொப்பாமோ ௫௫௮

இன்னும்அவயவங்கட் கேற்றதெனமேலோர்கள்
சொன்னபொருள்களெல்லாந் தோற்கும்படியுயர்ந்த ௫௫௯

மாதரசியாரைமுன்னாள் மானிடர்பாராததினால்
தாதியழகுக்குஞ் சரிசொல்லக்கூடாத ௫௬௰

இரதிமிகுந்த எழிலுயர்ந்தபெண்ணெனவே
தரணிதனிலுள்ளவர்கள் சாற்றுவதுபோலுமென்பார் ௫௬௧

ஆல்பர்ட்டுநற்பிரபை யந்நாட்காணாததினால்
நீலகண்டனெற்றி நெருப்பாலுடலிழந்து ௫௬௨

அனங்கனாய்ரூபமில்லா தாகியதோர்மன்மதனை
ஜனங்களழகனென்று சாற்றுகின்றார்போலுமென்பார் ௫௬௩

நமதுபெருமாட்டியர்தம் நல்லஅழகுக்கிசைந்த
அமைவுடைமாப்பிள்ளை யகப்படாதென்றிருந்தோம் ௫௬௪

அம்மையருக்காகஇந்த ஆல்பர்ட்டுபிரபுவையும்
செம்மையுறத்தேவன் சிருஷ்டித்தான்போலுமென்பார் ருசரு

ஆணழகருக்கும்நம தன்னையரையல்லாது
காணுதற்குவேறுபெண்கள் காசினியிலில்லையென்பார் ருசசு

சக்கரவர்த்தினியார் தாயாருடன்பிறந்த
தக்கபுகழ்மாமன் தனயரிவராகுமென்பார் ருசஎ

ஒப்பில்லா இவ்விருவர் ஒன்றாகச்சேர்ந்தநலம்
இப்புவியோர்முன்னா ளியற்றுதவமென்பர்சிலர் ருசஅ

எழிலாற்சிறந்திலங்கும் எங்கள்பெருமாட்டியரோ
தளர்வின்றியெவ்வுலகுந் தாமரசுசெய்யுமென்று ருசகூ

கணக்கில்லாமாதர் கடிநகரவீதியெங்கும்
மணக்கோலங்கண்டு மகிழ்ந்திவ்விதமுரைக்க ருஎ௦

அரண்மனைதன்னில்மிக்க அன்புடனேபோய்ச்சேர்ந்து
பரிவாயிரவலர்க்குப் பட்டாடைகள்முதலாய் ருஎக

பற்பலதானங்களும் பண்பாகவேகொடுத்து
மற்றுமுள்ளோர்க்கும் வரிசைபலவுங்கொடுத்து ருஎஉ

செம்மையுள்ளபொன்னாற் சிறப்பாகவேயியற்றி
தம்முடையரூபந் தகைமைபெறவேபதித்த ருஎங

கணையாழியாறேழ் கனஞ்சிறந்தஇஷ்டர்பெற
இணையில்நமதன்னையரும் இன்பமுடனேகொடுத்தார் ருஎச

வந்தவரெல்லோர்க்கும் மகிழ்வாற்பலவரிசை
தந்தனுப்பிப்பின்னர்வெகு சந்தோஷந்தன்னுடனே ருஎரு

சல்லாபமாய்நமது சக்கரவர்த்தினியார்
இல்லறவாழ்க்கைதனில் இன்பமுடன்வாழ்ந்திருந்தார் ருஎசு

சக்கரவர்த்தினியார் மனைவாழ்க்கையும் அரசு நெறியும்.

விருத்தம்.

தனதுநாயகன் றன்னொடு மன்பினால்
இனிமையாக வெவரும் புகழ்ந்திட
மனையின் வாழ்க்கையில் வைகியிம் மாநிலந்
தனியுருவகை காத்ததுஞ் சொல்லுவாம்.

கதை.

உடல்களிரண்டினுக்கும் ஓருயிரேயுற்றதென
இடஞ்சேரில்வாழ்க்கையினிற் சேர்க்கையுடன்வாழ்ந்தார்கள் ருஎஎ

அருந்ததியும்மிகக அருள்சேர்வசிட்டனோனும்
திருந்துமிருவர்கள் செப்பரியநேசமுடன் ருஎஅ

மனைமாட்சியையடைந்த மாநிலத்துமாந்தரெல்லாம்
இனிமையுடன்புகழ இன்பாகவாழ்ந்தார்கள் ருஎகூ

நீதிநெறிசெலுத்தி நீணிலத்தோர்வாடாமல்
காதலுடன்யாருங் களிக்கஅரசாண்டிருந்தார் ருஅ௰

இங்கிலாந்துநாட்டில் இருப்போர்புகழ்வதுடன்
அங்குமற்றைநாட்டிலுள்ளோர் யாவர்களுங்கொண்டாட ருஅக

ஆல்பர்ட்டெனும்பிரபும் ஆனமகாராணியரும்
சால்பிற்பலவுயிரைத் தற்காத்துவந்தார்கள் ருஅஉ

மன்னுங்குடிகளுக்கும் வாய்த்தவியாபாரிகட்கும்
பன்னலங்களோங்கும் படிகாத்துவந்தார்கள் ருஅங

மாதமொருமூன்று மழைபொழியப்பார்செழிக்க
நீதியென்றுமுண்டாக நீணிலத்தையாண்டுவந்தார் ருஅச

எவ்வுயிருந்தம்முயிர்போ லெண்ணிமனந்தனிலே
கவ்வையொன்றும்வாராமற் காத்துவருந்தன்மைகண்டு ருஅரு

மற்றுமுள்ளவேந்தர்களும் மாநிலத்தையாள்வரென்றால்
வெற்றிமிகுந்தஇவர் மேன்மைசொல்லக்கூடியதோ ருஅசா

சக்கரவர்த்தினியார் புத்திரபாக்கியம்.

விருத்தம்.

தக்கசீர்நற் றருமம் பொறைதயை
மிக்கதாலம் விருப்புட னுண்டருள்
சக்ரவர்த்தினி யார்தகுசீர்த்திசேர்
மக்கட்பெற்று மகிழ்ந்தமைகூறுவாம்.

கதை.

சகலவுயிர்களையுந் தாரணியிற்காக்கவல்ல
பகவனருளாலே பார்புகழ்நம்மன்னையர்க்கு ருஅஎ

திருவுந்திதன்னிற் சிறந்தகெற்பமுண்டாகி
மருவுலவும்பூவுலகில் மாந்தரெல்லாங்கொண்டாட ருஅஅ

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பதாம்ஆண்டினிலே
தூயநவம்பர்மதி சொல்லிருபத்தோர்தேதி ருஅகூ

விக்டோரியா ஆடிலேட்டாள் மெல்லியருந்தோன்றுதலும்
சர்க்கரைகளும்வழங்கிச் சந்தோஷமுற்றார்கள் ௫௯௰

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பத்தோராம்வருடம்
ஏயநவம்பர்தனி லேற்றவொன்பதாந்தேதி ௫௯௧

வேல்ஸ்ஆல்பர்ட்டென்ன விளங்கியஎட்வார்ட்பிரபு
சால்பாயிளவரசர் தாம்பிறந்தார்மேன்மையுடன் ௫௯௨

ஆயிரத்தெண்ணூறதினாற் பத்துமூன்றாம்வருடம்
மேயதொருஏப்பிரலில் மேவியஐயைந்துதெய்தி ௫௯௩

ஆலீஸ்பெருமாட்டி யாரும்வந்துதோன்றுதலும்
தாலமிசையுள்ளவர்கள் சந்தோஷமுற்றார்கள் ௫௯௪

ஆயிரத்தெண்ணூற்றுநாற்பான் நான்காம்வருடமதில்
ஆயவாகஷ்டுமதி யாறானதெய்தியிலே ௫௯௫

எடின்பரோஆல்பர்ட்டென் றேற்றமுள்ளநற்பிரபு
கடிமேவுங்காசினியோர் கண்களிக்கத்தோன்றினரே ௫௯௬

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பத்தாறாம்வருடம்
தூயமேமாசமதிற் சொல்லிருபத்தைந்துதெய்தி ௫௯௭

கிறிஸ்டினவென்னும் ஹெலீஸ்பெருமாட்டியரும்
திறத்துடனேயிந்தச் செகம்புகழவந்துதித்தார் ௫௯௮

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பத்தெட்டாம்வருடம்
சேயுயருமார்ச்சுமதி தெய்தியிருபத்தொடொன்றில் ௫௯௯

லோர்ன்பெருமாட்டியெனும் லூவீஸம்மாள்பிறக்க
சீர்சேருமாந்தர் சிறப்பாய்க்கொண்டாடினரே ௬௱

ஆயிரத்தினெண்ணூற்றின் ஐம்பதாம்நல்வருடம்
தூயமேமாசந் துலங்குமுதற்றெய்தியிலே ௬௱௧

மிக்ககனாட்டார்தரெனும் வெற்றிமிகுநற்பிரபு
தக்கவரெல்லாம்புகழத் தாரணியிற்றோன்றினரே ௬௱௨

ஆயிரத்தினெண்ணூற்றின் ஐம்பத்துமூன்றாண்டில்
தீயதவிரேப்பிரலிற் சேர்ந்தஏழாந்தேதி ௬௱௩

அல்பானிலியோப்போல்டென் றானபெயர்நற்பிரபு
நல்லவரெல்லாம்புகழ நானிலத்திற்றோன்றினரே ௬௱௪

ஆயிரத்தினெண்ணூற்றின் ஐம்பத்தேழாம்வருடம்
மேயதோரேப்பிரலில் மிக்கபதினாலுதெய்தி ௬௱௫

பியாற்றிரிஸென்றோதும் பெருமாட்டியாருவந்து
தயாநிதியாயிந்தத் தரணிமிசைதோன்றுதலும் ௬௱௬

ஒன்பதுபிள்ளைகளை யோங்குபுகழன்னையரும்
இன்பமுடனேபெற் றெழில்துலங்கவாழ்நாளில் ௬௱௭

அய்ரோபாநாட்டில் அரசுபுரிவேந்தர்பலர்
செய்கையறியாமற் றியக்கமுறுங்காலமதில் ௬௱௮
அன்பாய்நம்மன்னையரும் அவ்வரசர்தங்களுக்கு
துன்பந்தவிர்க்கத் துணையாகியெவ்விடத்தும் ௬௱௯
நீதிநெறிமுறையை நீணிலத்தோர்க்கோதுவித்து
தீதின்றியெந்நாடுஞ் செல்வமென்மேலுண்டாக ௬௱௰
கிருபைபாலித்தருளிக் கேண்மையுமங்குண்டாக
அருமையுடனுலகை யாளுகின்றநாளினிலே ௬௧௧

அஸ்போர்ன் மாளிகைகட்டியது.

விருத்தம்.

விண்ணவர்முதலுள்ளோர்கள் வியப்பொடுவிரும்பிநோக்க
மண்ணவர்புகழஸ்போர்ன்நன் மாளிகையொன் றுண்டாக்கி
தண்ணமர்பொழிலிலாற்றிற் றனயர்கள்விளையாட்டெய்தக்
கண்ணமர் கருணைவள்ளல் செய்ததுகழறலுற்றாம்.

கதை.

ஆல்பர்ட்டென்றோதும் அழகாளுயர்பிரபு
சால்பாகத்தங்கள் தனயர்விளையாடுதற்கு ௬௧௨
லண்டன்நகர்க்கும் நவில்வின்ட்ஸர்கோமனைக்கும்
அண்டாமல்வேறே யலங்காரமுள்ளதுவாய் ௬௧௩
கடலுக்கருகாகக் காற்றுவந்துவீசுவதாய்
உடலிற்குளிர்ச்சியென்று முண்டாயிருப்பதுவாய் ௬௧௪
மிக்கவிசாலம் விளங்கவொருமாளிகைநம்
மக்களுக்காய்ச்செய்ய மனந்தனில்நானெண்ணுகிறேன் ௬௧௫
என்றுமகாராணியர்பால் இன்பமுடன்கூறுதலும்
நன்றெனநம்மன்னையரும் நாயகர்க்குச்சொல்லுகிறார் ௬௧௬
தேனினினிய சிசுக்கள்விளையாடுதற்கு
நானுமந்தப்படியே நன்கியற்றஎண்ணமுற்றேன் ௬௧௭
அப்படியேநீரும் அருள்செய்தீர்ஆனதினால்
வெப்பில்லாதோங்கி விரிந்தகடலுக்கெதிரே ௬௧௮
நாட்டுப்புறத்தில் நலஞ்சேர்பலமரங்கள்
கூட்டகூட்டமாகக் குலவிநிற்கும்நல்லிடத்தில் ௬௧௯
அன்பாற்சிறந்திலங்கும் அஸ்போர்ன்றன்பூஸ்த்திதியில்
இன்பமுடனிந்த இடம்நமக்குவேண்டுமென்று ௬௨௰

ஆயிரத்தியெண்ணூற்று நாற்பத்தாறும்வருடம்
நாயகரோயந்நிலத்தை நான்கிரையம்வாங்கிவைத்தேன் ௬௨௧

நம்முடையதாகுமந்த நல்லநிலந்தனிலே
உம்முடையசம்மதம்போல் ஓர்மாளிகையியற்றும் ௬௨௨

என்றுமகாராணியரும் இன்பமுடன்கூறுதலும்
நன்றியுள்ள ஆல்பர்ட்டெனும் நற்பிரபுஞ்சம்மதித்து ௬௨௩

நமதன்னையாருரைத்த நல்லஇடந்தனிலே
தமதன்பினோடுசென்று சந்தோஷமாய்ப்பார்த்து ௬௨௪

நடுவெளியிற்றம்மனம்போல் நன்மாளிகையியற்றி
வடுவிலாதோங்கி வளரும்மரங்கள்வைத்து ௬௨௫

பன்னற்கரிதாய பற்பலவினோதங்களும்
மன்னியதைப்பார்த்தோர் மனமகிழ்ச்சியுண்டாக ௬௨௬

தோட்டங்கண்மிக்க சுகஞ்செய்குரோட்டன்களும்
வாட்டமில்லாதின்னும் வகைகள்பலவுண்டாக்கி ௬௨௭

ஒன்பதுபிள்ளைகட்கு மொன்பதுபூந்தோட்டங்களும்
இன்பம்பெருக எழிலுடனேயுண்டாக்கி ௬௨௮

காய்கள்பலவிதமுங் காய்க்கின்றதோட்டங்களும்
வாய்ப்பாயியற்றி வயங்குமந்தமாளிகையில் ௬௨௯

தம்பிள்ளைகளையங்கே சந்தோஷமாய்விடலும்
கும்பல்கும்பலாயவர்கள் கூடிவிளையாடினர்கள் ௬௩௰

பூத்தொட்டிகளிற் புதுமையுள்ளகாற்றுதவும்
நேர்த்திமிகுந்த நிறச்செடிகளைப்பார்த்து ௬௩௧

சந்தோஷமாகத் தனயர்விளையாடுவதை
தந்தையருங்கண்டு தயவாய்மனமுவந்தார் ௬௩௨

தோட்டத்தைப்பார்க்கிறவன் சொன்னபடிவேலைகளை
தேட்டமுடன்காலையிலுஞ் செய்வார்கள்மாலையிலும் ௬௩௩

புல்லுச்செதுக்கியொடு புல்வெட்டுங்கத்திரிக்கோல்
நல்லகருவிகளில் நன்மையுள்ளபேரெழுதி ௬௩௪

ஒன்பதுபேர்க்கும் ஒழுங்காயிருக்குமதை
அன்பாயெடுத்தங் கவர்கள்நிதம்வேலைசெய்வார் ௬௩௫

தச்சுத்தொழில்பழகத் தக்கதொருபட்டடையும்
இச்சையுடனேவைத் திருந்தார்கள்அவ்விடத்தில் ௬௩௬

தந்தைகுறித்தபடி சந்தோஷமாய்தனயர்
சிந்தைமகிழ்ந்தோர் சிறுகோட்டைகட்டினர்கள் ௬௩௭

சிறுகோட்டைகட்டுதற்குச் செங்கல்முதலானதெல்லாம்
அறிவுடையராஜமைந்தர் அன்பாயறுத்தார்கள் ௬௩௮

மற்றுமுள்ளவேலைகளும் மைந்தர்திருக்கையினுல்
முற்றுவதாய்ச்செய்து முடித்தார்மகிழ்ச்சியுடன் ௬௩௯

இராஜகுமாரத்தியரும் இன்பாய்மனைத்தொழில்கள்
விராவுவதாயவ்வுடத்தில் மேன்மையுடனேபழக ௬௪௰

கட்டிடத்தின்பின்புறத்திற் காட்சியுடனேர்சிறிய
கட்டிடமுங்கட்டியதிற் காய்கறிசாமான்களெல்லாம் ௬௪௧

திட்டமுடன்வைத்தார்கள் சீமாட்டியாருமதை
சட்டமுடனே சமையற்றெருழிலியற்றி ௬௪௨

கனிகளுடனேபல காய்களையெல்லாமறுத்து
இனிதானவூறுகாய்க ளிட்டுப்பழகிவந்தார் ௬௪௩

கேக்முதலாகக் கிழத்தும்பலகாரங்களும்
சேர்க்கையுடனவர்கள் செய்துபழகிவந்தார் ௬௪௪

அங்கவர்களன்பால் அமைத்தநறுஞ்சோறுகறி
சிங்காரமாயவரே தின்றூர்சிலகாலம் ௬௪௫

பின்னுஞ்சிலகாலமவர் பேரறிவினுற்சமைத்த
அன்னங்கறிகளெல்லாம் அன்னைதந்தையார்க்குதவி ௬௪௬

தாமுமுண்டுவந்தார்கள் தாங்களுண்ணும்போதுவரும்
சேமமில்லாதார்க்குத் தினமுமன்னமீவார்கள் ௬௪௭

எளியவருக்கென்றும் இனிமையுடனேயுதவி
வளமைமிகுந்திலங்கும் மாளிகையில்வீற்றிருந்தார் ௬௪௮

பின்னுமந்தமாளிகையிற் பேசரியபூவுலகில்
மன்னும்பொருள்களெல்லாம் வைக்கவொருசாலைசெய்து ௬௪௯

பலபலபட்சிகளும் பன்மிருகசாதிகளும்
நலமாய்நீர்வாழ்வனவும் நன்றுகச்சேர்த்துவைத்து ௬௫௰

அரசகுலத்தவர்கள் அந்தமணிமாளிகையில்
பரிவாகவந்துலவிப் பார்த்துமகிழ்வுற்றிருப்பர் ௬௫௧

சக்கரவர்த்தினியார்குழந்தைகள்
கல்விகற்றது.

விருத்தம்.

செல்வமோங்கிச் செகத்திற்பலவளம்
பல்கவாளும் பரிவுடையன்னையார்
மல்குசீர்த்திகொள் மைந்தருமக்களும்
கல்விகற்றவிதத்தைக் கழறுவாம்.

கதை.

இராஜகுமாரரு மிராஜகுமாரத்தியரும்
பராவரியகல்வி படித்துநன்றாய்த்தேருதற்கு ௩௫௨

பலபாஷைகடேர் பலவுபாத்தியாயர்களும்
நலமானநூலுணர்ந்த நல்லவுபாத்திச்சிகளும் ௩௫௩

வந்துபலகலையும் வாய்த்தபலபாஷைகளும்
சந்தோஷமாயிருந்து தாம்படிக்கவைத்தார்கள் ௩௫௪

பூலோகம்மெச்சவளர் புத்திரரும்புத்ரிகளும்
மேலானநூல்கள் விரும்பிப்படித்துவந்தார் ௩௫௫

ஆல்பர்ட்டென்றோதும் அருணிறைந்தமாப்பிரபு
சால்புடையபிள்ளைகளைச் சந்தோஷமாயழைத்து ௩௫௬

தினந்தோறுமேபரீட்சை செய்துவருவதுடன்
மனந்தனிற்றாங்கற்று வளமறியாப்புஸ்தகத்தை ௩௫௭

தமதுகுழந்தைகட்குச் சாற்றவருள்செய்யாமல்
அமைதியுடன்மிகுந்த அன்பாற்படிக்கவைத்தார் ௩௫௮

மகாராணியார்தமது மக்கள்படித்துவரும்
தகவாலுயர்பாட சாலைதனிலேசேர்ந்து ௩௫௯

பாடம்விசாரித்துப் பரிவுடனேபிள்ளைகட்கு
பாடமுஞ்சொல்லிவைப்பர் பண்பாகவேதினமும் ௩௬௦

சீர்சேர்ஸ்கொத்லாந்து தேசமதிலேயிருந்து
பார்புகழும்போதகரின் பண்பானபுத்திரியும் ௩௬௧

வந்துசக்ரவர்த்தினியார் மக்கள்படிப்பதனை
விந்தையுடனேதினமும் மேற்பார்த்துவந்தனளே ௩௬௨

வருகின்றநாளில் வருஷமொன்றுசெல்வதன்முன்
பிரியமுடனேயவளைப் பெற்றதாயார்தனக்கு ௩௬௩

பிணிகண்டதனாற் பெரிதாய்வருந்துவதை
மணிபோற்சிறந்த மகட்கறியச்சொல்லுதலும் ௩௬௪

மகாராணியாரிடத்தில் வந்துசலாஞ்செய்துநின்று
தகவானஎன்னுடைய தாயர்மிகுநோயாலே ௩௬௫

வருந்துகின்றாளானதினால் வாய்த்தஇந்தவேலைவிட்டு
பொருந்துமெனதூர்தேடிப் போவேனெனமொழிய ௩௬௬

நமதன்னையாருமந்த நங்கைசொன்னசொற்கேட்டு
தமதுமனமொவ்வாமற் றையலரேயுன்னுடைய ௩௬௭

தாயார்நோய்தீர்ந்து சவுக்கியமுண்டாகுமட்டும்
நீயங்கிருந்துபின்னர் நீதியுடன்வந்திடுவாய் ௩௬௮

நாங்களதுவரையும் நன்மையுள்ளபிள்ளைகட்கு
தீங்கில்லாப்பாடங் தினந்தோறுஞ்சொல்லுகிறோம் ௬௬௯

அதற்காய்க்கவலை யடையாதேபோவெனவே
இதமாயுரைத்ததற்பின் னேந்திழைதன்னூர்க்கேக ௬௭௰

கனிவாகப்பிள்ளைகட்குக் கல்விபலவும்பயிற்றி
மனதுமகிழ்ச்சியுடன் வாழுமந்நாளினிலே ௬௭௧

சக்கரவர்த்தினியார்பால்மோரலுக்குச்சென்றது.

விருத்தம்.

நீங்கருங்கருணையாலிந் நீணிலத்துயிர்களெல்லா
மோங்கநன்னீதியோடு முயர்புகழ்ச்செங்கோலோச்சி
பாங்கினிற்சிறந்தவன்னை பால்மோரலினுக்குச்சென்ற
தீங்கறுசெயலையன்பாற் சிந்தையிலுவந்துசொல்வாம்.

கதை.

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பத்தெட்டாம்வருடம்
தூயகொத்லாந்தென்னத் துலங்குகின்றதேசமதில் ௬௭௨

பாங்காய்மலைநாட்டிற் பல்மோரலென்றோதுகின்ற
தீங்கில்லா அவ்விடத்திற் சென்றுநின்றுபார்ப்பளவில் ௬௭௩

எப்பொழுதும்வற்றா தினிமையுள்ளநீர்பெருகி
செப்பமுடனங்கேயோர் சிற்றாறுசெல்லுவதும் ௬௭௪

ஆற்றினருகே யழகானகோட்டையொன்றும்
தேற்றமிகுந்ததண்ணீர் செல்லும்பலவோடைகளும் ௬௭௫

கண்டுசக்ரவர்த்தினியார் கண்களிப்புக்கொண்டருளி
தண்டுதலில்லாத தனிமாளிகையியற்றி ௬௭௬

மனமகிழ்ச்சியாகவந்து வாய்த்ததங்கள்பிள்ளைகளை
இனிவாய்க்கொடுபோயவ் வேற்றமுள்ளமாளிகையில் ௬௭௭

விட்டார்தனயர் மிகுமகிழ்ச்சியுண்டாகி
திட்டமாயவ்விடத்திற் செல்லுகின்றவோடைகளில் ௬௭௮

குதித்துவிளையாடிக் கொண்டுமகிழ்வுண்டாகி
மதித்துஇட்டமெங்குமமகிழ்ந்துவிளையாடினர்கள் ௬௭௯

சிறுகுன்றின்மீதேறிச் சேர்ந்துவிளையாடினர்கள்
நறுமென்கனிபறித்து நன்குவிளையாடினர்கள் ௬௮௰

இளவரசியாரும் இசைந்தபள்ளத்தாக்குகளில்
வளமாய்மலர்ந்த மலர்களினிவாய்ப்பறித்தும் ௬௮௧

விளையாடல்செய்தும் விளங்குபலமானினங்கள்
வளமாய்க்குதிப்பதனை வண்மையுடனேபார்த்தும் ௬௮௨

பல்மொரலிற்செய்த பயன்மிகுந்தமாளிகையில்
சல்லாபமாகஅவர் சார்ந்துவிளையாடல்செய்தும் ௬௮௩

வனபோசனம்முன் மகிழ்ந்துண்ணும்போதினிலே
இனிதாய்ப்பலர்களும்வந் தெட்டியெட்டிப்பார்ப்பதுண்டு ௬௮௪

இங்கோநாமவ்வா றிசைந்தவனபோசனங்கள்
சங்கையறச்செய்தாற் சனங்கள்வரமாட்டார்கள் ௬௮௫

ஆனதினுலிவ்விடத்தில் அன்பின்வனபோசனங்கள்
மேனலமதாக விரும்பிச்செய்வோமெனவே ௬௮௬

பலகாரபக்ஷணங்கள் பண்புடையசோறுகறி
நலமாயியற்றியங்கு நன்மையுடனுண்பார்கள் ௬௮௭

இந்தவிதமாக எழிலரசபுத்திரரும்
அந்தமுளராஜகுமா ரத்தியருமங்கிருக்க ௬௮௮

மனதுமகிழ்ச்சியுடன் வாய்த்தசக்ரவர்த்தினியார்
இனிமையுடனே யிருக்குமந்தநாளினிலே ௬௮௯

சக்கரவர்த்தினியார் பல்மொரலிலுள்ள ஏழைகளுக்கு அநுகூலஞ்செய்தது.

விருத்தம்.

கூர்த்தபல்படைகைக்கொண்ட கொற்றவெஞ்சேனைசூழ
நீர்த்தரங்கஞ்சூழ்ஞால நெறியொடுபுரக்குமன்னே
சீர்த்தபல்மொரலிலென்றுஞ் சேர்ந்துறையெளியோர்தம்மைக்
காத்தருள்புரிந்ததன்மை காசினியறியச்சொல்வாம்.

கதை.

பல்மொரலில்வாழுகின்ற பற்பன்மனிடர்களும்
நல்வகையாம்வேலைசெய்து நாள்கழிப்பதோராமல் ௬௯௰

வறுமையினுல்நொந்து மனதுவியாகூலமுற்று
சிறுமையடைந்து தியங்கினவரெல்லோரும் ௬௯௧

சக்கரவர்த்தினியார் சார்ந்திருந்தவாறறிந்து
மிக்கவரெல்லோருமங்கே மேவிநமதன்னையரை ௬௯௨

தாழ்ந்துவணங்கியவர் தாமடைந்தகஷ்டங்களும்
சூழ்ந்தவறுமையெல்லாஞ் சொன்னூர்நம்மன்னையர்பால் ௬௯௩

வார்த்தைசொல்லக்கேட்டு மனதிற்கவலையுடன்
பார்த்தவர்கள்மீதிற் பரிவுமிகவுண்டாகி ௬௰௪
சிலதுபொருளவர்க்குச் சிந்தைமகிழ்வாற்கொடுத்து
நலமாகநீங்களிங்கே நல்லதொழில்செய்யுமென்று ௬௰௫
அந்தஇடத்துள்ள அகன்றநிலத்தினிலே
சிந்தையுவப்பாற் சிலர்களுக்குத்தோட்டங்களும் ௬௰௬
பலபேர்களுக்குப் பயிர்செய்யுங்காடுகளும்
சிலபேர்களுக்குச் சிறப்புடையநன்செய்களும் ௬௰௭
சீர்திருத்தஞ்செய்தவர்க்குச் சிந்தைமகிழ்வாற்கொடுத்து
பார்திருத்தவேண்டும் பலகருவியுங்கொடுத்து ௬௰௮
எருதுகள்பாற்பசுக்க ளேற்றபலஆடுகளும்
கருதும்பலவுங் கனிவாகவேகொடுத்து ௬௰௯
எப்போதும்நீங்களிந்த ஏற்றகிரிஷித்தொழிலை
தப்பாமற்செய்து தனதனைப்போல்வாழுமென்று ௭௰
நமதன்னையாருரைக்க நல்லதெனவேயவரும்
அமைவாய்விளைதொழில்க ளன்புடனேசெய்தார்கள் ௭௰௧
நல்லவிளைவோங்கியெந்த நாளுஞ்செழித்துவர
செல்வம்படைத்துச் சிறப்பாகவாழ்ந்தார்கள் ௭௰௨
வாழ்கின்றமாந்தர்பெற்ற மைந்தர்கல்விகற்பதற்கு
தாழ்வில்லாதோங்குகல்விச் சாலையொன்றுமுண்டாக்கி ௭௰௩
எல்லாச்சிறுவரையு மின்பமுடனங்கழைத்து
நல்லகல்விச்சாலைதனில் நாடோறுங்கற்றுவர ௭௰௪
பரிட்சித்துக்குற்றமறப் பாடங்கொடுத்தவர்க்கு
வரிசையுடன்புஸ்தகங்கள் வாகாயினுங்கொடுத்து ௭௰௫
இராஜவம்மிசத்தரதை யெப்போதுமேற்பார்த்து
பராவரியநன்மை பயக்கும்படிபுரிந்தார் ௭௰௬
செல்வமொடுகல்வி செழிப்பாய்வளர்ந்தோங்க
நல்லநெறியாகவந்த நாட்டிலுள்ளோர்வாழ்ந்தார்கள் ௭௰௭
அந்தஇடத்தினிலே அச்சாபீசொன்றுவைத்து
சிந்தைமகிழ்வாகச் சிறப்பித்தாரந்நாட்டை ௭௰௮
பின்னுமந்நாட்டிற் பிணியாளர்தங்களுக்கு
மன்னுமருந்துதந்து வல்பிணியைமாற்றுதற்கு ௭௰௯
வயித்தியசாலையொன்று வண்மையுடனங்கியற்றி
பயித்தியங்கள்கொண்டவரும் பண்படுவதாயியற்றி ௮௰

பின்னுமங்கேவாழும் பிணியீர்களையேழைகளை
நன்னலமாயென்றும் நமதன்னையார்பார்த்து ௭௧௧

ஏழைகளுக்கன்பா யினியவசனங்கள்சொல்லி
சூழும்பிணியரையுந் தொட்டுக்கையாற்றடவி ௭௧௨

தெளிவானவார்த்தைபல சிந்தைமகிழ்வாலுரைத்து
வளமையாயென்றும் வருவார்நம்மன்னையரே ௭௧௩

லண்டனகர்வந்து நலத்தஅவ்வூர்க்கேகையிலே
கண்டுசிறுவர் களித்துவிளையாடுதற்கு ௭௧௪

விளையாட்டுச்சாமான்கள் வேணபலகாரங்களும்
வளமாய்நம்மன்னையரும் வாங்கியங்குகொண்டுசென்று ௭௧௫

வறுமையுடையோர் மனைமாட்சியாற்பயந்த
சிறுவர்களுக்குமிக்க சிந்தைமகிழ்வாற்கொடுப்பார் ௭௧௬

திறமைபலவுஞ் செறிந்தநமதன்னையர்பின்
வறுமையுடையவர்கள் வாழுங்குடிசிலுக்கு ௭௧௭

தனியேநடந்துசென்று சார்குடிசைப்பெண்களுடன்
இனிமையுடனுட்கார்ந் திசைந்தபலசெய்திகளும் ௭௧௮

சொல்லியவர்கள் சுகசேமமும்வினவி
பல்மொரல்மாளிகையில் பாங்காகவந்திருப்பார் ௭௧௯

பின்னுமந்நாட்டிற் பெரியகிழவிகட்கு
வன்னப்புடவைகளும் வாய்த்தசட்டையுங்கொடுப்பார் ௭௨௦

அங்குள்ளவர்கணம் தன்னையரையெப்பொழுதும்
சங்கையறவாழ்த்திவெகு சந்தோஷமாயிருப்பார் ௭௨௧

சக்கரவர்த்தினியாரின் இராச்சிய பாரக்கடமைகள்.

விருத்தம்.

தக்கபல்மொரல் மாளிகைசார்ந்திருந்
தெக்கணும்புக ழெய்தநம்மன்னையார்
தொக்கதாலஞ் சுகமுறவாண்டருள்
மிக்கதன்மை விளம்பலுற்றாமரோ.

கதை.

சக்கரவர்த்தினியார் சாற்றுகின்றபல்மொரலில்
மிக்கவிருப்பாற்சிலநாள் மேவினராலும் ௭௨௨

நாட்டுவிசாரணையும் நல்நெறிமுறையும்
கேட்டுத்தினமுங் கிளர்ச்சியுடன்வீற்றிருப்பார் ௭௨௩

ஐரோபாகண்டமதில் ஆனமகாராணியர்க்கு
துய்யகிளைஞர்பலர் சுற்றிலுமேவாழ்வார்கள் ௭௨௪
சீருடனேயன்னோர் தினமனுப்பும்லெட்டர்கட்காய்
வாரத்திலோர்நாள் வகைகளெல்லாம்பார்த்தருளி ௭௨௫
மனைவாழ்க்கைக்கான வரவுசெலவுள்ளதெல்லாம்
இனியகணக்கை யிசைந்தொருநாட்பார்வைசெய்து ௭௨௬
சிறந்தஉத்யோகஸ்தர் தினமனுப்பும்லெட்டர்களும்
திறமையுடனே தினந்தினமும்பார்வையிட்டு ௭௨௭
ஏழைகள்மற்றோர்கள் எழுதுமனுக்களையும்
தாழ்வில்லாதந்தச் சணந்தனிலேபார்வையிட்டு ௭௨௮
பார்லிமெண்டுநற்சபையார் பண்பாயெழுதுகின்ற
சீர்சேர்கடிதம் தினந்தினமும்பார்வையிட்டு ௭௨௯
எல்லோர்களுக்கும் இனியவிடையருளி
நல்லரசுக்காக நயந்தெந்தவேளையிலும் ௭௩௰
சோம்பல்கொள்ளாமல் சுகம்பெரிதென்றெண்ணுமல்
ஏம்பல்தங்கணுட்டி லெவருமடையாமல் ௭௩௧
எல்லாப்பிரசைகட்கு மின்பமென்றுமுண்டாக
நல்லகருணையொடு நானிலத்தையாண்டிருந்தார். ௭௩௨

சக்ரவர்த்தினியார் படைகளை அணிவகுத்துப் பார்வையிட்டது.

விருத்தம்.

அடலுடைப்பகைவரெல்லா மஞ்சிமெய்நடுங்குமாறு
திடமுடன்வென்றுசெங்கோல் செகமெலாந்திகழவோச்சிக்
குடைகொடிமுரசமாதி கொண்டநம்மன்னையார்தம்
படைகளையணிவகுத்துப் பார்த்தமைபகரலுற்றும்.

கதை.

இன்னவிதமாக இசைந்தரசாள்நாளினிலே
மன்னியபட்டாள் வகைகளையும்பார்க்கவென்று ௭௩௩
படைவீரர்வீற்றிருக்கும் பாசறையின்பக்கமதில்
திடமாய்க்குதிரையின்மேற் சென்றிருந்துபார்ப்பளவில் ௭௩௪
பட்டாளவீரர் பரிவாயலங்கரித்துப்
புட்டாழுதலாய்ப் பலபடைகள்கைப்பிடித்து ௭௩௫
மலைக்குகையினின்று வருஞ்சிங்கக்கூட்டமென
நிலைத்துள்ளபாசறையில் நின்றுவெளியேறிவந்து ௭௩௬

தாங்கண்முன்புகற்ற தகுதொழில்களத்தனையும்
ஆங்குள்ளவர்க ளதிசயிக்கச்செய்தார்கள் ௭௩௭

குதிரைப்பட்டாளம்வெகு கூட்டமாயங்குவந்தே
யதிகவிநோதத்தி லவர்கள்கற்றவாறனைத்தும் ௭௩௮

கண்டவர்களுள்ளங் களிப்படைந்துபார்த்திருக்க
மண்டும்பல்சாரிகளும் வன்மையுடனேநடத்தி ௭௩௯

ஆச்சரியமாக அவர்செய்தொழில்களெல்லாம்
மாச்சிமையின்மிக்க மகாராணியார்பார்த்து ௭௪௰

திருக்கண்கருணைபொங்கச் சிராகநிற்பளவில்
உருக்கமுடன்படையி லுற்றவயவீரரெல்லாம் ௭௪௧

நாடனைத்துங்காக்கு நமதன்னையாருவந்து
தேடற்கரிய திருவருள்செய்தாரெனவே ௭௪௨

மனதுமகிழ்ந்தவர்கள் வாய்த்தபடைவீடடைந்தார்
இனிவாய்நம்மன்னை யெழினகரம்போய்ச்சேர்ந்தார் ௭௪௩

அரசுநெறிமுறையையன் பாகவேநடத்தி
திறமானசெங்கோல் செலுத்திவருநாளினிலே ௭௪௪

முந்தவுலகை முடிசூட்டியாண்டவரில்
இந்தநலத்தால் எவருமரசாளவில்லை ௭௪௫

என்றுலகிலுள்ளவர்கள் எல்லோருங்கொண்டாட
வென்றிமுடிபுனைந்து மேதினியையாள்நாளில் ௭௪௬

இராஜபெருமாட்டியென்ற விக்டோரியாப் பெருமாட்டியாரின் திருக்கல்யாணமு மக்கட்பேறும்.

விருத்தம்.

மனுநெறிமுறையினிந்த வையகமுழுதுங்காத்துப்
புனைமணிமவுலிதன்னைப் பொற்சிரம்பொறுத்தவன்னை
யினிமையின்முன்புபெற்ற வெழிற்புதல்வியர்க்குமிக்க
கனிவுடன்மணஞ்செய்வித்த விதத்தினைக்கழறலுற்றும்.

கதை.

புருஷியதேசத்திற் புகழாயரசுசெய்யும்
அரசன்புரிந்த அரியதவத்தாற்பிறந்த ௭௪௭

மூத்தமகனுக்கு முதுகடல்சூழ்பூவுலகில்
சீர்த்தபுகழாற் சிறந்தமகாராணியரும் ௭௪௮

ஏற்றமுடன்பெற்ற இராஜபெருமாட்டியரை
நாற்றிசையுங்கொண்டாட நல்லமணஞ்செய்யவென்று ௭௪௯

ஆயிரத்தினெண்ணூற்றி னைம்பத்தெட்டாம்வருடம்
தூயஜனுவரியிற் சொல்லிருபத்தைந்துதெய்தி ௭௫௰

நல்லமுகூர்த்தமதில் நன்றாய்மணம்புரிந்தார்
வல்லஇருவோரும் மனையடைந்துவாழ்நாளில் ௭௫௧

எட்டுக்குழந்தைகளை யிராசபெருமாட்டியரும்
எட்டுத்திக்கும்புகழ இன்பமுடன்பெற்றெடுத்தார் ௭௫௨

பெற்றுமனது பிரியமுடன் வாழ்நாளில்
கொற்றமிகும்புருஷியக் கோவேந்தன்விண்ணடைய ௭௫௩

இராஜபெருமாட்டிக் கினிமையுள்ளநாயகனும்
பராவரிய நாடனைத்தும் பாங்காய்ச்செங்கோல்செலுத்தி ௭௫௪

சக்ரவர்த்தியாகத் தனியரசுசெய்துபின்னர்
மிக்கானவிண்ணுலகில் மேவினாரமமானை ௭௫௫

பிரேடிரிக்சக்ரவர்த்தினி யென்றுபெருமாட்டியர்க்கு
புரைதீர்பட்டப்பேர் பொருந்தும்படிகொடுத்து ௭௫௬

ஆயிரத்தெண்ணூற்றினென்பத் தெட்டானஆண்டுமுதல்
தூயபுருஷ்பாவென்னத் துலங்குந்தேசந்தனக்கு ௭௫௭

தமதுமுதற்புத்திரனே சக்ரவர்த்தியாயிருந்து
அமைவாய்நெறிசெலுத்தி யாளுகின்றாரம்மானை ௭௫௮

சக்கரவர்த்தினியார் அரசாட்சியைப்பற்றி அமெரிக்காக்கண்டத்தார் வியந்தது.

விருத்தம்.

மன்னராயரசுசெய்த மனுமுதலானோரெல்லாம்
இங்கிலையரசுசெய்தா ரென்பதற்கில்லையென்று
வுன்னியேயமெரிக்காவி லுள்ளவர்புகலலுற்ற
நன்னிலையதனையிந்த நானிலத்துரைக்கலுற்றாம்.

கதை.

நமதுசக்ரவர்த்தினியார் நற்குணநற்செய்கைகளும்
அமைவுங்கருணைமுத லானவிதமத்தனையும் ௭௫௯

இங்கிலீஷ்அரசுக் கிசைந்தோர்புகழ்வதுடன்
பங்கமொன்றுமில்லாப் பலதேசமன்னவரும் ௭௬௰

குடியரசுகொண்டு குணமாகவாழுகின்ற
கடிமிகுந்தஅமேரிக்கா கண்டமதிலுள்ளவரும் ௭௬௧

அந்தக்குடியரசர் ஆகிவளர்நாட்டிலெங்கும்
இந்தமகாராணியர்போ லேற்றமதிப்புள்ளவர்கள் ௭௬௨

வேறொருவரில்லையென்று இக்கசந்தோஷமுடன்
கூறுவர்கள்பின்னுங் குணசாந்தமேன்மையினால் ௭௬௩

பகையரசரெல்லாம் பயத்தால்வணங்கிடவும்
தகையுடையாரெல்லாருந் தாழ்ந்தடங்கிவாழ்வதுவும் ௭௬௪

இந்தியாஐர்லாந் திவைமுதலாய்ப்பல்லிடத்தும்
வந்துகலகங்கள் மதியாமற்செய்தவரும் ௭௬௫

மற்றுள்ளவரு மகாராணியார்தமது
கொற்றமறிந்து குணமாகக்கீழ்ப்படிந்து ௭௬௬

அதிகாரநீர்மைக் கடங்கியொழுங்காக
பதிதோறுமிக்க பதிவாகவாழுகிறார் ௭௬௭

ஆனதினால்மற்றும் அநேகஅரசர்களும்
ஈனமறச்சண்டை யிடுதல்சமாதானம் ௭௬௮

முதலியவைக்கெல்லா முடிவாய்ச்செய்யோசனையில்
இதமாயிங்கிலாந்தில் இருக்குமகாராணியரின் ௭௬௯

அபிப்பிராயந்தன்னை யனைவருமேற்கொள்வரென்றால்
சுபப்பாணியாளுந் துரைத்தனரில்யார்நிகர்ப்பார் ௭௭௰

மக்கட்பாக்யங்களிலு மற்றுளசெல்வங்களிலும்
விக்டோரியாராணியரோ மேலானவர்களென்று ௭௭௧

அமெரிக்காக்கண்டமதி லன்பாகவாழ்வோர்கள்
நமதன்னையாரையெந்த நாளும்புகழ்ந்திடுவார் ௭௭௨

ஆல்பர்ட்பிரபுவின் ஜனோபகாரக்கிரியைகள்.

விருத்தம்.

தாயினுங் கருணையாலித் தரணியை முழுதுங் காக்கு
நாயக மான் சக்ர வர்த்தினியார் நண்பான
நாயக னாகிமிக்க நலஞ்செறிஆல் பர்ட்டென்னுந்
தூயவ ரெவர்க்கு நன்மை சூழ்ந்தது சொல்லலுற்றாம்.

கதை.

ஆல்பர்ட்டெனும்பிரபும் அன்பாய்நம்மன்னையனா
சால்பாய்மணம்புரிந்து சார்ந்ததினமேமுதலாய் ௭௭௩

இங்கிலீஷ்ஜனங்கட் கியைந்தவழக்கங்களும்
அங்குள்ளோர்செய்யும் அரியவியாபாரங்களும் ௭௭௪

தேசசட்டங்களையுஞ் சித்தமகிழ்வாற்படித்து
தேசவிஷயங்களெல்லாஞ் சீராகவேயறிந்து ௭௭௫

செல்வின்னெனவோதுஞ் சிறந்தவொருவக்கிலிடம்
பல்வகைகளான பயன்களெல்லாங்கற்றறிந்து ௭௭௬
ஹாலமெனும்மேலோன் ஹணித்தவொருபுஸ்தகத்தை
சாலமனம்விரும்பிச் சந்தோஷமாய்த்தினமும் ௭௭௭
மனைவியாரோடுமதை வாசித்ததன்பயனை
இனிவாய்மனந்தனிலே யேற்றுவளர்நாளினிலே ௭௭௮
எளியவராயுள்ளவருக் கென்றுமுகங்கோணமல்
வளமானபலபொருளும் வண்மையுடனேகொடுத்து ௭௭௯
ஏழைக்குடிகள்பலர் எங்கேயிருந்தாலும்
தாழ்வில்லாதேயவர்க்குத் தக்கபொருள்கொடுத்து ௭௮௰
இங்கிலாந்தில்வேலைசெய்யு மேழைகளாயுள்ளவரை
அங்குள்ளோர்பொல்லாங் கறைந்துவெளியேற்றிடினும் ௭௮௧
இப்படிக்குநீங்களிந்த ஏழைகளை நீக்குவது
தப்பிதமென்றோதியவர் தம்மைமுன்போலாகவைத்து ௭௮௨
ஒருவர்க்கொருவர் உதவிசெய்துவாழ்வதுவே
இருநிலத்திலுள்ளோர்க் கியலொழுக்கமாகுமென்றும் ௭௮௩
ஒருவர்க்கொருவர் உதவிபுரியாதவராய்
பருவரல்கள்செய்து பலரைவிரோதிப்பவர்கள் ௭௮௪
அறிவுசற்றுமில்லா அசடர்களாவார்களென்றே
மறுவற்றநூல்கள்பல மாநிலத்திலேவகுத்தும் ௭௮௫
கடவுள்கிருபையினாற் கல்விபலசெல்வங்களும்
திடமாகப்பெற்றுச் செகதலத்தில்வாழ்வோர்கள் ௭௮௬
அறியாமைதன்னை யகற்றிலுயர்ந்தோராவார்
அறியாமையுள்ளவரை யாருமதியார்கள் ௭௮௭
பின்னுமவர்களுக்குப் பேரறிவுந்தோன்றாது
நன்மையறியார் நலமின்னதென்றுணரார் ௭௮௮
பாவிகளாகிப் பரகதிக்குமாளாகார்
பூவுலகிற்பற்பல் பொருள்களினுமானிடரை ௭௮௯
பலவிதகுற்றங்களுக்கும் பற்றுள்ளவராக
நலமிகுந்ததேவன் நமைப்படைத்தாரானதினால் ௭௯௰
எல்லோருநம்மில் இசைந்தொற்றுமையாக
நல்லதொழில்களையே நாமியற்றவேண்டுவது ௭௯௧
ஒற்றுமைகளின்றி யொருதொழிலுங்கூடாது
சித்திபெறுதற்குத் திடமுமடையாது ௭௯௨

ஆனதினால்நல்ல அறிவாலிதையறிந்து
மேனலமாயொன்றினென்று வேற்றுமைகளெண்ணாமல் ௭௯௩

இறையொருவனேயுலகில் எல்லோரையும்படைத்த
முறைமையையுணர்ந்திருண்ட மூடமெல்லாம்போக்கடித்து ௭௯௪

பேதங்கொள்ளாமற் பிரியமுடனெல்லோரும்
நீதியுடனேயிந்த நீணிலத்தில்வாழ்ந்திடுவீர் ௭௯௫

யானைமுதலாக எறும்பேகடையாக
மாநிலத்தின்மீது வழங்குபலசெந்துகட்கும் ௭௯௬

அவ்வவற்றிற்கேற்றபல ஆகாரமுமிடமும்
எவ்வெவற்றிற்குமருளி யெங்குநிறைவாகிநின்று ௭௯௭

காக்குமிறைவன் கருத்திலெல்லாச்சீவரையும்
நீக்கமறவேசமமாய் நீதிபுரிநீர்மைகண்டு ௭௯௮

மானிடருக்குட்பேதம் மதித்தலறியாமைகண்டீர்
இனிவானபூவுலகில் எல்லோர்களுஞ்சமமாய் ௭௯௯

வந்துபிறந்தோமே மாதேவன்நல்லருளால்
தந்தம்வினைவசத்தாற் றாழ்வுயர்வுண்டாவதல்லால் ௮௦௦

மற்றொன்றுமில்லையென்று வாகாகநாமறிந்தும்
மற்றோர்க்குதவாமல் வாழ்வதறிவின்மைகண்டீர் ௮௦௧

என்றுபலநூல்களினு மேற்றமுடனேயுரைத்து
நன்றியுடன்பின்னுமெந்த நாட்டிலுள்ளபேர்களையும் ௮௦௨

வருகவென்றுகூவியவர் வந்தவுடனேமகிழ்ந்து
திருவாரும்நாட்டிலவர் செய்யுந்தொழில்களையும் ௮௦௩

அந்தந்நாட்டில் அழகாய்விளைபொருளும்
சிந்தையுறவினவித் தேசத்தவர்களெல்லாம் ௮௦௪

பிரயோசனங்கள் பெரிதாய்த்தருந்தொழிலை
திரமாகவெப்பொழுதுஞ் செய்யும்படியருளி ௮௦௫

மாநிலத்திலுள்ளவர்கள் வாய்த்தசெல்வமுண்டாகி
மேன்மையுறக்கண்டு விரும்பிவாழ்நாளினிலே ௮௦௬

ஆல்பர்ட்பிரபு பொருட்காட்சிசாலை இயற்றியது.

விருத்தம்.

தெருட்கொண்டசக்ரவர்த்தினி யார்திருநாட்டிலெங்கும்
மருட்கொண்டமாந்தர்நெஞ்ச மயக்கறுத்துணர்வுநல்கும்
அருட்கொண்டலனையசீர்சால் ஆல்பர்ட்டென்றோதும்வள்ளல்
பொருட்கொண்டசாலையொன்று புரிந்ததுபுகலலுற்றாம்.

கதை.

ஆயிரத்தெண்ணூற்றுநாற்பத் தொன்பதாம்ஆண்டுமுதல்
தூயபொருட்சாலை துலங்கவியற்றவென்று அ௱எ

பலதேசத்துள்ள பலபொருளுஞ்சேகரித்து
நலமானசாலையொன்று நற்பளிங்கினலியற்றி அ௱அ

இலங்குமந்தச்சாலைதனி லெப்பொருளுஞ்சேர்த்துவைத்து
அலங்காரமாக அனைவர்களும்பார்ப்பதுவாய் அ௱கூ

ஆயிரத்தினெண்ணூற்றின் ஐம்பத்தோராமவருடம்
தூயபிரதிஷ்டை சொகுசாகச்செய்தார்கள் அ௱ய

அம்மண்டபத்தைநம தன்னையரும்வந்துகண்டு
இம்மண்டபத்துக் கிணையெங்குமில்லையென்று அகக

சிந்தைகளிகூரவதிற் சேர்ந்தபொருள்களையும்
கந்தமலர்ச்சோலை கவினால்விளங்குவதும் அகஉ

கடவுள்சிருஷ்டியினாற் காசினியிலுள்ளவெல்லாம்
திடமாகஅங்கிருக்குஞ் செவ்வையைக்கண்டுண்மகிழ அகங

எந்தெந்தநாட்டி லினிதாகவாழ்வோரும்
வந்துவந்துபார்த்து மனதுகளிப்புற்றார்கள் அகச

சித்திரங்களந்தச் சிறந்தமணிமண்டபத்தில்
வைத்திருக்குநேர்த்தியையும் வாகாகப்பார்த்தார்கள் அகடு

பார்த்தஇடங்களெல்லாம் பாங்குடனேதங்களைப்போல்
சேர்த்தகண்ணாடிகளிற் சிங்காரமாய்த்தெரிய அகசு

கூர்த்தவிழிகளிமை கொட்டாமற்பார்த்துநின்று
நேர்த்தியிதாமென்று நினைவயர்ந்துநின்றார்கள் அகஎ

இந்தஅதிசயம்போ லெவ்விடத்துங்கண்டதில்லை
முந்துபெரியோர் மொழியவுநாங்கேட்டதில்லை அகஅ

என்றுமகிழ்ந்தங்கே யிருக்கும்விநோதமெல்லாம்
நன்றியுடன்கண்டுதங்கள் நன்னகரம்போய்ச்சேர்வார் அககூ

இன்னும்பலகலத்தா லெவ்வுலகுங்கொண்டாட
மன்னுசக்ரவர்த்தினியார் மாநிலத்தையாள்நாளில் அஉய

இந்தியாவுக்குமுற்காலத்தில்ஈஸ்டிந்தியா கம்பெனியார்வந்தது.

விருத்தம்.

இந்தியாநாடுமுன்ன மிருந்ததுமிங்கிலாந்துள்ளோர்
வந்ததுங்கொடுங்கோலோச்சு மன்னரோடெதிர்த்துப்போரில்

சிந்தைகள்கலங்குறுமற் செற்றலர்பலரைவென்று
நந்தலில்லாமற்காத்த நிலங்களுமியம்பலுற்றாம்.

கதை.

இனிமையுடனேயிந்த இந்தியாதேசமதை
மனுச்சக்ரவர்த்தி மரபிலுள்ளோராண்ட தற்பின் ௮௨௧

தங்கட்கிசைந்தபடி தக்கபலமன்னவரும்
பங்கமில்லாமலிந்தப் பாரையரசாண்டார்கள் ௮௨௨

பாரசீகத்தர் படையால்வருந்தியிப்பால்
சீரார்கிரேக்கரசன் செய்யிமிசைக்குள்ளாகி ௮௨௩

செலியூகஸ் என்னும் திறலவேந்துக்குள்ளடங்கி
மலியும்புகழ்பாக்டிரியர் மன்னரசின்கீழ்ப்படிந்து ௮௨௪

பின்னிந்தியாமீது பெரியபடையோடெழுந்த
வன்மைமிகுந்த மகம்மதியர்க்காளாகி ௮௨௫

அன்னவரசர் அநேகநெடுங்காலம்
இன்னபுவியோர் இடரடையவாளுகையில் ௮௨௬

இந்நாட்டிலுள்ளோர்க் கினியசெல்வமுண்டானால்
உன்னுவதன்முன்னமவர் உட்புகுந்துகொள்ளைசெய்வர் ௮௨௭

குடிவாழ்பவரில்நல்ல கோதையர்களுண்டானால்
அடமாயக்கன்னியரை யங்கேசிறைபிடிப்பார் ௮௨௮

பின்னுமநேகம் பெருந்துன்பஞ்செய்வதனால்
நன்னலங்களென்பதெந்த நாளுமறியாதவராய் ௮௨௯

யாதோர்சுதந்தரங்க ளில்லாமலன்னவர்செய்
கோதார்வினையாற் குலைந்துமிகவருந்தி ௮௩௰

வெள்ளையுடையிலதாய் வேணபணிபூணுமல்
தள்ளற்கரிதாய சஞ்சலமேசெய்வதனால் ௮௩௧

இந்நாட்டின்முன்னாள் இருந்தரசுசெய்துவந்த
மன்னர்பலர்க்கும் மகமதியர்வந்தருக்கும் ௮௩௨

எங்குங்கலகங்களும் எப்போதுஞ்சண்டைகளும்
சங்கையில்லாக்கொள்ளைகளுந் தாரணியிலுண்டாக ௮௩௩

நாட்டிலுள்ளோரெல்லாம் நடுங்கிமனதுநொந்து
வாட்டமுடனே வருந்துகின்றநாளினிலே ௮௩௪

இங்கிலாந்திருந்துவந்த ஈஸ்டிந்தியாக்கம்பெனியார்
சங்கையறஇந்தியா தனில்வணிகஞ்செய்யவென்று ௮௩௫

எலிசபேத்தென்ன இலங்குமரசியிடம்
பலிதவதிகார பத்திரமும்பெற்றுமுதல் ௮௩௬

ஆயிரத்துமேலா யறுநூற்றொராம்வருடம்
தூயவிந்தநாட்டிற் றுணிவாகவந்திரங்கி ௮௩௭

மென்மேலுந்தரஞ்செய் வியாபாரவிர்த்தியுடன்
நன்மைவிளையவிந்த நாட்டிற்றிடமடைந்தார் ௮௩௮

திடமுற்றுப்பற்பலவாஞ் சேனைகளுஞ்சேகரித்தே
அடமுற்றமுன்னை யரசர்பலத்தாழ்வறிந்து ௮௩௯

கிளைவ்என்றுரைக்குமிகு கெம்பீரவல்லவனை
தளகர்த்தனாகத் தகுதியுடனேசேர்த்து ௮௪௰

தங்கள்படைகொண்டவரைத் தாக்கிச்சமர்பொருது
சிங்கமெனவென்று செகத்தைவசப்படுத்தி ௮௪௧

வாணிபங்கள்செய்வதுடன் மாநிலமுங்காவல்செய்து
வேணஉத்யோகஸ்தர்களு மிக்காகஏற்படுத்தி ௮௪௨

சென்னைநகரிற் சிறப்பானகோட்டையொன்று
நன்னலமதாயியற்றி நாடுபலசேனையுடன் ௮௪௩

பஞ்சாப்முதலான பற்பலதேயங்களையும்
அஞ்சாதடர்ந்துதம தாளுகைக்குள்ளாய்ச்சேர்த்து ௮௪௪

பம்பாய்கல்கத்தாப் பதிகள்முதற்பலவும்
நம்பிக்கையாய்த்தமது நன்னுடதாய்ச்சேர்த்து ௮௪௫

எதிர்த்தவர்கள்தம்மையெல்லா மீடழித்துவெற்றியுடன்
மதிக்கும்படியுலகில் வாழுகின்றநாளினிலே ௮௪௬

ஆயிரத்தின்மேலெழுநூற் றேழ்பதுமூன்றாண்டுமுதல்
தூயஇந்தியாவைச் சுகமாகக்காப்பதற்கு ௮௪௭

கவர்னர்ஜனரலொடு கௌன்சில்களுமேற்படுத்தி
தவறுதலில்லாத தனிச்சட்டதிட்டங்களும் ௮௪௮

ஏற்றாயிரத்தெழுநூற் றெண்பதினாலாண்டுவரை
மாற்றுதலில்லாத வகையினரசாண்டார்கள் ௮௪௯

பாங்காகவேயதன்மேற் பார்லிமெண்டுநற்சபையார்
தீங்கறவிந்நாட்டினுக்குச் செய்யுஞ்சட்டப்படியே ௮௫௰

நடத்தும்படிக்கு நலமாய்மனமிசைந்து
திடத்துடனவ்வாறரசு செய்துவருநாளினிலே ௮௫௧

ஆப்கானிஸ்தானத்தில் அடைந்தவெற்றி.

விருத்தம்.

மன்னியருஷியரிந்தியாவினுக்கு வருவதற்காகியவழியிற்
பன்னுதற்கரியஆப்கானிஸ்தானம் படர்தலாலந்நாட்டரசைத்

துன்னியநண்பாயிருந்திடக்கீருதிச் சூழ்ந்தவெங்கலகத்தையடக்கி
மன்னவரெவரும்புகழமண்ணூலகின் மறுநெறிநடத்தியதிசைப்பாம்.

கதை.

ஏற்றருஷியாவினுக்கு மிந்தியாநாட்டினுக்கும்
தேற்றமுடனெவருஞ் செல்லும்வழிதனிலே ௮௫௨

ஆப்கானிஸ்தானத் தடவியிருப்பதனல்
வாய்ப்பாகவத்தேச மன்னனெடுநேசமுற்று ௮௫௩

வாழ்வதாய்த்தங்கள் மனத்தில்நினைத்திருக்க
சூழ்ந்தகலகமொன்று தோன்றியதந்நாட்டினிலே ௮௫௪

ஆயிரத்தெண்ணூற்றுமுப்பத் தொன்பதாமாண்டினிலே
தீயகலகஞ் செறிவாகநேருதலும் ௮௫௫

அக்காலந்தன்னினம தன்னையர்தம்போர்வீரர்
தக்கசூஜாவெனவே சாற்றுபெயர்வேந்தனுக்கு ௮௫௬

உதவிபுரிந்தாங் குறுத்தோர்தமையடர்த்தே
இதமானசூஜாவை யேற்றினர்சிங்காசனத்தில் ௮௫௭

குடிகட்கதுமனத்திற் கொள்ளாமற்கோபமுடன்
இடிபோலதிர்த்துவந்த இங்கிலீஷ்ப்படையுடனே ௮௫௮

போர்செய்தடர்ந்துபல போர்வீரரைமடித்து
சீரில்லாச்செய்கையவர் செய்தவிதமுணர்ந்து ௮௫௯

திரட்டிரளாகவெகு சேனைகளையங்கனுப்பி
உரமாயெதிர்த்தவரை யோடும்படிதுரத்தி ௮௬0

வெற்றிகொண்டுபின்னுமவர் மீதிற்படையுடனே
குற்றமறயாவரையுங் கொண்டுசமதானமுடன் ௮௬௧

மல்லார்புயன்டாங்ட் மகம்மதெனுமோர்வேந்தை
உல்லாசமாக வுயரரசனுகவைத்து ௮௬௨

மன்திற்சந்தோஷமுடன் மாந்தரெல்லாங்கொண்டாட
இனிவாயுலகி னியல்செலுத்திவாழ்நாளில் ௮௬௩

சீனரைவென்று ஜெயப்பெற்றது.

விருத்தம்.

சீனர்களபினேச்சிந்திச் சிலர்களைச்சிறையுஞ்செய்ய
மானமிக்குயர்ந்தவிங்கிலீஸ் வயப்படைதனையங்கேவிச்
சீனரைவென்றுசிற்சி றேயமுந்தமதாய்க்கொண்டு
மேனலமொடும்மன்னை மேவியவிதமுஞ்சொல்வாம்.

கதை.

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பதாமாண்டினிலே
தூயவிங்கிலீஸ்வேந்தர் சொகுசாகக்கொண்டுவந்த அசாசா

மிக்கவபின்முட்டைகளை வேகமுடன்சீனர்பலர்
பக்கமுற்றுமேவியதைப் பாழ்படுத்தியேசிலரை அசாரு

பிடித்துக்கொடுபோய்ப் பெருஞ்சிறையிலிட்டார்கள்
பிடித்தடைத்ததன்மை பெருமையுள்ளவிங்கிலீஷின் அசாசா

வீரமிந்து விரைந்துபடையோடெழுந்து
கோரமுள்ளசீனரொடு கோபமாயப்போர்புரிந்து அசாஎ

சிறையுற்றவரைத் திருப்பியந்தசீனமன்னன்
முறைநடத்தியாளும் முதுநாட்டினிற்சிலது அசாஅ

நாட்டைத்தமது நலஞ்சிறந்தராச்சியத்தில்
தேட்டமுடன்சேர்த்துச் செகவேந்தர்கொண்டாட அசாகூ

நமதுதிருத்தாயர் நலமாய்ச்செங்கோல்செலுத்தி
தமர்களெல்லாஞ்சூழத் தகைமையுடன்வாழ்நாளில் அஎய

சீக்கியரைவென்று ஜெயம்பெற்றது.

விருத்தம்.

மேக்குறுகொடுங்கோலோச்சும் வெய்யவரொடுங்குமாறு
தாக்குறநமதுமுன்னோர் தவம்பலநாளுஞ்செய்த
பாக்கியம்பலித்ததன்ன பண்பினிலுயர்நந்தாயர்
சீக்கியர்தம்மைவென்ற செயலினைச்செப்பலுற்றும்.

கதை.

ஆயிரத்தினெண்ணூற்று நாற்பத்தைந்தாம்வருடம்
காய்சினங்கொள்சீக்யர் கனத்தபடையோடெழுந்து அஎக

பிரிட்டிஸர்நாட்டிற் பெரிதானகொள்ளைசெய்ய
வெருட்டியேபிரோஷாவும் வெஞ்சோபிரானலிவால் அஎஉ

என்றஇடங்களிலு மேற்றவரைப்போய்வளைந்து
வென்றிமிகுபிரிட்டிஸ் வேந்தர்களால்வெற்றிகொண்டு அஎந

சீக்கியரைவென்றுதங்கள் தேசமதிலுள்ளவரை
மாக்கருணையாக மகாராணியார்காத்தார் அஎச

பர்மாதேசத்தரசனைவென்று ஜெயம்பெற்றது.

விருத்தம்.

ஏர்பெறத்தமதுசெங்கோ லிலங்கவிவ்வுலகையாளுஞ்
சீர்பெறுசக்ரவர்த்னி யார்திகழ்கொடியைக்கண்டு

தார்முடிவணக்கஞ்செய்யாத் தகுபர்மவரசைவென்று
வீருடனுலகுகாத்த வீரஞ்சிறிதுரைக்கலுற்றும்.

கதை.

ஆயிரத்தெண்ணூறதன்மேலைம்பத்திரண்டாண்டில்
சேயாரிரங்கூனிற் சேர்ந்தரசுசெய்வேந்தன் அளரு

பிரிதிவிதியானோர் பிறங்குமிங்கிலீஸ்நற்கொடிக்கு
மரியாதைசெய்யாமல் வன்செருக்காயுற்றதனால் அளசு

வெற்றியுள்ளஇங்கிலீஷின் வேந்தர்படையோடெழுந்து
செற்றமுடனேபொருது சீறுபர்மாவீரர்களை அளஎ

வென்றுபர்மாராச்சியமும் மிக்கபைகோநாட்டினையும்
சென்றுகைப்பற்றிச் சிறப்பாகவாழ்நாளில் அளஅ

காப்பிரிகளைவென்று ஜெயங்கொண்டது.

விருத்தம்.

ஆப்பிரிக்காவிலென்று மமைவிலராகிவாழுங்
காப்பிரிகளுமிந்நாட்டிற் கலகத்தைவிளைத்தநாளின்
மாப்படைவீரராலவ் வலியவர்தம்மைவென்று
தீப்பகையின்றியிந்தச் செகத்தினைப்புரப்பதானார்.

கதை.

ஆயிரத்தெண்ணூறதன்மேலைம்பத்துநாலாண்டில்
மாயைமிகுகாப்பிரிகள் வந்துதிரளுடனே அளகூ

இந்நாட்டினிற்கலக மேற்றவர்கள்செய்தல்கண்டு
மன்னுமிங்கிலீஷின் வயவீரர்சென்றவரை அஅய

வென்றிந்தநாட்டை விரும்பியரசாள்நாளில்
சென்றுமற்றையாண்டிற் றிகழ்பாரசீகர்வந்து அஅக

கலகம்விளைக்கக் கனத்தஇங்கிலீஸ்வீரர்பின்னும்
வலமாயவரைவென்று மாநிலத்தைக்காத்துவந்தார் அஅஉ

சக்கர்வர்த்தினியார் இந்தியாவை நேரில் ஒப்புக்கொண்டு கலகத்தையொடுக்கி முறைசெலுத்தியது.

விருத்தம்.

இப்புவிதன்னில்யாருமேமுறக்கலகமெங்கும்
ஒப்பிலதாயுண்டாக வுணர்ந்திதையடக்கிநம்மாற்

றப்பறமுடித்தறகேலாதெனச் சக்ரவர்த்தினியார்பால்
ஒப்புவித்ததுமொன்றுரை யொடுக்கியாண்டதுவுஞ் சொல்வாம்.

கதை.

ஆயிரத்தெண்ணூற்றி னைம்பத்தேழாம்வருடம்
தீயகுணத்தர் சிலர்களெங்குமுண்டாகி ௮௮௩
மீரத்துகான்பூர் விளங்குகின்றஜான்ஸிலக்னோ
பேரானடில்லிமுதற் பேசும்பலவிடத்தும் ௮௮௪
பெருத்தகலகங்கள் பெலமாய்நடந்திடவே
திருத்தமுள்ளகான்பூரிற் சேர்நானாசாஹிபெனும் ௮௮௫
காலனைத்தபாவியிங்கே காட்சியுடன்வந்திருந்த
மேலான இங்கிலீஷின் வீரரொடுபெண்களையும் ௮௮௬
அறியாச்சிசுக்களையு மங்கவன்கைவாளாலே
தறியாயநேககொலை சண்டாளன்செய்திடவே ௮௮௭
அக்கலகந்தன்னை யடக்கமுடியாமல்
இக்கலகநம்மா லினியொடுங்கமாட்டாது ௮௮௮
என்றுமனதி லெழிற்சங்கத்தார்நினைந்து
வென்றியுள்ளபார்லிமெண்டு வீரருக்குக்கூறுதலும் ௮௮௯
ஆயிரத்தெண்ணூற்றி னைம்பதெட்டாம்வருடம்
சாய்வில்லாப்பார்லிமெண்டு சங்கத்தாராராய்ந்து ௮௯௰
சாற்றரியவீஸ்டிந்தியாக் கம்பெனியார்தம்மைவிட்டு
நாற்றிசையும்போற்றுமகா ராணியர்பாலொப்புவித்தார் ௮௯௧
நல்லதெனவே நமதன்னையாருமொப்பி
பொல்லாக்கலகம் புவியிலென்றும்வாராமல் ௮௯௨
வீரமுள்ளலாரன்ஸ் விளங்குஹாவிலாக்துரையும்
தீரன் அவுட்ராம் சிறந்தபலசேனையையும் ௮௯௩
சக்கரவர்த்தினியார் சந்தோஷமாயனுப்ப
மிக்கபலமுடைய வீரர்விரைவாகவந்து ௮௯௪
சண்டாளனும்நானா சாஹிபொடுமற்றுமுள்ள
மிண்டர்களையெல்லாம் வெருவும்படிசெகுத்து ௮௯௫
மென்மேலுஞ்செல்வமிந்த மேதினியிலுண்டாக
நன்மைபலவுமெந்த நாளுமுண்டாகும்படியே ௮௯௬
முன்னவர்கள்செய்த முறைப்படியேயாள்வதிலும்
இன்னஇந்தியாவின் இயல்புணருமேலவர்க்கு ௮௯௭
இந்தியாமந்திரியென் றின்பமுடன்பேர்கொடுத்தே
அந்தவுத்யோகஸ்தர்தமக் கையாயிரம்பவுனும் ௮௯௮

வருடமொவ்வொன்றுக்கும் மகிழ்சம்பளங்கொடுத்து
தெருளாயிந்நாட்டினுக்குச் சீர்திருத்தஞ்செய்வதுடன் ௮௯௯

இந்தியாகௌன்ஸில்மெம்ப ரேற்றமுள்ளபன்னிருவர்
சிந்தைமகிழ்ச்சியுடன் சீராகவேற்படுத்தி ௯௱

உபகாரியதரிசி யாகவுறைவோரிருவர்
சுபமாய்டிபார்ட்டுமெண்டு சூழ்செக்ரிடேரிகளும் ௯௱௧

இந்தியா ஆபீஸ் இலங்கியசிப்பந்திகட்கும்
இந்தியாதேசத் திறையின்வரும்படியில் ௯௱௨

சம்பளங்கண்மற்றுளது ஞ் சந்தோஷமாய்க்கொடுத்து
இம்பருலகை யினிமையுடன்காக்கவின்னும் ௯௱௩

பாரோர்புகழவல்ல பார்லிமெண்டுநற்சபையும்
சீரானலார்ட்டுசபை செப்பரியகர்மன்ஸ்சபை ௯௱௪

இன்னும்பலவிதத்தி லேற்றவுத்யோகஸ்தர்களால்
நன்னலங்களோங்கவிந்த நாட்டையரசாளலுற்றார் ௯௱௫

அந்தவருடத்தி லறிவின்றிச்சீனர்பலர்
வந்துமறுபடியும் வன்மையொடுபோர்பொரவே ௯௱௬

இங்கிலீஸ்வீர ரெதிர்த்தவரைத்தோற்கடித்து
சங்கையறவிவ்வுலகைத் தானாளும்நாளினிலே ௯௱௭

சக்கரவர்த்தினியார் சகலதேசத் தவர்களுக்குந் தெரிவித்த விளம்பரம்.

விருத்தம்.

எத்திசையினுந் தஞ்சீர்த்தி யிலங்கவிவ் வுலகை யாளும்
சத்தியந் தவறாவாய்மைச் சக்கர வர்த்னி யாரும்
இத்தரணியி லுள்ளோர்கட் கெழிலுட னெழுதி விட்ட
உத்தர வதனையாரு முணர்வதா யுரைக்க லுற்றாம்.

கதை.

இந்தியாதேசம் எழிலாங்கிலேயருக்குச்
சொந்தமுற்றகாலந் தொடங்கியிந்தநாள்வரையும் ௯௱௮

ஈஸ்டிந்தியாக்கம்பெனியா ரொன்றாக்கும்வர்த்தகர்கள்
வாஸ்தவசங்கத்தின் வசமாயிருந்ததனை ௯௱௯

நேராய்நம்பாற்கொடுத்தால் நீதிநெறியோங்குமென்றுந்
தாரணியிற்சண்டையொடு சச்சரவுறாதெனவும் ௯௱௰

செல்வமென்மேலுஞ் சிறப்பாய்வளருமென்றும்
நல்லபுகழ்படைத்து நாட்டிலுள்ளோர்வாழ்வொன்றும் ௯௧௧
ஆலோசனைசபையார் அன்பாயுரைத்திடவே
சாலமகிழ்வர்த்தகத்தின் சங்கத்தார்நல்லதென்று ௯௧௨
இந்தியாநாட்டை யினிதாய்நமதுவசம்
தந்தாரதனால் சகலதேசத்தவர்க்கும் ௯௧௩
நாற்றிசையும்போற்றிசெய்ய நாடாளுமன்னவர்க்கும்
ஏற்றமுள்ளஇந்தியாவில் எய்திவளர்மாந்தருக்கும் ௯௧௪
நன்னலமதாகவென்றும் நன்மைபலவுண்டாக
உன்னியேசெய்கின்ற உத்தரவீதென்னவென்றால் ௯௧௫
துய்யவொளியாகத் துலங்கும்பரனருளால்
வையகத்தின்மிக்க மனுநூன்முறைப்படியே ௯௧௬
இற்றைவரையும் இயல்பாய்நமக்காக
வெற்றியுடனும் விளங்குநெறியுடனும் ௯௧௭
இந்தியாதேசமதை ஈஸ்டிந்தியாக்கம்பெனியார்
சிந்தைமகிழ்நீதி செலுத்தியேவந்தார்கள் ௯௧௮
இப்போதுநேரில் எமக்கொப்புவித்திடவும்
செப்பமுள்ளபார்லிமெண்டு சேருஞ்சபையோரும் ௯௧௯
ஏற்றரசுகொள்வ தியல்பென்றுகூறினதால்
நாற்றிசையுங்கொண்டாடும் நல்லபுகழிந்தியாவை ௯௨௰
சிந்தையுவந்தொப்புவதாய்த் தீர்மானஞ்செய்துகொண்டோம்
அந்தமகாசபையோர் அன்பாயெடுத்துரைத்த ௯௨௧
நன்மொழியைநாமும் நலமாயங்கிகரித்து
கனமானராச்சியத்தைக் கைக்கொண்டிருப்பதனால் ௯௨௨
வாகானஇந்தியாவில் வாழுங்குடிகளெல்லாம்
சேகரமாய்நாம்செலுத்துஞ் செங்கோலின்கீழ்ப்படிந்து ௯௨௩
பின்சந்ததிகளுக்கும் பின்னுலகையாள்பவர்க்கும்
நன்மையுடன்கீழ்ப்படிந்து நல்லவிசுவாசமுடன் ௯௨௪
பேருலகுதன்னிற் பிரிதிநிதியாகநம்மால்
சீராகவேற்படுத்துஞ் செய்யவுத்யோகஸ்தருக்கும் ௯௨௫
அதிகாரமேன்மைக் கடங்கியொழுங்காக
மதியால்நடந்து மனங்களிற்சந்தோஷமுடன் ௯௨௬
தாழ்வொன்றும்வாராமற் சந்தோஷமுண்டாகி
வாழ்வீர்களென்று வளமாயுரைத்துமற்றும் ௯௨௭
மந்திராலோசனையின் வாய்த்தசபையோர்களிலே
மைந்துடையராசவிசு வாசமுள்ளநற்பிரபு ௯௨௮

மன்னுபுகழ்சார்லேஸ்ஜான் வைகஉன்ட்டுக்கானிங்காம்
அன்னவரேபக்தியுடன் ஆலோசனைத்திறமும் கூ கூ

உள்ளவரொன்றேநமக்கு முண்மையாய்த்தோற்றுவதால்
வள்ளலார்தம்மை வழங்குமிந்தியாவினுக்கு கூ ய

கவர்னர்ஜெனறெலெனக் காரணப்பேருங்கொடுத்து
புவனிமிசையுள்ளோர் புகழ்ந்தென்றுங்கொண்டாட கூங க

இந்தியாவிலென்றும் இருந்துமகிழ்வுடனே
முந்துசட்டதிட்ட முறைகளையுமாராய்ந்து கூங உ

நாமனுப்புங்கட்டளையும் நன்றுமங்கீகரித்து
சேமமுடனமக்காய்ச் சீராய்நடத்திவர கூங ங

முதலிலிவரை மூகமலர்ச்சிதன்னுடனே
இதமாய்நியமித் திருக்கின்றதனாலே கூங ச

இந்தியாவைமுன்னாண்ட் ஈஸ்டிந்தியாக்கம்பெனியார்
சந்தோஷமாகமுன்பு தாமேற்படுத்திவைத்த கூங ரு

சீவில்மிலிடேரி செய்யவுத்யோகஸ்தருக்கும்
தாவிலவரவர்செய் தக்கஉத்யோகங்களையே கூங சா

செய்வதாயுத்தரவு செய்திருப்பதானாலும்
மெய்யாயினிநாம் விரும்பிச்செய்யார்டருக்கும் கூங எ

சட்டங்களுக்கும் சரியாய்முறைப்படியே
திட்டமாயுத்யோகஞ் செய்துவரவேண்டுமென்றும் கூங அ

இந்துதேசத்தில் இயல்பாகவாழுகின்ற
முந்துசுதேச முறையுடையமன்னவர்க்கு கூங கூ

தெரிவிப்பதென்னவென்றால் தீங்கில்லாதிற்றைவரை
அருளுடனேமுன்னவர்க ளாண்டமுறைப்படியே கூச ய

எவ்வெவ்விதங்களெல்லா மெப்படிச்செய்தாண்டாரோ
அவ்வவ்விதங்களெல்லாம் அப்படியேநாம்புரிவோம் கூச க

மன்னவர்களேமுதலாய் மற்றுள்ளவர்களெல்லாம்
முன்னவர்கள்பார்ச்செய் முறைப்படியேநம்பிடத்தும் கூச உ

ராசவிசுவாசமுடன் நம்பிக்கையாகவென்றும்
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேவாழ்கவென்றும் கூச ங

தேசத்திலுள்ளவர்க்குத் தீங்கொன்றும்வாராமல்
மாசற்றசீர்த்தியொடு மாநிலத்தைக்காத்திடுவோம் கூச ச

இந்தியாவின்முன்னம் இருந்தபுவியைத்தவிர
சிந்தையிலும்வேறுபல சேர்க்கநினைப்பதில்லை கூச ரு

பின்னும்நமது பெரியபுவிமீதெனினும்
சொன்னநமக்குள்ள சுதந்தரத்தின்மீதெனினும் ௩௪௬

பேராசையாலே பிரவேசிப்பார்களென்றால்
ஆராயிருந்தாலும் அப்படிப்பட்டோர்களைநாம் ௩௪௭

மண்டியமர்செய்தெனினும் வன்மையுடனேபிடித்து
தண்டிப்பதல்லாமலவர் தம்மைவிடுவதில்லை ௩௪௮

அந்தப்படிபிறர்கள் ஆளுகின்றபூமியிலும்
சொந்தமாயுள்ள சுதந்தரங்கள்மீதினிலும் ௩௪௯

சுயமாயவரவரோ தொல்லுலகில்வாழ்வதின்றி
அபகரித்துக்கொள்ள அகத்திலும்நாங்கொள்வதில்லை ௩௫௰

சுதேசவரசர் சொகுசாய்நடத்துகின்ற
இதமானகௌரவங்கள் ஏற்றநெறிநன்முறையும் ௩௫௧

உரிமைகளையும் ஒழுங்காய்நடத்துகின்ற
பெருமைகளுநாஞ்செய் பெருமையெனவேமதிப்போம் ௩௫௨

கலகமொன்றுமில்லாமற் காசினியிலுள்ளவரை
நலமாகக்காத்துவரும் நன்மைநமதென்றுகொள்வோம் ௩௫௩

இந்நாட்டிலுள்ளோ ரெழிலாகவாழ்வதுபோல்
அந்நாட்டிலுள்ளவரும் ஆகியநன்மேன்மையுடன் ௩௫௪

சுகமாகஎப்பொழுதுந் தொந்தரவொன்றில்லாமல்
செகமீதில்வாழவென்று சிந்தையில்நாங்கோருகிறோம் ௩௫௫

இங்கிலாந்துதேசமதி லெப்போதும்வாழ்வோர்க்கு
சங்கையறநாம்நடத்துந் தக்கமுறைப்படியே ௩௫௬

இந்தியாதேசமதி லேற்றகுடிகளுக்கும்
சிந்தையுறச்செங்கோல் செலுத்தமனத்தெண்ணுகிறோம் ௩௫௭

எல்லாப்பொருட்கு மிறையாகியேசகல
வல்லபமுமுள்ள மகாதேவன்றன்னருளால் ௩௫௮

எவ்வுயிருநம்முயிர்போ லெண்ணியதார்த்தமுடன்
ஒவ்விமனப்பூரணமா யோங்கியசெங்கோல்புரிவோம் ௩௫௯

மாநிலத்திலென்றும் வழங்கும்பலமதத்துள்
மேனிலைமையாக விளங்குமகிறிஸ்துமதம் ௩௬௰

சத்தியமென்றெண்ணியதிற் சந்தேகமில்லாமல்
சித்தம்மகிழ்வோம்நாஞ் சேர்ந்திருந்தோமானாலும் ௩௬௧

நம்முடைநாட்டுள்ளவரை நன்மையுள்ளஇம்மதத்தில்
செம்மையறவெருட்டிச் சேர்த்திடவென்றிஷ்டமில்லை ௩௬௨

நல்லநெறியென்றுணர்ந்து நாடியடையாதவரை
அல்லவென்றுசேர்க்க அதிகாரமுமிலையே கூசுங

சாதிவிஷயங்கள் சமயவிஷயங்களிலும்
ஓதரியநீதிக் கொருபக்ஷஞ்செய்வதில்லை கூசுச

எச்சாதியரெனினும் எம்மதஸ்தரொன்றாலும்
பச்சமின்றிநன்னீதி பாலித்தரசுசெய்வோம் கூசுரு

ஆனதினால்நம்முடைய ஆளுகையிலுத்யோகம்
மேனலமாய்ச்செய்ய விரும்பிவருகின்றவரும் கூசுசு

சாதிவிஷயங்கள் சமயவிஷயங்களிலே
பேதமாயெண்ணிப் பிரவேசிப்பார்களெனில் கூசுஎ

கொண்டாருளுநம்முடைய கோபத்துள்ளாவரென்று
கண்டிப்பாயாவருக்குங் கட்டளைசெய்தோம்மேலும் கூசுஅ

எந்தக்குலத்தில்வந்தோர் யாவர்களேயானாலும்
நந்தாதகல்வி நலத்தாலுயர்ந்தவராய் கூசுகூ

நல்லொழுக்கம்நல்லசெய்கை நற்குணமுமுள்ளவராய்
சொல்லுந்தொழிலின் றுறைநடத்தவல்லவராய் கூஎய

இருந்தாலவர்கட் கியன்றவுத்யோகம்புரிய
வருந்தித்தடையிலதாய் வன்மையுறவைத்திடலாம் கூஎக

இந்துதேசத்தார்க் கினியபிதிரார்ச்சிதமாய்
முந்துள்ளபூஸ்திதியில் முற்றுமபிமானமுண்டும் கூஎஉ

அந்தவிஷயத்தையுநாம் ஆலோசித்தேயவர்கள்
சிந்தைமகிழ்வாகமுன்பு சேர்ந்தபிதிரார்ச்சிதத்தில் கூஎங

சகலசுதந்திரங்கள் தன்னையும்நாங்காப்பாற்றி
மகிழ்வாய்முன்னுள்ள வரியேவசூல்புரிவோம் கூஎச

அன்றியுஞ்சட்டங்கள் அழகாகச்செய்வதிலும்
வென்றியுடனிந்த விதம்நடத்திக்கொள்வதிலும் கூஎரு

இந்துதேசத்தார்க் கிசைந்தவழக்கப்படியே
முந்துசுதந்திரங்கள் முற்றிலுமந்நாட்டிலுள்ள கூஎசு

தேசாசாரத்தின் செயலையனுசரித்தே
நேசமாய்நாமும் நெறிநடத்திக்காத்தருள்வோம் கூஎஎ

தராதலத்தில்வாழுந் தகுதியுள்ளமாந்தர்களில்
துராசையுடையசிலர் சோரமாய்ப்பொய்மொழிந்து கூஎஅ

பிறர்வாழ்வுகண்டு பெரிதாய்ப்பொறாமைகொண்டு
முறைமையில்லாத முயற்சிபலசெய்யலுற்றார் கூஎகூ

கொடியதொழில்செய்யுங் கொடியவரைநம்முடைய
திடமானசேனைகளாற் சேரப்பிடித்தடைத்து ௬௮௰

கண்டித்துநாட்டிற் கலகமென்பதில்லாமல்
கொண்டரசுசெய்யுங் குணங்களையுநீரறிவீர் ௬௮௧

அப்படியேதுஷ்ட ரடங்கமநுநீதியினால்
இப்படியைநாமும் இயலாற்புரப்பதனால் ௬௮௨

ஒழுங்காயவரவர்க ளூற்றஇடங்களிலே
வழங்குந்தொழில்கள வழக்கப்படிநடத்தி ௬௮௩

வாணிபங்கள்பின்னும் வளஞ்சேர்கிரிஷிமுதல்
வேணதொழில்களையும் மிக்கமகிழ்வால்நடத்தி ௬௮௪

கலகங்கள்சல்லியங்கள் கஷ்டங்கள்செய்யாமல்
நலமாகவெல்லோரும் நானிலத்தில்வாழ்வீரேல் ௬௮௫

சீவகாருண்ணியத்தாற் செய்தசிறுகுற்றங்களும்
ஆவலுடன்மன்னித் தருமையாய்க்காத்திடுவோம் ௬௮௬

நம்முடையநாட்டில் நலமாகவாழ்வோர்கள்
செம்மையுடனுனு சிறப்பாயிருக்கவென்றும் ௬௮௭

நந்துதலில்லாமலெந்த நாளுமேன்மேலோங்கவென்றும்
சிந்தைதனிலெப்பொழுதுந் தேவனைநாங்கோருகிறோம் ௬௮௮

அந்தக்கடவுள் அருளாலவனிதனில்
முந்துகலகங்கள் முதலியவெல்லாந்தவிர்ந்து ௬௮௯

இந்துதேசத்தி லியலமைதியுண்டாகி
சந்தோஷமெய்திச் சகலசெல்வமும்பொருந்தி ௬௯௰

எல்லாத்தொழிலு மினிதாய்நடந்தேறி
நல்லபிரயோஜனங்கள் நாட்டிலெவரும்பெறவே ௬௯௧

செங்கோன்முறைநாம் செலுத்திவரவேண்டுமென்றே
எங்குநிறைந்த இறையவனைக்கோருகிறோம் ௬௯௨

நமதுகுடிகள்செய்யும் நன்மைதிடமாகுமென்றும்
அமையுமவர்சுகமே யாகியநங்கோட்டையென்றும் ௬௯௩

நன்றியறிதல் நமக்குப்பயனெனவும்
வென்றிக்குடிகள் மிசைநாம்விரும்புகிறோம் ௬௯௪

அப்படியேநாமும்நமக் கானஅதிகாரிகளும்
இப்படியையன்புடனே யெப்போதுங்காத்துவர ௬௯௫

தேவன்நமக்குத் திடத்தைக்கொடுத்தருளி
ஆவலுடன்காப்ப தவர்க்குக்கடமைகண்டீர் ௬௯௬

என்றுசக்ரவர்த்தினியா ரிந்தியாவிலுள்ளவர்க்கு
வென்றியுடனே விளம்பரமுஞ்செய்தருளி ௯௯௭

கண்ணையிமைகள் கனிவாகக்காப்பதுபோல்
மண்ணுலகைமிக்க மகிழ்வாகக்காத்துவந்தார் ௯௯௮

சக்கரவர்த்தினியார் தமதுநாட்டிலுள்ளவர்களுக்கு இயற்றிய நன்மைகள்.

விருத்தம்.

தாஷ்டிகமுடையவென்றிச் சக்ரவர்த்தினியாரென்றுங்
கோட்டமில்லாமற்செய்ய கோன்முறைப்படியேயோச்சி
வாட்டமில்லாமல்யார்க்கு மனங்களின்மகிழ்வுண்டாக
நாட்டிலெல்லோர்க்குஞ்செய்த நன்மையிற்சிறிதுசொல்வாம்.

கதை.

எந்நாட்டிலுள்ளவர்க்கு மேற்றசுகமுண்டாக
பொன்னாட்டிலுள்ளவரும் பூவில்வரவெண்ணுவதாய் ௯௯௯

சக்கரவர்த்தினியார் தாலமிசைபுரிந்த
மிக்கவினோத விதங்களெல்லாஞ்சொல்லவென்றால் ௲

ஓராயிரம்நா வுடையபணிவேந்தனுக்கும்
சீரானபூவுலகிற் செப்பமுடியாதுகண்டீர் ௲௧

ஆனாலுமெந்தன் அறிவுக்கிசைந்தமட்டும்
மீனார்கடல்புடைசூழ் மேதினியிற்சொல்லுகிறேன் ௲௨

சகலஉலகத்தவருந் தாமடங்கிவாழ்வதுபோல்
புகலவரியபஞ்ச பூதங்களுமடங்கி ௲௩

யந்திரங்களாகி யிவராளும்நாட்டிலெங்கும்
தந்திரங்களாற்செய் சகலதொழில்களுக்கும் ௲௪

ஆதாரமாகி யவர்க்கேவல்செய்யுமென்றால்
பூதலத்தில்யாரே புகழைவிரித்தோதவல்லார் ௲௫

வலமானபாரமுடன் மானிடர்பல்லாயிரமும்
நலமாகவேற்றியொரு நாழிகைக்குநாற்காதம் ௲௬

கரைகாணவொண்ணுக் கரியகடலினிலே
விரைவாகக்கப்பல் விரும்பிச்செல்யந்திரங்கள் ௲௭

இரும்பிலுைலெங்கு மிசைத்திருக்கும்பாதைகளில்
விரும்பியிரும்புவண்டி மீதிற்பலசுமைகள் ௲௮

ஓராயிரமா யுரைக்கும்வண்டிப்பாரத்தின்மேல்
பாரமுமேற்றியதிற் பன்னூறுள்சேரவைத்து ௲௯

ஓரோர்தினங்களினு மோராயிரமயில்கள்
தூரம்புவியதிரச் சூஸ்திரங்கள்செல்லுவதும் ௩௱௰

ஆயிரங்காதம் அரைநொடியிற்செல்லவல்ல
தூயமின்சாரத் துலங்குதந்திபேசுவதும் ௩௱௧௧

தந்தித்தபால்களொடு தக்கதபால்வைப்புகளும்
விந்தைபலநம்மால் விரித்துரைக்கக்கூடியதோ ௩௱௧௨

எட்டாததூரத் திருக்கும்பொருள்களையும்
கிட்டஇருப்பதுபோற் கேண்மையொடுபார்ப்பதற்கு ௩௱௧௩

தூரதிஷ்டியென்னத் துலங்குங்கண்ணாடிகளும்
சீராய்த்தெரிந்தமைத்த செய்கைசொல்லக்கூடியதோ ௩௱௧௪

விண்ணுலகின்மீது விளங்கும்பொருள்களையும்
கண்ணுள்ளறிவதுவாய்க் காட்டுங்கருவிகளும் ௩௱௧௫

தண்ணீரினுள்ளே தகைந்தபொருள்களையும்
எண்ணமறக்கண்ணுக் கிசைக்குங்கருவிகளும் ௩௱௧௬

கரிவாயுவாலே கதிர்போலொளிர்விளக்கும்
பரிவானபத்திகளாற் பாங்காயொளிர்விளக்கும் ௩௱௧௭

மின்சாரத்தாலே விளங்கும்பலவிளக்கும்
மின்வாங்கியென்ன வியப்புடையதீபங்களும் ௩௱௧௮

ஆகாயத்தேகும் அரியபுகைக்கூடுகளும்
வாகாய்த்தண்ணீர்க்குள் வகிர்ந்துசெல்லுங்கப்பல்களும் ௩௱௧௯

பூமியளக்கும் புதியகருவிகளும்
நேமிக்கடலின் நிலைகாண்கருவிகளும் ௩௱௨௰

நிறுத்தலளவை நிதானிக்குஞ்சூஸ்திரங்கள்
செறுத்தவனைவெல்லுந் திடஞ்சேர்கருவிகளும் ௩௱௨௧

பன்னூல்சட்டங்கள் பதிப்பிக்கும்யந்திரங்கள்
கன்னலொடுபகலைக் காட்டுகடியாரங்களும் ௩௱௨௨

திசைகாட்டற்கேற்ற திடஞ்சேர்கருவிகளும்
விசையாற்சலத்தினையும் மேலேற்றும்யந்திரங்கள் ௩௱௨௩

ஜலசூஸ்திரங்களொடு தக்கபலயந்திரங்கள்
நலமாகத்தங்கடிரு நாட்டிலெங்குமுண்டாக்கி ௩௱௨௪

சகமீதுமாந்தர் தனித்தனியேபேசுகின்ற
புகலுமொழிகவரும் போனகிராப்யந்திரங்கள் ௩௱௨௫

திருந்துமவரவர்கள் செய்யவடிவங்களைப்போல்
பொருந்தும்படமிறக்கும் பொட்டக்கிராப்யந்திரங்கள் ௩௱௨௬

ஓடுகின்றகாற்றினையு முட்கவரும்யந்திரங்கள்
சாடுகின்றதீயைத் தணிக்கின்றயந்திரங்கள் ௩௱௨௭

பருத்திப்பொதிநூறோர் பகலேபரைத்துவிரை
திருத்துபஞ்சுவேறாகச் செய்கின்றயந்திரங்கள் ௩௨௮

அரைத்தபஞ்சைச்சீர்திருத்தி யைஞ்ஞூறிராத்தல்வரை
திருத்திச்சிறுகட்டாகச் செப்பமிடும்யந்திரங்கள் ௩௨௯

கட்டானபஞ்சுமயிர் காணரியபட்டுமுதல்
திட்டமாய்நூலிழைக்குஞ் செப்பரியயந்திரங்கள் ௩௩௰

நூலைப்பலவாய் நுவல்சாயமும்மனைத்து
சேலைபலவிதமுஞ் செய்கின்றயந்திரங்கள் ௩௩௧

பஞ்சவர்னத்தாலும் பலவிதமாய்வெண்டுகிலே
மிஞ்சியசாயங்கள் விளைக்கின்றயந்திரங்கள் ௩௩௨

உருகியசெம்புதனை யுற்றநூலோடிசைத்து
சருகைபிளைக்குந் தகுந்தபலயந்திரங்கள் ௩௩௩

நூலினிளையாய் நுவலரியவெள்ளிபொன்னை
சாலவகுக்கவல்ல சாற்றரியயந்திரங்கள் ௩௩௪

இரும்பைத்தண்ணீர்போ லிளக்கிப்பலவிதமாய்
விரும்புங்கருவி விளைக்கின்றயந்திரங்கள் ௩௩௫

பொன்மணலைக்காய்ச்சியிந்தப் பூவுலகில்யாவருக்கும்
நன்மையுள்ளநாணயமாய் நல்குகின்றயந்திரங்கள் ௩௩௬

வெள்ளிசெம்புபித்தளைநல் வெண்கலம்மற்றுள்ளவெல்லாம்
விள்ளரியபாத்திரஞ்செய் வேணவிதயந்திரங்கள். ௩௩௭

நெல்லைமுதலாய் நிறைந்தநவதானியமும்
கல்புழுதிசாவி கழிக்கின்றயந்திரங்கள் ௩௩௮

மற்றுமந்தநெல்லின் மருவுமுமிநெய்தவிடு
பற்றறச்செய்தேயரிசி பாலிக்கும்யந்திரங்கள் ௩௩௯

கரும்பின்சாற்றாலேவெல்லக் கட்டியொடுசற்கரையும்
விரும்பியமைக்கவல்ல வேணவிதயந்திரங்கள் ௩௪௰

பனைவெல்லந்தன்னைப் பகரரியசீனிமுதல்
நனிபல்விதங்களினும் நல்குகின்றயந்திரங்கள் ௩௪௧

பற்பன்மரங்களையும் பாங்காய்வகிர்தல்செய்து
சிற்பத்தொழில்பலவுஞ் செய்கின்றயந்திரங்கள் ௩௪௨

ஆயிரம்பேர்கூடி யசைக்கவொண்ணாப்பாரமதை
தூயவெளிதாகத் தூக்குகின்றயந்திரங்கள் ௩௪௩

மெய்யிலணிசட்டைமுதல் வேண்டும்பலவிதங்கள்
தையற்றொழிலாற் சமைக்கின்றயந்திரங்கள் ௩௪௪

இன்னும்பலவிதமா யேற்றமுள்ளயந்திரங்கள்
இந்நிலத்தில்வாழ்வோர்க் கினிமையுறவேயியற்றி ௩௱௪௫

தருமவயித்தியத்தின் சாலைபலவுண்டாக்கி
கருமவசத்திலிந்தக் காசினியோர்க்குண்டாகும் ௩௱௪௬

பற்பல்விதமாய்ப் பகரும்பிணிகளெல்லாம்
அற்பமாய்நீங்குவதற் கானமருந்துகளும் ௩௱௪௭

கட்டிகழலைமுதற் கையாடுங்கத்திகளும்
திட்டமாய்ப்புண்களெல்லாந் தீர்க்குமருந்துகளும் ௩௱௪௮

நாடிவருகைகால் நரம்புப்பிடிப்புகளின்
கோடல்தவிர்க்குங் குணமானயந்திரங்கள் ௩௱௪௯

பஸ்பங்களோடும் பலவிதசெந்தூரங்களும்
விஸ்தாரமாக விளங்குகின்றலேகியங்கள் ௩௱௫௰

சூரணங்களுடனைத் துறத்துந்திராவகங்கள்
சீரார்தயிலங்களுஞ் சீமைமருந்துகளும் ௩௱௫௧

எந்தநோயேனு மிலைப்பளவிற்றீர்க்கவல்ல
தந்திரங்களும்மருந்தும் தச்கவயித்தியரும் ௩௱௫௨

அங்கங்கெவர்க்கு மநுகூலமாகவைத்தே
எங்கெங்குமுள்ளவர்க்கு மின்பமென்றுமுண்டாக ௩௱௫௩

சிறுவர்வசூரியினுற் சிந்தைநொந்துவாடாமல்
மறுவற்றபால்களினுன் மாற்றிநன்மையுண்டாக்கி ௩௱௫௪

சிறியபொருள்களையுந் தேர்ந்தறியக்கண்களுக்கு
பொறையதுபோற்காட்டுகின்ற பூதகண்ணுடிகளும் ௩௱௫௫

கல்வியுயர்வுங் கவினுநலஞ்சிறந்த
செல்வமனைத்தினையுஞ் சேர்க்குமெனுமுறையே ௩௱௫௬

பூவுலகிலெங்கும் புகழ்கல்வியுண்டாக
தாவில்லாதோங்கிவளர் தர்மப்பள்ளிக்கூடங்களும் ௩௱௫௭

கற்குஞ்சிறுவருக்குக் கற்பலகைபென்சல்லும்
மற்றும்வெள்ளைக்காகிதங்கள் வாய்த்தவதன்பென்சல்கள்ம் ௩௱௫௮

பஞ்சவர்னமாகப் பகருமைக்கூடுகளும்
அஞ்சாததிலெழுதற் கரியஸ்டீல்ஹோல்டர்களும் ௩௱௫௯

பென்சலெழுத்தைப் பிரித்தெடுக்குமரப்பர்களும்
பின்னுென்றிற்பட்டமையைப் பேர்த்துறிஞ்சுகாகிதமும் ௩௱௬௰

நாற்காலிகளும் நலஞ்சிறந்தமேசைகளும்
மேற்பெரிதாயோங்கி விளங்குங்கண்ணுடிகளும் ௩௱௬௧

பீரோவுடன்சிறந்த பென்சீரப்பர்மெத்தைகளும்
பாரோர்புகழும் படியினுடும்பற்பலவும் ௲௬௨

சால்பானபஞ்சவர்னத் தாலேயொளிசாரும்
வால்சீட்டிலாம்பிலந்தர் வாய்த்தகுலோப்புகளும் ௲௬௩

பொன்னாணயங்கள் பொருவில்வெள்ளிநாணயங்கள்
மன்னுசெம்பினாலும் வழங்குபலநாணயங்கள் ௲௬௪

எப்போதும்நாட்டுக் கினிதாய்வழங்குதற்கு
செப்பமுடன்செய்யுஞ் சிறந்தபலசாலைகளும் ௲௬௫

காகிதத்தினாலே கருதரியநோட்டுகளும்
பாகமுள்ளவுண்டில்களும் பாங்கியாபீசுகளும் ௲௬௬

முத்திரைஸ்டாம்பும் மொழிகின்றலேபில்களும்
றிஜிஸ்தராபீசுகளும் லெட்டர்க்குலேபில்களும் ௲௬௭

எல்லாநகர்களுக்கு மேற்றமுனிசீபுகளும்
வல்லமையாய்க்காக்கும் வயப்போலீஸ்டேசன்களும் ௲௬௮

ஒவ்வொருடேஷனுக்கு முற்றஅதிகாரிகளும்
செவ்வையுடைய சிலபோலீஸ்டேஷன்கட்கு ௲௬௯

பொலிவாய்மேற்பார்த்துவரப் போலீஸ்இன்ஸ்பேக்டர்களும்
பலஇன்ஸ்ப்பேக்கட்டர்கட்கோர் பாங்குடையசூப்ராண்டும் ௲௭௰

இன்னும்பலவிதமா யேற்றவுத்யோகஸ்தர்களும்
கன்னங்களவு கலகம்மற்றும்வாராமல் ௲௭௧

எல்லோர்தமக்கு மினிமையென்றுமுண்டாக
நல்லஅருளுடனே நானிலத்தைக்காத்தருளி ௲௭௨

மேலுங்கலகம் விவகாரமுண்டானால்
சாலவிருதரப்புச் சாக்ஷிகண்மற்றுள்ளதெல்லாம் ௲௭௩

மிக்கானநீதி விளங்கமுறைப்படியே
தக்கநெறிசெலுத்தச் சப்மாஜிஸ்த்ரேட்டுகளும் ௲௭௪

மேலுமந்தநீதி விளக்குவதைமேற்பார்க்க
சாலுமுணர்வுத்தகுந்தடிப்டிமாஜிஸ்த்ரேட்டும் ௲௭௫

பலவுத்யோகஸ்தர் பகர்நெறியும்பார்க்கவல்ல
நலமாயோர்ஜில்லாவை நாடியாள்மாஜிஸ்த்ரேட்டும் ௲௭௬

வாணிபத்தினாலே வரும்விவகாரங்களுக்கு
நாணயத்தினீதி நடுவறிந்துதீர்ப்பதற்காய் ௲௭௭

முக்யமதாகியுள்ள முன்சீபுக்கோர்ட்டுகளும்
மிக்கவதன்மேல் விளங்கியசப்கோர்ட்டுகளும் ௲௭௮

ஜில்லாவுக்கொன்றாய்த் திகழ்சீவிற்கோர்ட்டுகளும்
வல்லவதன்மேல் வகுத்திடுமைக்கோர்ட்டுகளும் ௩௱௭௯

கிரிஷித்தொழிலிற் கிளைத்தும்வரிவாங்குதற்கு
வரிசைக்கணக்கர் வகுத்திடுநாட்டாண்மைகளும் ௩௱௮௰

ரெவின்யூஇன்ஸ்பேக்டர் நிகழ்தாசில்தார்களென்றும்
கவனமுடன்ஜில்லாக் கணஞ்சேர்கலெக்டர்களும் ௩௱௮௧

அனைத்துநகரத்து மசூசிகளுண்டாகாமல்
வனைத்துமுன்சிப்பால் வகுத்தவுத்யோகஸ்தர்களும் ௩௱௮௨

சாலவுரைசெய் தகுந்தவுத்யோகஸ்தர்க்கெலாம்
மேலாய்க்கவர்னர்களும் மிக்ககவர்னர்ஜெனரல்களும் ௩௱௮௩

இன்னும்பலவிதமாய் ஏற்றவுத்யோகஸ்தர்களும்
மன்னுமுலகின் மறுநெறியாலேற்படுத்தி ௩௱௮௪

தமதுதிருப்பெயரித் தாரணியெங்குந்துலங்க
இமையவருமாச்சரிய மெய்தவரசாக்ஷிசெய்து ௩௱௮௫

பற்றலரைவெல்லும் படைகள்பலசேகரித்து
வெற்றிதரற்கேற்ற வெடியுங்கருமருந்தும் ௩௱௮௬

பீரங்கிக்குண்டும் பெருத்தஅவிட்டுகளும்
சாரங்கிவீணைமுதற் றக்கபலவாத்தியங்கள் ௩௱௮௭

வாள்சுரிகைவேல்சூலம் வங்கியெறியீட்டிகத்தி
நீளயில்கள்பின்னும் நிறைந்தபலவாயுதங்கள் ௩௱௮௮

பகையரசர்நெஞ்சம் பயந்துபறைபோற்றுடிக்க
தகைமையுடனே தயவாற்செங்கோல்செலுத்தி ௩௱௮௯

மலைகளையும்மிடித்து வாய்க்கால்களுண்டாக்கி
நிலைமையாயெப்பொழுதும் நீர்வளங்களுண்டாக ௩௱௯௰

தண்ணீர்களிந்தத் தரணியெங்குஞ்செல்லுவதால்
மண்ணுலகிலேரிகுளம் மாறாமல்நீர்பெருக ௩௱௯௧

செந்நெலொடுகன்னன்முதற் செய்யபலவிளைவும்
நன்னலமாயுண்டாக நன்கரசுசெய்நாளில் ௩௱௯௨

சக்கரவர்த்தினியார்தாயாரின் தேகவியோகம்.

விருத்தம்.

பன்னலங்களுமியற் பாருளோர்பெற
நன்னலம்வளர்த்திடு நமதுதாயர்தம்
அன்னையார்விண்ணுல கடைந்ததன்மையை
யிந்நிலத்துணர்வதா யியம்புவாமரோ.

கதை.

சக்கரவர்த்தினியார் தம்மையன்பினுற்பயந்த
தக்கபுகழ்த்தாயார் சரீரசுகமில்லாமல் ௲௯௩

இரண்டுவருட மிருக்குஞ்செயலறிந்து
தெருண்டமகாராணியருஞ் சிந்தைவியாகூலமுற்று ௲௯௪

அன்னையர்க்குவேண அவுடதங்களுங்கொடுத்து
பின்னுமருகே பிரியாமல்வீற்றிருந்து ௲௯௫

பலகாரம்பக்ஷணங்கள் பண்புடனேவேணதெல்லாம்
நலமாய்க்கொடுத்துவெகு நன்மைபெறப்பார்த்துவந்தும் ௲௯௬

எழுபத்தைந்தாக இசைந்தவயதினிலே
குழுவுற்றசுற்றமெல்லாங் கூடியிருக்கையிலே ௲௯௭

ஆயிரத்தெண்ணூற் றருபத்தோராம்வருடம்
சேயுயருமார்ச்சுமதி தேவபதஞ்சேர்ந்திடவே ௲௯௮

நீதியுடன்பூவில் நெறிசெலுத்துமன்னையரும்
மாதுயரங்கொண்டுதங்கள் மாதாவருகிலுற்று ௲௯௯

கல்லுமுருகவுயர் காமரமெல்லாமிரங்க
பல்லுயிர்கள்யாவும் பரிவுடனேநொந்திரங்க ௲௱

துனியுடனேகண்ணீர் சொரிந்தெவருஞ்சோர்ந்திரங்க
கனிவாய்திறந்து கதறியழுகலுற்றார் ௲௱௧

ஈரைந்துதிங்க ளெனைவயிற்றிலேசுமந்து
பாரெல்லாங்கொண்டாடப் பாங்காகப்பெற்றெடுத்து ௲௱௨

அன்பிற்பாலூட்டி யருமைபலபாராட்டி
இன்பமுடனே யெனைவளர்த்தமாதாவே ௲௱௩

பற்பலபாஷைகளும் பாங்காய்ப்படிக்கவைத்து
நற்குணமுநற்செயலு நாளும்போதித்தருளி. ௲௱௪

மணமாலைசூட்டியிந்த மண்டலமுநாளை
குணமாகஎன்னருகிற் கூடஇனிதாயிருந்து ௲௱௫

என்னையிந்தப்பூவி லினிதாயிருக்கவிட்டுப்
பொன்னுலகில்வாழவென்று போயினையோவென்றாயே ௲௱௬

தேவர்மலர்மாரிபெய்து தேவவிமானத்திலுனை
ஆவலுடனேகொண் டவருலகுக்கேகினரோ ௲௱௭

எல்லாஉயிர்களையு மீன்றளித்துச்சேர்த்தருளும்
வல்லோன்பதத்தில் மனமகிழ்ந்துசேர்ந்தனையோ ௲௱௮

நண்பாலெனைவளர்த்த நல்லதிருஅன்னையரோ
மண்பாலினியுனைநான் வந்திடவுங்காண்பேனோ ௲௱௯

தப்பாதசொல்லுடைய தக்கதிருத்தாயாரே
எப்போதினியுனைநா னிவ்வுலகிற்காண்பதுவே ௲௱௰

என்னையன்பினாலே யெடுத்துவளர்த்தகையை
மன்னுமுலகில் மலர்விழியாற்காண்பேனோ ௲௱௰௧

வாவாவென்றென்னை மகிழ்ந்தழைக்குநின்வாயை
தாவாவுலகிலென்று சந்தோஷமாய்க்காண்பேன் ௲௱௰௨

பொன்னேமணியே பொருவில்லாப்பூங்கொடியே
அன்னேயினியுனைநான் ஆவலுடன்காண்பதென்றோ ௲௱௰௩

என்றுபலவாறு யினியசக்ரவர்த்தினியார்
கன்றிமனநொந்து கலங்கியழக்கண்டிருந்தோர் ௲௱௰௪

எல்லோருமெய்தி யினியவசனங்கள்சொல்லி
நல்லசக்ரவர்த்தினியார் நன்மனதைத்தேற்றுவித்து ௲௱௰௫

ஆங்கிலேயர்க்குள்ள அரியமுறைப்படியே
பாங்குளநந்தாயைப் பயந்தருளும்மாதாவை ௲௱௰௬

கல்லறையிற்சேர்த்து கடன்களெல்லாமன்புடனே
வல்லநமதன்னை வளமாய்முடித்ததற்பின் ௲௱௰௭

தனித்திருக்கவேணுமென்று சக்கரவர்த்தினியார்
மனத்தில்நினைத்தபடி வந்திருக்கும்நாளினிலே ௲௱௰௮

ஆல்பர்ட்பிரபுதேகபீடையுற்றது.

விருத்தம்.

பானலின்மொழிநம்மன்னை பண்புடன்மகிழ்நண்பன்
நானிலம்புகழ்தற்கொத்த நற்குணமுயர்ந்தகோமான்
மேனலம்பலவுமுள்ள ஆல்பர்ட்டென்றுரைக்கும்வேந்தன்
தானலமுறநோயுற்ற தன்மையைச்சாற்றலுற்றும்

கதை.

உலகிலெவர்க்கும் உபகாரமேபுரியும்
நலமிகுந்தஆல்பர்ட்டெனும் நல்லபிரபுவுக்கு ௲௱௰௯

அந்தவருடத்தில் அருள்டிசம்பர்மாசமதில்
உந்துஞ்சுரமென் றுரைக்கும்வியாதிகண்டு ௲௱௨௰

சொல்லுமெட்டாந்தெய்தி சுரநோயதிகரிக்க
கொல்லுமீதென்று குறிப்பாய்மனத்துணர்ந்து ௲௱௨௰௧

ஆலீஸ்பெருமாட்டி யாரையருகேயழைத்து
சாலமகிழ்வாகமுன்பு தாமியற்றும்பாடல்களை ௲௱௨௰௨

இன்னரத்தினேடு இளருமிடறிசைத்து
நன்னலமாய்ப்பாடவென்று நல்லதந்தைகூறுதலும் ௲௱௨௰௩

ஆலீஸ்பெருமாட்டி யாரும்மனதுவந்து
தாலுவிசையைத் தகுங்கருவியோடிசைத்து தூாஉச
தமதுதந்தையார்மனதிற் சந்தோஷமுண்டாக
அமைவானபாடல்பல அன்புடனேபாடுதலும் தூாஉரு
ஆல்பர்ட்டெனும்பிரபும் அன்பாற்செவிப்பவர்போல்
கால்கையசையாமற் கண்ணிரண்டுந்தாம்மூடி தூாஉசு
சித்திரமண்டபத்திற் சேர்ந்திலங்குங்கட்டிலிலே
மெத்தையின்மீதில் வெகுநேரஞ்சாய்ந்திருந்தார் தூாஉஎ
சாய்ந்திருந்துபின்னர் தயவாகக்கண்விழித்து
ஏய்ந்ததம்புத்திரியை யின்பமுடன்பார்த்திடலும் தூாஉஅ
ஆலீஸ்பெருமாட்டி யாரும்அருகில்வந்து
சால்பாகவேதமது தந்தையரைப்பார்த்தருளி தூாஉகூ
ஐயாநீரிங்கே அயர்ந்துதுயில்செய்தீரோ
மெய்யாகஎன்பால் விளம்புவீரென்றிடலும் தூாஙய
அம்மாள்நானிங்கே அயர்ந்துதுயில்செய்யவில்லை
செம்மையுடன்ஜேசுவையே சிந்தையன்பினூற்றுதித்தேன் தூாஙக
என்றுமகள்பா லினிமையுடனேயுரைத்து
நன்றிமிகும்பிரபு நாடோறுமப்படியே தூாஙஉ
கடவுளைநோக்கிக் களிப்பாய்ச்செபம்புரிந்து
திடமாய்மனதைச் செலுத்திவரும்போதினிலே தூாஙங

ஆல்பர்ட்பிரபு கடவுளைத் துதித்தது.

விருத்தம்.

ஆல்பர்ட்டென்னும் மரசர்கோன்
மாலிற்சிந்தை மயங்குறுப்
பாலிற்றுய்ய பரத்தினைச்
சால்பிற்கூறிய சாற்றுவாம்.

வேறு.

அலகில்பலபொருளாகிய வசாஞ்சரமுறையும்
உலகெங்கணுமுடலெங்கணு முயிராயுறையிறையே
புலனைந்தொடுபொறியைந்தின் னொற்றுண்மிசைபற்று
நலனைந்திடாவகைதந்தரு ளுதாதிகழ்பாதா.

பொன்பார்நவிவிழியாரெனப் புகன்மூன்றிடைமயக்குந்
துன்போடிடவொருகாலகந் தோன்றுந்தெளிஞானம்

மின்போ லுதித்தொடுங்காவகை மிளிர்சோதியினிருவி
யன்போடுவந்தெனையாண்டரு ளையர்கறுமெய்யா.

பனிபுன் னுனியுறைந்தென்னவிப் பாரிற்பலருய்வு
நனிவெங்கதிரெழநீங்குவ தெனவன்னவர்நைவு
நினதன்பொடுமேனாட்டரு நெறியேபெறுமுயிரை
யெனதன்பொடுதருவேனுவந் தேற்பாய்புவிகாப்பாய்.

கதை.

இன்னும்பலவிசமா யேற்றமுள்ளதேவனையே
நன்னலமதாய்த்துதித்து ராஜர்பிரான்நன்கமர ௲௩௰௪

அந்தவியாதி யதிகரிக்குந்தன்மைகண்டும்
சிந்தைகலங்காமற் றிடமாகவீற்றிருந்தார் ௲௩௰௫

ஒருநாள்வயித்தியரு முற்றருகில்வந்துநின்று
வெருவுறுமிந்நோய்சிலது வேளைசென்றுதீருமென ௲௩௰௬

அந்தமொழிகேட் டரசர்பிரான்சொல்லுகிறார்
இந்தவியாதி யெனைக்கொல்லுநிச்சயமாய் ௲௩௰௭

மரணத்தைப்பற்றி வருத்தமெனக்கொன்றுமில்லை
தருணத்தேதேவன் சரணம்விரும்புகிறேன் ௲௩௰௮

எவ்வேளைதன்னி லிறையோனழைத்தாலும்
அவ்வேளையேசென் றடையவிரும்புகிறேன் ௲௩௰௯

அறிவீனராய்ச்சிலர்க ளாசைவசத்தாலுழன்று
சிறிதேனும்புண்ணியங்கள் செய்யாமல்நாள்கழித்து ௲௪௰

தேவபக்திதன்னைச் சிறிதுமறியாதவராய்
பூவுலகைநீங்கியென்றும் போகாதவர்போல ௲௪௧

வரும்விதியையோராது மாநிலத்தில்வாழ்ந்தவர்கள்
மரணமென்றபோது மனம்வருந்திநோவார்கள் ௲௪௨

கடவுளொடுநெஞ்சங் கலந்தேநான்மேவுவதால்
திடமாயிருப்பனெந்தன் சிந்தைகலங்காதெனவே ௲௪௩

சீர்சேரும்வைத்தியர்க்குச் சிந்தைமகிழ்வாலுரைத்து
பாரோர்புகழும் படிவீற்றிருக்கையிலே ௲௪௪

ஆல்பர்ட்பிரபுவின்தேகவியோகம்.

விருத்தம்.

உலகிலுள்ள வுயிர்களெவற்றிற்கும்
அலகினன்மை யளித்தருளன்புடன்
இலகுமால்பர்ட் டெனும்வள்ளரவர்தம்
முலகினெய்திய தோதலுற்றாமரோ.

கதை.

பதினாலாந்தெய்தி பகர்ந்தசனிவாரத்திலே
மதியாலுயர்ந்திலங்கும் மன்னர்பிரானுடன் தூ ௪௫

அன்புள்ளகண்மணியே ஆனமகாராணியரே
இன்பமுடனென்னருகி லிப்பொழுதேவாருமென தூ ௪௬

சக்கரவர்த்தினியார் தந்நாயகரிடத்தில்
மிக்கவிரைவில்வர மென்றோளின்மேற்சாய்ந்தார் தூ ௪௭

சாய்ந்தகணவர் தமைச்சக்ரவர்த்தினியார்
ஏய்ந்திதோர்நான்வந் திருக்கிறேனென்றதற்கு தூ ௪௮

வார்த்தையொன்றுஞ்சொல்லாமல் மன்னுந்தலையசைத்து
சீர்த்தபுவியாசையற்றுச் சேர்ந்தார்பரமபதம் தூ ௪௯

தந்தையிறந்தவுடன் சார்ந்துமக்களெல்லோருமு
சிந்தைகலங்கித் தியங்கியழுதார்கள் தூ ௫௰

அய்யர்திரேகத்தின்மே லானமைந்தர்போய்வீழ்ந்து
அய்யோகோவென்றே யலறியழுதார்கள் தூ ௫௧

தமதுகணவருயிர் தான்பிரிந்தமாத்திரத்தில்
நமதன்னையாரு நடுங்கிமிகக்கலங்கி தூ ௫௨

மெய்யெல்லாம்வேர்க்க விழியிரண்டும்நீர்ததும்ப
அய்யோகோவென்றே யழுங்கியபையமிட்டு தூ ௫௩

என்னையகனே யிருகண்ணினுண்மணியே
தன்னந்தனியேயெனைத் தாரணியில்விட்டீரோ தூ ௫௪

தாயாரிறந்த தனித்துயரந்தீருமுன்னே
நாயகரேநீருமென்னை நையும்படியகன்றீர் தூ ௫௫

இம்மையிலேசெல்வமெல்லா மெய்தியரசாண்டாலும்
உம்மைப்பிரிந்தினிநா னுற்றதெனலென்னபலன் தூ ௫௬

மனதுக்கிசைந்த மணவாளரேயுமைநான்
இனியிந்தவையகத்தி லெப்போதுகாண்பேனோ தூ ௫௭

மாதரெல்லாம்பார்த்து மடலெழுதும்மார்பழகா
தீதறவெண்கண்ணாற் றிருவழகைக்காண்பதென்றோ தூ ௫௮

பூதலத்துமாந்தரெல்லாம் புண்ணியரென்றேபுகழும்
மாதயையான்மிக்க மகிழ்நரைநான்காண்பதென்றோ தூ ௫௯

தம்முயிர்போற்பிள்ளைகளைச் சந்தோஷமாய்வளர்த்த
செம்மையுள்ளகோவே செகத்திலுமைக்காண்பதென்றோ தூ ௬௰

தப்பாதசொல்லுடையாய் தாரார்மணிப்பர்பா
எப்போதுமைக்கண டைதுதுயர்நீங்குவதோ ௲௱௬௧

அய்யா அய்யாவென் றருமைப்புதல்வரெல்லாம்
நையவழுந்துயரை நானெப்படிச்சகிப்பேன் ௲௱௬௨

வாலைவயதிலென்னை வந்துமணமாலையிட்ட
சீலமுள்ளநாயகனே தேசமதிற்காண்பேனோ ௲௱௬௩

இம்மாநிலத்தி லெழிலா லுயர்ந்துவளர்
அம்மான்மகனேயுமை யன்பாகக்காண்பதென்றோ ௲௱௬௪

அன்பாலுங்நாட்டி லரசுரிமைசெய்யாமல்
என்பாலுவந்துவந்த ஏந்தலேநான்காண்பதென்றோ ௲௱௬௫

என்மனதுக்கொப்ப இனிவாய்நடந்துவந்த
நன்மையுள்ளநாயகனே நானிலத்திற்காண்டதென்றோ ௲௱௬௬

உன்னைப்பிரியேனென் றுண்மையெனக்கோதிவைத்த
மன்னவரேயும்மையினி மாநிலத்திற்காண்பதென்றோ ௲௱௬௭

கண்ணினழகுங் கவின்சேர்முகத்தழகும்
வெண்ணிலவுபோல மிளிர்நகையுங்காண்பேனோ ௲௱௬௮

மதயானையென்ன வழங்குந்திருநடையும்
இதமானகைவீச்சு மெப்போதுகாண்பேனோ ௲௱௬௯

மலர்வாய்திறந்து வயக்கருவியுமிடறும்
நலமாயிசைத்திசைக்கும் நன்மையினிக்காண்பேனோ ௲௱௭௰

பாருலகிலுள்ள பலரும்பயனடைய
சீருடனேபற்பலநூல் செய்தவுமைக்காண்பேனோ ௲௱௭௧

பூவுலகமெச்சும் பொருட்காட்சிசாலைகளும்
ஆவலுடன்செய்த அரசையினிக்காண்பேனோ ௲௱௭௨

மண்ணுலகில்யாரும் மகிழுவதாய்நன்மைசெய்து
விண்ணுலகிலுள்ளோர் விரும்புவதாய்ச்சென்றீரோ ௲௱௭௩

இந்நாட்டிலுள்ளோ ரிசைந்துதினந்தேடுமுமை
பொன்னாட்டிலுள்ளோர் புகழ்ந்தழைத்துப்போனாரோ ௲௱௭௪

பூவுலகத்தோர்க்குப் புகலுகின்றநன்னெறிபோல்
தேவருக்குநல்ல தெளிவுரைக்கச்சென்றீரோ ௲௱௭௫

ஆறேழதாக அமைந்தபருவத்தெனக்கு
கூறரியதுன்பங் கொடுத்தீரோஎன்கோவே ௲௱௭௬

எந்தஅதிசயங்க ளெவ்விடத்திலுற்றாலும்
அந்தஇடந்தனிலே யன்பாயிருவோரும் ௲௱௭௭

கூடியிருந்து குலவிமகிழ்வாய்ப்பார்ப்போம்
வாடித்தனித்து மனம்நொந்திருப்பேனோ ௲௱௭௮

சோடிபிரியாத சொகுசுடைய அன்றிலைப்போல்
நாடியிருவோரும் நலமாகவாழ்ந்தோமே ௲௱௭௯

சோடிழந்த அன்றிலைப்போற் றுன்பமுடனேவருந்தி
வாடியிருக்கத்தனியே வைத்துவிட்டுப்போனீரே ௲௱௮௰

இக்காலத்தும்மை யிழந்துவருந்தியநான்
எக்காலங்கண்டிவ் விடர்கடலைவிட்டகல்வேன் ௲௱௮௧

என்னுயிரேயென்பொருளே யென்னழகேயென்னறிவே
நன்னிலையேநாயகமே நானினிமேற்காண்பேனோ ௲௱௮௨

தன்னாயகரையில்லாத் தையலரிப்பூவுலகில்
மன்னுதலையில்லாத மாந்தருக்குநேராமே ௲௱௮௩

தாவிலுயர்தெய்வந் தவம்பொறைசெல்வங்குணங்கள்
ஆவியுந்தன்னாயகரே யல்லதுமற்றில்லையென்பர் ௲௱௮௪

ஆனதினாலும்மை யவனிதனில்நான்பிரிந்து
மேனலமாய்வாழ விரும்புவனோவென்கோவே ௲௱௮௫

உம்மைநினைந்துநினைந் துள்ளுருகிவாடுமனம்
செம்மையுடனெனக்குத் தேறுவதுமெந்தவிதம் ௲௱௮௬

தேறும்படியலர்கள் சிற்சின்மொழிகூறிடினும்
மாறுமோவென்றுயரம் வாய்த்தபுகழ்நாயகனே ௲௱௮௭

பெருமையொன்றுமின்றியிந்தப் பேருலகமீதிலென்னை
ஒருமையில்விட்டேக உமக்குமனம்வந்ததுவோ ௲௱௮௮

பொன்னேமரகதமே பொற்புடையமாணிக்கமே
என்னேயநாயகமே யாதினியான்செய்வேனே ௲௱௮௯

கற்கண்டேபாகே கனிந்தகனியின்சுவையே
ஏற்கொண்டநாயகமே யாதினியான்செய்வேனே ௲௱௯௰

தெள்ளமிர்தேதேனேயென் சிந்தைக்கினிவான
வள்ளலேயும்மை மறந்தெப்படியிருப்பேன் ௲௱௯௧

என்றுசக்ரவர்த்தினியா ரேங்கியழுதிரங்க
நின்றபெரியோர்கள் நிறைமலர்க்கண் ணீர்துடைத்து ௲௱௯௨

அன்னையரோயிவ்வுலகை யாதரிக்குநாயகமே
நன்னலத்தின்மிக்குமது நண்புடையநாயகனார் ௲௱௯௩

இவ்வுலகிலுள்ளவருக் கேற்றநன்மையேபுரிந்து
செவ்வையுடனேகவலை தீர்ந்திருந்தார்தேவுலகில் ௲௱௯௪

துன்பமுடைய இந்தத் தொல்லுலகைவிட்டகன்று
நன்மையுள்ள தேவபத நன்கடைந்தாருங்கணவர் ௲௱௯௫

தேவபதமுற்றவர்க்காய்ச் சிந்தைமிகநொந்திரங்கி
ஆவலுடனே யழுததனாலென்னபயன் ௲௱௯௬

நீருமிந்தப்பூவுலகில் நீடுநன்மையேபுரிந்தால்
சீருடையபொன்னுலகிற் சேர்வீருந்நாயகன்பால் ௲௱௯௭

ஆனதினாலேயும் அகத்திற்றுயரகன்று
மேனலமாய்ச்செய்யும் விதமுடிக்கவேண்டுமென்று ௲௱௯௮

பற்பல்வசனங்கள் பகர்ந்துமனதைத்தேற்ற
நற்குணத்தினாற்சிறந்த நாயகஞ்சற்றேதேறி ௲௱௯௯

அலறியழும்புத்திரரை யன்பாகவாயமர்த்தி
மலர்விழித்தம்புத்திரிமார் வாடாமல்வாயமர்த்தி ௲௨௱

நமதன்னையாரும் நலத்தாலுயர்ந்துவளர்
தமதுசுற்றமுற்றவருஞ் சார்ந்துதுயர்மாற்றுவித்து ௲௨௱௧

பாங்காகத்தாமியற்றிப் பாடல்செய்யுமண்டபத்தின்
பாங்காயிலங்கும் படியுடையமண்டபத்தில் ௲௨௱௨

தமதுமணவாளர் தமையங்கெடுத்தடக்கி
அமையுஞ்சடங்கனைத்து மன்பாய்முடித்தார்கள் ௲௨௱௩

கணவர்தமைப்பிரிந்து கஷ்டமுற்றாரானாலும்
இணையில்லாச்செங்கோ லியல்பாய்நடத்திவந்தார் ௲௨௱௪

சக்கரவர்த்தினியார் நிலக்கரிக்கேணியில்
விழுந்தவர்களின் குடும்பத்தாரைக்காப்பாற்றியது.

விருத்தம்.

திங்கண்மும் மாரிபெய்யத் திருவளம்பெருகநாளும்
அங்கண்மா ஞாலமெல்லா மருளொடு புரக்குநாளிற்
றங்கணாட்டுள்ளசில்லோர் தாழ்கரிக்குழியில்வீய
அங்கவர்குடும்பத்தாருக் கருள்செய்தவிதமுஞ்சொல்வாம்.

கதை.

உண்மைக்கணவனிறந் தோர்மாஸ்தைக்குள்ளாக
அண்மிநிலக்கரியை யங்கெடுக்கச்சென்றவர்கள் ௲௨௱௫

சுரங்கமிடியத் தொழில்செய்துகொண்டிருந்த
இருநூறுபேரு மிறந்தாரதுகேட்டு ௲௨௱௬

அவர்கண்மனைவா ழரிவையரெல்லாமழுது
புவிமேல்வருந்திப் புலம்புவதெல்லாங்கேட்டு ௲௨௱௭

நமதன்னையாருமிக்க நண்புடனேயாங்கவர்க்கு
தமதுவியாகூலந் தனைத்தெரிவித்தார்பிறகு தூ உ௱அ

சந்தோசமாயவர்கள் தாரணியில்வாழ்வதற்கு
சிந்தையுவந்து சிறந்தசக்ரவர்த்தினியார் தூ உ௱கூ

மூவாயிரம்ரூபாய் முற்றுமகிழ்வாய்க்கொடுத்து
யாவருக்குமன்பா லருளிவாழ்நாளினிலே தூ உ௱ய

ஏழாவது எட்வார்ட் வேல்ஸ் இளவரசர்

திருக்கல்யாணமும் மக்கட்பேறும்

விருத்தம்.

நன்னெறிமுறைதவாம னமதரசியர்க்குப்பின்னு
ளிங்கிலமுழுதுங்காக்கு மெழிலுடையெட்வார்ட்டென்னு
மன்னவர்பிரானுக்கன்பான் மணம்புரிவித்தவாறுந்
தங்கிகரில்லாமைந்தர் தமைப்பெற்றவிதமுஞ்சொல்வாம்.

கதை.

தகவாலுயர்ந்தவெற்றி சார்வேல்ஸிளவரசர்
சகலகலைவிதங்கள் சந்தோஷமாய்ப்படித்து தூ உகக

எடின்பரோபட்டணத்தி லேற்றகல்விச்சாலையிலும்
கடிகமழ்தார்மார்பர்கொஞ்சங் காலம்படித்ததற்பின் தூ உகஉ

மற்றும்பலவாய் வழங்குகல்விச்சாலைகளில்
வெற்றியுடன்பன்னூல் விளங்கப்படித்ததற்பின் தூ உகங

ஆயிரத்தெண்ணூற் றறுபத்துமூன்றுண்டில்
தூயபுகழ்மார்ச்சுமதி தோன்றுபத்தாந்தெய்தியன்று தூ உகச

டென்மார்க்கென்றோதுகின்ற தேசமினிதாளுகின்ற
மன்னன்புரிந்த மகாதவத்தாற்பெற்றபுத்ரி தூ உக௫

வண்டினங்கள்மொய்க்கும் மலர்சேர்நறுங்குழலும்
மண்டலத்தின்மீது விளங்குபிறைபோனுதலும் தூ உகசா

விற்போல்வளைந்து விளங்கும்புருவங்களும்
நற்குவளையென்ன நவிலுமிருவிழியும் தூ உகஎ

குமிளமலர்போற் குவிந்துயர்ந்தமூக்கழகும்
தமிழ்முனிவனுண்ட ஜலதிதுவர்போலிதழும் தூ உகஅ

முல்லையரும்பென்ன முகிழ்நகைசேர்பல்லழகும்
பல்விதஞ்சேர்கோவைப் பணிசேர்கழுத்தழகும் தூ உககூ

பத்தரைமாத்துள்ள பசும்பொன்னிறத்தழகும்
சித்திரங்கட்கொப்பாய்த் திகழுகின்றபேரழகும் தூ உஉய

எவ்வுலகமாதருக்கு மெய்தாதநல்லழகும்
பவ்வவமிர்தென்னப் பகருமொழியழகும் தூ உஉக

தேவவுலகிற் சிறந்தவனப்பாலுயர்ந்த
பாவையருநல்லழகிற் பாங்கியர்க்குமொவ்வார்கள் தூ உஉஉ

மாதர்சிரத்தணியும் மாசில்மணியனைய
மாதரசியென்னவிந்த மாநிலமெல்லாம்புகழும் தூ உஉங

இயல்அலேக்சாண்ட்ரா இளவரசியாரையிக்க
தயவாலிளவரசர் சந்தோஷமாய்மணந்து தூ உஉச

அலர்ந்தமலரால் அலங்கரித்தபொற்றேரில்
இலங்கமகிழ்வா லிருவோர்களுமிருந்து தூ உஉரு

வீதிவலமாக விளங்கவரும்போதினிலே
மாதரசியாரும் மகிழ்ந்தொருதேர்மீதில்வர தூ உஉசு

சேனாபதிகளொடு தேசமன்னர்சூழ்ந்துவர
தானாபதிகள் தகுபடைஞர்சூழ்ந்துவர தூ உஉஎ

பலவிதவாத்தியங்கள் பாங்காய்முழங்கிவர
பலவிதவாணங்கள் பரிதியொளிபோல்விளங்க தூ உஉஅ

நன்னகரமாந்தரொடு நாட்டிலுள்ளோரெல்லோரும்
கன்னன்மதனென்னக் கவின்கண்டுளமகிழ்ந்து தூ உஉகூ

மதனன்ரதியுமென வார்த்தைசொல்வார்கண்டதில்லை
இதமானஇந்த இருவர்களேபோலுமென்பார் தூ உஙய

இளவரசர்நல்லழகுக் கிவ்வரசியல்லாது
வளமானபூவுலகில் மாதர்கள்வேறில்லையென்பார் தூ உஙக

இளவரசிபேரழகுக் கிவ்வரசரல்லாமல்
உளதோயிப்பூவுலகி லுற்றசிலமன்னரென்பார் தூ உஙஉ

என்னப்பலவாறெழிலாகப்பார்த்துநின்ற
கன்னன்மொழிமாதர் கனிவாயுரைத்திடவே தூ உஙங

வீதிவலஞ்சென்று வியப்புடையமாளிகையில்
மாதரசியாரு மகிழ்நருமேபோய்ப்புகுந்து தூ உஙச

மனமாட்சியாக மகிழ்ச்சியுடனேயிருவர்
கனிவாய்மனது கலந்துவாழ்நாளினிலே தூ உஙரு

ஆயிரத்தெண்ணூற் றறுபத்துநாலாண்டில்
தூயஜெனவரியில் சொல்லுமெட்டாந்தெய்தியன்று தூ உஙசு

ஆல்பர்ட்டுவிக்டர் அழகாகத்தோன்றுதலும்
தாலமிசையெவருஞ் சந்தோஷமுற்றார்கள் தூ உஙஎ

ஆயிரத்தினெண்ணூற் றருபத்தைந்தாம்வருடம்
மேயஜூன்மாசம் விளங்கியமூன்றாந்திகதி ௲௨௩௮

ஜியார்ஜ்ப்பிரேடிரிக் கெனுஞ்சிறந்தபுத்திரரும்
தயவாகப்பூவுலகிற் றான்வந்துதோன்றினரே ௲௨௩௯

ஆயிரத்தினெண்ணூற் றறுபத்தேழாம்வருடம்
சேயுயரும்பெப்ருவரி சேரிருபதாந்திகதி ௲௨௪௰

லூயிஸாவிக்டோரியா நவலரிதாய்த்தோன்றுதலும்
தாயரொடுதந்தையருஞ் சந்தோசமுற்றார்கள் ௲௨௪௧

ஆயிரத்தினெண்ணூற் றறுபத்தெட்டாம்வருடம்
தூயதொருஜூலைமதி தோன்றியவாறாந்திகதி ௲௨௪௨

விக்டோர்யா அலெக்சான்ட்ரா மேதினியிற்றோன்றுதலும்
தக்கசுற்றமுற்றவருஞ் சந்தோஷமானார்கள் ௲௨௪௩

ஆயிரத்தெண்ணூற்றறுபத் தொன்பதாம்ஆண்டினிலே
ஆயநவம்பரிரு பத்தாறாந்தெய்திதனில் ௲௨௪௪

மாட்சார்லற்றென்னும் மகவும்பிறந்திடவே
நாட்டிலுள்ளோரெல்லாரும் நன்றாகக்கொண்டாட ௲௨௪௫

இனிதானமக்களோடும் ஏந்தலிளவரசர்
மனதுமகிழ்ச்சியுடன் வாழுகின்றநாளினிலே ௲௨௪௬

ஆயிரத்தெண்ணூற்றெழுப தேற்றவிரண்டாம்வருடம்
தூயவிளவரசர் தூரவொருதேசத்திலே ௲௨௪௭

சென்றதொழில்முற்றித் திரும்பிவரும்போதினிலே
வென்றியிளவரசர் வேறிரண்டுபேர்களுக்கும் ௲௨௪௮

விஷசுரநோய்கண்டு மிகவும்வருத்துதலும்
விஷசுரத்தால்மற்றிரண்டு வீரர்களுமாய்ந்திடவே ௲௨௪௯

இளவரசர்நோயால் இடைந்துவருந்துவதை
வளஞ்சேரவர்தம் மனைவியரும்பிள்ளைகளும் ௲௨௫௰

தீலீஸ்பெருமாட்டி யாருங்கிலேசமுடன்
சாலவவர்க்குத் தகுமருந்தெல்லாங்கொடுத்து ௲௨௫௧

அன்பாகப்பார்த்தார்கள் அன்னையருமங்குவந்து
துன்பம்பெரிதாகச் சோர்ந்துதினந்தினமும் ௲௨௫௨

வந்துவந்துபார்த்திடலு மாநிலத்தோரெல்லோரும்
இந்தஇளவரசர்க் கிந்நோய்விலகவென்று ௲௨௫௩

ஆவலுடனே யவர்மேற்பொருந்துமன்பால்
தேவனையெப்போதுஞ் செபஞ்செய்துவந்தார்கள் ௲௨௫௪

கடவுள்கிருபையினுங் காசினியைக்காத்தருளும்
திடமுள்ளமன்னர்பிரான் சீக்ககன்றுசொஸ்தமதாய் ௲௨௫௫

தங்கள்முன்னோர்செய்த தவத்தின்வலுத்தாலும்
இங்கோாம்யாரும் இயற்றும்நலத்தாலும் ௲௨௫௬

இளவரசர்நோய்தீர்ந் திலங்கும்வடிவுடனே
வளமுந்திடமு மகிழ்வும் அடைந்திருந்தார் ௲௨௫௭

வேல்ஸ்இளவரசர் இந்தியாதேசத்தில் விஜயஞ்செய்தது.

விருத்தம்.

இப்புவிமதிக்கும்வேந்தர் யாவர்க்குமிறைவரான
வெப்பகலுளத்துப்பிரின்ஸா வேல்ஸ்இளவரசரென்னுஞ்
செப்பரும்புகழான்மிக்க தீரனிந்தியாவின்மேவி
யொப்பறுமகிழ்ச்சிநல்கியுற்றவாறுரைத்தல்செய்வாம்.

கதை.

இளவரசன்பாக இந்தியாவைப்பார்க்கவென்று
தளகர்த்தரோடுந் தகுந்தபடைவீரரொடும் ௲௨௫௮

ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தைந்தாருமாண்டுகளில்
தாயரிடமுத்தரவுஞ் சந்தோஷமாய்வாங்கி ௲௨௫௯

இந்தியாநாட்டுக் கிளவரசர்வந்தவுடன்
சந்தோஷமாகவிந்தத் தாரணியில்வாழுகின்ற ௲௨௬௰

பலபலவேந்தர்களும் பண்பினுயர்வர்த்தகரும்
வலமாய்க்கிரிஷி வகுப்போர்மற்றுள்ளவரும் ௲௨௬௧

ராஜவரிசையுடன் நன்கினெதிர்சென்றுகண்டு
தேசத்தவருவந்து செய்யுமுபசாரமெல்லாம் ௲௨௬௨

மனமகிழ்வாலேற்று வயமிகுந்தமன்னர்பிரான்
நனிசிறையிலுற்று நலிவோர்தமைவிடுத்து ௲௨௬௩

வறியோர்மகிழ வழங்கிப்பலபொருளும்
அறிவாலுயர்ந்தோ ரனைவர்களுங்கொண்டாட ௲௨௬௪

இங்கிலாந்துநாட்டுக் கினிமையுடன்மீண்டேகி
எங்கும்புகழ்துலங்க இன்பமுடன்வீற்றிருந்தார் ௲௨௬௫

இளவரசர்புத்திரரி லேற்றமுதற்புத்திரர்க்கு
வளமைமிகுந்தசக்ர வர்த்தினியாரங்கொருநாள் ௲௨௬௬

நல்கும்வரிசைதனில் நன்குடனோர்காகிதத்தில்
வல்லநமதம்மை வரைந்திருந்ததென்னவென்றால் ௲௨௬௭

நீதிநெறியுடனே நீயுமுன்னோர்க்கொப்பாக
ஏதிலரையேழைகளை யெப்போதுமாதரித்து ௲௨௬௮

எல்லோருமுன்னை யினிமையுடனேபுகழ்ந்து
நல்லமகாராஜனென்ன நானிலத்திற்பேரெடுத்தால் ௲௨௬௯

நீடவனிதன்னில் நெடுங்காலந்தந்தையைப்போல்
வாடாதமாலையுடன் வாழ்ந்திருப்பாயென்றெழுதி ௲௨௭௰

இருந்தவிதத்தை யிளவரசர்புத்திரரும்
திருந்தமனத்துட்படித்துச் சிந்தைமகிழ்வாயிருந்தார் ௲௨௭௧

சாந்திரிங்ஹாமென்னும் தகுதியுள்ளபூஸ்திதியை
ஏந்தலிளவரச ரின்பமுடன்வாங்கியதில் ௲௨௭௨

மாடாடுவாங்கி வளர்த்தந்தப்பூஸ்திதியை
தேடரியநல்விருத்தி செய்துமகிழ்ச்சியுடன் ௲௨௭௩

சர்வதேசப்பொருளின் சாலையொன்றுமுண்டாக்கி
கர்வமில்லாமற் கருணையுடன்வாழ்நாளில் ௲௨௭௪

இளவரசர்குமாரர்கள் பலதேசங்களில் விஜயஞ் செய்துவந்ததும் மூத்தமகன் தேகவியோகமும்

விருத்தம்.

மன்னியபுகழாலோங்கி வளரிளவரசரன்பார்
நன்னலஞ்சிறந்தமைந்தர் நாடெலாம்பார்த்துமீண்டு
தந்நகரடைந்தபின்னர் தகுதிசேர்முதன்மைமைந்தர்
பொன்னகரரசுசெய்யப் போனதும்புகலலுற்றும்.

கதை.

இளவரசர்தம்முடைய வேற்றமிகும்பிள்ளைகளை
களங்கமில்லாதுபல கல்விகளிற்றேர்ச்சிசெய்து ௲௨௭௫

வாலிபத்திலேசகல மாநகர்களுள்ளதெல்லாம்
சாலவிவர்பார்வையிட்டுத் தான்வருதனன்மையென்று ௲௨௭௬

மைந்தரிருவரையும் வாத்தியார்தன்னுடனும்
சந்தோஷமாகவொரு சண்டைக்கப்பன்மீதேற்றி ௲௨௭௭

கப்பலிலேயுள்ள கனத்தவுத்யோகஸ்தரைப்போல்
எப்பொழுதும்வேலைகளை யின்பமுடனேபார்த்து ௲௨௭௮

வாருங்களென்றுரைத்து மைந்தரிருவரையும்
சீராயனுப்பிவைத்தார் செய்யஇளவரசர் ௲௨௭௯

நல்லதென்றுசொல்லி நலஞ்சிறந்தமைந்தர்களும்
வல்லகப்பல்தன்னில் மயங்காமல்வீற்றிருந்து ௲௨௮௰

எந்தத்துறைமுகத்து மேற்றகப்பல்சேர்ந்தவுடன்
சிந்தைமகிழ்ந்திருவர் சேர்ந்தவ்விடத்திறங்கி ௲௨௮௧

நாட்டுவளங்கள நகர்வளங்களும்பார்த்து
தாஷ்டீகர்பின்னுந் தருக்கப்பல்மீதிலுற்று ௲௨௮௨

வடமிணைக்கும்வேலைமுதல் மற்றுமுள்ளவேலைகளும்
திடமாகச்செய்து தினமுமகிழ்ந்திருப்பார் ௲௨௮௩

ஆயிரத்தெண்ணூற்றுத்தொண்ணூறானவருடத்தினிலே
தூயஇந்தியாவென்னத் துலங்குமிந்நாட்டினுக்கு ௲௨௮௪

சால்பானஇவ்விருவர் தங்களிலேமுன்னுதித்த
ஆல்பர்ட்டுவிக்றறொனு மன்புமிகுநற்பிரபு ௲௨௮௫

வந்திந்தத்தேயமதை வண்மையுடன்பார்த்தருளி
சிந்தைமகிழ்ந்திங்கிலாந்து தேசந்தனிற்சேர்ந்து ௲௨௮௬

கிளரான்பிரபாய்க் கிளர்ந்தபட்டப்பேர்படைத்து
வளமானதங்கடிரு மாநகரில்வாழ்நாளில் ௲௨௮௭

மேயென்னும்பேரால் விளங்குபெருமாட்டியை
தூயவிவாகஞ் சொகுசாய்முடிக்கவென்று ௲௨௮௮

சகலவரிசைகளுந் தந்தனுப்பும்போதினிலே
சுகமில்லாதேயிருந்து சொஸ்தமடையாமல் ௲௨௮௯

ஆயிரத்தெண்ணூற்றுத்தொண்ணூறானவிரண்டாம்வருடம்
தீயஜெனவரியிற் சேரீரேழ்தெய்தியன்று ௲௨௯௰

தாலமிசையுள்ள சகலர்களுநொந்திரங்க
ஆல்பர்ட்டுவிக்றர் அடைந்தார்பரமபதம் ௲௨௯௧

புத்திரர்சேய்விண்ணிற் புகுந்தாரெனக்கேட்டு
சித்தங்கலங்கித் திடுக்கிட்டவசமுற்று ௲௨௯௨

நமதுசக்ரவர்த்தினியார் நாடிவிரைவாகவந்து
தமதுதிருப்பேரன் றனைப்பார்த்தழுகலுற்றார் ௲௨௯௩

இந்தப்புவியரசை யேற்றமுள்ளதுந்தையர்பின்
சிந்தைமகிழ்ந்தரசு செய்வாயெனநினைந்தேன் ௲௨௯௪

எல்லோருமிங்கிருக்க இன்பமுடனிவ்வுலகை
நல்லகோலோச்சிவளர் நாயகமேசென்றனையோ ௲௨௯௫

மண்ணுலகிலன்பான் மகிழ்ந்தரசுசெய்வதன்முன்
விண்ணுலகையாள விரும்பிநடந்தனையோ ௲௨௯௬

நின்னழகும்வல்லபமு நீதிநெறியும்பார்த்தே
என்மனதிற்சந்தோஷ மெய்தியிருந்தேனே ௲௨௯௭

முறையாலேயிந்த முதுநிலத்தையாளாமல்
இறையோன்பதமடைய இச்சைவைத்துச்சென்றாயோ ௲௨௯௮

இம்பருலகை யினிதாளுமுன்னமுனை
தம்பதத்திலந்தத் தயாபரன்சேர்த்தாண்டாரோ ௲௨௯௯

கரும்பின்சுவையேயென் கண்மணியேரத்தினமே
விரும்பியினியுனைநான் மேதினியிற்காண்பதென்றோ ௲௩௱

என்றன்முதற்புத்திரனுக் கேற்றமுதற்புத்திரனே
உன்றனைநான்கண்ணா லுலகுதனிற்காண்பேனோ ௲௩௱௧

என்றுமனநொந் தெமதன்னையாரழலும்
கன்றிமற்றுள்ளோருங் கலங்கியழுதார்கள் ௲௩௱௨

புலம்பியழுமவரைப் போதகர்கள்பாதிரிமார்
வலஞ்செறியுமந்திரிகள் மற்றுமுள்ளமேலோரும் ௲௩௱௩

வந்துமிகத்தேற்றி வசனம்பலவுரைக்க
சிந்தைத்துயரகன்று செப்பமுடனெல்லோரும் ௲௩௱௪

அடைந்தோர்தமையடக்கி யானசடங்கியற்றி
திடஞ்சேரவர்க்கிளைய ஜியார்ஜ்ஜென்னும்பிரபுவுக்கு ௲௩௱௫

மேபெருமாட்டியரை மேன்மையுடனேமணந்து
மாபெறுமிங்கிலாந்தில் மகிழ்வாகவீற்றிருந்தார் ௲௩௱௬

ஆலீஸ்பெருமாட்டியார் திருக்கல்யாணமும் மக்கட்பேறும்.

விருத்தம்.

மண்ணுலகெங்குஞ்சீர்த்தி மல்குமம்மிறைவிபெற்ற
பெண்மக்கள்புதல்வர்க்கெல்லாம் பிறங்கியமணங்கள்செய்து
தண்ணளியுடனேமிக்க தனயர்ப்பெற்றுய்யநீதிக்
கண்ணகன்ஞாலங்காத்த விதத்தினைக்கழறலுற்றாம்.

கதை.

கல்விநலத்தாலுங் கருணைவிசுவாசத்திலும்
நல்லொழுக்கத்தாலு நலத்தாலுமேசிறந்த ௲௩௱௭

ஆலீஸ்பெருமாட்டி யாருமனதன்பாக
சாலும்ஹெஸிநாட்டுத் தக்கபிரபுதனை ௲௩௱௮

ஆயிரத்தெண்ணூற்றறுப தானவிரண்டாம்வருடம்
சேயுயரும்ஜூலைமதி சேர்ந்தமுதற்றேதியிலே ௲௩௱௯

மங்களமதாக மகிழ்ந்துமணமாலையிட்டே
எங்கும்புகழ இனிமையுடன்வாழ்நாளில். தூ௩௰

ஆறுகுழந்தைகளை யன்பாகப்பெற்றெடுத்து
கூறரியவாழ்விற் குவலயத்திலேவாழ்ந்து தூ௩௧௧

நாற்பத்தாறாக நடக்கும்வயதினிலே
ஏற்பட்டநாண்முடிவா லேற்றபெருமாட்டியரும் தூ௩௧௨

இவ்வுலகப்பற்றற் றிறையோன்பதமடைந்தார்
செவ்வையுள்ளபிள்ளைகளிற் சென்றாரிருவர்மற்றை தூ௩௧௩

நாலுகுழந்தைகளும் நாயகனுமங்கிருந்து
மேலானநன்மை விளையவரசாண்டிருந்தார் தூ௩௧௪

எடின்பரோபிரபுவாகிய ஆல்பர்ட் இளவரசர் திருக்கலியாணமும் மக்கட்பேறும்.

ஆல்பர்ட்டென்றோதும் அரியஇளவரசர்
வேலைமிசைக்கப்பல் வியப்பாயென்றும்நடத்தி தூ௩௧௫

மத்தியதரைக்கடலில் வன்மையொடுசெல்லுகின்ற
சித்திரஞ்சேர்கப்பல்களிற் சேர்ந்தபடைவீரருக்கு தூ௩௧௬

தளகர்த்தராகவெகு தாஷ்டீகமாயிருந்து
வளமிகுந்தஇந்தியாவை வாகுடனேபார்க்கவென்று தூ௩௧௭

ஆயிரத்தினெண்ணூற் றறுபத்தொன்பான்வருடம்
தூயபுகழாற் றுலங்கும்புருஷியர்தேச தூ௩௧௮

சக்கரவர்த்தி தவத்தாற்பிறந்தபுத்ரி
மிக்கசிறப்புடைய மேரிபெருமாட்டியரை தூ௩௧௯

மண்டலத்தோரெல்லாம் மகிழமணம்புரிந்து
கொண்டின்பமாகக் குலாவிவளர்நாளினிலே தூ௩௨௰

நாலுபெண்பிள்ளைகளும் நல்லவொருமைந்தரையும்
தாலமிசைபெற்றுவெகு சந்தோஷமாயிருந்தார் தூ௩௨௧

ஹெலினப்பெருமாட்டியார் திருக்கலியாணமும் மக்கட்பேறும்.

மலியும்புகழ்படைத்த மாநிலத்தோர்கொண்டாட
ஹெலினவெனப்பே ரிசைந்தபெருமாட்டியரும் தூ௩௨௨

ஆகஸ்ற்றன்பார்க்கென் றறையுமுயர்பட்டணத்தின்
வாகுற்றவேந்தன் மனமகிழ்ந்துபெற்றருளும் தூ௩௨௩

கிறிஸ்ற்றியனென்னக் கிளத்தும்பிரபுதனை
பரிவாய்மணம்புரிந்து பாக்யவதியாய்வாழ்ந்து தூ௩௨௪

இருமைந்தரோடு மிரண்டுகுமாரத்தியரை
தெருளாகப்பெற்றுச் சிறப்புடனேவாழ்ந்திருந்தார் ௲௩௨௫

லூவீஸ்பெருமாட்டியார் திருக்கல்யாணம்.

ஆர்கையில்ப்பிரபு அருமையுடனேபயந்த
லோர்ன்பிரபுவுக்கு லூவீஸ்பெருமாட்டியரை ௲௩௨௬

ஆயிரத்தினெண் ணூற் றெழுபத்தொராம்வருடம்
தூயமணஞ்செய்து சுகமாகவாழ்ந்திருந்தார் ௲௩௨௭

கானுட்பிரபுவாகிய ஆர்தர் இளவரசர்திருக்கல்யாணமு மக்கட்பேறும்.

ஆனகானுட்பிரபுவெனும் ஆர்தர்இளவரசர்
சேனைகளுக்கெல்லாஞ் சிறந்திலங்கும்போர்வீரர் ௲௩௨௮

ஆயிரத்தெண் ணூற்றெழுபத் தொன்பதாமாண்டினிலே
ஏயபுருஷியா இளவரசியாய்விளங்கும் ௲௩௨௯

பேரழகார்லூவீஸ் பெருமாட் டியாரையன்பால்
சீரார்மணம்புரிந்து சிந்தைசந்தோசமுடன் ௲௩௩௰

இரண்டுபுத்ரிகளுடன் ஏற்றவொருமைந்தனையும்
திரண்டபுயத்தர் சிறப்பாகவேபயந்து ௲௩௩௧

சிலகாலம்பம்பாயின் சேனைக்கதிபதியாய்
நலமாயிருந்துலண்டன் நன்னகரில்மேவுகின்றார் ௲௩௩௨

ஆல்பானிப்பிரபுவாகிய லியோப்போல்டு இளவரசர்திருக்கல்யாணமு மக்கட்பேறும்.

அன்பாலுயர்ந்திலங்கும் ஆல்பானிப்பிரபுவுக்கே
இன்பாகவால்டேக் எனும்ஹெலினவம்மைதனை ௲௩௩௩

ஆயிரத்தெண் ணூற்றினெண்பா னுலாம்வருடத்தில்
தூயமணஞ்செய்தோர் சுபுத்திர னும்புத்திரியும் ௲௩௩௪

பெற்றெண்பானலாண்டிற் பேருலகத்தாசைவிட்டு
குற்றமற்றவிண்ணுலகிற் கோவேந்தரெய்தினரே ௲௩௩௫

பியாற்றிரிஸ்பெருமாட்டியார் திருக்கல்யாணம்.

சீருயர்நம்மன்னையர்க்குச் செல்வவொன்பதாங்குழந்தை
பேரழகுவாய்ந்த பியாற்றிரிஸ்பெருமாட்டி. ௲௩௩௬

இருபத்தெட்டாக இலங்கும்வயதுமட்டும்
பரிவுடையஅன்னையர்க்குப் பாங்கிற்றுணையாக ௲௩௩௭

வீற்றிருக்குநாளில் விளங்குகின்றநற்புகழால்
நாற்றிசையினுஞ்சிறந்த் நற்பாற்றன்பேர்க்கெனவே ௲௩௩௮

ஏற்றநகர்க்கரசாம் ஹென்ரிப்பிரபுதன்னை
தேற்றமுடன்மணந்து தேசமெங்குங்கொண்டாட ௲௩௩௯

தமதன்னையாரருகே தாமுந்தந்நாயகனும்
அமைவாகநாளும் அகமகிழ்ந்துவீற்றிருந்தார் ௲௩௪௰

சக்கரவர்த்தினியார் குணாதியசங்களை
பிரஞ்சுதேசத்தார் புகழ்ந்தது.

விருத்தம்.

தரம்பிரிதின்றியித் தரணியெங்கணும்
வரம்பறுநன்மைகள் வளர்க்குமன்னையைப்
பிரஞ்சுதேசத்தவர் புகழ்ந்துபேசிய
அரும்பெறன்மகத்துவ மறைகுவாமரோ.

கதை.

குடியரசுகொண்டு குணத்தாலுயர்ச்சிபெற
படிபுகழவாழும் பயன்மிகுந்தபிரஞ்சியெனும் ௲௩௪௧

நாட்டிலுள்ளோரெல்லாம் நமதுசக்ரவர்த்தினியார்
வாட்டமில்லாச்செங்கோன் மநுநீதியையுணர்ந்து ௲௩௪௨

இல்லறவாழ்க்கையிலு மேற்றரசுசெய்வதிலும்
நல்லசக்ரவர்த்தினிபோல் நாட்டிலெங்குங்கண்டதில்லை ௲௩௪௩

நாங்கண்டதில்லை நலமாயெந்நாட்டினிலும்
ஓங்கியமுன்னூல்களுரைத்தமுறைப்படியே ௲௩௪௪

இல்லறத்தையென்று மிலங்கும்படிநிறுத்தி
நல்லறத்தைநாளுமிந்த நாட்டிற்பரவவைத்து ௲௩௪௫

தங்கணவரிந்தத் தலத்தாசைநீத்ததற்பின்
பொங்கும்பணிகள்பல பூண்டழகுதேடாமல் ௲௩௪௬

கறுப்புத்துகிலையன்றிக் கண்டபலவாடைகளை
வெறுத்துச்சுகத்தில் விருப்பமொன்றுமில்லாமல் ௲௩௪௭

தம்முயிர்போலெவ்வுயிருந் தாங்காத்தருள்புரிந்து
செம்மையுடனிந்தச் செகதலத்தையாளுவதால் ௲௩௪௮

இந்தஅரசியர்போ லெவ்விடத்துமில்லையென்று
சந்தோஷமாகவவர் சாற்றும்படிவாழ்ந்தார் ௲௩௪௯

சக்கரவர்த்தினியார் தக்கமனுநூற்படியே
திக்கெல்லாம்போற்றச் சிறப்புடனேவாழ்நாளில் ௲௩௫௰

ஆயிரத்தெண்ணூற் றெழுபத்துமூன்றாண்டில்
தீயவஷாண்டியர்கள் சென்றடர்ந்துபோர்புரிய ௲௩௫௧

சக்கரவர்த்தினியார் தக்கபடைவீரர்களால்
தொக்கவவரைத் துறத்திச்செயம்பெறவே ௲௩௫௨

சக்கரவர்த்தினியார் தம்மைவெல்லவல்லவர்கள்
எக்கடல்சூழெவ்விடத்து மில்லையெனவெல்லோரும் ௲௩௫௩

புகழும்படியாய்ப் புவியினில்செங்கோல்செலுத்தி
திகழும்படியரசு செய்துவரும்நாளினிலே ௲௩௫௪

சக்கரவர்த்தினியார்க்கு இந்தியாவிற் பட்டங்கட்டியது.

விருத்தம்.

மற்றுளமன்னரெல்லாந்தம்புகழ்மகிழ்ந்துபேசப்
பற்றலர்தமதுநெஞ்சம்பறையெனத்துடிக்குமாறு
வெற்றிகொள்ளிறைவியார்க்குவிருப்புடனிந்தியாவில்
நற்றலம்புகழும்பட்டம்புனைந்ததுநவிலலுற்றாம்.

கதை.

ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தேழாம்வருஷமதில்
தூயஜனவரியிற் சொல்லுமுதற்றெய்தியன்று ௲௩௫௫

இங்கிலாந்தின்மஹாராணி யானவெனுநம்மன்னையர்க்கு
சங்கையின்றியிந்தியாவின் சக்ரவர்த்தினியாரெனவே ௲௩௫௬

எங்கும்புகழும் இனியபட்டங்கட்டவென்று
பங்கமில்லாமற்சிறந்த பார்லிமெண்டார்கூறுதலும் ௲௩௫௭

நல்லதெனவே நமதன்னையாரிசைந்து
செல்வமிகுகௌனர் ஜெனரலுக்கிந்நன்மொழியை ௲௩௫௮

சிந்தைமகிழ்வால் தெரிவித்தமாத்திரத்தில்
இந்தியாவிலுள்ளோர் எவருமறிந்திடவே ௲௩௫௯

அக்காலங்கௌனர்ஜெனரல் ஆனலிட்டன்மாபிரபு
திக்கெட்டிலுள்ள திறல்வேந்தர்யாவருக்கும் ௲௩௬௰

தெரிவித்துடில்லியில்முன் செப்பியநற்றெய்திதனில்
மருவுலவுசீர்த்தி வளர்சக்ரவர்த்தினியர்க்கு ௲௩௬௧

தாரணியெங்கும்புகழுந் தக்கபட்டங்கட்டவென்று
சீராயெவர்க்குந் தெரிவித்தபின்பிறகு ௲௩௬௨

சக்கரவர்த்தினியார் சந்தோசமாய்த்தமது
மிக்கபடைதனையு மேன்மையுடனங்கனுப்பி ௲௩௬௩

பட்டோலையொன்று பரிவாகவேயெழுதி
திட்டமாயங்கே சிறப்பாயனுப்பிவைத்தார் ௩௲௯௪

வந்தபடமும் வரைந்ததிருமுகமும்
சிந்தையுடன்கௌனர் ஜெனரலுமன்பாய்வாங்கி ௩௲௯௫

சென்னைநகர்பம்பாய் திகழ்கல்கத்தாவுடனே
மன் அலஹபாத்துடனும் வாய்த்தலாஹோநகரம் ௩௲௯௬

ஆகவிளங்குகின்ற ஐந்திராசதானிகளில்
பாகமுடனரசு பண்ணுகின்றகௌர்னர்கட்கும் ௩௲௯௭

மற்றுமுள்ளவேந்தருக்கும் மாநிலத்தில்யாவருக்கும்
வெற்றியுடனெங்கும் விளம்பரங்கள் செய்திடவே ௩௲௯௮

நாட்டில்நகரிலுள்ளோர் நல்லதிருவாசகத்தை
கேட்டவுடன்மனதிற் கெம்பீரமுண்டாகி ௩௲௯௯

தங்கள்தங்கட்குற்ற தனியரசுபோல்மகிழ்ந்து
பொங்கமுள்ளடிங்லிநகர் போய்ப்புகுந்தாரம்மானை ௩௲௱

விருத்தம்.

அங்கநாடரருணநாடரவந்திநாடராந்திரர்
கொங்குநாடர்குலிந்தநாடர்குருகநாடர்குந்தளர்
வங்கநாடர்மகதநாடர் மச்சநாடர்மாளவர்
சிங்கமன்னசூரசேனர் சிந்துநாடர்சிங்களர்.

வடகலிங்கர்காசிமீரர் மராடர்சீனர்சோனகர்
குடகர்கொல்லர்கிராடர்சோழர் குருநன்னாடர்கூர்ச்சரர்
நிடதர்பாண்டிநாடர்காசர் நிகரிறுளுவர்திராவிடர்
திடமிகுநேபாளர்யௌனர் திகழ்கன்னாடர்தெங்கணர்.

கருசநாடர்புளிந்தர்போடர் கன்னடர்க்காம்போசர்கள்
பரிசுடைப்பாஞ்சாலநாடர் பப்பராதிபல்லவர்
வரிசைசேரிலாடர்கள்வங் காளநாடர்கோசலர்
திரமிகுஞ்சவ்வீரநாடர் திடமிகுங்காந்தாரரே.

தக்கசீர்த்திமலையநாடர் தார்விதர்ப்பர்சாலவர்
மிக்கவெற்றியொட்டியார்கண் மிளிருதார்யுகாந்திரர்
திக்கெலாம்புகழ்படைத்த தேசபோசர்கேரளர்
எக்கணுந்தஞ்சீர்துலங்க வெழிற்சிறந்தகேகயர்.

மற்றும்மற்றுமுள்ளவுள்ள மகிதலத்துமன்னவர்
முற்றும்முற்றும்வந்துவந்து முகமலர்ந்துசேரவே

யுற்றவுற்றவேந்தர்தம்மை யோகையோடுதழுவியே
கொற்றமுற்றவாசனங்க ணல்கியன்புகூரவே.

வந்தவந்தயாவருக்கு மகிழ்வினோடிருக்கைகள்
தந்துசிந்தையன்புகொண்டு சார்ந்திருந்தபோதினில்
இந்திராதியோர்தமக்கும் எய்தொணாததவிசின்மேல்
மைந்தின்மிக்கசக்ரவர்த்தினி யார்படத்தைவைத்தரோ.

மனுவையாதியரசரிந்த மகிதலத்தின்முன்னைநாள்
இனிமையாகவேந்தர்யாரு மேத்துமாறுமணிமுடி
புனையலானமுறைமையே பொருந்தநந்தமன்னையார்க்
கனையகாலைமவுலிசூட்டி யரசர்யாரும்போற்றவே.

தடதடென்னவொலிமிகுந்த சப்தமேகமுட்கிட
மடமடென்னமுரசபேரி மத்தளங்கள்குமுறவே
கிடுகிடென்றுபுவியுமிக்க கிரிகளுங்குலுங்கவே
திடுதிடென்றுபல்பிரங்கி தீர்ந்ததன்னகாலையே.

மற்றுமுள்ளபலவிதத்து வாத்தியங்கள்குமுறவே
கற்றவாணர்பலரும்வந்து கனிவினோடுபாடவே
சுற்றுநின்றுமாதரார்கள் சோபனங்கள்பாடவே
கொற்றமுற்றவீரர்யாருங் கூடிநின்றுவாழ்த்தவே.

ஆசையற்றவாசையுற்றோராசையுற்றுநோக்கவே
வாசமிக்கமுல்லைபிச்சி மலர்களெங்குந்தூற்றியே
நேசமிக்கமன்னர்சூழ நின்றுநின்றுபோற்றவே
தேசமுற்றமாந்தர்யாருஞ் சிந்தையன்பிற்போற்றினர்.

கதை.

எத்தேசமன்னவரு மெவ்வுலகத்துற்றவரும்
சித்தம்மகிழ்ந்து சிறப்புடனேகொண்டாட ௲௱௭௧

மன்னும்விக்ற்றோரியா மகாராணியார்தமக்கு
நன்னலஞ்சேர்சக்ரவர்த்தி நல்லபட்டங்கட்டினரோ ௲௱௭௨

பட்டம்புனைந்து பரிவாகவெல்லோரும்
திட்டமாயவ்விடத்திற் சேர்ந்திருக்கும்வேளையிலே ௲௱௭௩

சக்கரவர்த்தினியார் அனுப்பிய திருமுகத்தை கவர்னர்ஜெனரல்வாசித்துக்காண்பித்தது.

விருத்தம்.

மல்கியவள்ங்கொள்டில்லி மாநகர் தன்னிலன்பாற்
பல்வளநகரவேந்தர் பக்கமுற்றினிதுகேட்பக்
கல்கெழுபுயத்துக்கவர்னர் ஜெனரலுங்களிப்பாலம்மை
நல்கியதிருமுகத்தை நவின்றதுநவிலலுற்றும்.

கதை.

சக்கரவர்த்தினியார் தாமுன்னனுப்பிவைத்த
மிக்கதிருமுகத்தை வேந்தரெல்லாங்கேட்பதுவாய் ௩௩௭௪

கவர்னர்ஜெனரலெனக் கழறுலிட்டன்மாபிரபு
கவனமுடனெஞ்சங் கனிந்தங்குரைக்கலுற்றார் ௩௩௭௫

எங்கும்நிறைவுற் றிருக்கும்பரனருளால்
அங்கிலேயராச்சியத்துக் கானமகாராணியரும் ௩௩௭௬

இந்தியாதேசத்துக் கினியசக்ரவர்த்தினியாய்
வந்தநாமிங்கே வகுத்துரைப்பதென்னவென்றால் ௩௩௭௭

செல்வமெந்நாளுஞ் சிறந்தடில்லிமாநகரில்
நல்லமகாசபையாய் நம்ராச்சியத்திலுள்ள ௩௩௭௮

உத்தியோகஸ்தருக்கும் உற்றபலவேந்தருக்கும்
பத்திமிகவுடைய பற்பல்மனிடருக்கும் ௩௩௭௯

பெரிதானராசப் பிரிதிநிதியானவரால்
பரிவாகவேநாம் பகரும்விதங்கேளீர் ௩௩௮௰

இந்துதேசத்தில் இருக்கும்பிரசைகள்மேல்
நந்தாதஅன்பு நமதுமனத்துள்ளதென்று ௩௩௮௧

உண்மையாயிப்போ துரைப்பதெதினாலெனிலோ
வண்மைமிகுநமது மைந்தரங்குவந்திடுநாள் ௩௩௮௨

ராசவுபசாரமுடன் நாடியிந்நாட்டிலுள்ளோர்
நேசமாய்ச்செய்த நெறிகளெல்லாநாங்கேட்டு ௩௩௮௩

இந்துதேசத்தோ ரிராசபத்தியாளரென்று
சந்தோசமாகஅவர் தங்களைநாமெண்ணுகிறோம் ௩௩௮௪

இப்போதெவர்க்கும் இருக்கின்றநண்புமன்பும்
எப்போதும்நம்பால் இருக்குமெனநம்புகிறோம் ௩௩௮௫

செயமாகநம்முடைய தேசத்தில்வாழ்வோரில்
வயமாயுயர்விழிவாய் மாறுபடஎண்ணுமல் ௩௩௮௬

நம்முடையசெங்கோல் நலஞ்சேர்முறையறிந்து
செம்மையுடையவராய்ச் செல்வமென்மேலுண்டாக ௩௩௮௭

சுகத்தின்வழியறிந்து துன்பங்களையொழித்து
செகத்தில்வளர்ந்தோங்கச் சிந்தையில்நாமெண்ணுகிறோம் ௩௩௮௮

என்றுதிருமுகத்தை யின்பமுடன்கூறுதலும்
நன்றியுடன்கேட்டு நலஞ்சிறந்தோரெல்லோரும் ௩௩௮௯

சந்தனதாம்பூலந் தகுமுறையாற்பெற்றுயிக்க
சிந்தைமகிழ்ச்சியொடு சென்றார்தம்நாட்டினுக்கே ௩௩௯௰

கவர்னர்ஜெனரல்முதல் காரியஉத்யோகஸ்தரும்
அவரவர்செய்வேலைகளை யன்பாகப்பார்த்துவந்தார் ௩௩௯௧

திங்கண்மும்மாரி சிறப்பாய்ப்பொழிந்துவர
எங்கும்பலவிளைவு மேற்றமுடனுண்டாக ௩௩௯௨

நல்லறங்களுண்டாக நாட்டிலுள்ளோரெல்லாரும்
செல்வம்படைத்துச் சிறப்பாகவாழ்ந்திருந்தார் ௩௩௯௩

சக்கரவர்த்தினியார்க்குப் பலகண்டங்களிலும் அரசாட்சியுள்ளதை விவரித்தது.

விருத்தம்.

பற்பலபகைவர்நெஞ்சம் பதைத்திடச்சமரில்வென்று
பற்பலவளங்களோங்கப் பாருலகனைத்துங்காத்துப்
பற்பலவிதத்துஞ்சீர்த்தி பரவுநம்மன்னையார்க்குப்
பற்பல்கண்டங்கடோறும் பலித்துளநாடுஞ்சொல்வாம்.

கதை.

ஐரோபாகண்டமதில் ஆகியமொத்தத்தினிலே
உயர்வாய்முப்பத்திரண்டில் ஓர்பங்குளபுவியும் ௩௩௯௪

அந்நாட்டில்வாழுகின்ற ஐரோபியர்களிலே
பன்னரியவொன்பதிலோர் பங்குசனத்தொகையும் ௩௩௯௫

சீர்மிகுந்தஆசியாவில் சேர்ந்தபதினைந்திலொன்றும்
சார்பாகவாழுஞ் சனத்தொகையில்நாலிலொன்றும் ௩௩௯௬

ஆப்பிரிக்காகண்டமதில் ஆனபுவியெட்டிலொன்றும்
மாப்பாகமுற்ற மனிதரிலெண்பத்திலொன்றும் ௩௩௯௭

வடஅமெரிக்காவில் வகுத்தஅஞ்சிலோரிரண்டும்
திடமாயங்நாட்டின் செனத்தொகையீராறிலொன்றும் ௩௩௯௮

தென்னமரிக்காவில் திகழெழுபத்தாறிலொன்றும்
அங்கிலத்தில்வாழ்வோர் அறுபத்தியைந்திலொன்றும் ௩௩௯௯

ஓஷியானியென்ன உரைக்கும்புவிதனிலே
வசமாய்நானூன்கில் வகுத்தபதினைந்துபங்கும் தூசா

அந்தப்புவியில் அழகாய்வாழ்மாந்தர்களில்
நந்தாதுதங்கள்வசம் நாலினிலேமூன்றுபங்கும் தூசாக

பிரிட்டிஷிராச்சியத்தில் பேராய்விளங்குகின்ற
அருமையுள்ளதீவுகளோ ரைஞ்னூற்றின்மேலாகும் தூசாஉ

செயமானஐஞ்னூற்றில் செப்பரியகிரேட்பிரித்தன்
அயர்லாந்தென்றோதுகின்ற அவ்விரண்டுமேபெரிது தூசாந

அப்பெரியகிரேட்பிரித்தன் அளவைச்சதுரமயில்
இப்போதினிலுளதோ ரெண்பத்தெண்ணுயிரமாம் தூசாச

இங்கிலாந்தும்வேல்சும் இருக்குஞ்சதுரமயில்
இங்கைம்பத்தெண்ணு யிரத்தினிருநூறாகும் தூசாரு

காத்லாந்தினையளந்து கண்டசதுரமயில்
நேர்த்தியுடனே நிகழ்முப்பதாயிரமாம் தூசாசு

செப்பரியஅயர்லாந்து தேசஞ்சதுரமயில்
முப்பத்திராயிரத்தைஞ் னூற்றுமுப்பத்தொன்றாகும் தூசாஎ

பிரிட்டிஸ்அரசிற் பெரிதாகவுள்ளநதி
தெருட்டியழகான தேம்ஸ்நதியென்பதுவே தூசாஅ

இருநூற்றுப்பத்தொடைந்தா யேற்றமயில்நீளமுடன்
விரிவினளவும் வியப்பாய்ப்பெருக்குதொகை தூசாகூ

ஆறுயிரத்தொருநூற் றுறுபத்துச்சதுரமயில்
வீறுயநாட்டில் விளங்கும்மலைகளிலே தூசாய

பென்னிவிஸ்என்றோதும் பிறங்கல்பெரிதாக
மன்னடிநாலாயிரத்து நானூற்றுறென்னமண்ணில் தூசகக

ஓங்கியுயர்ந்ததின்னு முற்றமலைபலவும்
பாங்கினிற்செல்லுகின்ற பண்சேர்பலநதியும் தூசகஉ

ஊனமில்லா இந்தியாவி லுற்றசதுரமயில்
ஆனபதினுறிலக்கத் தைம் த்தாறுயிரத்து தூசகந

முன்னூற்றுநாலாகும் முந்தியதிற்செல்நதிகள்
பன்னற்கரிய பலநதிகளிற்பெரிது தூசகச

சீராகக்கீழ்திசையிற் செல்லுகின்றகங்கைநதி
ஓராயிரத்தறுநூற் றெண்பதெனவோங்குமயில் தூசகரு

மூன்றுமயிலகன்று முந்நீரிடைகலக்கும்
தோன்றியேமேல்பாற் றிலங்குகின்றஇந்துநதி தூசகசு

ஆயிரத்தெண் ணூறுமயில் ஆகியநீளத்துடனே
தூயபுவியிற் றுலங்கவேசெல்லுவது ௲௪௱௧௭

இங்கிலாந்தில்வாழ்வோ ரியைந்திரண்டுகோடியின்மேல்
இங்கிதமாய்ப்பின்னுமதில் எண்பதிலக்கஞ்சனமாம் ௲௪௱௧௮

மேற்றிகழ்க்காத்லாந்தில் மேவிவசிப்பவர்கள்
நாற்றிசையும்வெல்லவல்ல நாற்பதிலக்கம்பெயராம் ௲௪௱௧௯

அயர்லாந்துதேசமதில் அன்புடனேவாழ்வோர்கள்
செயமேமிகுந்து சிறந்தவைந்துபத்திலக்கம் ௲௪௱௨௰

சாற்றரியதீவின்மொத்தஞ் சாருஞ்சனத்தொகைகள்
ஏற்றமுக்கோடியின்மே லேழுபத்திலச்கமென்பர் ௲௪௱௨௧

பன்னற்கரிய பலவளங்கொள்ளிந்தியாவில்
மன்னுமிருபத்தேழு கோடிமனுடருண்டால் ௲௪௱௨௨

இந்நாட்டிற்பின்னு மிமயமெனக் கூறுமலை
அன்னதோராயிரத் தைஞ்ஞூறுமயில்நீளமுடன் ௲௪௱௨௩

அருமையுடனேயொருநூற் றைம்பான்மயிலகன்று
இருபத்தொன்பானு யிரத்தடியின்மேலுயர்ந்து ௲௪௱௨௪

இவ்வுலகிலெங்கும் இணைவேறில்லாததுவாய்
செவ்வையுறவோங்கித் திகழ்வதந்தமாமலையே ௲௪௱௨௫

இந்தஇந்தியாவில் இனிமையுடன்வாழ்வோர்கள்
சிந்தைமகிழ்கல்வித் திறத்தினைநாம்பார்ப்பளவில் ௲௪௱௨௬

நூற்றுக்குக்கல்லார் நவலுமெண்பத்தைந்தெனவும்
தேற்றமுடன்கற்றவர்கள் செப்புவர்மூவைந்தெனவே ௲௪௱௨௭

இந்நாட்டிற்பின்னும் இயல்பாகப்பேசுகின்ற
உன்னரியபாஷை யொருநூறின்மேலுளது ௲௪௱௨௮

ஒருநூறுபாஷை யுலகிலுள்ளதென்றாலும்
நிரையாகவெங்கும் நிகழ்வதிந்துஸ்தானியுடன் ௲௪௱௨௯

பெங்காளிமாராஷ்டிரம் பஞ்சாபிநல்லதமிழ்
சிங்காரமான தெலுங்குமுதலானவைகள் ௲௪௱௩௰

இவையன்றியின்னும் இலங்கைமுதற்பல்லிடங்கள்
நவையன்றியேபிரீட்டிஸ் ராச்சியத்திற்சேர்ந்துளது ௲௪௱௩௧

இப்பாலிருள்சேரின் இன்னொருபால்நற்பகலாம்
அப்பாலிருள்சேரின் ஆகியஇப்பாற்பகலாம் ௲௪௱௩௨

கதிரோனெப்போதுங் கதியாயுலவுவதால்
மதியாலுயர்ந்தசக்ர வர்த்தினியார்நாட்டிலென்றும் ௲௪௱௩௩

இரவென்பதின்றி யெழிலாய்ச்செங்கோல்செலுத்தி
விரவுநன்மையாகஇந்த மேதினியையாளுகின்றார் ௲௪௱௩௰௪

இந்தியாதேசத்தவர்கள் முன்னிருந்தஇயல்பும் தற்காலத்திலடைந்தநன்மைகளும்.

விருத்தம்.

இந்தநாடுமுன்னெய்தியதன்மையு
நந்தமன்னையர் நல்லரசுற்றபின்
சிந்தையிற்களிப் பெய்திச்சிறப்பொடு
மைந்தின்யாவரும்வாழ்ந்ததுங் கூறுவாம்.

கதை.

இந்தியாதேசமதில் எங்கள்சக்கிரவர்த்தினியார்
சுந்தரஞ்சேர்நல்லரசி தோன்றியபின்னுண்டான ௲௪௱௩௰௫
நன்மைகளையெல்லாம் நலமாகச்சொல்லவென்றால்
வன்மைமிகுந்தகலை வாணிக்குங்கூடாதே ௲௪௱௩௰௬
ஆனாலுமெந்தன் அறிவுக்கிசைந்தமட்டும்
மீனார்கடல்புடைசூழ் மேதினியிற்சொல்லுகிறேன் ௲௪௱௩௰௭
இந்துதேசத்தில் இயல்பாய்முன்வாழ்ந்தவர்கள்
சிந்தைகலக்கமென்றுந் தீராததாய்வருந்தி ௲௪௱௩௰௮
அழுக்குப்புடவைகளும் ஆபரணமொன்றுமின்றி
இழுக்காங்குடிசிற் கிரவிற்படலடைத்து ௲௪௱௩௰௯
கள்ளர்பயமதனால் கண்ணுறக்கமில்லாமல்
தள்ளாடிமெய்மெலிந்து சஞ்சலங்களுற்றிருப்பர் ௲௪௱௪௰
காட்டிலச்சங்கொள்வர் கரடிபுலிபன்றிகட்கு
வீட்டிலச்சங்கொள்வார்கள் வீணர்திருடருக்கு ௲௪௱௪௧
இனையவிதமாக ஈடழிந்துநொந்தவர்கள்
அனையபயங்கள் அனைத்துந்தவிர்ந்தார்கள் ௲௪௱௪௨
படல்சேர்குடிசை பலமெத்தைவீடாச்சு
அடல்மிருகஞ்சேர்கா டனைத்துநகராச்சு ௲௪௱௪௩
கள்ளரொடுதுஸ்டர் கடியசிறைக்குள்ளானார்
உள்ளமகிழ்ச்சி யுலகமெங்குமுண்டாச்சு ௲௪௱௪௪
சக்கடாவண்டியையுந் தாமறியாமாந்தர்களும்
மிக்கபெட்டிவண்டியொடு வில்வண்டிகூட்டுவண்டி ௲௪௱௪௫
ரேக்கலாவண்டியொடு நீள்பைசிக்கிள்வண்டிகளும்
தாக்குடனேயேறியெங்குந் தாநடத்தக்கற்றார்கள் ௲௪௱௪௬

வெள்ளைத்துணிதவிர வேறொன்றறியாதார்
விள்ளரியசல்லா விலையுயர்ந்தபட்டுமுதல் ௲௪௪௭

எங்கெங்கநாட்டி லிருக்குந்தினுசுகளும்
விந்தைவிந்தையாக வெகுவாய்த்தரித்தார்கள் ௲௪௪௮

வெள்ளிநகையும் விழிக்கெதிரேகாணாதார்
தள்ளற்கரிதாய தங்கநகைகள்பலவும் ௲௪௪௯

மாணிக்கம்பச்சை வயிரமரகதங்கள்
ஆணிப்பொன்னாலிழைத்த ஆபரணம்பூண்டார்கள் ௲௪௫௰

இடுப்பிற்றுகிலை யிசைக்கவறியாதவரும்
உடுப்புப்பலவும் ஒழுங்காய்த்தரித்தார்கள் ௲௪௫௧

தலையின்மயிர்கழிக்குந் தன்மையறியாதவரும்
நலமாய்ப்பலவிதத்தும் நற்குடுமிவைத்தார்கள் ௲௪௫௨

இப்பாரிற்கள்ளரென்றால் ஏங்கிமனநொந்தவரும்
துப்பாக்கிகைப்பிடித்துச் சுட்டிடவுங்கற்றார்கள் ௲௪௫௩

ஆஞ்சுபேர்சேர்ந்தாலும் அஞ்சிவழிசெல்லாதார்
அஞ்சுதலின்றித்தனியே யாண்டுஞ்செலற்கானார் ௲௪௫௪

சொற்பெரியமுட்கள் துவன்றிவழியின்றுழன்றோர்
நற்பெரியரோட்டும் நறுநிழலும்பெற்றார்கள் ௲௪௫௫

போயொருகாதத்தின் புதுமையறியாதவர்கள்
ஆயிரங்காதத்தின் அதிசெயமும்பார்த்தார்கள் ௲௪௫௬

தூயவொருகாதச் சுகதுக்கங்காணாதார்
ஆயிரங்காதத்திலுள்ள தன்றேயறிந்தார்கள் ௲௪௫௭

தூயபணமொன்றைத் துணையின்றிக்கொண்டேகார்
ஆயிரம்பொன்கொண்டுதனித் தஞ்சாமற்செல்லலுற்றார் ௲௪௫௮

காணாதகாட்சியெல்லாங் கண்டுகளித்தார்கள்
பூணாதஆபரணம் பூண்டுகளித்தார்கள் ௲௪௫௯

பாராதசேதமெல்லாம் பார்த்துக்களித்தார்கள்
சீராதமேன்மையுள்ள செல்வம்படைத்தார்கள் ௲௪௬௰

காட்டினிடைபழுக்குங் கல்லத்தியாலலது
நாட்டிற்கனிகள் நவிலவுந்தாங்கேட்டறியார் ௲௪௬௧

கதலிபலாமாவின் கனியாரஞ்சிக்கனிகள்
விதவிதமாய்ப்பல்கனியின் வேண்டுஞ்சுவையறிந்தார் ௲௪௬௨

கேப்பைக்களியலது கிண்டியொன்றுங்கண்டறியார்
ஆப்பம்வடைமிட்டா யனைத்துஞ்சுவையறிந்தார் ௲௪௬௩

எரிக்கும்வெயிலுக் கிடத்தோற்செருப்பறியார்
இருச்சிமிதியடியுங் கெம்பீரமாய்மிதித்தார் ௩௪௬௪

பன்னும்வெயிலுக்குப் பழந்துணிமேற்போடாதார்
மின்னுங்குடைகள் விரித்துப்பிடித்தறிந்தார் ௩௪௬௫

அந்நாளிற்றங்கள் அடுத்தநகர்க்கேகவென்றால்
மன்னுபுயவீரர்களும் வாய்த்ததுணைதேடுவர்கள் ௩௪௬௬

நேசமாயிந்நாள் நினைவிற்பயமிலதாய்
தேசம்விட்டுத்தேசமது சிறுவர்களுஞ்செல்வார்கள் ௩௪௬௭

மிடியினால்நொந்து வெகுதுயரமுற்றவரும்
குடிவாழ்க்கைதன்னிற் குபேரனுக்கொப்பானார்கள் ௩௪௬௮

கல்விவிதமின்னதெனக் காதினிலுங்கேட்டறியார்
நல்லபலபாஷைகளும் நன்றாய்ப்படித்தறிந்தார் ௩௪௬௯

நாலுமுக்காலின்னதென நன்குணரமாட்டாதார்
மேலுங்கணக்கின் விதங்களெல்லாந்தேர்ந்தார்கள் ௩௪௭௰

வைவாயெழுத்தாணி வைத்தெழுதமாட்டாதார்
கையிற்பென்கொண்டு கடிதம்வரையலுற்றார் ௩௪௭௧

சோம்பேறிகளாய்த் துணிவுசற்றுமில்லாதார்
மேம்பாட்டுடனே விளங்குந்தொழில்புரிந்தார் ௩௪௭௨

சாதிபெரிதெனவே தங்கண்மனத்திலெண்ணி
ஓதியுணர்வில்லாமல் உற்றசிலமாந்தர்களும் ௩௪௭௩

கல்விசெல்வமில்லாரைக் காசினியோர்பேணுத
தொல்லொழுக்காலந்தத் துவேசந்தணிந்தார்கள் ௩௪௭௪

கற்றுப்பரீட்சை களங்கமறத்தேர்ந்தவரே
வெற்றியுள்ளஉத்யோக மிக்காய்ச்செலுத்துவதால் ௩௪௭௫

கல்வியழகுங் கனமும்பெருநலமும்
செல்வமுநல்குமெனச் சிந்தையுறக்கண்டறிந்தார் ௩௪௭௬

கல்லாமையால்முன் கலகமென்றுஞ்செய்தவர்கள்
நல்லொழுக்கமுண்டாகி நாட்டிலன்பாய்வாழ்வார்கள் ௩௪௭௭

மேவியதந்நாட்டில் விளைபொருளல்லாதுமுன்னாள்
தாவில்பலபொருளுந் தங்கள்கண்ணிற்காணுதார் ௩௪௭௮

அன்னியதேசப்பொருளோ டாழ்கடற்றீவின்பொருளும்
இந்நாளில்யாரும் எளிதில்வணிகம்புரிவார் ௩௪௭௯

மண்பாத்திரங்களன்றி மற்றொன்றறியாதார்
கண்பாருவைக்கினிய கல்லாற்செய்பாத்திரங்கள் ௩௪௮௰

பித்தளைப்பாத்திரங்கள் பேணும்வெள்ளிப்பாத்திரங்கள்
துத்தநாகத்தால் துலங்குபலபாத்திரங்கள் ௲௪௮௧

தாம்பிரப்பாத்திரங்கள் தங்கத்தாற்பாத்திரங்கள்
மேம்பாட்டுடனே மிளிர்பளிங்குப்பாத்திரங்கள் ௲௪௮௨

பீங்கானிற்செய்தபல பேசரியபாத்திரங்கள்
ஓங்குமின்னும்பற்பலவு முள்ளவர்களானார்கள் ௲௪௮௩

ஏற்றமழைகாலமதி லெவ்விடத்துச்சென்றவரும்
ஆற்றுவெள்ளமோடைகளுக் கஞ்சியங்குகாத்திருப்பார் ௲௪௮௪

ஆறுமுதலோடைகளி லானபலபாலங்களில்
ஏறியெவருமிப்போ தின்பமுடன்செல்லுகிறார். ௲௪௮௫

யாதோர்சுதந்தரங்க ளில்லாதிருந்தவர்கள்
பேதமொன்றுமில்லாமல் பெற்றார்சுதந்தரங்கள் ௲௪௮௬

வீதியசுத்தங்களினான் மிக்கதுருவாடையுற்றோர்
ஓதரியசுத்தமுட னுற்றார்கணன்னலமே ௲௪௮௭

ஏத்தேசசங்கதியு மேற்றமுள்ளபேப்பர்களால்
இத்தேசத்துள்ளோ ரெளிதாயறிந்தார்கள் ௲௪௮௮

பஞ்சம்வந்தபோதும் பரதவித்துவாடாமல்
தஞ்சமாய்க்காக்கத் தகுமுதவிபெற்றார்கள் ௲௪௮௯

சீரானகல்வித் திறமெளிதிற்கற்பதற்குத்
தாரித்திரருந் தகுமுதவிபெற்றார்கள் ௲௪௯௰

இந்தியதேசத்தவர்க ளின்னுமுற்றநன்மைகளை
சிந்தைதனிற்றொகுத்துச் செப்பமுடியாதுகண்டீர் ௲௪௯௧

சக்கரவர்த்தினியார் துதி.

மகம்மதியர் முதலான கொடுங்கோலோச்சு
மன்னவர்கள் கொள்ளைகொலை வரம்பிலாமற்
செகமதனி லியற்றமன நொந்துவாடிச்
சீரழிந்து நமதுமுன்னோ ரடைந்த துன்பம்
புகலவெளி றாவருந்து நினைக்கில்நெஞ்சம்
புண்ணாகுங் கேட்டசெவி புழுங்கிநையு
மிகையனைத்துந் தீர்த்தருளுஞ் சக்ரவர்த்தினி
மெய்ப்புகழை யெப்பொழுதுந் துதித்து வாழ்வாம்.

முன்னாளிற் கொடுந் தொழில்க ளியற்றலான
மொய்ம்புடைய விரணியனான் முழுது நொந்தோர்

அங்ஙாளி னரவரியா யவனைத்தாக்கு
மச்சுதனை மனத்திலென்று மமைக்குமாபோல்
இங்ஙாளி னங்துயர மனைத்துநீக்கி
யெழின்மிகுந்த வாழ்வருளி யினிதாய்க்காக்குந்
தங்கிரில் புகழ்படைத்த சக்ரவர்த்தினி
தக்கதிருப் புகழையென்றுந் துதித்து வாழ்வாம்.

இலங்கைநகர் மேவுமிரா வணனாற்றுன்ப
மெய்திமன நொந்தவரி ராமனென்னும்
வலங்கிளரு மணிமார்பன் றன்னையன்பான்
மனத்திலென்று மறவாமல் வழுத்துமாபோற்
றலங்களெங்கு முன்வருந்தும் வருத்தநீக்கிச்
சகலசுதந் தரங்கண்மனத் தயையாற்றந்து
பொலங்கொண்மணி முடிகொள்சக்ர வர்த்தினியாரின்
பொருவரிய புகழையென்றுந் துதித்துவாழ்வாம்.

வஞ்சநெஞ்சக் கஞ்சன்முதற் கொடியரான
மன்னவரான் மனமிடைந்து வருந்தினோர்தஞ்
சஞ்சலங்க ளகற்றுவித்த கண்ணன் றன்னைத்
தம்பிரா னெனவணங்குந் தன்மைபோலத்
தஞ்சமொன்று மின்றிநின்று தளரு நம்மைத்
தழலுறுவோர்க் கிரங்கிமழை சாருமாபோல்
அஞ்சலெனக் காத்தருளுஞ் சக்ரவர்த்தினி
யம்மைதிருப் புகழையகத் தமைத்துவாழ்வாம்.

முப்புரத்த ரொனுமவுணர் தம்மாற்றங்கண்
மொய்ம்பிழந்து முறுவலழி முகத்தரெல்லாந்
துப்புருக்கொண் டனையவெழி லீசன்றன்னைச்
சொல்லரிய மகிழ்ச்சியொடு துதிக்குமாபோல்
எப்புரத்துங் கொடியவரால் வருந்துநம்மை
யின்பமுடன் சகலசுக மெய்தவைத்த
ஒப்பறுசீர் புகழ்படைத்த சக்ரவர்த்தினி
யோங்குபுக ழிருதயத்தி லுன்னிவாழ்வாம்.

சூரன்முதலாய பலவசுரர் தம்மாற்
றுன்னிலைமை யழிந்துவெகு துயருற்றோர்கள்
வீருடனே யன்னவரைத் துணித்தவெற்றி
வேலவனை மிகவிரும்பி மேவுமாபோற்

ஞாரணியில் வாடுகின்ற பயிர்க்கிரங்கிச்
சலதரங்கள் பொழிவதெனத் தயவுகூர்ந்து
சீருடனே நமைக்காத்த சக்ரவர்தனி
செப்பரிய புகழையகஞ் சேர்த்து வாழ்வாம்.

தாரணியோர்க் கிடர்புரியு மயிடனென்னுஞ்
சாற்றரிய பலமுடைய சழக்கன்றன்னை
நாரணிமுன் படப்பொருது வெற்றிகொண்ட
நன்மையினுற் றெய்வமென நம்புமாபோல்
போரணியிற் பகைவருடற் பொறைகண்மண்ணிற்
புரளவென்று நம்மையன்பாற் புரக்கவல்ல
சீரணியாய்க் கொண்டசக்ர வர்த்தினியம்மை
செல்வமுயர் புகழையுளஞ் சேர்த்துவாழ்வாம்.

கூற்றனைய கொடுங்கோன்மை யரசர்தம்மாற்
கொள்ளுகின்ற குறையொடுநல் குரவுந்தீர்ந்தோம்
மாற்றலரால் கள்ளர்களாற் பயங்கடீர்ந்தோம்
மாநிலத்திற் சுதந்தரங்கண் மருவிவாழ்ந்தோம்
ஏற்றமென்ப தியாவையும்நா மெய்தலானோம்
எழிலுடனே யெவ்விடத்து மேகற்கானோம்
சாற்றரிய நலங்கொடுத்த சக்ரவர்த்தினித்
தாய்புகழை யிருதயத்திற் ருக்கிவாழ்வாம்.

பற்பலகற்பாசைகளும் படித்தற்கானோம்
பாங்குடனே பலதொழிலும் பயிற்றற்கானோம்
பற்பலவாஞ் சுகங்களுநா மடைதற்கானோம்
பரிவுடனே பண்ணறிந்தோம் ஒழுக்கமுற்றோம்
பற்பலதே யங்களையும் பார்த்தற்கானோம்
பலபணியும் பரிவுடனே பூணலானோம்
பற்பல்வித் நன்மைதந்த சக்ரவர்த்தினி
பைம்புகழை யிருதயத்திற் பதித்துவாழ்வாம்.

மன்னியவிப் பூவுலகில் வாழுகின்ற
மாந்தர்முத லாகவள ருயிர்களெல்லாம்
தன்னுயிர்போற் கருதியெல்லாப் பொருட்குமீன்ற
தாயாகிப் பிறர்துயர்தந் துயரேபோல

உன்னியெவர்க் கும்பிணிக டீர்த்துக்காக்க
உயர்வைத்திய சாலைகளு மூதவியென்றும்
நன்னிலைமை யுடனரசாள் சக்ரவர்த்தினி
நாயகத்தி னற்புகழை நயந்துவாழ்வாம்.

கதை.

நன்மைபலவுண்டாக நம்மையென்றுங்காக்கவல்ல
அன்னையரேதெய்வமென அன்பாய்மனதிலெண்ணி தூ சகூஉ
நெறியாயவர்கள்செங்கோல் நீடூழிவாழுவென்றே
அறிவாற்பரனை யகத்திலென்றும்போற்றுமினே தூ சகூங
தீதானவேந்தர்களால் சிந்தைநொந்துவாடாமல்
மாதாவாய்க்காத்தசக்ர வர்த்தியரைவாழ்த்துமினே தூ சகூச
இந்தியாதேசத் திருந்துவளர்மாந்தர்சிலர்
முந்துயர்ந்தோர்சொன்னூல் முறையையுணராதவராய் தூ சகூரு
சாதிபலவென்றுஞ் சமையம்வெவ்வேறெனவும்
பேதமுளதாய்த்தமது பேதைமையாலெண்ணுகிறார் தூ சகூசு
எல்லோரையும்படைத்த ஈசனொருவனல்லால்
பல்லோரிருந்து படைத்ததாய்ப்பார்த்ததுண்டோ தூ சகூஎ
நல்லவர்களென்றும் நலமில்லவர்களென்றும்
தொல்லுலகில்நாம்செய் தொழிலால்வருவதல்லால் தூ சகூஅ
எவ்வுயிருங்காக்கும் இறையோன்பலவிதமாய்
செவ்வையறப்பூவிற் சிருட்டிப்பதுமுளதோ தூ சகூகூ
நம்மையெல்லாங்காக்கவல்ல நாதனுக்குப்பேதமின்றேல்
இம்மையிற்பேதித்திடா மெக்காரணமறிந்தோம் தூ ரு௱
ஆனாற்சிலர்பேத மாகுமெனபதென்னவென்றால்
மீனார்கடல்புடைசூழ் மேதினியொன்றானாலும் தூ ரு௱க
தக்கசுத்தமில்லாத் தரையினிடைசேராமல்
மிக்கசுத்தமுள்ளிடத்தில் மேவுகின்றவாறேபோல் தூ ரு௱உ
நற்குணமுநற்செயலு நல்லொழுக்குமில்லாரை
அற்பமுநேசிக்கா தகன்றொதுங்கிவாழ்வரென்றும் தூ ரு௱ங
கல்விநலமுற்றுக் களங்கமற்றமேலவர்பால்
நல்லொழுக்காற்சேர்ந்து நலமாகவாழ்வரென்பர் தூ ரு௱ச
வெய்யசினந்தனையே மேற்கொள்புலியினங்கள்
வையகத்திலேயதிகம் வாழாததுபோல தூ ரு௱ரு
பொறாமைகளவுவஞ்சம் பொய்யொடுகல்லாமையுள்ளோர்
வறுமையடைந்துநொந்து மாநிலத்தில்வாடுவரே தூ ரு௱சு

செகத்திருளைநீக்குந் தினகரனுக்கொப்பாக
அகத்திருளைநீக்கி யருள்விளைக்குங்கல்விகண்டீர் ௲௫௱௭

கல்லாமையென்னுங் கனவிருளாலெண்ணிறந்த
பொல்லாங்குமேன்மேற் புவியிலென்றுமுண்டாகும் ௲௫௱௮

கல்லாதவர்களுமிக் காசினியில்மேலான
செல்வம்படைத்துச் சிறந்திருந்தாரென்றாலும் ௲௫௱௯

நல்லார்கட்பட்ட வறுமையினுந்தீதுநல்கும்
கல்லார்கட்பட்டதிரு வென்றுரைத்தகாரணத்தால் ௲௫௱௰

கற்றுயர்ந்தமேலவர்க்குக் காசினியில்மேன்மைகண்டு
நற்றனங்கொள்கல்லாதார் நைந்திடைந்துவாடுவரே ௲௫௧௧

கல்லாதவரெனினுங் கைப்பொருளுண்டாமாகின்
எல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வாரென்றமொழி ௲௫௧௨

காக்கைபிணத்தையிடு காட்டிற்றழுவுவபோல்
மூர்க்கரொடுமூர்க்கர் முகப்பரெனுமுதுரையே ௲௫௧௩

கற்றாமரைத்தடமு நல்லனமுஞ்சேர்ந்ததுபோல்
கற்றாரைக்கற்றார் கலந்துறவுகொள்வதென்றும் ௲௫௧௪

கல்லாதுநீண்ட வொருவனிந்தக்காசினியில்
நல்லறிவாளரிடை நாணாதுபோய்ப்புகுந்து ௲௫௧௫

மெல்லஇருப்பினும்நாய் வீற்றிருந்ததொக்குமென்றும்
சொல்லுமொழிநாய்குலைத்ததொக்குமென்றுஞ்சொல்லுவரே ௲௫௧௬

கண்ணுடையரென்பதுவே கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர்கல்லா ரெனப்புகலும்வாய்மையினும் ௲௫௧௭

கல்லாவொருவன் கவின்குலமேலென்னுமுறை
நெல்லுட்பிறந்தபதர் நேரென்பதனாலும் ௲௫௧௮

குணமுதலாய்ப்பற்பலவுங் கொண்டாலுங்கல்வியில்லார்
மணமில்முருக்கின் மலர்க்குநிகரென்பதினும் ௲௫௧௯

வென்றியுடைமன்னவர்க்கம் மெய்நாட்டில்கற்றவர்க்கு
சென்றவிடமெலலாஞ் சிறப்பென்பதனாலும் ௲௫௨௰

காசினியிலெல்லோருங் கற்றறிவினாற்சிறந்து
நேசமொடுநம்மை நிலைமையுறக்காத்தருளும் ௲௫௨௧

மாசில்லாதோங்குசக்ர வர்த்தினியார்தம்புகழை
யாசையொடுநெஞ்சி லறிந்துதுதிசெய்யுமினே ௲௫௨௨

தினைத்துணையதானநன்றி செய்தாலுமன்னதனை
பனைத்துணையாய்க்கொள்வர் பயனறிவாரென்பதிலும் ௲௫௨௩

என்னன்றிகொன்றாற்கு மேற்றமுண்டாமேற்றமிலை
செய்ந்நன்றிகொன்றமகற் கென்றுசெப்பும்வாய்மையினும் ௲௫௨௪

கொடுங்கோன்மையாளர்களால் குன்றிமிகநொந்தநம்மை
நடுங்காவகைகாத்த நாயகத்தைவாழ்த்துமினே ௲௫௨௫

நமதன்னையார்மரபில் நன்குதித்தமன்னரெல்லாம்
அமைவாயுலகையென்றும் ஆதரிக்கவாழ்த்துமினே ௲௫௨௬

மனுச்சக்கிரவர்த்திமுதல் மாநிலத்தையாண்டமன்னர்
தனித்தனியேகுற்றமிந்தத் தாரணியிற்செய்தவரை ௲௫௨௭

கொலைபுரிவதன்றேற் கொடுஞ்சிறையிற்சேர்ப்பதல்லால்
இலைவேறுதண்டனைகள் இந்நாள்நன்னீதியுடன் ௲௫௨௮

செய்தபிழைகள் செயலுக்குத்தக்கபடி
நொய்தாய்நாள்வாரம் நுவலுமதிவருடம் ௲௫௨௯

சாமவெங்காவலொடு சாற்றுகடுங்காவல்களும்
நேமமுடனே நிதானிப்பதன்றியின்னும் ௲௫௩௰

சாட்சிமுதலாய்ச் சகலவிதங்களையும்
காட்சியினெவ்வொன்றுங் களங்கமறவேவினவி ௲௫௩௧

குற்றமின்னதென்று குறிப்பதுமில்லாதுபின்னும்
செற்றமொடுகொள்ளைகொலை செய்தாரெனினதனை ௲௫௩௨

விசாரித்துத்தேர்வதுடன் மிக்கானசூரிகளை
உசாவித்தீர்மானம் உறுதியுடனேபுரிந்து ௲௫௩௩

தம்பமொன்றுமில்லார்க்குத் தாமேகருணைசெய்தும்
வம்புபுரிந்தோரை மனுமுறையாற்காவல்செய்தும் ௲௫௩௪

தவறொன்றும்வாராமல் தர்மஅப்பீல்செய்வதற்கு
கவர்னமென்றுவக்கீல் களுங்கருணையாலமைத்து ௲௫௩௫

சிவில்வியாச்சியங்கள் செய்யஐவேசற்றவற்கு
தாவில்லாப்பாப்பரென்றோர் தக்கமுறையேற்படுத்தி ௲௫௩௬

இன்னும்பலவிதமாய் யாவருக்குநன்மையுற
நன்மைபலவியற்றி நம்மையென்றுங்காக்கவல்ல ௲௫௩௭

சக்கரவர்த்தினியார் தக்கசெங்கோல்நன்முறையும்
எக்காலமும்விளங்க இன்பமுடன்வாழ்த்துமினே ௲௫௩௮

சக்கரவர்த்தினியார் ஆப்கான்ஸ்த்தர்களையும் சூலுவர்களையும் வென்றுசெயங்கொண்டது.

விருத்தம்.

தாஷ்டிகவாப்கான்மூன்றாந் தடவையிலெதிர்த்தவாறு
மீட்டுஞ்சூலுவருமிங்கிலீஸ் வீரருக்காற்றாராகிக்

கோட்டுடைமனத்திற்கொண்ட கொள்கையுமுடித்தற்கின்றித்
தாட்டுணைவருந்தச்சென்ற தன்மையிற்சிறிதுசொல்வாம்

கதை.

ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தெட்டாகியவருடம்
தீயஆப்கானிலுள்ள டீயர்அலியென்றஅமீர் ௲௮௱௩௯

இங்கிலீஸ்வீரருட னேற்றபகைமைகொண்டு
தங்கும்ருஷியருக்குச் சார்பாயிருந்திடவே ௲௮௱௪௰

இங்கிலீஸ்வீர ரியல்பாயதையறிந்து
தங்கள்படையுடனே சார்ந்தஅப்போரில்வென்று ௲௮௱௪௧

காட்சியுள்ளலார்டுராபட்ஸ் காண்டகாரென்றுரைக்கும்
கோட்டையையும்பிடித்துக் கொண்டவரையுந்துரத்தி ௲௮௱௪௨

டீயர்அலியைஅந்தத் தேசம்விட்டப்பாற்றுரத்தி
தாயகமாயிங்கிலீஷர் தம்மொடுநட்பாயிருக்கும் ௲௮௱௪௩

நல்லஅமீர்அப்டர் ரஹமானைநண்புடனே
செல்வம்பெருகிவளர் சிங்காசனத்தில்வைத்து ௲௮௱௪௪

செங்கோல்செலுத்திச் செகதலத்தையாளுவதாய்
இங்கிதமுஞ்சொல்லி இனிதிருக்கச்செய்துபின்னர் ௲௮௱௪௫

நாட்டிலுள்ளோரெல்லாம் நயந்துபுகழ்ந்திடவே
கோட்டமறவிந்தக் குவலயத்தையாள்நாளில் ௲௮௱௪௬

ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தொன்பதாமாண்டினிலே
தூயபிரெஞ்சைத் துல்க்கியரசாள்பிரபு ௲௮௱௪௭

வெற்றியுடையவிங்கிலீஸ் வீரர்படைகூட்டமதில்
உற்றநண்பினாலே யுவப்பாகவந்திருக்க ௲௮௱௪௮

அத்தருணந்தன்னி லடமாகச்சூலுவர்கள்
சித்தந்தெளிவிலராய்ச் சேர்ந்தங்குவீற்றிருந்த ௲௮௱௪௯

பிரெஞ்சுதேசத்துப் பிரபுதனைக்கொன்றிடவே
திரமுடையவிங்கிலீஸ்ச் செருவீரருஞ்சினந்து ௲௮௱௫௰

நமதன்னையாரருள்செய் நல்லவநுதிப்படியே
அமைவில்லாச்சூலுவரை யக்கணமேவெற்றிகொண்டு ௲௮௱௫௧

சிலரைப்பிடித்துச் சிறைசெய்துநாட்டிலென்றும்
கலரையடக்கிக் கருணையுடனுள்நாளில் ௲௮௱௫௨

ஆயிரத்தெண்ணூற்றினெண்பான் மூன்றாகியவருடம்
தீயகுணத்தோடுசௌடான் தேசமதில்வாழுகின்ற ௲௮௱௫௩

மாதியெனப்பேர்படைத்த மன்னன்படையுடனே
மோதியிங்கிலீஷ்வீரரொடு மூண்டுபோர்செய்திடலும் ௲௮௱௫௪

சக்கரவர்த்தினியார் தக்கவருதிப்படியே
மிக்கபிரிட்டிஷார் வெற்றிப்படையுடனே ௲௫௫௫

ஜெனரலெனும்பேர்சேர் திடங்கொள்கார்டனபிரபு
மனதிற்செயித்துவந்த மாதிபடையைத்துலைத்து ௲௫௫௬

மாதிதனையும் மனம்வெறுண்டோடத்துறத்தி
நீதியுடனேயிந்த நீணிலத்தையாள்நாளில் ௲௫௫௭

ஆயிரத்தினெண்ணூற்றி னெண்பத்தைந்தாம்வருடம்
தூயபர்மவேந்தன் றுகளில்பெருஞ்சேனையொடும் ௲௫௫௮

இங்கிலீஷ்வீர ரிகலியமர்பொருது
சங்கையில்லாப்பர்மாத் தருபடையைக்கொன்றுழக்கி ௲௫௫௯

நல்லஆவாவென்ன நவில்கோட்டையைப்பிடித்து
வல்லவந்தமாநகர மன்னவனையும்பிடித்து ௲௫௬௰

இந்தியாவிலனனவனை யேற்றசிறையில்வைத்து
அந்தமன்னன்நாடனைத்து மன்பாய்நம்மன்னையர்தம் ௲௫௬௧

அரசாட்சியிற்சேர்த் தருளுடன்செங்கோலோச்சி
பரிவாகநற்கிருபை பாலித்துவாழ்நாளில் ௲௫௬௨

சக்கரவர்த்தினியார் அரசாக்ஷியின் ஐம்பதாம்வருஷ ஜூபிலியுற்சவம்.

விருத்தம்.

நானிலஞ்செழிப்புற்றோங்க நன்மைகள்பலவுண்டாக
வான்மதிமூன்றுபெய்ய மகிழ்ந்துமானிடர்களுய்ய
தேனமர்தொங்கன்மௌலி திகழ்தரச்சிரத்திற்சூடி
மேனலமொடுநம்மன்னை விருப்பொடுபுரப்பதானார்.

கதை.

சகலஜனங்களுமித் தாரணியிலுண்டாக
புகலவரிதானபல புண்ணியங்களும்வளர ௲௫௬௩

எல்லாவிடங்களிலும் ஏற்றதண்ணீர்ப்பந்தல்களும்
நல்லவருக்கன்னமென்றும நல்குகின்றசாலைகளும் ௲௫௬௪

மாநிலத்திலென்றும் வழிநடக்குமாந்தருக்கு
வானக்கதிரால் வருந்தியிளைப்பெய்தாமல் ௲௫௬௫

சென்னெறிகளெல்லாஞ் சிறந்தமரச்சாலைகளும்
நன்னலஞ்சேர்வாவி நனைமலர்ப்பூஞ்சோலைகளும் ௲௫௬௬

செய்துபுவிமாந்தரெல்லாஞ் சிந்தையிற்சந்தோசமுற
மெய்மைசக்ரவர்த்தினியார் மேதினியையாள்நாளில் ௲௫௬௭

ஆயிரத்தெண் ணூற்றிஞெண்பத் தேழாம்வருடமதில்
சேயுயர்ந்தபெப்ருவரித் திங்கள்பதிஞறுதெய்தி ௲௫௬௮

நமதன்னையாரரசி னல்வருடமைம்பதென
அமைராசப்பிர்திநிதி யானடப்பேரின்பிரபு ௲௫௬௯

ஜூபிலியுற்சவமித் தொல்லுலகிலெல்லோரும்
மாபலிதமாக மகிழ்ந்துகொண்டாடும்படியாய் ௲௫௭௰

உத்தரவுசெய்ய உவந்துலகமாந்தரெல்லாம்
தத்தமக்குவந்தபெருஞ் சந்தோஷகாரியம்போல் ௲௫௭௧

நகரங்களெல்லாம் நலமாயலங்கரித்து
செகமெங்குமிக்க சிறப்பாய்க்கொண்டாடினரோ ௲௫௭௨

சித்திரால்யுத்தமும் அறுபதாம்வருஷ
ஜூப்லியுற்சவமும்.

விருத்தம்.

இத்தரணியி னன்னீதி யிலங்குற வாழு நாளிற்
சித்திரா லதனிலுற்ற சிதடரை வென்ற வாறும்
உத்தம குணத்தெம் மன்னை யுயரர சறுபதாண்டில்
பத்தியா யெவருஞ் செய்த பரிசையு மெடுத்துரைப்பாம்.

கதை.

ஆதிகடவு ளருளால்நம்மன்னையரும்
நீதிசெலுத்தியிந்த நீணிலத்தைக்காத்திடுநாள் ௲௫௭௩

ஆயிரத்தினெண் ணூற்றுத் தொண் ணூறுமாண்டினிலே
தீயகுணமுடையோர் சித்ராலிலுள்ளசிலர் ௲௫௭௪

இந்தியாநாட்டிலவ ரெய்திக்கலகமிட
அந்தவிதத்தைநம தன்னையருங்கேட்டவுடன் ௲௫௭௫

தமதுபடைவீரர்களைத் தாஸ்டிகமாயங்கனுப்பி
கமைவொன்றுமில்லாத காப்பிரிகளைப்பிடித்து ௲௫௭௬

சிலரைச்சிறையிலிட்டுத் தேசமதிலெப்போதும்
கலகம்வராதபடி காவல்செய்துவாழ்நாளில் ௲௫௭௭

ஆயிரத்தினெண் ணூற்றுத் தொண் ணூற்றேழாம்வருடம்
தூயநம்தன்னையர்க்குத் தொல்லுலகநல்லரசின் ௲௫௭௮

அறுபதுநல்லாண்டென் றகத்தில்மகிழ்ச்சியுடன்
மறுவற்றஜூபிலி மஹோற்சவங்கொண்டாடினரோ ௲௫௭௯

இன்னும்பலவிதமாய் இங்கிலாந்திலுள்ளவரும்
மன்னும்இந்தியாவிலுள்ள மாந்தர்கள்மற்றுள்ளவரும் ௲௫ ௮௰

சக்ரவர்த்தினியார்புகழைத் தாரணியிற்கொண்டாட
மிக்கமனுநீதியுடன் மேதினியையாள்நாளில் ௲௫ ௮௧

தென்னாபிரிகாவில் போவர்யுத்தம்.

விருத்தம்.

தாழ்வி லாப்புகழ் சாருநம் மன்னையார்
கோவெ லாந்தொழக் கோளரி யாசன
மேவிநீதி விளக்குமந் நாளி னிற்
போவர் யுத்தம புரிந்ததை யோதுவாம்.

கதை.

தாயினுமிக்கன்புடனே தாரணியையாண்டிடுநாள்
ஆயிரத்தொளாயிரம தானவருடந்தனிலே ௲௫ ௮௨

திறமானபோவருடைத் திரான்சுவால்ராச்சியத்தில்
நெறியாற்றமதாள் நிலைமையுறவைக்கவென்று ௲௫ ௮௩

முன்னம்நெடுநாள் மொழிந்துமவர்கேளாமல்
அன்னையர்தம்போர்ப்படையோடன்னவர்போர்செய்திடலும் ௲௫ ௮௪

இங்கிலீஷின்வீரர் எழிற்படைஞரோடெழுந்து
சிங்கங்கள்போலுமந்தத் திரான்சுவால்நாட்டிலுற்று ௲௫ ௮௫

கேடிலுலகம் கிடுகிடுகிடென்றதிர
நாடிப்பிரங்கிபல நன்மையொடுதீர்த்திடவே ௲௫ ௮௬

கோட்டையைவிட்டப்பாற் கொடியவர்களோடிடவே
தாஸ்டீகவீரரவர் தம்மைவென்றுமீண்டதற்பின் ௲௫ ௮௭

ஓடியபோவ ருடனே திரும்பிவந்து
சாடியிங்கிலீஸ்வீரர்படை தம்முடன்போர்செய்துபின்னும் ௲௫ ௮௮

நேரில்நின்றுபோரில் நிருவகிக்கமாட்டாமல்
பாரிற்குழிகளிலும் பாரமலைமீதினிலும் ௲௫ ௮௯

மரங்கள்செறிந்த வனங்களிலும்போய்மறைந்து
திரங்களொன்றுமின்றித் திரான்சுவால்நாட்டினுள்ளோர் ௲௫ ௯௰

உள்ளக்களங்கமுடன் ஓடியும்பின் வந்தெதிர்த்தும்
கள்ளப்போராய்ச்சிறிது காலம்புரிந்திடவே ௲௫ ௯௧

ஒவ்வோர்தடவைகளில் ஓராயிரத்ததிகம்
செவ்வையற்றபோவர்களைச் சேர்த்தார்சிறைகளிலே ௲௫ ௯௨

சிறையுற்றோர்நிற்கமற்றுந் திரான்ஸ்வாலிலுள்ளவர்கள்
முறையாயடங்கி முதுநிலத்தில்வாழாமல் ௩௫௯௩

நேர்நின்றுபோர்புரிய நெஞ்சமஞ்சினரெனினும்
சீரில்லாவஞ்சனைப்போர் செய்துவரும்நாளினிலே ௩௫௯௪

சக்ரவர்த்தினியார் தேகவியோகம்.

விருத்தம்.

மாயிரும்புவியின்மீது மன்னியவுயிர்கட்கெல்லாம்
தாயினுங்கருணைகூர்ந்து தயையுடன்காத்துவந்த
தூயவிக்டோரியம்மா டொல்லுலகாசைநீத்துப்
போயும்பர்வாழ்த்தவிண்ணிற் புகுந்ததுபுகலலுற்றாம்.

கதை.

ஆயிரத்துத்தொள்ளா யிரத்தோர்வருடமதில்
ஏயஜனுவரி யிருபத்திரெண்டுதெய்தி ௩௫௯௫

செவ்வாய்க்கிழமையன்று தேசமெல்லாநொந்திரங்க
கவ்வையுடனுத்யோக காரியஸ்தரும்மயங்க ௩௫௯௬

அஸ்போரன்என்னும் அழகால்மிகச்சிறந்து
விஸ்தாரமாக விளங்குமணிமண்டபத்தில் ௩௫௯௭

நல்லநெறியுடனே நானிலத்தைக்காத்துவந்த
வல்லசக்ரவர்த்தினியார் மாநிலத்தின்பற்றகன்று ௩௫௯௮

மலர்மாரிபெய்து மனமகிழ்ந்துதேவரெல்லாம்
நலமாயுபசரித்து நண்பினெதிர்சென்றழைக்க ௩௫௯௯

தேவவுலகமதிற் செங்கோல்செலுத்துவதாய்
ஆவலுடனேசென் றடைந்தார்நம்மன்னையரே ௩௬௱

கற்பான்மிகச்சிறந்து காசினியெல்லாம்புகழப்
பொற்பாகவில்லறத்திற் பூண்டுவளர்நீர்மையினால் ௩௬௱௧

ஆவிபிரியும்பொழுதி லன்பானநாயகனைக்
கூவியேமுன்றுதரங் கூடுவிட்டுநீங்கியதே ௩௬௱௨

தமையருமையாய்ப்பயந்த தாயருயிர்நீங்குதலும்
அமைவாலுயர்ந்திலங்கு மால்பர்ட்டெட்வார்ட்சக்ரவர்த்தி ௩௬௱௩

நனிதுயரினாலேமனம் நைந்துமிகநொந்திரங்கி
கனிவாய்திறந்து கலங்கியழுகலுற்றார் ௩௬௱௪

அன்னையரேயன்னையரே யன்பாலெனைப்பயந்து
நன்னலமாயெப்பொழுதும் நண்பாகவேவளர்த்து ௩௬௱௫

பற்பலபாஷைகளும் பாங்காய்ப்படிக்கவைத்து
சிற்பமுதலெத்தொழிலுஞ் செய்துபழகவைத்து தூசா௱சா

மதுநூன்முதலாக மற்றுமுள்ளநூல்களெல்லாம்
இனிமையுடனே யெழிலாயக்கற்பித்துவைத்து தூசா௱எ

மணமாலைசூட்டியிந்த மாநிலத்தையாள்முறையும்
குணமாகநீதியிற்செங் கோல்செலுத்துநன்னெறியும் தூசா௱அ

நாளும்போதித்தினிவாய் நன்மையுடன்காத்துமற்றும்
கோளுறுதிந்தக் குவலயத்தைக்காத்தருளும் தூசா௱கூ

தாயேதயாபரியே தக்கோரெல்லாம்புகழும்
நீயேபுவிபாரம் நீக்கிவிண்ணின்மேவினையோ தூசா௱ய

வானவர்களெல்லாம் மகிழ்ந்துமலர்மாரிபெய்து
மேனலங்கொள்புஸ்ப விமானம்வைத்துச்சென்றாரோ தூசாகக

புஸ்பவிமானத்தின்மிசை புந்திமகிழ்வாயிருந்து
விஸ்தாரவிண்ணுலகின் மேவினையோவென்றாயே தூசாகஉ

இப்பூமிபாரமதை யென்றலையின்மீதில்வைத்து
செப்பரியஜேசுபதஞ் சேர்ந்தனையோஎன்றாயே தூசாகங

கண்ணைநிமைகளென்றுங் காத்திருப்பதேபோல
எண்ணில்பலஜீவர்களை யெப்பொழுதுங்காத்தனையே தூசாகச

எக்குலத்தராளுலு மெச்சமயத்தோரெனினும்
ஒக்கவொருபேதமில்லா தோங்கியசெங்கோல்செலுத்தி தூசாகரு

நீதயையாற்செய்தநன்றி நீணிலத்துமாந்தரெண்ணில்
பேதமையாய்நின்னைப் பிரிந்துலகில்வாழ்வாரோ தூசாகசா

சேயர்களாயெண்ணிச் செகமுழுதுங்காத்துவந்த
தாயேயுனைப்பிரிந்த சஞ்சலமெவ்வாறகலும் தூசாகஎ

வேந்தரெல்லாம்போற்ற வியப்புடன்சிங்காசனத்தில்
சார்ந்துநெறிசெலுத்துந் தன்மையென்றுகாண்பேனே தூசாகஅ

அன்பாலெனைவளர்த்த அன்னையரேயிவ்வுலகில்
இன்பாகவுந்தனைநா னெப்போதுகாண்பேனே தூசாககூ

என்றுசக்ரவர்த்தி யிரக்கமுடனேபுலம்பி
நின்றுமயங்க நிலைமையுள்ளதம்பியரும் தூசாஉய

இராஜவம்சத்திலுள்ளோ ரெல்லோரும்நொந்திரங்க
பராவரியசீர்த்திபெற்ற பட்டணத்தார்நொந்திரங்க தூசாஉக

ஆவியனைய அருமைப்புதல்வியரும்
தாவில்லாச்சுற்றமுற்றோர் தக்கஉத்தியோகஸ்தர்களும் தூசாஉஉ

மற்றுமுள்ளோரெல்லோரும் வந்துபரிதாபமுடன்
சுற்றிலுமுற்றேங்கித் துயரந்துடன்வருந்த ௲௬௨௩

அங்கேரந்தன்னிலவர்க் காதிகுருவேமுதலோர்
இன்னலகல விசைத்தார்பலவசனம் ௲௬௨௪

மதியாலுயர்ந்தவளர் மந்திரிமாருள்ளவரும்
விதியின்செயலை விலக்கவல்லாரரெனவே ௲௬௨௫

விந்தையுள்ளசக்ரவர்த்தி வெந்துயரந்தானகற்றி
மைந்தர்முதலானோர் மனத்துயரெல்லாமகற்றி ௲௬௨௬

கவர்னர்ஜெனறலுக்கும் காரியஸ்தர்யாவருக்கும்
தவறுமலக்கணமே தந்திதெரிவித்ததற்பின் ௲௬௨௭

சக்கரவர்த்தினியார் தம்முதன்மைச்சேயான
மிக்கபுகழ்படைத்த வேல்ஸ்சக்ரவர்த்தியர்க்கு ௲௬௨௮

பட்டம்புனைந்துலகைப் பாங்குடனேகாக்கவென்று
திட்டமாய்மேலோர்கள் செப்புதலும்நல்லதென்றே ௲௬௨௯

வேல்ஸ் ஆல்பர்ட் எட்வார்ட்பிரபு அரசாக்ஷியை ஒப்புக்கொண்டது.

விருத்தம்.

வண்மையுள்ளவேல்ஸ்ஆல்பர்ட் எட்வார்ட்டென்றெவரும்
வழுத்துகின்றமாபிரபு மனத்திலன்புபெருகி
உண்மையுடனமதுதிருத் தாயரிந்தவுலகை
யுவந்தரசுசெய்தமுறை யொழுங்குதவறிலதாய்
தண்மையுறுமதுகுடை நீழலிற்பல்லுயிருந்
தங்கியென்றுஞ்செழிப்புடனேதழைத்தோங்கிமிகுந்த
திண்மைசெறிந்துறவாழும்படி யுலகிற்செங்கோல்
செலுத்துதுமென்றேதிருவாய் மலர்ந்தருள்செய்தனரே.

கதை.

தமதுதிருத்தாயரிந்தத் தாரணியைக்காத்ததுபோல்
அமைவாகப்பூவுலகை யாளுகிறோமென்றுவந்து ௲௬௩௰

சக்ரவர்த்திகூறத் தகுந்தபெரியோர்களெல்லாம்
மிக்கமகிழ்ச்சியுடன் மேன்மேலுங்கொண்டாடி ௲௬௩௧

கவர்னர்ஜெனறலொடு கவர்னர்கள்மற்றுள்ளவர்க்கு
கவனமுடனந்தக் கணத்திலறிவித்ததன்மேல் ௲௬௩௨

சக்ரவர்த்தினியார் அடக்கம்.

விருத்தம்.

உன்னிலெத்துணைமன்னருமொப்பிலா
இந்நிலத்தவர் யாவரும்போற்றவே
மன்னுநீதியின் மாநிலங்காத்தநம்
மன்னையாரை யடக்கியதோதுவாம்.

கதை.

வின்சிஸ்டென்றோங்கி விளங்குமரண்மனையில்
அன்பார்கணவன் அமர்ந்ததிருக்கல்லறையில் தூசா௩௩

பக்கத்திற்சித்திரமாய்ப் பாங்கானகல்லறையும்
மிக்கவழகாகவெகு மேன்மையுடனேயியற்றி தூசா௩௪

பெப்ரவரிமாசம் பிறந்திரண்டாந்தெய்தியன்று
செப்பமுள்ளசக்ரவர்த்னிச் சீமாட்டியாரைநன்றாய் தூசா௩௫

அடக்கவென்றுசக்ரவர்த்தி யன்பாய்மொழிந்திடலும்
திடத்துடனெல்லோரும்வந்து சேர்ந்தார்கள்சேர்ந்தவுடன் தூசா௩௬

அஸ்போரன்என்னும் அரண்மனையிற்சேர்ந்தெவரும்
விஸ்தாரச்செங்கோல் விளக்கியநம்மன்னையனை தூசா௩௭

சிங்காரமாகச் சிறப்பித்தகப்பலிலே
அங்கிலேயமன்னவர்க ளன்பாயெடுத்துவைத்து தூசா௩௮

மைந்தர்முதலாக மற்றுமுள்ளோரெல்லோரும்
சிந்தைமிகநொந்து திரளாகச்சூழ்ந்துவர தூசா௩௯

அறுபத்துநாலுகப்ப லானபடைவீரருடன்
மறுவற்றநல்லுலக மாதாவைச்சூழ்ந்துவர தூசா௪௰

கப்பல்நடத்திக் கடலின்கரையருகில்
செப்பமுடனெல்லோருஞ் சேர்ந்தாரந்தக்ஷணமே தூசா௪௧

எட்டுப்பரிக ளிணைத்தவிரதத்தினிலே
மட்டில்புகழ்கொண்டசக்ர வர்த்தினியார்தம்மைவைத்து தூசா௪௨

நடத்தப்பரிகள் நடவாதவாறுகண்டு
திடத்தாலடித்துச் செலுத்துதலுஞ்செல்லாமல் தூசா௪௩

தண்ணளியாலிவ்வுலகைத் தற்காத்ததாயர்தமை
மண்ணினிடைநல்க மனமில்லாதேமயங்க தூசா௪௪

பரிகள்மயங்கிப் பரதவிக்குந்தன்மைகண்டு
சிரமஞ்செய்யாமலந்தத் தேசிகளுக்காதரவாய் தூசா௪௫

வடமிரண்டுபூட்டி வயவீரர்பற்றிநின்று
திடமாய்ரதத்தைச் செலுத்துகின்றவேளையிலே தூசா௪௬

பகரும்லக்ஷத்தின்மேற் பரிசனங்கள்சூழ்ந்துவர
புகலவரிதானபல போர்வீரர்சூழ்ந்துவர ௲௱௪௭

பற்பல்விதமான பான்வாத்தியங்களுடன்
பற்பல்விதமான பறைகள்முழங்கிவர ௲௱௪௮

மைந்தர்சுற்றமுற்றோர் மனம்வருந்திச்சூழ்ந்துவர
விந்தையாய்ச்செய்து விளங்குகின்றகல்லறையில் ௲௱௪௯

ஆதரவாய்யாவரையும் ஆதரித்துக்காத்துவந்த
மாதாவைமெல்லெனவே வைத்துமுறைப்படியே ௲௱௫௰

எவ்வுயிருங்காக்கவல்ல வீசனையங்கெல்லோரும்
செவ்வையுடனன்பாய்ச் செபித்தடக்கஞ்செய்தனரே ௲௱௫௰௧

இப்புவியைக்காத்த இனிய அன்னைக்குச்சடங்கும்
தப்பாதருமையுடன் சக்ரவர்த்திசெய்தனரே ௲௱௫௰௨

வேல்ஸ்ஆல்பர்ட்டெட்வார்ட் டெனவிளங்குஞ்சக்ரவர்த்தி
சால்பானஅன்னையர்க்குத் தக்கமுறையால்நடத்தி ௲௱௫௰௩

புல்லுலகவேந்தர்களும் பாரிலுள்ளோரெல்லோரும்
நல்லமகிழ்ச்சியொடு நாடோறுங்கொண்டாட ௲௱௫௰௪

நீதிநெறியாகவிந்த நீணிலத்தைக்காப்பாற்றி
மாதயையாற்செங்கோல் வளர்த்துவரும்நாளினிலே ௲௱௫௰௫

தென்னாபிரிக்காவில் போவர்களைவென்று செயமடைந்தது.

விருத்தம்.

மனுமுறைப்படியேயிந்த வையகமுழுதும்போற்ற
வினிமையிற்செங்கோலோச்சி யிலங்குமன்னவர்தங்கோமான்
நனிபுகழால்பர்ட்டெட்வார்ட்டெனநவில்சக்ரவர்த்தி
துனியுறுபோவர்தம்மை வென்றதுஞ்சொல்லலுற்றாம்.

கதை.

நலமானதங்களன்னை நல்லரசினாள்தொடங்கி
சிலகாலம்வஞ்சனைப்போர் செய்துவந்தபோவர்களை ௲௱௫௰௬

ஆல்பர்ட்டெட்வார்ட்டென் றருண்மிகுந்தசக்ரவர்த்தி
சால்பானதங்களபடைத் தாஸ்டீகவீரர்களை ௲௱௫௰௭

போவர்கண்மேலேவிப் பொருஞ்சிலரைப்பொன்றுவித்தும்
ஆவியுடனேசிலரை யாங்கமரிலேபிடித்து ௲௱௫௰௮

கொண்டுவந்தன்னோரைக் கொழும்புமுதற்பல்விடத்தும்
பண்டுமுறைப்படியே பந்தோபஸ்தாகவைத்து ௲௱௫௰௯

வேறுள்ளவரும் வெருவும்படியாக
கூறரியபோவர் குலத்தவரைப்போரில்வென்று ௲௬௬௰
நாட்டிற்கலகமெந்த நாளும்வாராதபடி
தாஸ்டீகமிக்க தளகர்த்தர் தம்முடனே ௲௬௬௧
போர்வீரர்தம்மைப் புவியிலெங்கெங்குநிறுத்தி
சீர்வளர்ந்தோங்கச் சிறந்துவளர்மாந்தரெல்லாம் ௲௬௬௨
சிந்தைதுயரின்றி செழிப்புடனேவாழ்ந்திருக்க
நந்தாதசெல்வமெந்த நாளுமேன்மேலுண்டாக ௲௬௬௩
சக்கரவர்த்தினியார் தம்மினுமோரெண்மடங்கு
மிக்கதயையும்பொறையும் வெற்றியுமேலாய்வளர ௲௬௬௪
நீதிநெறியுடனே நீணிலத்திற்பல்லுயிர்க்கும்
ஆதரவாய்த்தாதையைப்போ லாண்டுவரும்நாளினிலே ௲௬௬௫

பிரன்சாவேல்ஸ்ஆல்பர்ட்
ஏழாவதுஎட்வர்ட்சக்ரவர்த்தி
திருவபிடேகம்.

விருத்தம்.

தருவெனத்தகைசாறங்க டாயர்முன்முறையிற்காத்த
பொருவருபுவியையாரும் புகழ்ந்திடப்புரக்கவேண்டி
மருவளர்மாலைமௌலி புனையுமன்னவர்தங்கோமான்
திருவபிடேகமுற்ற செயலினைச்செப்பலுற்றாம்.

கதை.

சக்கரவர்த்தியர்க்குத் தக்கவபிடேகமென்று
திக்கெங்குந்தங்க டிருமுகங்களேவுதலும் ௲௬௬௬
முன்னைநூல்சொன்ன முறையினபிடேகமதை
நன்னலமதாக நடத்துநன்மைகாணவென்று ௲௬௬௭
எந்நாட்டுமன்னவரு மின்பமுடன்வந்தார்கள்
பன்னாட்டுமாந்தர்களும் பாங்குடனேவந்தார்கள் ௲௬௬௮
திடமாயுயர்ந்து சிறந்திலங்குஞ்சக்ரவர்த்தி
கடவுடிருவாலயத்திற் காட்சிபெறவேபுகுந்து ௲௬௬௯
சிங்கஞ்சுமந்த சிறப்புடையவாசனத்தில்
எங்கும்புகழ இனிதிருக்கும்வேளையிலே ௲௬௭௰
வாகானவெண்மதிபோல் வண்ணக்குடைநிழற்ற
பாகனையசொல்லார் பலர்சாமரமிரட்ட ௲௬௭௧

பற்பல்விருது பலவீரர்பற்றிநிற்க
வெற்றியுள்ள இங்கிலீஸ் விளங்குங்கொடி துலங்க தகூஎஉ

மங்களசோபனங்கள் வந்துசிலர்பாடிநிற்க
இங்கிதச்சங்கீதம்இ சைகாரர்பாடிநிற்க தகூஎங

கலைவாணர்பற்பல் கவிகள்சொல்லிச்சூழ்ந்திருக்க
பலவிதவாத்தியங்கள் பவ்வமெனவேமுழங்க தகூஎச

வாரார்முரசு மடமடெனவேமுழங்க
சீரானநற்செபமுந் தேவதுதியும்முழங்க தகூஎரு

பொன்போலழகாய்ப் பொருவின்றகன் றுயர்ந்து
மின்போலொளிகளெங்கும் வீசுகின்றமண்டபத்தில் தகூஎசா

தம்பியரும்புத்திரருந் தக்கசுற்றமுற்றவரும்
கும்பல்கும்பலாயருகிற் கூடிமகிழ்வாயிருக்க தகூஎஎ

பார்லிமெண்டுநற்சபையார் பாங்காகச்சூழ்ந்திருக்க
சீராலார்ட்டுசபைச் செல்வர்களுஞ்சூழ்ந்திருக்க தகூஎஅ

காமன்ஸ்சபையோர் கனிவாகச்சூழ்ந்திருக்க
பூமனிகர்பாதிரிமார் போதகர்கள்சூழ்ந்திருக்க தகூஎகூ

ஓங்கியஉத்தியோகஸ்தர்க ளுற்றருகேசூழ்ந்திருக்க
ஆங்கிலேயவேந்த ரருகுவந்துசூழ்ந்திருக்க தகூஅய

திடமானமந்திரிமார் சேனைபதிகளுடன்
படைவீரரெல்லோரும் பக்கமெங்குஞ்சூழ்ந்திருக்க தகூஅக

பீரங்கிக்காரர் பெருமையுடன்சூழ்ந்திருக்க
பாரவெடிக்காரர்பலர் பக்கத்திற்சூழ்ந்திருக்க தகூஅஉ

சிற்றரசரெல்லாஞ் சிறப்பாகச்சூழ்ந்திருக்க
மற்றுமயற்றேசமன்னர் வாகுடனேசூழ்ந்திருக்க தகூஅங

ஆதிகுருவானவரு மன்பாகவந்திருந்து
நீதியொடுதேவனைத்தம் நெஞ்சமதிலேநினைந்து தகூஅச

வாசனையினாலே வகுத்ததயிலமதை
நேசமுடன்வாங்கி நிறைந்தகருணையுடன் தகூஅரு

உச்சிமுதலாக வுள்ளங்காலீறாக
இச்சையுடனே யிசைந்தபிடேகம்புரிந்து தகூஅசா

மணிகளொடுபொன்னால் வனைந்தமகுடம்புனைந்து
அணிசிறந்தவேதமதை யன்பின்வலக்கைக்கொடுத்து தகூஅஎ

இடக்கையிற்பொன் னுருண்டை யின்பமுடனேகொடுத்து
திடத்தவிந்தப்பொன் னுருண்டை செப்பரியபூவுலகம் தகூஅஅ

வலக்கையிற்கொண்ட மறையேகடவுள்கண்டீர்
நலத்தாலிங்குற்றவர்கள் நன்மையிற்கொண்டாடுவதாய் ௩௲௬௱௮௰௯
நாங்கேட்குங்கேள்விகட்கு நல்லவிடைதாருமென
ஓங்குகுருகேட்ப வுவந்தேயரசர்பிரான் ௩௲௬௱௯௰

அப்படியேசொல்லுகிறேனையாவெனமகிழ்ந்து
ஒப்பொன்றுமில்லா உயர்ந்தகுருசொல்லுகிறார் ௩௲௬௱௯௰௧
நீதியுடன்சத்தியமாய் நீணிலத்தைக்காப்பீரா
ஓதுமெனச்சக்ரவர்த்தி யொப்பிநல்லதென்றிடவே ௩௲௬௱௯௰௨

செங்கோல்வலக்கையினுஞ் சீர்வாளிடக்கையினும்
அங்குவலக்கை யணிவிரலில்மோதிரமும் ௩௲௬௱௯௰௩
அணிந்துசபையோர்களெல்லா மன்பாயெழுந்திருந்து
தணிந்துகடவுட்பணிந்து தக்கசெபஞ்செய்துபின்னர் ௩௲௬௱௯௰௪

மன்னர்பிரானெங்களுக்கு வாக்கருளிச்செய்தபடி
நன்னலமாய்க்காக்கு நலந்தருந்தேவாவெனவே ௩௲௬௱௯௰௫
ஆதிகுருமுதலா யானபெரியோர்களெல்லாம்
நீதியுடன்மனது நேர்ந்தாசிசொன்னார்கள் ௩௲௬௱௯௰௬

ஆசியுரைத்தாங் கனைவோருஞ்சூழ்ந்துவர
தேசிகள்பூண்ட சிறந்தவிரதத்தின்மிசை ௩௲௬௱௯௰௭
சக்ரவர்த்தியேறிச் சகலவேடிக்கையுடன்
மிக்கலண்டன்மாநகர வீதிவலமாகவந்து ௩௲௬௱௯௰௮

எவ்வுலகத்தாரு மினிதுவந்துகொண்டாட
செவ்வையுயர்கோட்டை திகழ்கோமனைபுகுந்து ௩௲௬௱௯௰௯
கண்டிருந்தோரெல்லாங் களியமுதுண்டேப்பமிட
எண்டிசையுங்கொண்டாட எங்கள்சக்ரவர்த்தியர்க்கு ௩௲௭௱

திருவபிடேகமுறை செய்துமுடித்ததற்பின்
பரிவாயங்குற்ற பரிசனர்மற்றெல்லோர்க்கும் ௩௲௭௱௧
போசனங்கண்மிக்க பொருவின்மலர்மாலைகளும்
வாசக்கலவைகளும் வண்மையுடனேகொடுத்து ௩௲௭௱௨

பன்னாட்டரசர்முதற் பாரிலுள்ளோர்யாவரையும்
மன்னுதங்களுடிலூற்று வாழும்படியருளி ௩௲௭௱௩
அன்னையர்முன்னாளி லரசுபுரிசீர்மையினும்
பன்னலங்களோங்கவிந்தப் பாரையரசாளலுற்றார் ௩௲௭௱௪

சக்கரவர்த்திவாழ்த்து.

விருத்தம்.

மேல்வளர்செல்வமோங்க மேதினிமாந்தருய்ய
நால்வகைச்சேனைசூழ நண்ணலர்பணிந்துபோற்றும்

ஆல்பர்ட்டெட்வார்ட்டென்றோது மரசர்தம்பெருமான்செங்கோல்
சால்புடன்புவியிலென்றுந் தழைத்துநீடூழிவாழி.

இங்கிலமுழுதும்போற்ற வினிதுடனரசுசெய்து
பன்னரும்புகழ்பெற்றோங்கிப் பண்ணவர்பதியின்மேய
அன்னையர்தனினுமிக்க வன்புடனம்மைக்காக்கும்
மன்னவர்பெருமான்செங்கோல் வாழிநீடூழிமாதோ.

மிக்கநன்னெறியினிந்த மேதினிபுரக்குமெட்டுத்
திக்கில்வாழரசரெல்லாந் திறைகொடுத்துவந்துபோற்றத்
தக்கசீரால்பர்ட்டெட்வார்ட் டெனும்புகழ்ச்சக்ரவர்த்தி
மக்களுஞ்சுற்றஞ்சூழ வாழிநீடூழிமாதோ.

கதை.

நல்லநெறியுணரும் நண்புடையநேயர்களே
வல்லநமதன்னைபெற்ற மைந்தர்புகழ்வாழ்த்துமினே ௲௭௱௫

பூலோகந்தன்னிற் பொலிவாய்மழைகள்பெய்ய
சாலவேசெல்வந் தவந்தருமமுண்டாக ௲௭௱௬

நம்மையெந்தநாட்களினும் நன்மைபலவுண்டாக
செம்மையொடுகாக்கவல்ல செல்வர்புகழ்வாழ்த்துமினே ௲௭௱௭

நன்றிமறப்பதென்றும் நன்றன்றெனுமுறையால்
வென்றியுள்ளசக்ரவர்த்தி மிக்கபுகழ்வாழ்த்துமினே ௲௭௱௮

தேசஞ்செழித்தோங்கச் செங்கோல்புரிநமது
ராஜவிசுவாசமுடன் நானிலத்தில்வாழுமினே ௲௭௱௯

செய்ந்நன்றிகொன்ற சிதடர்களாய்வாடாமல்
ஐயமின்றியென்றுநம்மை யாளரசைவாழ்த்துமினே ௲௭௱௰

வேந்தர்பகைகொள்ளும் மிடியுருக்கிப்பூவுலகில்
ஆந்துணையின்றென்ப தறிந்துபயபக்தியுடன் ௲௭௧௧

சால்பாய்நமைப்புரந்த தாயரினிதாய்ப்பயந்த
ஆல்பர்ட்டெட்வார்ட்சக்ரவர்த்திக் கானபுகழ்வாழ்த்துமினே ௲௭௧௨

அகக்கவலையின்றி யருணலமெல்லாம்படைத்துச்
சுகமுடன்வாழ்வாழ்வே சுவர்க்கமென்பர்மேலோர்கள் ௲௭௧௩

யாதோர்கவலையின்றி யெந்நலமும்யாவருக்கும்
மாதயையாற்றந்தருளும் வள்ளல்புகழ்வாழ்த்துமினே ௲௭௧௪

கல்வியறிவின்றிக் களங்கமுற்றநெஞ்சினராய்
பொல்லாத்துவேசமுற்றுப் புந்திகொந்துவாடாமல் ௲௭௧௫

எவ்வுயிருந்தம்முயிர்போ லெண்ணியொருபேதமின்றி
கவ்வையுறுதென்றுநம்மைக் காக்குமன்னைவாழ்த்துமினே ௲௭௧௬

சக்ரவர்த்திமிக்க தகைமையுடைச்செங்கோலும்
மக்களொடுசுற்றம் வளரவென்றுவாழ்த்துமினே ௲௭௧௭

எல்லாவுயிர்களையு மின்றினிதாய்க்காத்தருளும்
வல்லகடவுண் மலர்த்தாடினம்வாழி ௲௭௧௮

அறியாமையையகற்றி ஞானமன்பினாலருளும்
நெறியுடையவாசிரியர் நீண்டமலர்த்தாள்வாழி ௲௭௧௯

நாடெங்கும்வாழி நலஞ்சேர்மறைவாழி
பீடுடையவேந்தர் பிறங்கியசெங்கோல்வாழி ௲௭௨௰

தக்கபிரன்சாவேல்ஸ்ஹெறட்வார்ட்டுச் சக்ரவர்த்தியார்வாழி
விக்டோரியாச்சக்ரவர்த்தினி மெய்ப்புகழென்றும்வாழி ௲௭௨௧

தேசமதிலெப்பொழுதுஞ் சிந்தையயர்வில்லாமல்
ராஜவிசுவாசமுள்ள நல்லோர்தினம்வாழி ௲௭௨௨

நீதிசெலுத்தும் நிறைகுணவுத்யோகஸ்தரும்
பூதலத்துமாந்தரெல்லாம் பொறப்பாய்த்தினம்வாழி ௲௭௨௩

சக்ரவர்த்தினியார்புகழைச் சாற்றுதமிழம்மானை
எக்காலமுமுலகி லின்பமுடன்வாழியவே ௲௭௨௪

பெற்றதாய்தன்னிலன்பு பேணிற்பதின்மடங்கு
நற்றாயாஞ்சக்ரவர்த்தினி நல்லதிருப்புகழ்சேர் ௲௭௨௫

இந்தநூலென்று மினிதாய்ப்படிப்பவரும்
சந்தோசமாயருகிற் சார்ந்திருந்துகேட்பவரும் ௲௭௨௬

பலவளங்களெய்திப் பலர்களுமேகொண்டாட
நலமானசீர்த்திபெற்று நாட்டிலென்றும்வாழியவே ௲௭௨௭

விருத்தம்.

எந்நிலமுங்காத்தருளுமிறைவரெல்லா
மிருமருக்குஞ்சூழ்ந்து மகிழ்ந்திறைஞ்சிநிற்பக்
கன்னனிகர்மொழிமடவார் கவரிவீசக்
கனகமணியாசனத்திற் களிப்பான்மேவிப்
பன்னலமுஞ்செழித் தோங்கக்கருணையாலிப்
பாருலகத்துயிரனைத்தும் பரிவாற்காக்கும்
மன்னர்பிரானல் பர்ட்டெட்வார்ட்ச்சக்ரவர்த்தி
மனுமுறைச்செங்கோ னீடுவாழ்கமாதோ.

மஹாராணி அம்மானை

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

விக்டோரியா மஹாராணி

இரட்டைமணிமாலை.

காப்பு.

வெண்பா.

நானிலத்தோர்போற்று நமதுசக்ரவர்த்தினிமேன்
மாநலத்திரட்டைமணிமாலை நானவில
வெல்லாமுதவி யினிமையாய்காத்தருளும்
வல்லகட வுட்டாண்மலர்.

நூல்.

வெண்பா.

நறைகமழும்பூந்தார் நஞ்சக்ரவர்த்தினியார்
தறையிலுளோர்யாவர்க்குந்தாய் முறையா
லன்பாகநெஞ்சத்தமைத்துத் துதிமனனே
யின்பாகவாழ்வா யினி. க

கலித்துறை.

இனியனவென்பனயாவையு நல்கி யெழிலுடனே
துனியறப்பற்பல்லுயிர்களும் வாழவித் தொல்லுலகைக்
கனிவுறக்காத்தநம்மன்னே புகழைக் கருத்திலுன்னி
நனிதுதிசெய்யிற்பலசெல்வ மெய்துமெந் நாளினுமே. உ

வெண்பா.

எய்துமெந்நாளுமியலொழுக்க மென்றுதுதி
செய்திதுவேநன்மையெனத் தேரினுய்வாந்
தெருளாலுயர்ந்திச் செகமுழுவதுங்காத்த
வருளாலுயர்ந்த வனையை. ந

கலித்துறை.

அன்னையைமுன்னர்நம் முன்னர்துயர்தவிர்த் தார்வமுடன்
றன்னலர்பின்னிடமுன்னிடு சேனைக ளாற்றுணித்து
மன்னவர்யாவருமின்னருள் வேண்டி வணங்கிநிற்பப்
பொன்னரியாசனமீதுறை பொன்னைப் புகழ்மனனே.

வெண்பா.

மனனேயோர்நன்றி வகுத்தாலனைதமேற்
றனனேயெனக்கொள்வர்தக்கோ ரெனநாளுந்
தந்திரங்கள்சொல்லுந் தகுதியினந்தாய்புகழைச்
சிந்தையுவந்தே துதிநீசெய். ௫

கலித்துறை.

செய்கின்றநன்மைகள்யாவெகனின்முன்னைச்சீர்திருத்தி
னைகின்றதுன்பமொழித் தெந்தநாளு நலம்வளர
வுய்கின்றநல்வழிகாட்டு நம்மன்னையுயர்புகழைக்
கொய்கின்றநன்மலர்போன் மனங்கொண்டுகொண்டாடுவதே. ௬

வெண்பா.

கொண்டாடுவதே குவலயத்தோரெல்லோர்க்கும்
பண்டுபுரிநன்மைப்பண்போர்ந்து தண்டுகலி
லன்னைமகாராணிக் கன்புடனேபக்திசெயி
னன்னலமாய் வாழ்ந்திடலா நாம். ௭

கலித்துறை.

நாம்பயனெய்துதற்காக முன்னாளிந்த நாட்டிலெங்கும்
பாம்பனையார்கொடுங்கோ லோச்சநொந்து பலருமிகத்
தேம்பவஃதோர்ந்தக்கொடியரைத் தம்விறற் சேனைகளாற்
சாம்பவடித்துநம்மன்னைய ராண்டதித் தாரணியே. ௮

வெண்பா.

தாரணியிலென்றுந் தவந்தருமமுண்டாகச்
சீரணிகளெங்குஞ்செழிக்கவே வாரணியுங்
கொங்கைமின்னார்கற்புக்கொள்ள நமதன்னையும்
பங்கமறவாண்ட னரன்பால். ௯

கலித்துறை.

அன்பாலிப்பாரிடை யுற்றறம்வாய்மைக்கு மாதரவாய்
மின்பாலொளியெனப்பொன் முடிசூடி விரும்பிவந்து
தன்பாலடைந்தவர்ப்பேத மெண்ணாமற் சமரசமா
யின்பாகக்காத்தவெம தன்னையார்புகழேத்துநெஞ்சே. ௰

வெண்பா.

நெஞ்சேயிப்பூவுலகி னீடுசுகமுண்டாகி
யெஞ்சாதிருக்கவியல்செய்து தஞ்சமதாய்

நம்மையன்பாற்காத்த நாயகத்தையெப்போதுஞ்
செம்மையுடனே துதிநீ செய். ௧௧

கலித்துறை.

செய்யுந்தொழில்கள்பலவுளவாக வித் தேயத்திலே
பொய்யுங்களவும்விபசாரமுஞ் செய்யும்புல் லரைப்போன்
மெய்யும்பொறையுநிறையுங் குணமும்பன் மேன்மையுடைத்
துய்யநந்தாயைத்துதியாது பஃறுதி சொல்வதுவே. ௧௨

வெண்பா.

சொல்லுவதேதென்னிலிந்தத் தொல்லுலகமாந்தரெலாம்
பல்லூழிசெய்ததவப்பண்பினால் வல்ல
கடவுளருளேதிரண்டோர் கன்னியரசாகித்
திடமாகவந்த தென்த்தேர். ௧௩

கலித்துறை.

தேர்ந்துணர்காலைச்செகத்திடை மேவுந் தெரிவையர்க்குக்
கூர்ந்தவிவேகங்குணம்பொறை மேன்மை குடியொழுக்கஞ்
சார்ந்தநலங்கள்பலவும் புகழுஞ்சு தந்தரமுஞ்
சேர்ந்துவிளங்கநமதன்னை செங்கோல் செலுத்தியதே. ௧௪

வெண்பா.

செலுத்தியதே பற்றலரைச் செற்றுலக மெல்லா
நலத்த புகழை நிலைநாட்டி வலத்துடைய
செங்கோல் கைக்கொண்ட நந்தாய் செல்வத் திருப்புகழைச்
சங்கையி லாதே துதிநீதான். ௧௫

கலித்துறை.

தானவனைத்தமுகமாதர்தங்கள்பதியையன்றி
யீனமுறப்பல்புருடனைநாடுமியல்பெனவே
மேனலமாகநமைக்காத்ததாயரின்மெய்ப்புகழை
நானலமாகத்துதியாதுவேறொன்றைநாடுவதோ. ௧௬

வெண்பா.

நாடினுநல்லோர்தந்நறும்புகழேநாடுகமேற்
சூடினுநறுந்தொடையேசூடுக - நீடுலகி
னன்மைபலபுரிந்தநந்தாய்புகழ்துதித்தாற்
றுன்பமொழிந்தெய்துஞ்சுகம். ௧௭

கலித்துறை.

சுகம்பற்பலர்களுமெய்துவதேதஞ்சுக்மெனவுஞ்
சகமுள்ளவர்கள்புரிநலமேதங்நலமெனவுந்
தகவுடன்யாரும்பெறும்புகழேதம்புகழெனவு
மகமதிலெண்ணுநந்தாய்சீர்த்தியையன்பொடுதுதியே. ௧அ

வெண்பா.

துதிப்பாய்நீபூவுலகிற்றோன்றியவிச்சென்மம்
மதிப்பாயெவருமகிழவே-கதிப்பாகத்
தம்மரபிலுள்ளோரித்தாரணியைநீடாளு
மம்மைதிருச்சீரினையன்பால். ௧௯

கலித்துறை.

அன்புடனேயிந்தமாநிலத்துள்ளவர்யாவருக்குந்
துன்பகல்வித்துப்பலசெல்வமெய்திச்சுகத்துடனே
யின்புறவாண்டநம்மன்னேயராசனமீதிருந்து
முன்பணிபொன்முடித்தாமநல்கும்முருகார்நறையே. உ௰

இரட்டைமணிமாலே முற்றிற்று.

உ

கடவுள்துணை.

சக்கரவர்த்தினியார்பேரில் கும்மி.

சீர்கள்பலவுஞ்செழித்திடச்செங்கோல்
 செலுத்துநம்மன்னே சிறப்புரைக்கத்
தாரணியிற்பல் பொருளேயுங்காக்குந்
 தயாபரன்பொற் பதங்காப்பாமே. ௧

அன்னமேபொன்னே மரகதமேநம
 தன்னேவிக்டோரியா நாயகத்தின்
நன்னலமானபுகழ்த் தமிழ்க்கும்மி
 நவிலுவோம் கேளடிதோழியரே. உ

நீதிநெறிபொறை யாதரவாலிந்த
 நீணிலமுற்று மரசுசெய்து
கோதிலாச்சீர்த்திகொ ளன்னேயர்மேவிய
 கோநகர்நல்வளம்பார் மயிலே. ௩

தேம்ஸ்நதிநடுச் செல்லுவதுமதிற்
சேலினங்கள் மிகத்துள்ளுவதும்
காமன்ராதிநிகராடவர் மாதர்
களிப்புடனீராடிக் கொள்ளுவதும். ௪

ஆற்றின்கரையினிரு மருங்குமுயர்
வாகியபன்மரங்கண் ணெருங்குந்
தேற்றமிகும்பக்ஷிக ளொருங்குமங்கே
சேர்ந்துதிரளாக வந்திறங்கும். ௫

பஞ்சவர்ன்னக்கிளி தாவுவதுமிகு
பண்புடனேகுயில் கூவுவதும்
எஞ்சாமற்பன்மலர் தூவுவதும்பல
ஏந்திழையார்களும் மேவுவதும். ௬

வண்டினங்களிசை பாடுவதும்பல
வர்ன்னப்பறவைகள் கூடுவதும்
தண்டலையின்மயி லாடுவதுமங்கே
சார்ந்திருந்தோர்நலந் தேடுவதும். ௭

பற்பல்கனிகள் பழுப்பதுவுமுண்டு
பற்பல்ப[illegible]வை விளிப்பதுவும்
பற்பல்வளங்கள் செழிப்பதுவுஞ்சென்று
பார்ப்பவர்கண்கள் களிப்பதுவும், ௮

அந்தநதியலை வீசுவதுமதில்
ஆடினவர்கந்தம் பூசுவதும்
சுந்தரமாயவர் பேசுவதுமெய்யிற்
சோதிகண்டே மதிகூசுவதும். ௯

பார்த்தவிடங்களெல்லாம் பகரம்மிக்க
பண்பினுயர்ந்த பலசிகரம்
சேர்த்தவிடங்களெல்லாந் தகரநற்
சிறப்பினுயர் லண்டன்மாநகரம். ௰

ஆற்றிற்கடந்துசெல் லோடங்களும்பலர்
அன்புடனேகற்கும் பாடங்களும்
தோற்றமெழுநிலை மாடங்களும்பல
சொர்ன்னமணிச் சித்ரக்கூடங்களும். ௧௧

மாமதியொத்த வதனமின்னார்தம்
மனத்திற்கபடம் பொய்வஞ்சமின்னார்
தோமுறுவார்த்தை யோர்நாளும்பன்னார் அந்தச்
சுந்தரமாநகர் வாழுமின்னார். ௧௨

இன்புடன்பல்பொரு டேடுவர்கள்யார்க்கு
மேற்குநலங்களே நாடுவர்கள்
அன்புடனேபலர் கூடுவர்கள்நம
தன்னையர்தம்புகழ் பாடுவர்கள். ௧௩

அரசவிசுவாச முள்ளவர்கள்நம
தன்னையர்செய் நன்றியுள்ளுவர்கள்
பரிவினந்தாய்துதி விள்ளுவர்கள் அறப்
பான்மையுமீதென்றே கொள்ளுவர்கள். ௧௪

இனையவளஞ்செறி லண்டனகரி
லிருந்துலகியாவையுங் காத்தருளும்
தனைநிகரில்சக்ர வர்த்தினியார்புகழ்
தழைக்கக்கும்மி யடித்திடுவீர் ௧௫

மாநிலத்திற்பல துஷடரைவென்று
மநுமுறையாகச் செங்கோலோச்சி
மாநலத்தானமைக் காத்தருள்சக்கர
வர்த்தினியார்புகழ் வாழ்த்துமினே. ௧௬

தாரணியிலுள்ள மாந்தர்கள்யாரையுந்
தஞ்சேயர்போனற் றயையுடனே
சீராகவேநம்மைக்காத்த நற்றாய்புகழ்
சிறக்கக்கும்மி யடித்திடுவீர் ௧௭

நன்றிமறப்பதுநன் றெனும்படி
நாயகமாகிநமைக்காத்த
வென்றிமிகுஞ்சக்ரவர்த்தினியார்புகழ்
விரும்பிக்கும்மியடித்திடுவீர். ௧௮

நண்ணியசத்திரச்சாலைகளும்வழி
நாடுமிடமெங்குஞ் சோலைகளும்
புண்ணியவைத்தியசாலைகளுஞ்செய்
பொருவறுதாயைப்புகழுமினே. ௧௯

சக்கரவர்த்தினியாரரசாண்ட
தரணியைநீதியினாளுமவர்
மக்களுஞ்சுற்றமுநீடூழிகாலமும்
வாழக்கும்மியடித்திடுவீர். ௨௰

நேரட்டு.

இன்பமுடன்-பலசுகமும்
எய்தும்படியெல்லோர்களையும்
அன்பாற்காத்தசக்கரவர்த்தினி
யார்புகழ்வாழ்த்துநேயர்களே ௧

துஷ்டர்களாற்றிருடர்களாற்
றுயருற்றயராதியவுடனே
கஷ்டமனைத்துமகற்றிநலத்தொடு
காத்திடுதாய்புகழ்வாழ்த்துமினே. ௨

நம்முயிருந்தம்முயிர்போல
நாளுங்கருதிக்கோளிலதாய்
இம்மையில்வெம்மைமயகற்றியதாய்புக
ழேற்றித்துதிமின்னேயர்களே. ௩

இவ்வுலகிற்செவ்வையுற
எவ்வகையானசுதந்தரமும்
கவ்வையிலாதகமொவ்வியளித்தருள்
கருணைகொடாய்புகழ்வாழ்த்துமினே. ௪

தப்பறவேமெறுப்பிலதாய்ச்
செப்பருமிப்புவிநற்பலனே
எப்பொருளும்பெறநல்குமன்னையர்
மெய்ப்புகழ்வாழ்த்துமினேயர்களே.

முற்றிற்று.

விளம்பரம்.

மஹாராணிஅம்மானை.

அன்னதானமகத்துவபுராணம்.

பட்டணத்தார்அம்மானை.

உருக்குமாங்கதன் அம்மானை.

நளச்சக்கிரவர்த்திஅம்மானை.

திருவிருதைவண்ணைப்பதிற்றுப்பத்தந்தாதி.

திருவிருதைமாரியம்மன்கும்மி.

இப்புத்தகம் வேண்டியவர்கள் விருதுப்பட்டி விவேக திருமந்திரம் இராமலிங்க சுவாமிகளிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காலணு கார்டு எழுதினல் வி. பி. பார்சலில் அனுப்பப்படும்.